වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report
2024

වැය ශීර්ෂ අංක
செலவுத் தலைப்பு இலக்கம்
Expenditure Head No } **118**

වෙළුම - I
தொகுதி - I
Volume - I

කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை- 2024

செலவுத் தலைப்பு- 118

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

கமத்தொழில், கால்நடை வளங்கள்பிரிவு மற்றும் முன்னர் காணப்பட்ட பெருந்தோட்டக் கைத்தொழில்பிரிவு ஆகியவற்றின் முன்னேற்றம்

இல. 80/5, கொவிஜன மந்திரய ரஜமல்வத்த ஒழுங்கை பத்தரமுல்ல

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை- 2024

செலவுத் தலைப்பு- 118

முன்னைய கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு(23.10.2023 தேதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2355/10 எண் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்)

1. முன்னால் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் – கௌரவ திரு. மஹிந்த அமரவீர
2. முன்னால் இராஜாங்க அமைச்சர்கள்
   - கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் - கௌரவ திரு. மொஹான் பிரியதர்ஷன த சில்வா
   - கால்நடை வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் - கௌரவ திரு. டீ.பீ ஹேரத்
   - கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் – கௌரவ திரு. கே. காதர் மஸ்தான்
   - பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் - கௌரவ திரு. லொஹான் ரத்வத்த
3. அமைச்சின் முன்னால் செயலாளர் - திரு. ஜானக்க தர்மகீர்த்தி

முன்னைய கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு (2024.09.27 தேதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2403/53 எண் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்)

1. முன்னாள் விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் - கௌரவ. அனுர குமார திஸாநாயக்க
2. முன்னாள் அமைச்சின் செயலாளர் - திரு. எம்.பி.என்.எம். விக்கிரமசிங்க

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு (2024.11.25 தேதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2412/08 எண் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்)

1. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் - கௌரவ. கே.டீ லால் காந்த
2. பிரதி அமைச்சர்கள்
   - கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் - கௌரவ திரு நாமல் கருணாரத்ன
   - காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் - கௌரவ சுசில் ரணசிங்க
3. அமைச்சின் செயலாளர் - திரு. டி.பி. விக்கிரமசிங்க

தொலைபேசி	011-2034300
தொலைநகல்	011-2868910
மின்னஞ்சல் முகவரி	info@agrimin.gov.lk
இணையத்தளம்	www.agrimin.gov.lk

உள்ளடக்கம்		பக்க எண்

கமத்தொழில் கால்நடை வளங்கள் பிரிவு

அத்தியாயம் 01	நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு	09 – 10
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு, விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்	11 – 115
அத்தியாயம் 03	வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை	116 – 150
அத்தியாயம் 04	செயலாற்றுகை குறிகாட்டிகள்	151 – 152
அத்தியாயம் 05	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை	153 – 156
அத்தியாயம் 06	மனிதவள விபரம்	157 – 170
அத்தியாயம் 07	இணக்கப்பாட்டு அறிக்கை	171 - 178

பெருந்தோட்டக் கைத்தொழில் பிரிவு

அத்தியாயம் 01	நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு	180-185
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு, விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்	186-205
அத்தியாயம் 03	வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை	205
அத்தியாயம் 04	செயலாற்றுகை குறிகாட்டிகள்	206
அத்தியாயம் 05	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை	207-211
அத்தியாயம் 06	மனிதவள விபரம்	212-214
அத்தியாயம் 07	இணக்கப்பாட்டு அறிக்கை	215-221

அறிமுகம்

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2355/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. இது, பின்னர் 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2403/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவித்தல் திருத்தப்பட்டு கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு நிறுவப்பட்டது. பின்னர் 2024 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2412/08 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்டு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு நிறுவப்பட்டது.

அதன் பிரகாரம், இந்த அறிக்கையில், முன்பு காணப்பட்ட விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் விவசாயப் பிரிவு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவு ஆகியவற்றின் பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் உள்ள நிறுவனங்கள் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 31.12.2024 வரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தைக் உள்ளடக்கியுள்ளது.

- *கமத்தொழில் பிரிவுடன் தொடர்பான கடமைகளும் பணிகளும் (2023 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம்23 ஆம் திகதிக்குரிய2355/10 ஆம் இலக்க இலக்க அதி விஷேட வர்த்தமாணி அறிவித்தலுக்கு அமைவாக)*

i. *தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் விடயங்களுடன் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடன் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்*

ii. *அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்*

iii. *ஊழலும், வீண்விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.*

iv. *உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உணவு உற்பத்தி செய்தல்.*

v. *இருப்பைக் கையாளுவதற்கும் மற்றும் வழங்கல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்*

vi. *பயிர் பல்வகைப் படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்*

vii. *உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் தரத்தை நுகர்வோருக்கு உறுதிப்படுத்து வதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்.*

viii. *பாரம்பரிய விவசாயிகளை, இளைஞர்களை மற்றும் மாணவர்களை நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய விவசாய கற்கைகளுக்காக வழிப்படுத்துதல்.*

ix. *இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்*

x. *இரசாயனக் பீடைநாசினிகள் மற்றும் ஏனைய இரசாயனக் கலவைகள் குறித்த தரத்துடன் பயன்படுத்துவதற்கு ஒழுங்குறுத்தல்.*

xi. *விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு பயிர்ச்செய்கை காப்புறுதி முறைமை மற்றும் விவசாய ஓய்வ{தியத் திட்டங்களை விஸ்தரித்தல்*

xii. *நேரடி உற்பத்தியாளர்கள், பொதி செய்யும் நிறுவனங்கள், மொத்த வியாபார நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு இடையேயான வழங்கள் சங்கிலிகளை வலுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு அதிக விலையைப் பெற்றுக்கொடுத்தல்*

xiii. காலநிலை மாற்றங்கள் மற்றும் வானிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளுதல்.

xiv. தரமான விதைகள், கன்றுகள் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

xv. நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப நீர் வழங்கல் முகாமைத்துவம் .

xvi. விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள் மற்றும் நிலைபேறான வீட்டுத் தோட்டச் செய்கை அபிவிருத்தி திட்டங்களை ஊக்குவித்தல்

xvii. சிறிய அளவிலான விவசாயத் தொழில் முயற்சிகள் மற்றும் அமைப்புகளை எழுச்சிபெறச் செய்வதற்கும், மேம்படுத்துவதற்குமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

xviii. சேதனப் பசளைப் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி செய்தல் என்பவற்றை நோக்கி படிப்படியாக மாறுவதற்கு ஏற்ற நிகழ்ச்சித் திட்டங்களை விஸ்தரித்தலும் ஊக்குவித்தலும்

xix. தரமான உர இறக்குமதி, விநியோகம் என்பவற்றை அரச நிவாரண கொள்கைத் திட்டத்திற்கமையச் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துதல்

xx. சிறந்த தரத்திலான இரசாயனப் பசளைகள் மற்றும் சூழலுக்குச் சாதகமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்

xxi. உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்துக்கமைவான சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவித்தல்

xxii. உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்தியடையும் வகையில், நியாயமான விலைகளுக்கான கொள்கையொன்றையும் பயிர்ச்செய்கைக்கான பல்லினத்தன்மை வேலைத்திட்டமொன்றையும் நடைமுறைப் படுத்துதல்.

xxiii. வீட்டுத் தோட்டச் செய்கை திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

xxiv. மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துதல்

xxv. விவசாய உற்பத்திகளைப் பெறுமதிசேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

xxvi. சர்வதேச மட்டத்திலான தரமான விதை உற்பத்திகளுக்காக உள்நாட்டு விதைக் கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்

xxvii. தரமான விதைகள் மற்றும் பயிர்ச்செய்கைக்கான உற்பத்திகளுக்காக தனியார் துறையினரை ஊக்குவித்தல்.

xxviii. அரச விவசாயப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்

xxix. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பயிர்களை இறக்குமதி செய்தலைக் குறைத்தல்

xxx. கால்நடைவளப் பிரிவின் உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளைச் வழங்குதல்.

xxxi. கால்நடை நலன்புரி மற்றும் அவை தொடர்பான செயற்பாடுகள்

xxxii. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை வளங்கள் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவினை விரிவுபடுத்தல்.

xxxiii. கால்நடைகளின் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞானரீதியில் இனவிருத்தி முறைகளை பிரபல்யப்படுத்தலும் மற்றும் அத்தகைய கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாப்பது மற்றும் தனிமைப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள்

xxxiv. பல்வேறு வகையான பூகோளத் தேவைகளுக்கமைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

xxxv. கால்நடைவளத் துறையைச் சேர்ந்த உற்பத்திகளை மேம்படுத்தலும் அவற்றை ஏற்றுமதிக்காக ஊக்குவிததலும்

xxxvi. நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடைப் பண்ணைகளை நிருமாணிப்பதற்குத் தேவையான காணிகளையும் முதலீட்டு வசதிகளையும் வழங்குதல்.

xxxvii. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் உள்நாட்டு உற்பத்திகளையும் நுகர்வுக்கான வாய்ப்புகளையும் அதிகரித்தல்.

xxxviii. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத்துவமும்.

xxxix. உள்நாட்டு விவசாயப் உரபத்திப் பொருட்களுக்கான சந்தையை விரிவுபடுத்துதல்

xl. இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும்

xli. நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள்

xlii. கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.

- கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள்நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்

i. விவசாயத் திணைக்களம்

ii. கமநல அபிவிருத்தித் திணைக்களம்

iii. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை

iv. நெல் சந்தைப்படுத்தல் சபை

v. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

vi. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்

vii. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகையும், குடியேற்ற அதிகாரசபையும் (ஹதபிம அதிகாரசபை)

viii. தேசிய உரச் செயலகம்

ix. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

x. கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

xi. இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை (தேசிய உணவு மேம்பாட்டுச் சபை)

xii. தேசிய அறுவடை க்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்

xiii. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

xiv. தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்

xv. மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட்

xvi. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி

xvii. பிராந்திய பெருளாதார மத்திய நிலையங்கள்

- கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்

i. 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் காப்புறுதிச் சட்டம்

ii. 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்

iii. 1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கிராமோதய சபைச் சட்டம்

iv. 1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்

v. 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதை நெல் சட்டம்

vi. 1996 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மண்வளம் பேணல் சட்டம்

vii. 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்

viii. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனச் சட்டம்

ix. 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம்

x. 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்

xi. 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்படுத்தல் சட்டம்
xii. 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்
xiii. 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்
xiv. 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை சட்டம்
xv. 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்ச் சட்டம்
xvi. 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்கு தீனிச் சட்டம்
xvii. 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்
xviii. 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்கு மருத்துவ தொழில்துறைச் சட்டம்
xix. வேறு அமைச்சரொருவரின் கீழ் குறிப்பாக ஒதுக்கப்படாத விடயங்களுடன் தொடர்பான ஏனைய அனைத்து நியதிச் சட்டங்களும்

கமத்தொழில் பிரிவு

- தொலைநோக்கு

"உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை"

- செயற்பணி

"இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினுடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோல ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்"

நோக்கங்கள்

1 உணவு மற்றும் இவை சார்ந்த விவசாயப் பயிர்த்துறைக்கு கொள்கை ஒத்துழைப்பை வழங்குதல்.
2 உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
3 விவசாய உற்பத்திகளுக்கான தளம்பலற்ற விலையை முன்னெடுத்துச் செல்லல்.
4 நெல் இருப்புக்களை கொள்வனவு செய்தலும் சந்தை நிகழ்ச்சித் திட்டங்களை வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்தலும்.
5 செயற்திட்டங்களை உரிய வேளையில் அமுல் செய்தல்.
6 தெரிவு செய்யப்பட்ட பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
7 துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வினைத்திறன் மிக்க வகையிலும், விளைவுப் பெருக்கமுள்ளதாகவும் அமுல் செய்தல்.
8 வெளிநாட்டு நிதி அமைப்புக்களை வினைத்திறன் மிக்க வகையிலும் விளைவுப்பெருக்கமுள்ளதாகவும் ஈடுபடுத்தல்.
9 சேவை வழங்குணர்களுக்கு நட்புறவுடனான மற்றும் சிறந்த பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட நிருவாக முறையொன்றை அமுல் செய்தல்.
10 முழு அரச சேவையிலும் விளைவுப் பெருக்கமுள்ள முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

- அமைச்சினால் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

1. இலக்கு 2 - பட்டினிக்கு முடிவுகட்டுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.
2. இலக்கு 5 - பாலின சமத்துவத்தை அடைவது மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டல்.
3. இலக்கு 12 – நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.

பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்- சுருக்கம்

2024 ஆம் ஆண்டில் செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம் தொடர்பானசுருக்கம்

தொ/ இ	நிகழ்ச்சித் திட்டம்	அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	திருத்திய ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம்%
1	மூலதன செலவுகள்	37,712.67	37,914.22	25,145.27	66
2	மீண்டுவரும் செலவுகள்	48,389.80	52,910.68	51,656.51	97
	மொத்த வரவுசெலவு	86,102.47	90,824.90	76,801.78	85

செலவுத் தலைப்பு 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம் (31/12/20223 ஆம் திகதி வரை)

தொ/ இ	நிகழ்ச்சித் திட்டம்	அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	திருத்திய ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம்%
	மீண்டுவரும் செலவுகள்				
	உர மானிய நிகழ்ச்சித் திட்டம்	36,050.00	39,584.00	39,579.41	100
	மூலதன செலவுகள்				
1.	உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம்	300.00	300.00	221.51	74
2.	விவசாயம் மற்றும் மீன்வளத் துறைகளை நவீனமயமாக்கும் நிகழ்ச்சித் திட்டம்	2,500.00	2,500.00	668.51	27
3.	மேலதிக பயிர் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்	150.00	150.00	149.80	100
4.	ஆடு வளர்ப்புச் செயற்திட்டம்	200.00	200.00	170.32	85
5.	பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாயக் கொள்கையை தயாரித்தல்	20.00	20.00	14.76	74
6.	விவசாயிகளுக்கான பங்களிப்பு காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்	1,000.00	1,000.00	1,000.00	100
	உப கூட்டுத்தொகை - i	4,170.00	4,170.00	2,224.90	
	வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் செயற்படும் செயற்திட்டங்கள்				
1.	* காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயச் செயற்திட்டம் (CSIAP) - உலக வங்கிக் கடன்	11,800.00	11,350.00	6,002.26	53
2.	சிறிய அளவிலான விவசாய வியாபர பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) – IFAD	7,024.00	7,024.00	4,777.39	68
3.	விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP) - உலக வங்கிக் கடன்	7,250.00	7,700.00	6,937.09	90
4.	சிறிய அளவிலான விவசாய வணிகத்திற்கான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கான செயற்திட்டம் (SARP)	2,836.00	979.50	447.02	46
5.	கொழும்பு - கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல் (JICA)	14.17	14.17	7.93	56
6.	இலங்கை தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் ஆய்வு வசதிகளை விருத்தி செய்தல் (KOICA)	22.50	28.20	28.03	100
	உப கூட்டுத்தொகை - ii	28,946.67	27,095.87	18199.72	
	அமைச்சின் நோக்கெல்லையின் உள்ள நிறுவனங்கள்				

தொ / இ	நிகழ்ச்சித் திட்டம்	அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	திருத்திய ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம்%
1.	ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்	30.00	30.00	23.53	78
2.	அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம்	35.00	35.00	25.30	72
3.	தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை (இலங்கை ஹதபிம அதிகாரசபை)	220.00	220.00	220.71	100
4.	இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை	30.00	30.00	21.18	71
5.	விஷேட பெருளாதார மத்திய நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள்	50.00	50.00	7.05	14
6.	தேசிய கால்நடை அபிவிருத்தி சபையை மறுசீரமைக்கும் செயல்முறைக்கு உதவி வழங்கல்	143.59	143.59	126.99	88
உப கூட்டுத்தொகை - iii		508.59	508.59	424.76	
மொத்த கூட்டுத்தொகை - (i+ii+iii)		33,625.26	31,774.46	20,849.38	

கால்நடை வளப் பிரிவு - செலவுத் தலைப்பு 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

தொ / இ	நிகழ்ச்சித் திட்டம்	அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபா)	திருத்திய ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	மேலதிக குறிப்புகள்
1.	கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தி	50.00	21.45	43	2025 ஆம் ஆண்டிற்கான நிதி பொறுப்புகளாக 6.43 மில். ரூபாய் செலுத்த வேண்டும்
2.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்)	150.00	27.46	18	2025 ஆம் ஆண்டிற்கான நிதி பொறுப்புகளாக 13.90 மில். ரூபாய் செலுத்த வேண்டும்.
3.	சிறு மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (அபிவிருத்தி உதவி)	100.00	82.96	83	2025 ஆம் ஆண்டிற்கான நிதி பொறுப்புகளாக 2.49 மில். ரூபாய் செலுத்த வேண்டும்.
உப கூட்டுத்தொகை - i		300.00	131.87		
1.	சிறிய அளவிலான பால் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்தல் - பிரான்ஸ் நிதியுதவி	10.00	0.60	6	
உப கூட்டுத்தொகை - ii		10.00	0.60		
மொத்த கூட்டுத்தொகை - (i+ii)		310.00	132.47		

அத்தியாயம் 01 - நிறுவன விபரம்- நிறைவேற்றுப் பொழிப்பு

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலிற்கு அமைவாக, உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை (நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை) அடைதல் மற்றும் தேசிய உணவு உற்பத்தியை அதிகரித்தல் என்பவற்றுடன் தொடர்பான அபிவிருத்தி இலக்குகளை கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்ப் பிரிவுகள் செயற்படுத்தின.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் விவசாயப் பிரிவிற்கு செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ், 2024 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 31,774.46 மில். ரூபாய் ஆகும். மேலும், கால்நடை வளத் துறைக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 310.00 மில். ரூபாய் ஆகும். அத்துடன், 2024 ஆம் ஆண்டின் மீண்டுவரும் நிகழ்ச்சித் திட்டமான உர மானியத் திட்டத்துக்கு 39,584.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் விவசாயப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில், உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டத்திற்கு 300.00 மில். ரூபாயும், விவசாயம் மற்றும் மீன்வளத் துறைகளை நவீனமயமாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2,500.00 மில். ரூபாயும், விவசாயிகளுக்கான பங்களிப்பு காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு 1,000.00 மில். ரூபாயும், பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாயக் கொள்கையை தயாரிப்பதற்காக 20.00 மில். ரூபாயும், கிராமிய பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட மேலதிக பயிர்ச் செய்கை செயற்திட்டத்திற்கு 150.00 மில். ரூபாயும் ஆடு வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு 200.00 மில். ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு 27,096.00 மில். ரூபாய் ஆகும்.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விவசாயப் பிரிவின் கீழுள்ள நிறுவனமான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு 30.00 மில். ரூபாய் நிதியும், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனத்திற்கு 35.00 மில். ரூபாய் நிதியும், இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு 220.00 மில். ரூபாய் நிதியும், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் சபைக்கு 30.00 மில். ரூபாய் நிதியும், விஷேட பொருளாதார மையங்களை அபிவிருத்தி செய்வதற்காக 50.00 மில். ரூபாய் நிதியும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையை மறுசீரமைக்கும் செயல்முறைக்கு உதவி வழங்குவதற்கு 143.59 மில். ரூபாய் நிதியுமாக மூலதன செலவின ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவற்றுக்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உர மானிய வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நெற் செய்கைக்குத் தேவையான உர வகைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும், ஏனைய பயிர்களுக்கு தேவையான உர வகைகளை மானிய விலையில் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கால்நடை வளத் துறையின் முன்னேற்றத்திற்காக கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதில் முதன்மையான அங்கமாகச் செயற்படும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு, உள்நாட்டுப் பசுமையான பால் உற்பத்தியில் தன்னிறைவடைவதை இலக்காக் கொண்டு, உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுப் பால் உற்பத்தித் துறையை வலுப்படுத்துதல், ஆடு, கோழி, பன்றி போன்ற ஏனைய துணைப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் தரத்தில் சிறந்த கால்நடை உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் சூழல் நட்பு முறைகளின் அடிப்படையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் என்பவற்றுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதன்படி, 2024 விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 50 மில். ரூபாயும், சிறு மற்றும் நடுத்தர கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 250.00 மில். ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவிக்கும் விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், உர மானிய நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதனூடாக நெற் செய்கைக்குத் தேவையான உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாகவும், ஏனைய பயிர் வகைகளுக்குத் தேவையான உர வகைகளை மானிய விலையிலும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிறுவனக் கட்டமைப்பு – விவசாயப் பிரிவு

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

செலவுத் தலைப்பு 118 இன் கீழ் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

i). உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் செலவுத் தலைப்பு 118-2-03-020-2509/2202

2024 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டற்கு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் 300 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பின்வரும் நோக்கங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

i.) உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்
ii.) உணவுப் பணவீக்கத்தைக் குறைத்தல்.
iii.) அந்நியச் செலாவணியை சேமித்தல்.
iv.) இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின்பால் ஈர்த்தல்.
v.) புதிய தொழில்நுட்பங்களை நோக்கி விவசாயிகளை வழிநடத்தல்
போன்ற விடயங்களாகும்.

மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு, அடையாளம் காணப்பட்ட விஷேட பயிர்களின் (களப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள், காய்கறி வகைகள்) உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல், விவசாயத்தில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், விவசாயத் தொழிற்துறை மற்றும் தொழில் முனைவு அபிவிருத்தி, நீர் முகாமைத்துவம், காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் பொருட்டு மேற்கொள்ளும் பயிர் பாதுகாப்புத் நிகழ்ச்சித் திட்டங்கள், விவசாய செயற்திட்ட நடவடிக்கைகள், விவசாயப் புத்தாக்க நடவடிக்கைகள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் போன்ற துறைகளின் கீழ் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் கமத்தொழில் அமைச்சு, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள், விஷேட செயற்திட்டங்களுக்கான மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகங்கள், விவசாய திணைக்களம் மற்றும் தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், கமத்தொழில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் கீழ்வரும் முறையில் அமைகிறது.

தொ / இல	செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனம்	செயற்திட்ட எண்ணிக்கை	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	முன்னேற்றம்	
				நிதி (மில். ரூபாய்)	பௌதீக (%)
1	கமத்தொழில் அமைச்சு	11	52.20	221.51	96
2	விவசாய திணைக்களம்	19	108.21		
3	மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் (18 அலுவலகங்கள் ஊடாக)	34	91.26		
4	தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்	5	32.70		
5	மாகாண சபைகள் (ஊவா, மேல்)	2	4.15		
6	தேசிய உரச் செயலகம்	1	3.49		
7	நெல் சந்தைப்படுத்தல் சபை	1	4.02		
	மொத்தம்	73	296.03		

புகைப்பட இலக்கம் 01 - 03

ii). விவசாய நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம்
செலவுத் தலைப்பு இலக்கம்118-2-03-088-2509

2024 வரவுசெலவுத் திட்ட உரையின் 36 ஆம் இலக்க முன்மொழிவின் கீழ், விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிற்துறையை நவீனமயமாக்குவதற்கான சபையை வலுவூட்டுவதற்கு 2,500.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி, ஜனாதிபதி செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள "விவசாய நவீனமயமாக்கல் மையத்தின்" (Agriculture Modernization Hub) ஊடாக இந்த முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது 25 மாவட்டங்களில் உள்ள 26 பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் 5 நிறுவனங்கள் என்பவற்றுக்கூடாக ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகள், மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பின்னர் குறித்த செயற்திட்ட முன்மொழிவுகள் மாவட்ட செயலகங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டம் பின்வரும் 03 முக்கிய கூறுகளின் கீழ் செயல்படுத்தப்பட்டது.

a) கடன் திட்டம்

ஜனாதிபதியின் செயலாளரின் 2024.07.22 ஆம் திகதிக்குரிய PS/APL/Circular/6/2024 எனும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கான வட்டியில்லா கடன் வழங்கும் திட்டமானது, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளுக்கு ஊடாக செயற்திட்டப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதன் முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு.

வங்கி	பயனாளர் எண்ணிக்கை	விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை (மில். ரூபாய்)
இலங்கை வங்கி	151	91.30
பிரதேச அபிவிருத்தி வங்கி	71	70.33
மக்கள் வங்கி	12	7.44
மொத்தம்	234	169.07

b) நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டம்

விவசாயத் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கறுவா அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றால் இந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் ஒவ்வொன்றிற்கும் 35.00 மில்லியன் ரூபாய் வீதமாக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, இதற்கமைவாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனம்	செயற்திட்டப் பொழிப்பு	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	முன்னேற்றம்(%)	
			நிதிசார் முன்னேற்றம் (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம் (%)
விவசாயத் திணைக்களம்	நெற் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் - அனுராதபுர மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.	13.28	10.15	100
	சிறு போகத்தில் சோள உற்பத்திக்கு வயற் காணிகளை பன்முகப்படுத்துதல் - ஹம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன.	21.60	21.58	100
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்	அறுவடைக்குப் பிந்தைய உபகரணங்களைப் பயன்படுத்துவதை பிரபல்யப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரத்தை மேம்படுத்துதல்.	10.60	6.62	85

நிறுவனம்	செயற்திட்டப் பொழிப்பு	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	முன்னேற்றம் (%)	
			நிதிசார் முன்னேற்றம் (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம் (%)
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்	புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் சிறிய அளவிலான பாற் பண்ணை தொழில்முனைவோரை உருவாக்குதல்.	35.00	27.10	90
கறுவா அபிவிருத்தித் திணைக்களம்	இலங்கை மெய் கறுவா உற்பத்தியை உயர்த்துவதற்கான பல்திசை அணுகுமுறை.	35.00	31.76	95
இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை	தற்போதுள்ள அலங்கார மீன் பண்ணைகளில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இனப்பெருக்கம் மற்றும் வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அலங்கார மீன்களின் உற்பத்தியை அதிகரித்தல்	35.00	34.65	100

c) இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராமத் திட்டம்

இளைஞர் சமூகத்தை விவசாயத் துறையை நோக்கி ஈர்ப்பதன் ஊடாக அவர்களின் பொருளாதார நிலையை விருத்தி செய்வதற்கு பிரதான வருமான வழிகளை உருவாக்குவதன் மூலம் இளம் விவசாய தொழில்முனைவோர் சமூகத்தை உருவாக்குவதே இந்த செயற்திட்டக் கூறின் நோக்கமாகும்.

2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஒதுக்கீட்டை சிறந்த முறையில் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்ட 160 கிராமங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. அதன்படி, 333.84 மில். ரூபாய் செலவிடப்பட்டு 118 கிராமங்களில் 468 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

புகைப்பட இலக்கம் 04 – 08

iii). மேலதிகப் பயிர் வகைகளைப் பயிரிடுவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்
செலவுத் தலைப்பு 118-2-03-071-2202

2024 ஆம் ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு 150.00 மில். ரூபாய் ஆகும். இதன் மூலம் சுமார் 3,000 மெற்றிக் தொன் அறுவடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு நிலவிய மோசமான காலநிலை காரணமாக, அறுவடையில் குறைவு ஏற்பட்டது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 98% ஆகக் காணப்படுவதுடன் பௌதீக முன்னேற்றம் சுமார் 90% ஆகவும் பதிவாகியுள்ளது. மாவட்ட செயலாளரின் நெறிப்படுத்தலின் கீழ் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பின் ஊடாக மாவட்ட விவசாயப் பணிப்பாளரினால் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 09

மேலதிகப் பயிர் வகைகளைப் பயிரிடுவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம்

தொ/ இல	மாவட்டம்	ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகை (மில். ரூபாய்)	2023 இற்கான செலுத்த வேண்டிய விலைப் பட்டியல்களுக்கு செலுத்துவதற்கு ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபாய்)	பயிர் வகை	மொத்த ஒதுக்கீடு மில். ரூபாய்	நிதி முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம்		கிடைத்த மொத்த அறுவடை (மெற்றிக் தொன்)	கிடைத்த மொத்த அறுவடைப் பெறுமானம் (ஒரு ஏக்கருக்கான சராசரிப் பெறுமானம் கிலோ கிராமில்)
						செலவு மில். ரூபாய்	தேர்ந்தெடுக்கப் பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை	பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பு (ஹெக்டேர்)		
1	யாழ்ப்பாணம்	7.00	-	உளுந்து	6.93	6.93	1,244	158	17.06	43.19
				பாசிப்பயறு			450	47.64	5.51	46.26
2	கிளிநொச்சி	5.00	-	உளுந்து	4.95	4.94	480	99	17.09	69.05
				பாசிப்பயறு			286	58.3	7.34	50.36
3	வவுனியா	21.00	-	உளுந்து	20.79	20.78	3,071	629.56	630	400.28
				பாசிப்பயறு			99	27.46	27.46	400
4	மன்னார்	22.00	0.03	உளுந்து	21.78	21.78	100	40	2	20
				பாசிப்பயறு			1,621	592.5	422.7	285.37
5	முல்லைத்தீவு	21.00	-	உளுந்து	20.79	20.75	1,731	546.52	388.45	284.31
				பாசிப்பயறு			409	109.7	87.76	320
6	திருகோணமலை	5.00	-	உளுந்து	4.95	4.80	250	69.152	40	231.37
				பாசிப்பயறு			413	112.652	50.9	180.73
7	மட்டக்களப்பு	10.00	-	உளுந்து	9.90	9.90	20	8	7	35
				பாசிப்பயறு			1,139	281.7	246.49	350
8	அம்பாறை	5.00	-	உளுந்து	4.95	4.64	2	0.4	0.1	100
				பாசிப்பயறு			696	173.304	48.85	112.75
9	பொலன்னறுவை	5.00	-	உளுந்து	4.95	4.62	40	3.28	0.42	51.22
				பாசிப்பயறு			903	135.432	55.98	165.34
10	அனுராதபுரம்	11.00	-	உளுந்து	10.89	10.88	627	162.4	76.282	187.89
				பாசிப்பயறு			822	157.6	69.428	176.21
11	குருநாகல்	10.00	-	உளுந்து	9.90	9.87	121	20	3.5	70
				பாசிப்பயறு			1,049	267.5	94.14	140.77
12	அம்பாந்தோட்டை	25.00	-	உளுந்து	24.75	24.46	-	-	-	-
				பாசிப்பயறு			2,466	716	450.95	251.93
13	மொனராகலை	3.00	-	உளுந்து	2.97	2.81	-	-	-	-
				பாசிப்பயறு			309	88.32	79.78	361.32
மொத்தம்		150.00	0.03	உளுந்து	148.50	147.17	7,686	1,736.31	1181.9	272.28
				பாசிப்பயறு			10,662	2,768.11	1647.29	238.04
மொத்த கூட்டுத்தொகை							18,348	2,768.11	2,829.19	

iv). ஆடு வளர்ப்புச் செயற்திட்டம்

செலவுத் தலைப்பு இலக்கம்118-2-03-080-2202

2024 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு 200.00 மில். ரூபாய் ஆகும். அந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, 18 மாவட்டங்களின் மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலாளர்/கால்நடை வைத்திய அதிகாரிகளாலும், கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மத்திய மாகாண பிரதம செயலாளரின் மேற்பார்வையின் கீழ் கால்நடை வைத்திய அதிகாரிகளாலும் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்திட்டத்திலிருந்து ஒரு பயனாளிக் குடும்பத்துக்கு மூன்று ஆடுகளைக் கொள்வனவு செய்வதற்காக 85,000.00 ரூபாய் வீதம் நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு அமைவாக, இந்த திட்டத்தின் மூலம் 21 மாவட்டங்களில் உள்ள 2,025 பயனாளிக் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 85% ஆகக் காணப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றம் சுமார் 80% ஆகவும் பதிவாகியுள்ளது.

ஆடு வளர்ப்புச் செயற்திட்டத்தின் முன்னேற்றம்

தொ/ இல	மாவட்டம்	அங்கீகரிக்கப்பட்ட விதம்			ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் முன்னேற்றம்		
		அங்கீகரித்த ஒதுக்கீடு (மில். ரூபாய்)	பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை	விலங்குகளின் எண்ணிக்கை	பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை	விலங்குகளின் எண்ணிக்கை	செலவு (மில். ரூபாய்)
1	யாழ்ப்பாணம்	8.00	90	270	90	270	7.91
2	கிளிநொச்சி	5.00	56	168	56	168	4.93
3	வவுனியா	25.00	298	894	301	911	26.20
4	மன்னார்	20.00	224	672	224	672	19.84
5	முல்லைத்தீவு	17.00	192	576	192	576	16.76
6	திருகோணமலை	5.00	56	168	57	165	4.68
7	மட்டக்களப்பு	8.00	255	765	255	770	22.39
8	அம்பாறை	5.00	56	168	56	167	4.84
9	பொலன்னறுவை	2.00	22	66	22	66	1.89
10	கொழும்பு	4.00	45	135	41	105	3.29
11	களுத்துறை	6.00	67	201	57	171	4.82
12	கம்பஹா	5.00	48	144	48	144	4.15
13	குருநாகல்	10.00	113	339	112	336	9.62
14	புத்தளம்	5.00	49	147	49	147	3.92
15	ஹம்பாந்தோட்டை*	33.00	-	-	-	-	0.10
16	மாத்தறை	5.00	56	168	50	149	4.32
17	காலி	12.00	117	351	115	345	10.03
18	மொனராகலை	5.00	56	168	30	90	2.62
19	மாத்தளை	5.00	55	165	55	165	4.66
20	கண்டி	10.00	110	330	110	330	9.31
21	நுவரெலியா	5.00	60	180	60	180	5.08
மொத்தம்		200.00	2,025	6,075	1,980	5,927	171.33

* 2024 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இந்த செயற்திட்டம் செயல்படுத்தப்படவில்லை; மேலும் செலுத்தவேண்டிய விலைப்பட்டியல்களுக்காக 0.10 மில். ரூபாய் செலவிடப்பட்டது.

புகைப்பட இலக்கம் 10

v.) பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-026-2507 (SLCARP)

இந்நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

vi.) இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை
செலவுத் தலைப்பு இலக்கம்118-2-03-065-2201

இந்நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

vii.) விவசாயிகளுக்கானபங்களிப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல்
செலவுத் தலைப்பு இலக்கம்118-2-03-043-2202

இந்நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

செலவுத் தலைப்பு இலக்கம் 118 மீண்டுவரும் செலவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

1. உர மானிய நிகழ்ச்சித் திட்டம்

- நிதி முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் சதவீதத்தில்
மீண்டுவரும் செலவு	39,584.00	39,579.41	99

- பௌதீக முன்னேற்றம்

விபரம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை	2024 ஆம் ஆண்டில் கிடைத்த ஒதுக்கீடு	செலவு செய்த தொகை (ரூபாய்)	நிதி முன் னேற்றம் சதவீதத் தில் (%)	நிலப்பரப்பு (ஹெக்.)	பயனாளர்களின் எண்ணிக்கை
2023/24 பெரும் போகம்	6,500.00	6,439.14	6,438.68	100	429,245.52	1,022,000
2024 சிறு போகம்	7,500.00	6,810.11	6,810.11	100	54,048.21	964,082
2024/25 பெரும் போகம்	9,978.15	9,978.15	9,976.57	100	97,306.10	682,194
*2023 சிறு போகம் (தனியார் உர நிறுவனங்களுக்கு பணம் செலுத்துதல்)	288.05	270.04	268.24	99	-	-
**உலக வங்கி கடன் யூரியா	11.14	11.14	9.03	81	-	-
***ஜப்பானிய உதவியின் கீழ் யூரியா	4.84	4.84	4.83	100	-	252,965
மொத்த கூட்டுத்தொகை	24,282.18	3,513.43	23,507.47			

* 2023 சிறுபோகத்தில் க.சே.நி மற்றும் தனியார் உர நிறுவனங்கள் என்பவ்றிறிடமிருந்து உரங்களை கொள்வனவு செய்த விவசாயிகள் எண்ணிக்கை மற்றும் பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பு (ஹெக்டேர்கள்) அளவு என்பவற்றைத் தனித்தனியாக அடையாளம் காண முடியவில்லை.

** க.சே.நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட உர விநியோக நடவடிக்கைகள் தொடர்பான கையாளுகை செலவுகள்.

*** ஜப்பானிய உதவியின் கீழ் கிடைத்த யூரியா – பயிர்ச் செய்கை நிலப்பரப்பின் அடிப்படையில் விநியோகிக்கப்படவில்லை.

மூலம் - கமநல அபிவிருத்தித் திணைக்களம்

- மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் (MOP) உரத்தை இலவசமாக விநியோகிக்கும் திட்டம்.

  உலக உணவுத் திட்டத்தின் (WFP) கீழ் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் (MOP) உரத்தினை இலவசமாக விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்புக்கு 1,283.60 மில். ரூபாய் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தப்பட்டுள்ளது.

- நீண்ட கால கடன்களுக்கான மாதாந்த தவணைகள் மற்றும் வட்டி செலுத்துதல்

  இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகியவற்றால் இறக்குமதி செய்யப்பட்ட உரங்களுக்காக மக்கள் வங்கியால் திறக்கப்பட்ட கடன் கடிதங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை நீண்ட கால கடன்களாக மாற்றப்பட்டதன் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் மாதாந்த தவணைகள் மற்றும் வட்டியாக 14,512.47 மில். ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

- முந்தைய ஆண்டுகளில் கடமைகள் மற்றும் பொறுப்புகளுக்காக 273.29 மில். ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

- தேசிய உரச் செயலகத்தின் உர மாதிரிப் பரிசோதனைகளுக்கு 0.69 மில். ரூபாய் பெறுமதியான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்

1. "தேசிய விவசாயக் கொள்கையை' உருவாக்குதல்

அரச கொள்கை பிரகடனத்தின் நோக்கங்களுக்கு இணங்க, உணவுப் பாதுகாப்பு, விவசாய தொழில்முனைவு, விவசாய ஏற்றுமதியை ஊக்குவித்தல் என்பவற்றை இலக்காகக்கொண்டு தேசிய விவசாய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. மேலும், உணவுத் தொகுதிகளை நிலைபேறான விதத்தில் பாதுகாத்தல், பசுமை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் போன்றவற்றை பிரபலப்படுத்துவதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- பௌதீக முன்னேற்றம்

10 தலைப்புகளின் கீழ் 13 இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட "தேசிய விவசாய கொள்கை" அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம்

01. விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம்(ASMP)

1.1 எதிர்பார்க்கப்படும் இலக்குகள்

i.) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போட்டித்தன்மைமிக்க மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் முறைகள் (உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்)

ii.) சிறந்த சந்தை வாய்ப்புகளுக்கு பதிலளிப்பதற்கான அவர்களின் திறன்களை விருத்தி செய்தல் (தயாரிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல்)

iii.) விவசாய வணிகமயமாக்கலை நோக்கி நகர்தல் (விவசாயம் ஒரு வணிகமாக)

1.2 செயல்படுத்தும் நிறுவனம்- கமத்தொழில் அமைச்சு

1.3 மதிப்பிடப்பட்ட மொத்த வரவுசெலவுத் தொகை- 63.64 மில்லியன் அமெ. டொலர் + 23.13 மில்லியன் யூரோ

1.4 செயற்திட்ட காலம்- 17.01.2017 முதல் 31.12.2024 வரை

1.5. நிதி முன்னேற்றம்

தொ / இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் %
1	உலக வங்கி	4,474.00	4,473.00	99.98
2	ஐரோப்பிய ஒன்றியம்	3,300.00	3,289.00	99.67
3	இலங்கை அரசு	4,474.00	4,473.00	99.98

1.6. பௌதீக முன்னேற்றம்

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டமானது (ASMP), விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், சந்தை இணைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் இலக்கு தலையீடுகள் மூலம் விவசாய அமைப்புகளுக்கு உதவி வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:

i.) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போட்டித்தன்மைமிக்க மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல் (உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்)

ii.) சிறந்த சந்தை வாய்ப்புகளுக்கு பதிலளிப்பதற்கான அவர்களின் திறன்களை விருத்தி செய்தல் (தயாரிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல்)

iii.) விவசாய வணிகமயமாக்கலை நோக்கி நகர்தல் (விவசாயம் ஒரு வணிகமாக)

i. பயிர்ச் செய்கை கொத்தணிகள் மற்றும் பயனாளிகள்

- மொத்தம் 72 பயிர்க் கொத்தணிகள் நிறுவப்பட்டன, அவற்றில் பின்வருவன அடங்கும்
  - 31 முன்னோடிக் கொத்தணிகள்
  - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மொனராகலை, மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களில் 21 ISP (சர்வதேச சேவை வழங்குநர்) கொத்தணிகள்
  - வவுனியா, கிளிநொச்சி, அம்பாறை, பதுளை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தால் உதவி வழங்கப்படும் 20 கொத்தணிகள்
- இவற்றில் பயிரிடப்படும் பிரதான பயிர்களுள், மிளகாய், கொடித்தொடை, பப்பாளி, TJC மாம்பழம், ஜம்போ நிலக்கடலை, மாதுளை, முள் சீத்தாப்பழம், நிலக்கடலை, புளி வாழைப்பழம், கெவென்டிஷ் வாழைப்பழம், Hass ஆனைக்கொய்யா, கலப்பின சோள

விதை, காய்கறி வகைகள், கொய்யா, ஜம்போ நிலக்கடலை விதை, மிளகாய் விதைகள், உருளைக்கிழங்கு விதைகள், கலப்பின சோள விதைகள், காய்கறி விதைகள் மற்றும் பெரிய வெங்காய விதைகள் ஆகியவை அடங்கும்.

- இந்த செயற்திட்டம் 35,634 விவசாயிகளுக்கு (கொத்தணி மற்றும் கொத்தணி அல்லாத) பயனளித்துள்ளது.
- புதிதாக உருவான வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை - 312
- மொத்த கொத்தணி அல்லாத பயனாளிகளின் எண்ணிக்கை - 17,162

ii.) விவசாய அமைப்புகள் மற்றும் வர்த்தக அபிவிருத்தி

- 60 பட்டியலிடப்படாத பொது நிறுவனங்கள் (PUCs) பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த நிறுவனங்கள் வணிகத் திட்டங்களைக் கொண்டுள்ளதுடன், இவற்றுள் பல ஏற்கனவே இலாபம் ஈட்டி வருகின்றன.
- ASMP இன் துணைக் கூறு 2.4 இன் கீழ் நடத்தப்பட்ட கொள்கை ஆராய்ச்சியின் அடிப்படையில், PUC மாதிரியானது 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, விவசாயிகளால் நடத்தப்படும் விவசாய வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பதனிடும் செயலாக்க மையங்கள் (Processing Center) நிறுவப்பட்டுள்ளன.
- இதுவரை, சந்தைப்படுத்தலுடன் தொடர்பான 15 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன . இவற்றுக்கு மேலதிகமாக, முறையான ஒப்பந்தங்கள் இல்லாமல் நடைபெறுகின்ற 71 தொடர்ச்சியான பரிவர்த்தனைகள் காணப்படுகின்றன.
- இராஜாங்கனை புளி வாழைப்பழக் கொத்தணியின் முகாமைத்துவ நடவடிக்கைகள் பொதுப் பட்டியலிடப்படாத நிறுவனமென்றால் (PUC) சுயாதீனமாக மேற்கொள்ளப்படுகிறன. Ceylon Fresh Field exports (Pvt.) Ltd. எனும் நிறுவனத்தினால் அந்த புளி வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. செயற்திட்ட தலையீட்டிற்குப் பிறகு நிலைபேறானதாக மாறிய ஒரு நிறுவனத்திற்கு (PUC) இது ஒரு நல்ல உதாரணம் ஆகும்.
- மொத்த அந்நியச் செலாவணி வருவாய் 69 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதுடன் இன்றுவரை சேமிக்கப்பட்ட தொகை 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

iii.) உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்- துணைக் கூறு 2.3

- சிறிய குளங்களை மறுசீரமைத்தல் – 21 குளங்கள்
- கிராமப்புற வீதிகளை மறுசீரமைத்தல் (பண்ணை மற்றும் சந்தை அணுகல்) – 138 கிலோமீட்டர்
- ஏற்று நீர்ப்பாசன அமைப்புகளை மறுசீரமைத்தல் / நிர்மாணித்தல் - 6
- நீரைப் பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில் சூரிய சக்தி நீர் இறைக்கும் இயந்திரங்களை நிறுவுதல் - 285 அலகுகள்
- பதப்படுத்தும் மையங்கள், சேகரிப்பு மையங்கள் மற்றும் களஞ்சிய வசதிகளை நிர்மாணித்தல்/ மறுசீரமைத்தல் – 34

iv.) கொள்கை மற்றும் ஆராய்ச்சி- துணைக் கூறு 2.4

ஆதார அடிப்படையிலான கொள்கை வகுப்புக்கு உதவும் வகையில் இந்தக் கூறு செயற்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தக் கூறின் கீழ், 16 கொள்கை ஆராய்ச்சி ஆய்வுகள், 5 கொள்கை விளக்கக் குறிப்புகள் மற்றும் 6 கொள்கை விளக்கச் சிறு குறிப்புகள் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் விவசாயத் துறையில் எதிர்கால நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படலாம்.

v.) விவசாய அபிவிருத்திக்கு பயனுறுதிமிக்க பங்களிப்பு துணைக் கூறு 2.2

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் நிலைபேறானதன்மை என்பவற்றை மேம்படுத்த பல நவீன விவசாய நுட்பங்களும் தொழில்நுட்பங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

- நீர் சேமிப்பை உறுதி செய்து, உரப் பயன்பாட்டுடன் கூடிய ஒருங்கிணைந்த வினைத்திறன்மிக்க நீர் பயன்பாட்டிற்கான நுண் நீர்ப்பாசனத் தொகுதிகள்.
- களைகளைக் கட்டுப்படுத்தவும், தொழிலாளர் செலவுகளைக் குறைக்கவும் பொலித்தீன் தழைக்கூளத்தைப் (Polymulch) பயன்படுத்துதல்.
- நிலத்தின் அதிகபட்ச பயன்பாட்டைப் பெற உயர் அடர்த்தி கொண்ட இரட்டை வரிசை அமைப்பு (Hi density Double Row).
- விளைச்சல் மற்றும் தாங்குதிறன் என்பவற்றை மேம்படுத்த புதிய பயிர் வர்க்கங்களை அறிமுகப்படுத்துதல்.
- சிறந்த கத்தரிப்பு முறைகள் மற்றும் தாவரங்கள் படர்ந்து வளர்வதற்காக தயார்செய்யப்பட்ட பலகணிகள் (Espalier Systems).
- பயிர் முதிர்ச்சி கண்காணிப்பு மற்றும் துல்லியமான விளைச்சல் எதிர்வுகூறல் என்பவற்றுக்காக வண்ணப் பை முறை மற்றும் Fruit Desk எனும் செயலி என்பவற்றைப் பயன்படுத்தல்.
- பூச்சி எதிர்ப்பு வலைகள் மற்றும் மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பூச்சி கட்டுப்பாடு மற்றும் பீடைநாசினிகளின் பயன்பாட்டைக் குறைத்தல்.
- சிறந்த விவசாய நடைமுறைகளைப் (GAP) பின்பற்றி பழங்கள் மற்றும் காய்கறிகளை பயிரிடுதல்.
- மண் பரிசோதனைகளைப் பயன்படுத்தி பரிந்துரைகளின் அடிப்படையிலான உரப் பிரயோகத்தை மேற்கொள்வதன் மூலம் உரப் பயன்பாட்டை சுமார் 80% ஆல் குறைத்தல்.

vi). தனியார் விவசாயிகள் மற்றும் ஏனைய தலையீடுகளின் ஊடாக செயற்திட்டம் விரிவடைதல்

- இராஜாங்கணையில் உள்ள புளி வாழைப்பழ பதனிடும் மையத்தை முன்மாதிரியாகக் கொண்டு, ASMP பயனாளிகள் அல்லாதவர்களுடன் இணைந்து, வாழை ஏற்றுமதிக்காக ஹம்பாந்தோட்டையில் புதிய ஏற்றுமதிப் பதப்படுத்தல் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

vii.) ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம்

- திட்டமிடப்பட்ட இலக்குகளில் 93% வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு, PUC மற்றும் விவசாய வியாபார முயற்சிகளின் நிலைபேறானதன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1.7 . பிரதான பயிர்க் கொத்தணிகள் தொடர்பான சுருக்கம்

பயிர் கொத்தணி	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பு (ஹெக்டயர்)	பெற்றுக் கொண்ட அறுவடை (மெற்றிக் தொன்)	பெறுமதி (மில். ரூபாய்.)
கவென்டிஷ் வாழை	மொனராகலை	650	450. 00	131.58	287	31.57
TEJC மாம்பழம்	மொனராகலை	240	400. 00	56.68	91	18.20
கொடித் தோடை	மொனராகலை	175	106.17	35.43	995	107.50
மிளகாய்	பதுளை	300	240. 00	60.73	123	64.40
விதை உருளைக்கிழங்கு	பதுளை	400	147. 00	121.46	4,000	980.00
மாதுளை	மட்டக்களப்பு	205	307.13	41.5	16	176.20
நிலக்கடலை	மட்டக்களப்பு	262	299.03	106.7	3,022	1,215.93
பச்சை வெள்ளரி	மட்டக்களப்பு	500	311.77	202.43	14,872	487.88
ஜம்போ	அம்பாறை	600	276.54	242.91	2,210	330.08

பயிர் கொத்தணி	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பு (ஹெக்டயர்)	பெற்றுக் கொண்ட அறுவடை (மெற்றிக் தொன்)	பெறுமதி (மில். ரூபாய்.)
நிலக்கடலை						
மிளகாய்	அம்பாறை	270	455.16	54.66	3,650	817.26
TEJC மாம்பழம்	மாத்தளை	430	227.37	176.92	88	47.92
கொய்யா	மாத்தளை	200	164.01	40.48	11	0.93
கொடித் தோடை	மாத்தளை	100	60.62	20.24	366	374.15
புளி வாழைப்பழம்	அனுராதபுரம்	500	268.32	127.53	3,195	287.55
மிளகாய்	அனுராதபுரம்	420	265.95	82.02	3,955	988. 00
கொய்யா	அனுராதபுரம்	300	185.66	60.72	29	10.33
மிளகாய்	பொலன்னறுவை	380	234.04	76.92	107	26.75
TEJC மாம்பழம்	யாழ்ப்பாணம்	378	241.19	67	334	148.30
மிளகாய்	யாழ்ப்பாணம்	170	265.06	30	66	11.88
கொடித் தோடை	கிளிநொச்சி	200	169.76	40	488	154.35
ஜம்போ நிலக்கடலை	கிளிநொச்சி	530	149.71	60	103	122.95
நிலக்கடலை	முல்லைத்தீவு	300	263.56	80	1,205	286.04
கோலிக்குட்டு வாழைப்பழம்	முல்லைத்தீவு	120	30.12	24	70	16.45
சோள விதைகள்	வவுனியா	74	49.50	40	41	54.70
மிளகாய்	வவுனியா	300	354.36	30	1,555	371.25

1.8 எதிர்கால இலக்குகளை அடைவதில் உள்ள சவால்கள் மற்றும் உத்தேச தீர்வுகள்

93% பௌதீக முன்னேற்றத்தை அடைந்த போதிலும், அனைத்து செயற்திட்ட இலக்குகளையும் பூர்த்தி செய்வதில் பல சவால்கள் தடையாகக் காணப்படுகின்றன.

1.9. எதிர்கொண்ட சவால்கள்

i.) உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதிலும் வழங்குவதிலும்ஏற்பட்ட தாமதங்கள்

- பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி கட்டுப்பாடுகள், அத்தியாவசிய விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட சிரமங்கள்.

ii.) கொவிட்-19 மற்றும் விநியோக கட்டுப்பாடுகள்

- பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார பிரச்சினைகள் என்பன காரணமாக சர்வதேச நிபுணர்களின் வருகை தாமதமாகின. இதனால் பயிற்சி நிகழ்ச்சிகள் தாமதமாகின.
- சந்தைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் மற்றும் போக்குவரத்து சவால்கள் என்பன விவசாயிகளின் உற்பத்தித்திறன் மற்றும் விநியோகச் சங்கிலி செயல்திறன் என்பவற்றைப் பாதித்தன.

iii.) காலநிலை மற்றும் சூழல் காரணிகள்

- எதிர்பாராத வானிலைக் காரணிகள் மற்றும் நீர் பற்றாக்குறை என்பன பயிர் விளைச்சலை பாதித்தன. மேலும், இதனால் நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் தடைகள் ஏற்பட்டன.

மேற்படிக் காரணிகள் காரணமாக, செயற்திட்டத்தின் அசல் நிறைவு திகதியாக டிசம்பர் 31, 2022 ஆம் திகதி இருந்தபோதிலும், அது டிசம்பர் 31, 2024 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, வழங்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) மானியம் 2021 இல் ஆரம்பமானது.

1.10. எதிர்கால இலக்குகளுக்கான முன்மொழியப்பட்ட தீர்வுகள்

i.) டிஜிட்டல் பயிற்சி மற்றும் சந்தை ஒருங்கிணைப்பு

- இலத்திரனியல் கற்றல் தளங்களின் (LMS) பயன்பாட்டை விரிவுபடுத்துதல் மற்றும் நபர்களிடையேயான நேரடிப் பயிற்சி நிகழ்ச்சிகளைக் குறைத்தல்.

ii.) நிலைபேறான தன்மைக்கான விருத்தி செய்யப்பட்ட நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு

- விவசாயிகளுக்கு தொடர்ச்சியான உதவிகளை வழங்குவதற்காக அபிவிருத்தி அதிகாரிகள் (MOA), விவசாயத் திணைக்களத்தின் (DOA) விவசாய ஆலோசகர் (AI அதிகாரிகள்) மற்றும் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (NEDA) அதிகாரிகளை இணைத்தல்.
- வெற்றிகரமாக செயற்படும் விவசாயிகளுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட NVQ - 4 தர சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதன் மூலம் அவர்கள் தொழில்நுட்ப ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் தகுதி பெற்றவர்கள் என்பது உறுதி செய்யப்படுகிறது. இந்த முயற்சியானது உற்பத்தித்திறனை அதிகரிக்கும் அதேவேளை NVQ 4 தரச் சான்றளிக்கப்பட்ட விவசாயிகளின் தயாரிப்புகளுக்கான சந்தைக் கேள்வியை அதிகரிக்கும். இதன் மூலம், இளம் மற்றும் இரண்டாம் தலைமுறை விவசாயிகளை விவசாயத்தை நோக்கி ஈர்க்கும் வாய்ப்பை ஏற்படுத்துவதுடன், அவர்கள் தொழில்முனைவோராக உருவெடுக்கவும் வழிகொடுக்கிறது. தற்போதைய நிலவரப்படி, 40 விவசாயிகள் NVQ 4 தரப் பயிற்சி பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தொடர்பான பதிவு எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

iii.) வலுப்படுத்தப்பட்டநிதி மற்றும் வணிக அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு

- விவசாயிகளின் கொத்தணி மற்றும் PUC களுக்கு வரத்தக முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்குதல்.

iv.) காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகள்

- சூரிய சக்தியால் இயங்கும் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வினைத்திறன் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்துதல்.
- சந்தை விலை ஏற்ற இறக்கங்களின் இடர்களைக் குறைக்கும் பொருட்டு பயிர் பல்வகைப்படுத்தல் உத்திகளை ஊக்குவித்தல்.

இந்த விரிவான மதிப்பீடு ASMP செயற்திட்டத்தின் அடைவுகளை தெளிவாக வெளிப்படுத்துவதுடன், மீதமுள்ள சவால்களை எதிர்கொண்டு எதிர்கால வெற்றிக்கு வழிகாட்டும் மூலோபாய தீர்வுகளை துல்லியமாக அடையாளம் காட்டுகிறது.

புகைப்பட இலக்கம் 11 - 14

02. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)

2.1. அறிமுகம்

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட காலநிலைத் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய முக்கிய வலயங்களில் உள்ள சிறிய அளவிலான காணி உடமையாளர் சமூகத்தினரின், காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் நீர்ப்பாசன விவசாயத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் என்பவற்றை பிரதான நோக்கமாகக் கொண்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் (125 மில். டொலர்) ஜூன் 2019 முதல் கமத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. காலநிலைக்கு ஈடுகொடுக்கக்கூடிய விவசாய நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாய பயனுறுதித்தன்மையை அதிகரித்தல் மற்றும் இலக்காகக்கொண்ட சிறு விவசாய உற்பத்திச் சமூகத்திற்கு சந்தை அணுகலை விருத்தி செய்தல் என்பவற்றின் மூலம் இந்த நோக்கத்தை அடையக்கூடியதாக இருக்கும்.

இலங்கையின் வடக்கு மாகாணம் (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு), கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை), வடமத்திய மாகாணம் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை), வடமேல் மாகாணம் (குருணாகல் மற்றும் புத்தளம்), தென் மாகாணம் (ஹம்பாந்தோட்டை) மற்றும் ஊவா. மாகாணம் (மொனராகலை) ஆகிய 6 மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 11 நிர்வாக மாவட்டங்களில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய 350,000 இற்கும் அதிகமான சிறிய அளவிலான (பயிர்ச் செய்கை நிலப் பரப்பு 2 ஹெக்டயரிற்கும் குறைவான) விவசாயிகளுக்கும் சுமார் 60,000 விவசாயக் குடும்பங்களுக்கும் நேரடிப் பயனை வழங்கும் வகையில் 375,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதே இந்த செயற்திட்டத்தின் இலக்காகும். உலக உணவுத் திட்டம், சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்திய கூட்டு ஆய்வுக்கு அமைவாக, காலநிலை மாற்றத்தின் தீவிர மாறுதல்களுக்கு உட்படும் பகுதிகளை அடிப்படையாகக்கொண்டு இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் வினைத்திறனான நீர் முகாமைத்துவம் என்பவற்றின் மூலம் நம்பகமான பாசன நீர் விநியோகத்தை உறுதி செய்வதே இச்செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

2.2. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - 37,014.00 மில். ரூபாய் (அமெ. டொலர் 1 = 300.00 ரூபாய்)

தொ/ இல	செயற்திட்டக் கூறு	அமெ. டொலர். மில்	மில். ரூபாய்
1	விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்	26	7800.00
2	விவசாயத்திற்கான நீர்	73	21,900.00
3	செயற்திட்ட முகாமைத்துவம்	06	1,800.00
4	அவசர தேவைகளுக்கு எதிர்வினையாற்றுதல்	15	4,014.00
சமூக பங்களிப்பு இல்லாமல் மதிப்பீடு		120	35,514.00
சமூக பங்களிப்பு		05	1,500.00
மொத்த செயற்திட்ட மதிப்பீடு		125	37,014.00

2.3. நிதி முன்னேற்றம்

தொ / இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபாய்)	31.12.2024 ஆம் திகதி வரையில்செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1	காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்	11,225.00	6,008.82	51

2.4. பௌதீக முன்னேற்றம்

கூறு	நோக்கம்	செயற்பாடு	2024 ஆம் ஆண்டில் முன்னேற்றம்
1. விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்	காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் பண்ணை நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்வதன் மூலம் விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் பயிர் பல்வகைப்படுத்தல்	1.1: விவசாய உற்பத்திகள்: - காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இடைப்போகம் – 1 இல் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம் - காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் சிறு போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம் - காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இடைப்போகம் – 2 இல் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம் - காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் 2024/25 பெரும் போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம் - அனுராதபுர திறப்பனை பண்ணை பயிற்சிக் கல்லூரியை நிறுவுதல் காலநிலைக்கு சீரமைவான விவசாயப் பண்ணைக் கல்லூரியின் ஊடாக மேற்கொள்ளப்படும் பயிற்சி நடவடிக்கைகள் - கொம்போஸ்ட் உர உற்பத்தி - தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் விவசாய தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் 1.2: விவசாய சந்தைப்படுத்தல் - உற்பத்திக் கழகங்கள் மற்றும் உற்பத்தி சங்கங்கள் என்பவற்றை நிறுவி அவற்றின் திறன்களை விருத்தி செய்தல். - உற்பத்திக் கழகங்கள் மற்றும் உற்பத்தி சங்கங்கள் என்பவற்றை சந்தையுடன் இணைத்தல்	- 2024 ஆம் ஆண்டு இடைப் போகம் - 1 இல் திட்டமிடப்பட்ட 370 ஹெக்டேர் செய்கை மேற்கொள்ளப்பட்டு 385 மெட்ரிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது. பிரதானமாக பாசிப்பயறு மற்றும் சின்ன வெங்காய ஆகிய செய்கையில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. இடைப் போகச் செய்கையின் மூலம் கிடைக்கும் மேலதிக வருமானம் மற்றும் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல் என்பன காரணமாக விவசாயிகளுக்கு மத்தியில் இடைப் போகச் செய்கை மேற்கொள்ளும் போக்கு அதிகரித்து வருகிறது. - சிறு போகத்தில் திட்டமிடப்பட்ட 2008 ஹெக்டேர் பரப்பளவில், 1481 ஹெக்டேர் பயிரிடப்பட்டு 2593 மெட்ரிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது. - இடைப் போகம் - 1 இல் 634 ஹெக்டேர் பயிர்ச் செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டதுடன் திட்டத்திற்கு அமைய அதில் 630 ஹெக்டேர் பயிரிடப்பட்டது. இதன் விளைவாக 650 மெட்ரிக் தொன் உற்பத்தி கிடைத்துள்ளது. இதன்போது, விவசாயிகள் பிரதானமாக பாசிப்பயறு மற்றும் கௌப்பிச் செய்கையில் கவனம் செலுத்தினர். இடைப் போகச் செய்கையின் மூலம் கிடைக்கும் மேலதிக வருமானம் மற்றும் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல் என்பன காரணமாக விவசாயிகளுக்கு மத்தியில் இடைப் போகச் செய்கை மேற்கொள்ளும் போக்கு அதிகரித்து வருகிறது. - 2024/2025 பெரும் போகத்தில் திட்டமிடப்பட்ட 2008 ஹெக்டேரில் 1233 ஹெக்டேர் பயிரிடப்பட்டுள்ளது. - காலநிலைக்கு சீரமைவான விவசாயப் பண்ணைப் பயிற்சி அமர்வுகள் மூலம் 48 திட்டமிடப்பட்ட பயிற்சி அமர்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 1058 ஆகும். கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்படுகிறன. மேலும் இவ்வாறு பெற்றுகொள்ளும் அறிவை தமது அண்டை விவசாய சமூகங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. - தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கான 492 பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு அவற்றில் 454 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை 12996. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பன இங்கு வழங்கப்படுகிறது.

கூறு	நோக்கம்	செயற்பாடு	2024 ஆம் ஆண்டில் முன்னேற்றம்
		விவசாய வியாபார பயிற்சிக் கல்லூரித் திட்டம் - அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் - விவசாய பாதைகளை புனரமைத்தல் - விவசாய கிணறுகளை புனரமைத்தல் - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தானிய களஞ்சிய வசதிகளை உருவாக்குதல் - பாதுகாப்பு மின் வேலிகளை அமைத்தல் (வன விலங்குகளால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு) - உற்பத்தி சங்கங்களுக்கு தார்பாய் தாள்களை (Tarpaulin Sheets)வழங்குதல். - அமைச்சு வளாகத்தில் காலநிலைக்கு சீரமைவான விவசாய அலகொன்றை நிறுவுதல்.	- கொம்போஸ்ட் உரத்தை தயாரிப்பதற்கு விவசாய சமூகத்துக்கு ஆர்வமூட்டும் வகையில் பொருத்தமான உள்ளீடுகள் மற்றும் பயிற்சிகளை வழங்கி இந்த ஆண்டில் சுமார் 4575 மெற்றிக் தொன் உரம் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த உரம் வீட்டுத் தோட்டச் செய்கைக்கு பயன்படுத்தப்படுகிறது. - உற்பத்தியாளர் சங்கங்களை சந்தையுடன் இணைத்தலின் கீழ் கீல்ஸ், கார்கில்ஸ், கோல்டன் ஃபுட், மலிபன், ப்ரிமா போன்ற முக்கிய வர்த்தக நிறுவனங்களுக்கு விவசாயப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. - நிறுவப்பட்டுள்ள 572 விவசாயிகள் உற்பத்தி சங்கங்கள் மற்றும் 45 உற்பத்திக் நிறுவனங்கள் என்பவற்றுக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் 52 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. - அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. - இதுவரை 57 கிலோமீற்றர் விவசாயப் பாதைகள் புனரமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு தமது அறுவடைப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. - 1149 விவசாயக் கிணறுகளின் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றின் கீழ் விவசாயிகளின் பயிர்களுக்குத் தேவையான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. - 14 சிறிய அளவிலான தானியக் களஞ்சியங்களும், ஒரு நடுத்தர அளவிலான தானியக் களஞ்சியமும் அமைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளின் அறுவடைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளன. - செயற்திட்ட மாவட்டங்களில் தேவையென இனங் காணப்பட்ட பயிர்ச் செய்கை நிலங்களை உள்ளடக்கும் வகையில், போகங்களின் பயிர்ச் செய்கைகளைப் பாதுகாக்கும் வகையில் 701 கிலோ மீற்றர் நீள பாதுகாப்பு மின் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. - விவசாயிகள் தங்கள் அறுவடைகளை உலர்த்துவதை எளிதாக்குவதற்காக, உற்பத்தி நிறுவனங்களுக்கு இந்த செயற்திட்டத்தின் ஊடாக தார்பாய் தாள்கள் (Tarpaulin Sheets) வழங்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்திட்டம் செயல்படுத்தப்படும் பிரதேசங்களுக்கு இதுவரை 2,500 தார்பாய் தாள்கள் வழங்கப்பட்டுள்ளன. - காலநிலைக்கு சீரமைவான விவசாயப் பிரிவு ஒன்றை அமைச்சில்

கூறு	நோக்கம்	செயற்பாடு	2024 ஆம் ஆண்டில் முன்னேற்றம்
			நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து அமைச்சுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன.
2. விவசாயத் துறைக்கான நீர்	• காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுவதற்கு உதவுதல். • நிர்மாணிக்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை உரிய அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச மக்களுடன் இணைந்து கூட்டாகப் பராமரிப்பதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் உதவுதல்.	2.1 நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைத்தல்: - கட்டம் - 1 இன் கீழ் திட்டமிடப்பட்ட 476 குளங்களை மறுசீரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. - கட்டம் - 2 மறுசீரமைக்கப்பட வேண்டிய நீர்ப்பாசன அமைப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றின் ஆரம்பகட்ட பணிகளைத் தொடங்குதல். 2.2 நீர்ப்பாசனத் தொகுதிகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு: - செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு மற்றும் நீர் முகாமைத்துவம் குறித்த பயிற்சித் நிகழ்ச்சிகளை நடத்துதல். - விவசாய நிறுவனங்களுக்கு உரிய கையேடுகள் மற்றும் தரவுப் பதிவுப் புத்தகங்களை வழங்குதல். - நீர்ப்பாசன கால்வாய்களில் பொறுத்தப்பட்டுள்ள அளவீட்டு பலகைகளை முறையாக அளவுத்திருத்தம் செய்ய உதவுதல் மற்றும் இது தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல். - விவசாய அமைப்புகளின் திறன் விருத்தி - தேர்ந்தெடுக்கப்பட்ட வலயங்களில் 61 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவ குழுக்களை நிறுவுதல். - 61 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றில் அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளை துணைத் செயற்திட்டங்களாக செயற்படுத்துதல். - மிகவும் பயனுறுதிமிக்க நீர் முகாமைத்துவத்துக்காக லேசர் தொழில்நுட்பத்தைப்	- மறுசீரமைக்க ஒப்புக்கொள்ளப்பட்ட 476 குளங்களில் 453 குளங்களின் பௌதீக மறுசீரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 50%க்கும் அதிகமான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 23 நீர்ப்பாசன அமைப்புகளின் வேலைகள் 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. - 2 ஆவது கட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு 179 நீர்ப்பாசன அமைப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மறுசீரமைப்பின் அடிப்படை பணிகள், அதாவது அடையாளம் காணப்பட்டுள்ள அனைத்து 179 குளங்களுக்கும் சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்து உரிய அனுமதிகள் பெறப்பட்டு, அதன்படி உரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை 43 குளங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. - 11 செயற்திட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்த ஆண்டில் 50 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. - 8,850 கையேடுகள்/பதிவுப் புத்தகங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. - 75 அளவீட்டு பலகைகள் வழங்கப்பட்டு, அந்த அளவீட்டு பலகைகளை முறையாக அளவுத்திருத்தம் செய்வது குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. - 50 விவசாய சங்கங்களுக்கு நீர் முகாமைத்துவம் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. - 61 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. - நீர் பிடிப்பு பகுதிகளில் மரங்கள் மற்றும் தாவரங்களைப் பாதுகாப்பதற்கும், மண் அரிப்பு மற்றும் குளங்களில் வண்டல்மண் சேர்வதைத் தடுப்பதற்கும் குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவ குழுக்களின் ஊடாக துணை செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இதுவரை 29 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவ திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 11 திட்டங்களை உள்ளடக்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய கால செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. - 54 குள அடுக்கைத் தொகுதி நீர் முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதில் 15 திட்டங்கள் நிறைவு

கூறு	நோக்கம்	செயற்பாடு	2024 ஆம் ஆண்டில் முன்னேற்றம்
		பயன்படுத்தி நெல் வயல்களை ஒரே சமநிலைக்கு பண்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல். - லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு உபகரண தொகுதியை கொள்வனவு செய்தல். - ஒருங்கிணைந்த ஈரமான மற்றும் உலர் முறைகளைப் பயன்படுத்தி வினைத்திறன்மிக்க நீர் முகாமைத்துவம் - மழைமானி கருவிகளை நிறுவுதல் - நீர் விநியோகத்தை அளவிடும் அளவீட்டு கருவிகளை நிறுவுதல் - அணைக்கட்டுகள் அருகே 5 மீட்டர் நீளமுள்ள கொன்கிரீட் அடித்தளம் மற்றும் தேவையான கட்டுப்பாட்டுத் தொகுதிகள் என்பவற்றைக் கொண்டு மூலம் நீர் முகாமைத்த்துவம்	செய்யப்பட்டுள்ளன. இவை முகாமைத்துவக் குழுக்களால் செயல்படுத்தப்படுகின்றன. - லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வயல்களை சமன் செய்யும் முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இந்த முறையைப் பயன்படுத்தி 10 ஏக்கர் நிலப் பரப்பில் பயிர்ச் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்களில் இதற்குப் பொருத்தமான நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. - லேசர் தொழில்நுட்பம் பயன்படுத்தும் ஒரு உபகரண அமைப்பை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. - ஒருங்கிணைந்த ஈர மற்றும் வறள் முறைகள் மூலம் வினைத்திறன்மிக்க நீர் முகாமைத்துவம் குறித்து விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டு, அவற்றுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. - மழை வாழ்ச்சி அளவீட்டு கருவிகள் மற்றும் நீர் வழங்கல் அளவீட்டு கருவிகள் என்பவற்றை வழங்குவதற்குத் தேவையான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. - வினைத்தினான நீர் முகாமைத்துவத்துக்காக கால்வாய்களின் அருகே 5 மீட்டர் நீளத்தில் கான்கிரீட் அடித்தளத்தை அமைக்கவும் தேவையான கட்டுப்பாட்டுத் தொகுதியை நிறுவவும் உரிய பெறுகைகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. - செயற்திட்டத்தின் நீர் பயன்பாட்டு திறனை (Water Use Efficiency - WUE) 30% வரை உயர்த்துவதற்கான அளவீடுகள் போக ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023 சிறு போகம், 2023/24 பெரும் போகம் மற்றும் 2024 சிறு போகம் ஆகியவற்றில் முறையே 26, 25 மற்றும் 48 குளங்கள் வீதம் முன்னோடி செயர்த்திட்டம் எனும் அடிப்படையில் WUE அளவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், WUE சராசரி மதிப்பு 22% எனும் முன்னேற்றத்தை இது காட்டுகிறது.
3. செயற்திட்ட முகாமைத்துவம்:	தேசிய மற்றும் மாகாண அளவிலான செயற்திட்ட நடவடிக்கைகளை வினைத்திறனாக ஒருங்கிணைப்பதன் மூலம் ஒட்டுமொத்த செயற்திட்ட முகாமைத்துவத்தின்	- தகவல், கல்வி மற்றும் தொலைத்தொடர்பு நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக நடத்துதல் - செயற்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் - தேசிய மற்றும் மாகாண அளவில் முன்னேற்றம் பற்றிய மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல் - முகாமைத்துவ தரவுத்	- தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இதுவரை 2,165 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. - மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் கீழ் மேற்பார்வை பயணங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் மூலம் அடையாளம் காணப்பட்ட வெற்றிகரமான நிகழ்வுகள் பதிவு செய்யப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்த

கூறு	நோக்கம்	செயற்பாடு	2024 ஆம் ஆண்டில் முன்னேற்றம்
		முறைமையொன்றை உருவாக்குதல்.	மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் திட்டமிட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. - அடிப்படை ஆய்வு நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. - முகாமைத்துவ தரவு முறைமை உருவாக்கப்பட்டு அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது தரவுகளை உள்ளிடும் பணி நடைபெற்று வருகிறது. 80% தரவுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 15 – 16

03. சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம்(SAPP)

3.1. அறிமுகம்

நாடு முழுவதும் உள்ள 57,500 சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் நிலைபேறான வகையில் உயர்த்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படும் சிறிய அளவிலான விவசாய கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்திற்கு (SAPP) இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) என்பன இணைந்து நிதியுதவி வழங்குகின்றன. அரச, தனியார், உற்பத்தியாளர் மற்றும் கூட்டாண்மை ஆகிய 4P அணுகுமுறையின் மூலம் சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளுக்கு சலுகை வட்டி விகிதத்தில் மானியங்கள் மற்றும் கடன்கள் வழங்கப்படுகின்றன. SAPP பிரதான செயற்பாடுகளாக, சிறு அளவிலான விவசாயிகளுக்கு அவர்களின் விவசாய அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கல் மற்றும் விவசாயப் பாதைகள், அணைக்கட்டுகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சாதகமான கொள்கை சூழலை உருவாக்கப் பங்களிப்பு செலுத்தல் என்பன காணப்படுகின்றன.

3.2. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	5,000.00	2,960.00	59
2	நுண் நிதித் திட்டங்கள்	2,024.00	2,012.00	99
	மொத்தம்	7,024.00	4,972.00	71

3.3. பௌதீக முன்னேற்றம்

சிறிய அளவிலான விவசாய வியாபாரக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) 105.00 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் 2017 ஆம் ஆண்டில் ஆறு ஆண்டு செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், COVID-19 தொற்றுநோய் மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, இந்த செயற்திட்டத்திற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் (GOSL), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD), தனியார் துறையினர் (விவசாய வணிக நிறுவனங்கள்), சிறு காணி உடமையாளர்கள் மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (PFIs) என்பன கூட்டாக இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக 57,500 சிறு விவசாய தொழில் முனைவோரை சந்தை வாய்ப்புகளுடன் இணைப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க உதவுதல் மற்றும் மற்றும் அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பன காணப்படுகின்றன.

இந்த நோக்கங்களை அடைய, SAPP பிரதானமாக அரச மற்றும் தனியார் இணைப்புகளுடன் விவசாய தொழில்முனைவோருக்கு வழங்கும் தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் விவசாய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் ஊடாக மிகவும் சிறந்த சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க SAPP கவனம் செலுத்துகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே, தனியார் விவசாய நிறுவனங்கள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் சங்கங்களுடன் இணைந்து பால் உற்பத்தி, வாசனைப் பொருட்கள், தானியங்கள் மற்றும் அவரையினப் பயிர் வகைகள், தேயிலை, மலர் வளர்ப்பு மற்றும் காய்கறி வகைகள் போன்ற பிரதான விவசாயத் துறைகளை உள்ளடக்கும் வகையில் 39 4P (பொது, தனியார், உற்பத்தியாளர். கூட்டாண்மை) செயற்திட்டங்களை நிறுவுவதில் SAPP வெற்றி கண்டுள்ளது.

சமீபத்திய பொருளாதார நெருக்கடியை அடுத்து, SAPP ஆனது கிராமிய விவசாய தொழில் முனைவோருக்கு 10.00 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விஷேட சோள செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த செயற்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சோள செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உயர்தர கலப்பின விதைகள், இரசாயன உர வகைகள், நிலப் பண்படுத்தலுக்குத் தேவையான வசதிகள் மற்றும் நிதி வசதிகள் என்பன வழங்கப்படுகின்றன. இதன்போது, சோள செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் நிறைவுற்ற பின்னர், விதைகள் மற்றும் உர வகைகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த சோள செயற்திட்டத்தில் இலக்காகக்கொள்ளப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 40,000 ஆக உள்ளது, இதுவரை 15,905 ஹெக்டயர் நிலப்பரப்புக்குறிய 39,156 பயனாளிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளன. 38,962 பயனாளிகளுக்கு அடிகாட்டுப் பசளையும் (Basal fertilizer), 38,638 பேருக்கு மேல் உரமும் (Top dressing fertilizer), 38,076 பேருக்கு நிலத்தை பண்படுத்துவதற்கும் (Land preparation) மானியங்கள் வழங்கப்பட்டு, இந்த சோள செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) கீழ் 2024 டிசம்பர் மாதம் 31 திகதியளவில், 46,759 பயனாளிகள் 4P பெறுமதி சங்கிலி, இளைஞர்கள் மற்றும் வருமானம் ஈட்டும் கடன் மூலம் பயனடைந்துள்ளனர். இது மொத்த செயற்திட்ட இலக்கான 57,500 விவசாயத் தொழில்முனைவோரின் 81.32 சதவீதமாகும்.

2024 டிசம்பர் மாதளவில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 4P மாதிரியின் ஊடாக இலக்காகக் கொள்ளப்பட்ட 43,000 பயனாளர்களில் 36,671 பயனாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி (YED) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3,452 SAPP இளைஞர் பயனாளிகளுக்கும் வருமான பிறப்பாக்கக் கடன் திட்டம் (IG) மூலம் 6,904 பயனாளிகளுக்கும் உதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கால்வாய்கள் மற்றும் விவசாய பாதைகள் புனரமைப்பு போன்ற பண்ணைக்கு வெளியே உள்ள விவசாய உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு திட்டமிடப்பட்ட 98 செயற்திட்டங்களில் 58 செயற்திட்டங்களை 2024 டிசம்பர் மாத இறுதிக்குள் SAPP இனால் தொடர்புடைய நிறுவனக்களின் உதவியுடன் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இதற்காக இதுவரை 195.50 மில். ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை மிகவும் நிலைபேறான வர்த்தக நிறுவனங்களாக மாற்றுவதற்கு SAPP செயற்திட்டம் மூலம் வழங்கப்படும் நிறுவன வலுவூட்டல் (IS) சேவைகளின் கீழ் 07 நடவடிக்கைகள் தேவையான வெளியீடுகளுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இதுபோன்ற 13 IS சேவைகள் 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன் அவற்றை 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது செயற்திட்டத்தின் இந்தக் கூறின் கீழ் 133 மில். ரூபாய்க்கும் அதிகமான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

முழு SAPP செயற்திட்டத்திற்கும் IFAD இன் ஒதுக்கீட்டு இலக்கான 54.40 மில்லியனில் 37.80 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு 69% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. பயனாளிகள் மற்றும் ஊக்குவிப்பாளர்களிடமிருந்து செயற்திட்டத்திற்கு மேலும் கிடைத்த பங்களிப்பு 13.62

மில். ரூபாய் ஆகும். 68.18 மில்லியன் ஆகும். GoSL, IFAD மற்றும் பயனாளர் பங்களிப்பு இலக்கான 105.00 மில்லியன் ரூபாயில் 2024 டிசம்பர் அளவில் 68.18 மில்லியன் ரூபாய் (65%) செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 17 – 19

04. சிறிய அளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் செயற்திட்ட (SARP)

4.1. அறிமுகம்

இலங்கையின் புத்தளம், குருநாகல், மாத்தளை, அநுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய 06 உலர் வலய மாவட்டங்களையும் அந்த மாவட்டங்களில் உள்ள மல்வத்து ஓயா, தெதுரு ஓயா மற்றும் மீ ஓயா ஆகிய ஆறுகளின் நீர்பிடிப்புப் பகுதிகளில் அமைந்துள்ள குள அடுக்கைத் தொகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பண்ணை வணிகமயமாக்கலை ஊக்குவிக்கும் அதேவேளை, 40,000 சிறிய அளவிலான விவசாய குடும்பங்கள் அல்லது 180,000 தனிநபர்களுக்கு காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் நிலைபேறான தீர்வுகளை வழங்குவதையும் இந்த செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

செயற்திட்டத்தின் பிரதான கூறாக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்வதற்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டப் பயனாளிகளின் திறன் விருத்தி மற்றும் தெரிவு செய்யப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை புதிதாக உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு முதலீடு செய்தல் காணப்படுகிறது. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) இலங்கை அரசாங்கத்திற்கு நிதியளித்து செயற்படுத்தும் இந்தச் செயற்திட்டத்திற்கு ஊடாக 82.00 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அவற்றின் செயற்திட்ட காலம் 06 வருடங்களாகும். இந்த செயற்திட்டம் 20.01.2022 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

4.2. நிதி முன்னேற்றம்

நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா)	திருத்தப்பட்ட ஒதுக்கீடு	31.12.2024 செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
சிறிய அளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் செயற்திட்ட (SARP) மூலதன செலவுகள்	2,836.00	979.53	505.50	51.61

- குளங்களை புனரமைக்கும் பணிகள்

இந்த செயற்திட்டத்தின் மூலம் 173 குளங்களை மறுசீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதுவரை 42 குளங்களுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக மதிப்பிடப்பட்ட செலவு 521 மில். ரூபாய் ஆகும். அதில் இதுவரை 205 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அவற்றில், குருநாகல் மாவட்டத்தில் 14 குளங்களுக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பௌதீக முன்னேற்றம் சுமார் 95% ஆகும். வவுனியா மாவட்டத்தில் 16 குளங்களுக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 12 குளங்களின் பணிகளின் முன்னேற்றம் 79% ஆக உள்ளது. மேலும், அனுராதபுர மாவட்டத்தில் 7 குளங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பௌதீக முன்னேற்றம் 80% ஆக உள்ளது. மன்னார் மாவட்டத்தில் 5 குளங்களின் நிர்மாணப் பணிகள் இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 20

- நீர்பிடிப்புப் பிரதேசங்களில் மீள் காடு வளர்ப்பு

இந்தச் செயற்திட்டத்தின் மூலம் புனரமைக்கப்படும் குளங்களைச் சூழவுள்ள 562 ஹெக்டயர் நிலப்பரப்பை உள்ளடக்கும் வகையில் நீர் பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் காடுகளை வளர்க்கும்

திட்டத்தின் கீழ், இலுப்பை, வெண் மருது, கருங்காலி மற்றும் புங்கை ஆகிய மரங்களை நடும் பொருட்டு வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 13.53 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த மர வகைகளை நடும் பணியை அத்திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. மேலும், புனரமைக்கப்பட்ட குளங்களைச் சூழவுள்ள காட்டுப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் வர்த்தக ரீதியாக பெறுமதியுள்ள கமுகு மரங்களை வளர்க்கும் பணி செயற்திட்டப் பயனாளிகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் கீழ், நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த 19 குளங்களில் 3,500 கமுகு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 21

- நன்னீர் மீன் வளர்ப்பு

இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் உள்ள மக்களின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நன்னீர் மீன் வளர்ப்பை விரிவுபடுத்தத் தேவையான நன்னீர் மீன் வளர்ப்பு 72 குளங்களை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 20 குளங்களில் நன்னீர் மீன் வகைகள் அறிமுகம் செய்யும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தற்போது அவற்றில் மீன் அறுவடை பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் குளங்கள் வவுனியா, புத்தளம், குருநாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. இது தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்காக இதுவரை 5.00 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 22

- உளுந்துச் செய்கைத் செயற்திட்டம்

வவுனியா மாவட்டத்தை மையமாக கொண்டு 600 விவசாயிகளுக்கு உளுந்துச் செய்கைத் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், விவசாயிகளுக்கு தேவையான விதைகள் வழங்கல் மற்றும் விவசாயக் களப் பாடசாலைகளுக்கு ஊடாக தேவையான நடைமுறைப் பயிற்சிகள் வழங்கல் மற்றும் உளுந்து விளைச்சலுடன் தொடர்பான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தல் ஆகியவற்றுக்காக இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை 7.50 மில்லியன் ரூபாய் ஆகும்

- பாசிப்பயறுச் செய்கை செயற்திட்டம்

குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பாசிப்பயறு பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தைப் அதிகரித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல் உட்பட அப்பிரதேசங்களில் வாழும் வறிய மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுடன் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் 750 விவசாயிகள் மற்றும் 391.5 ஏக்கர் பரப்பளவில் இந்த செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன் மூலம், 2024 ஆண்டு சிறு போகத்தில் புத்தளம் மாவட்டத்தில் 13,400 கிலோ கிராம் அறுவடையும் குருநாகல் மாவட்டத்தில் 32,615 கிலோ கிராம் அறுவடையும் கிடைத்துள்ளன.

புகைப்பட இலக்கம் 23

- சீமை வெள்ளரி (Gherkin) செய்கை செயற்திட்டம்

ஏற்றுமதி சந்தைகளுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட சீமை வெள்ளரி உற்பத்திகளை வழங்குவதற்கான தனியார் துறையுடன் இணைந்து ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதற்காக குருநாகல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 209 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விதைகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

புகைப்பட எண் 23

- நிலக்கடலைச் செய்கை செயற்திட்டம்

புத்தளம், குருநாகல், வவுனியா, மன்னார் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு 1500 விவசாயிகளுக்காக 750 ஏக்கரில் நிலக்கடலைச் செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ், தேவையான விதைகள் மற்றும் விவசாயிகள்

களப் பாடசாலைகள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான நடைமுறை பயிற்சிகள் என்பன வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலையின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கான திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை 25 மில்லியன் ரூபாய் ஆகும். விவசாயிகளுக்கு மத்தியில் 30,000 கிலோ கிராம் விதைகள் விநியோகிக்கப்பட்டதுடன் அந்த விவசாயிகள் அனைவரும் நிலக்கடலை செய்கையை ஆரம்பித்துள்ளனர். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிலக்கடலை செய்கையிலிருந்து 2024/ 25 பெரும் போகத்தில் ஒரு ஏக்கருக்கு 800 கிலோ கிராம் விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புகைப்பட இலக்கம் 25

- திறந்த சூழலில் மேற்கொள்ளும் கோழி வளர்ப்பு

இந்த செயற்திட்டம் வவுனியா, புத்தளம், குருநாகல், அனுராதபுரம், மன்னார் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களை மையமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட 550 விவசாயக் குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழிக் கூண்டுகள் உள்ளிட்ட தேவையான பொருட்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டம் குறைந்த வருமானம் பெறும் பெண்களை இலக்காகக் கொண்டுள்ளதுடன் குடும்பங்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வதையும் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 47 மில்லியன் ரூபாய் ஆகும். தற்போது பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

- நெற் செய்கைக்கு மாதிரி வயல்களை அமைத்தல்

வவுனியா, புத்தளம், குருநாகல், அநுராதபுரம், மன்னார் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ், 17 மாதிரிக் களங்கள் நிறுவப்பட்டுள்ளன. காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் தன்மைகளைக் கொண்ட நெல் வர்க்கங்களான பிஜி 374, பிஜி 366, பிஜி 409, பிஜி 310, பிஜி 369 மற்றும் ஏடீ 362 ஆகியவை இந்த மாதிரிக் களங்களில் செய்கை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம்., குறித்த பிரதேசங்களுக்கு மிகவும் பொருத்தமான மேம்படுத்தப்பட்ட அதிகபட்ச விளைச்சலைத் தரக்கூடிய நெல் வர்க்கங்கள் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தபாட்டன. இதன் கீழ் விதைகளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு 0.60 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.

புகைப்பட எண்

05. கொழும்பு– கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA)
செலவுத் தலைப்பு இலக்கம் 1182-03-041-2507

விவசாய திணைக்களத்தின் கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தினால் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சர்வதேச தாவர பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள ஒரு பங்காளராக இலங்கை காணப்படுகிறது. இதன் காரணமாக, தாவரப் பகுதிகள் அல்லது விவசாய உற்பத்திகளை நிர்ணயித்த தரநிலைகளுக்கு அமைவாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வது இலங்கையின் தனிமைப்படுத்தல் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகிறது. அதேபோன்று, விவசாயிகளின் வறுமையை குறைத்தல், வெளிநாட்டு நாணயமாற்றை ஈட்டுவதை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு மிகவும் பொருத்தமானதும் உயர் வினைத்திறனுடன் பேணி தாவரத் தனிமைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வதும், ஏற்றுமதி அல்லது இறக்குமதி சர்வதேச சந்தைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படும் போது பொருட்களின் தரங்களை மிகவும் துல்லியமாக அடையாளம் காணுவதற்கான ஆற்றலை மேம்படுத்த, தாவரத் தனிமைப்படுத்தல் சேவையில் ஏற்கனவே காணப்படும் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல் என்பவற்றுக்கு 259.60 மில். ரூபாய் மானியத்தை ஜப்பானிய அரசாங்கத்தால் (JICA) 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டில் நிறைவடைவதுடன், இதுவரை செலவிடப்பட்ட தொகை 253.36 மில்லியன் ரூபாய் ஆகும். 2024 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 14.17 மில். ரூபாய் ஆகும். இதில் இதுவரை 7.93 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1.	தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA)	14.17	8.04	57

06. தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் ஆராய்ச்சி வசதிகளை விருத்தி செய்தல்- (KOICA) செலவுத் தலைப்பு இலக்கம் 1182-03-046-2509

இந்த செயற்திட்டத்திற்கு கொரிய அரசினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், KOICA நிறுவனத்தின் ஊடாக இதன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருட்களின் இறக்குமதிக்கான வரி செலுத்தல் மற்றும் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு ஏற்ப இந்த செயற்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான சூழலை உருவாக்குதல் என்பன தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. கொரிய அரசினால் இந்த செயற்திட்டத்திற்கு 7.20 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை அரசாங்கத்தினால் இதற்காக செலவிடப்பட்ட தொகை 74.61 மில். ரூபாய் ஆகும். மூன்று வருடங்களில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் தற்போது நிறைவுக்கு வந்துள்ளது. கொழும்புத் துறைமுக வளாகத்தின் தாவரத் தனிமைப்படுத்தல் நிலையத்திற்குத் தேவையான கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கல் ஆகியவற்றின் மூலம் தாவரத் தனிமைப்படுத்தலின் திறனை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தை மையமாகக்கொண்டு மேற்கொள்ளும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்பாடுகளை முறையாகவும் செயற்திறனுடனும் மேற்கொள்வதற்கு இது உதவியாக அமையும்.

தொ/ இல	நிகழ்ச்சி திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1.	தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் ஆராய்ச்சி வசதிகளை விருத்தி செய்தல் - (KOICA)	28.20	28.03	99 %

விவசாயப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின்நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

01. விவசாயத் திணைக்களம்(DOA)

1.1. தொலைநோக்கு

"தேசிய சுபீட்சத்திற்காக விவசாயத்தில் மேன்மையினை அடைந்து கொள்ளல்."

1.2. செயற்பணி

சமமானதும் நிலைபேறானதுமான விவசாய அபிவிருத்தியை அடைதல், மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்வதன் ஊடாக நாட்டு மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் விவசாயிகள் மீது அதிக கவனம் செலுத்தி அனைத்துத் தரப்பினர்களுக்கும் உரிய சேவைகளை வழங்குதல்.

1.3. குறிக்கோள்கள்

விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றினை விருத்தி செய்தல் மற்றும் நுகர்வோர் ஏற்கக் கூடிய விலை ஒன்றிற்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்காக உணவுப் பயிர்கள் பிரிவின் பயனுறுதி மற்றும் உற்பத்தி என்பவற்றினைப் பேணி வருதல் மற்றும் விருத்தி செய்தல்.

1.4. பிரதான செயற்பாடுகள்

- விவசாய ஆராய்ச்சி
- தொழிநுட்ப விரிவாக்கல்
- விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல்
- ஒழுங்குபடுத்தும் சேவைகள்

1.5. நிறுவனத்தால் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்:
இலக்கு 2: வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்து நிலையை உறுதி செய்தல், மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.

1.6. நிதி முன்னேற்றம்

விபரம்		ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
மூலதன	பொதுவான மூலதன	732.83	651.22	89
	விஷேட மூலதன செயற்திட்டம்	2,758.00	2,544.03	92
மீண்டுவரும் செலவுகள்		6,566.32	6,211.70	95

1.7. விவசாயத் திணைக்களத்தின் (285) செலவினத் தலைப்பின் கீழ் உள்ள விஷேட செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்- ஒட்டுமொத்த நிகச்சித் திட்டங்களின் சுருக்கம்:

<u>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி</u>

1. மிளகாய், சோளம், வெங்காயம், காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றின் புதிய கலப்பின மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை வர்க்கங்களை விருத்தி செய்தல் மற்றும் மற்றும் விதை உற்பத்தி

களப் பயிர்கள்

- *மிளகாய், சோளம் மற்றும் வெங்காயத்தின் புதிய திறந்த மகரந்தச் சேர்க்கை மற்றும் கலப்பின வகைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, கள அளவில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, புதிய கலப்பின சேர்க்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.*
- *இந்தப் பயிர்களின் பிரதான பீடைகள் மற்றும் நோய்களுக்கான எதிர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கான மதிப்பீடுகள் நடத்தப்படுகின்றன. ஆரம்ப கட்டத்தில் வெங்காய ஆந்த்ராக்னோஸ் மற்றும் பூஞ்சை குமிழ் அழுகலைக் கட்டுப்படுத்த FCRDI, MI ஆல் உருவாக்கப்பட்ட டிரைக்கோடெர்மாவை அடிப்படையாகக்கொண்ட உயிரியல் பீடைகொல்லியைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவ தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டது.*
- *வெங்காய அறுவடை மற்றும் ஏனைய களப் பயிர்களின் விதைப்புக்குப் பொருத்தமான உபகரணங்களை அடையாளம் கண்டு அறிமுகப்படுத்துவதற்கான பண்ணை இயந்திரங்களில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப வடிவமைப்பு நிறைவடைந்துள்ளதுடன், நாற்று நடும் அலகு வடிவமைப்பு புதுப்பிக்கப்பட்டு அதன் உற்பத்தி நடைபெற்று வருகிறது.*

நெல்

- *அதிக விளைச்சல் தரவல்ல புதிய நெல் வர்க்கங்களின்/ விருத்தி செய்யப்பட்ட இனப்பெருக்கக் வழிகளின் 4-4½, 3½, 3 மற்றும் 2½ மாத கால குழுக்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் ஏனைய குறிப்பிட்ட பண்புகளான உவர்தன்மை, இரும்பு நச்சுத்தன்மை, வறட்சி தாங்குதிறன், நீரில் மூழ்குவதைத் தாங்கும் தன்மை மற்றும் BPH (பழுப்பு நிறத் தாவரத்தத்தி), RGM (நெல் கொம்பன் பூச்சி), நெல் வெடிப்பு மற்றும் பாக்டீரியா இலை வெளிறல் (BLB) ஆகிய பிரதான பீடை மற்றும் நோய் என்பவற்றிற்கான எதிர்ப்புத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு வர்க்க விருத்தி ஆராய்ச்சித் நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.*
- *NCRVT (தேசிய ஒருங்கிணைந்த நெல் வர்க்கப் பரிசோதனை), PYT (ஆர்ம்பநிலை அறுவடைப் சோதனைகள்), MYT (பிரதான அறுவடை சோதனைகள்) மற்றும் OYT (கண்காணிப்பு அறுவடை சோதனைகள்) உள்ளிட்ட பல்வேறு சோதனை நிலைமைகளின் கீழ் 200 வர்க்கங்கள் மற்றும் இனப்பெருக்கக் வழிகளின் பௌதீக மற்றும் பௌதீக-இரசாயன பண்புகள் மதிப்பிடப்பட்டுள்ளன.*
- *மேலும், பரிந்துரைக்கப்பட்ட நாற்பது நெல் வர்க்கங்களுக்கான இனப்பெருக்க விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு நடப்பட்டன.*
- *3 ½ மாத வயதுடைய புதிய நெல் வர்க்கம் "BG 382 Fr" (சுவந்த கெக்குழு) எனும் பெயரில் வெளியிடப்பட்டது. இது ஒரு நீண்ட, வெள்ளை நிற, நடுத்தர அளவிலான, நறுமணம் கொண்ட, சராசரியாக 4.6 /ஹெக்டயர் விளைச்சல் தரக்கூடிய ஒரு அரிசி வர்க்கமாகும்.*
- *கலப்பின நெல் இனப்பெருக்கத் திட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. மேலும் ஏழு நம்பிக்கைக்குரிய கலப்பின வரிகள் (F1) தற்போது PYT யில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. மேலும், ஏழு F1 வரிகள் அவற்றின் விளைச்சல் மற்றும் ஏனைய உழவியல் பண்புகளை தீர்மானிக்கும் நோக்கில் OYT யில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. பின்கலப்பு முறையைப் பயன்படுத்தி உயிரணுக்கணிக ஆண் மலட்டுத்தன்மையின் (CMS) விருத்தி நடைபெற்று வருவதுடன் அது முப்படிய பின்கலப்பு தலைமுறை (BC3 தலைமுறை) வரை எட்டியுள்ளது.*

மரக்கறி வகைகள்

- *14 காய்கறி பயிர்களுக்கான ஆரம்ப விதைத்தலைமுறை உருவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 52 புதிய மரபணு மூலப்பொருட்களுடன் (ஜீன் ப்ளாஸ்மா) மரபணு மூலப்பொருட்களை சேர்த்தல், மகரந்தச் சேர்க்கை செய்தல் மற்றும் கள மதிப்பீட்டுச் சோதனைகள் என்பன நடத்தப்பட்டன*
- *புதிய வர்க்க விருத்திச் செயல்பாட்டின் மூலம் 250 புதிய இனப்பெருக்கக் வரிகள் மற்றும் நம்பிக்கைக்குரிய வரிகள் என்பன கள மதிப்பீடு செய்யப்பட்டன. செயற்திறன் தரவு சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, தற்போதைய பருவத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது.*
- *வர்க்க வெளியீட்டு செயல்பாட்டின் மூலம் 24 சோதனைகளுடன், 13 நம்பிக்கைக்குரிய வரிசைகளுக்கு பல் இடம் சார்ந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (NCVT, VAT)*

- இருபத்தைந்து காய்கறி வகைகளுக்கு இனப்பெருக்க விதை மற்றும் மூல விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் விதை உற்பத்தி தொழில்நுட்பப் பரவல் நடவடிக்கைகள் காய்கறிச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள், அரச மற்றும் தனியார் துறையுடன் மேற்கொள்ளப்பட்டன.
- தெரிவு செய்யப்பட்ட காய்கறி பயிர் வகைகளுக்கு மண் ஊட்டச்சத்து முகாமைத்துவம் மற்றும் புதிய உரப் பயன்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன
- நிலைபேறான பீடை மற்றும் நோய் முகாமைத்துவம் தொழில்நுட்பங்களை (ஒட்டுதல், எதிர்ப்பு இனப்பெருக்கம் மற்றும் இரசாயன சோதனைகள்) விருத்தி செய்வதற்காக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
- காய்கறி வகைகளுக்கு தர மதிப்பீடு, பதப்படுத்தும் தொழில்நுட்ப விருத்தி மற்றும் உணவு மாசாக்கிகளுக்கான பரிசோதனை நடவடிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. (பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை பரிசோதித்தல் மற்றும் கன உலோக மாசுபடுத்திகளை பகுப்பாய்வு செய்தல்)

<u>பழங்கள்</u>

- 14 பழ வகைகளுக்கான வெற்றிகரமான இனப்பெருக்க வரிசைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல், தொகையை விருத்தி செய்தல் மற்றும் அதிக விளைச்சல் தரும் தரமான பழ வகைகள் அல்லது கலப்பினங்களைத் தேர்ந்தெடுத்தல் என்பவற்றை நோக்காகக்கொண்டு தள மற்றும் பல்தள சோதனைகள் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டில் வர்க்க வெளியீட்டுக் குழுவில், வெற்றிகரமான ஒரு பலாப்பழ வகை 'ஹொரண பலாப்பழ 01' மற்றும் ஒரு சப்போட்டா வகை 'கன்னோருவ சப்போட்டா 01' ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன
- ஹொரன பப்பாளி F1 ஹைப்ரிட் 01 இன் தாய் விதைகள் , ஹொரன கோல்ட் கொடித்தோடையின் விதைகள் உற்பத்தி, மற்றும் வெளியிடப்பட்ட வர்க்கங்களின் 5,930 அரும்பு ஒட்டு மற்றும் கிளை ஒட்டுக் கன்றுகள், 2,150 பதி வைக்கப்பட்ட கன்றுகள் மற்றும் 6,000 இழைய வளர்ப்பு செய்யப்பட்ட வாழைச் செடிகள் ஆகியவற்றின் உற்பத்தி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.
- ஹொரணா மற்றும் குண்டசாலே ஆகிய இடங்களில் இரண்டு பழ மரபணு மூலப்பொருள் தோட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன, ஒவ்வொரு தோட்டத்திலும் 150-200 தாய்ச் செடிகள் நிறுவப்பட்டுள்ளன.

2. இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உணவுப் பயிர் உற்பத்திக்கு காலநிலை எதிர்ப்புத்தன்மை கொண்ட பசுமை தொழில்நுட்ப மேம்பாடு

<u>நெல்</u>

- உயிரில்லாத அழுத்தங்களுக்கு சகிப்புத்தன்மை கொண்ட நெல் வரிசைகளை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
- நீரில் மூழ்குவதற்கு சகிப்புத்தன்மைகொண்ட மற்றும் நீர் தேங்கு நிலைமைகளுக்கு ஏற்ப இசைவடையும் தன்மை கொண்ட நெல் வரிசைகளை விருத்தி செய்வதுடன் தொடர்பான முயற்சிகளின் கவனம் செலுத்தப்படுகின்றன.
- வறட்சி, வெப்பம், இரும்பு நச்சுத்தன்மை மற்றும் உவர்தன்மை ஆகியவற்றுக்கு தாங்குதிறன் கொண்ட மற்றும், காற்றில்லா சூழலில் முளைக்கும் ஆற்றலுள்ள நெல் வர்க்கங்களை அடையாளம் காண்பதற்கு உயர் திரையிடல் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன..
- மேலும், பீடை எதிர்ப்பு நெல் வர்க்கங்களை விருத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகள், குறிப்பாக பழுப்பு நிறத் தாவரத் தத்தி, நெல் கொப்புள ஈ மற்றும் அந்துகள் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் திறன்கொண்ட வர்க்கங்களை விருத்தி செய்யும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஏனைய களப் பயிர்கள்

- *விவசாய நடைமுறைககள் மற்றும் ஏனைய களப் பயிர்களின் வறட்சி தாங்குதிறன் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் தற்போது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் கீழ், இருபது நிலக்கடலை, 15 பாசிப்பயறு மற்றும் 10 துவரை வகைகள் வறட்சி எதிர்ப்பிற்காக சோதிக்கப்படுகின்றன.*
- *பெரிய விதை நிலக்கடலை வகைகளுக்கான ஊட்டச்சத்து மேலாண்மை உத்திகளை உருவாக்கவும், எள் மற்றும் விரல் தினைகளில் விதை தரத்தை மேம்படுத்துவதற்கான முறைகளை சரிபார்க்கவும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் விவசாயிகளின் வயல்களில் சோதனைகள் நடத்தப்படுகின்றன.*
- *பெரிய விதை நிலக்கடலை வகைகளுக்கான போசணை முகாமைத்துவ உத்திகளை உருவாக்குவதற்கும், எள் மற்றும் கேழ்வரகு விதைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப தொகுப்புகளை சரிபார்க்கவும் ஆராய்ச்சி மற்றும் விவசாயிகள் காலங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.*
- *மேலும், மூன்று நம்பிக்கைக்குரிய துவர பருப்பு வரிகள் மைசூர்ப் பருப்புக்கு சாத்தியமான மாற்றீடாக மதிப்பிடப்படுகின்றன.*
- *அவரையினத் தாவர வகைகள் மற்றும் எண்ணெய்ப் பயிர்களில் மண்ணிலிருந்து பரவும் நோய்க்கிருமிகளுக்கு எதிராக உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களைப் பயன்படுத்துதல் மற்றும் வறட்சி அழுத்தத்திற்கு துவரம் பருப்பின் பௌதீக மற்றும் உருவவியல் துலங்கல்களை ஆய்வு செய்வதும் இந்த ஆராய்ச்சியில் அடங்கும்.*
- *வறட்சி சகிப்புத்தன்மைக்காக ஐந்து சோயாபீன் வகைகள் பரிசோதிக்கப்படுகின்றன, மேலும் மிளகாய் வகைகளில் ஸ்கிர்டோத்ரிப்ஸ் டோர்சலிஸ் என்ற பூச்சியின் தாக்கம் வானிலை காரணிகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படுகிறது.*
- *ஐந்து சோயா போஞ்சி வரிகள் அவற்றின் வறட்சி தாங்குதிறனுக்காக பரிசோதிக்கப்படுகின்றன, மேலும் மிளகாய் வர்க்கங்களில் ஸ்கிர்டோத்ரிப்ஸ் டோர்சலிஸ் (Scirtothrips dorsalis) என்ற பீடையின் தாக்கத்தை வானிலை காரணிகளை அடியொற்றி மதிப்பீடு செய்யப்படுகிறது.*

காய்கறி

- *தக்காளி, கறிமிளகாய், கத்திரிக்காய், போஞ்சி, கோவா மற்றும் இராசவள்ளிக் கிழங்கு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தித்திறன் மற்றும் விளைச்சல் தரம் என்பவற்றை அதிகரிப்பதுடன் தொடர்பான கள மற்றும் பசுமை இல்ல பயிர்ச் செய்கை தொழில்நுட்பங்களை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *தக்காளி மற்றும் பீர்க்கு என்பவற்றின் பசுமை இல்ல விதை உற்பத்தியுடன் தொடர்பான உழவியல் தொகுப்பு விருத்தி செய்யப்பட்டது.*
- *களத்தில் உள்ள பிரதான பிரச்சனையை தீர்க்க ஒட்டு நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கான ஒரு நுட்பம் கண்டறியப்பட்டது.*
- *உள்நாட்டு விதைகளைப் பயன்படுத்தி நுண் கீரைகள் உற்பத்தி செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பாதகமான காலநிலைக்கு ஏற்றவாறு கத்தரிக்காய் வரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் போஞ்சி மதிப்பீடு செய்யப்பட்டது.*
- *காய்கறிகளுக்கான போசணை முகாமைத்துவ தொகுப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன.*
- *மாறிவரும் காலநிலையின் கீழ் புதிய உணவுப் பயிர்கள், புதிய உணவுப் பொருட்கள் மற்றும் பெறுமதி சேர்க்கும் நுட்பங்களின் பயன்பாடு மற்றும் அறிமுகம் என்பன நிறைவு செய்யப்பட்டன.*
- *புதிய பதப்படுத்தும் முறைகள் உருவாக்கப்பட்டதுடன் உணவு பதப்படுத்தும் துறையில் ஈடுபட்டுள்ளோருக்காக 127 தரப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *கத்திரிக்காய், அவரை, தக்காளி மற்றும் கோவா ஆகியவற்றின் இராசயனக் கட்டுப்பாடு மற்றும் கத்தரித்தல் உள்ளிட்ட நோய் முகாமைத்துவ நுட்பங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் பொன்னாங்கணி யில் ஏற்படும் பழுப்பு நிற புள்ளி மற்றும் வெள்ளை துரு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த தொகுப்புகள் உருவாக்கப்பட்டன.*
- *நூற்புழு மற்றும் வெள்ளை புழு கட்டுப்பாட்டு முறைகள் மேம்படுத்தப்பட்டன.*

பழங்கள்

- *பல்வேறு விவசாய-சூழல் வலயங்களில், உயிரற்ற அழுத்தங்களிற்கு அவற்றின் தாங்குதிறனை மதிப்பிடுவதற்காக, மாம்பழத்தின் பல சேர்க்கைகள், இரண்டு அன்னாசி வர்க்கங்கள், பதினொரு ரம்புட்டான் வர்க்கங்கள், எட்டு துரியன் வர்க்கங்கள், மங்குஸ்தான் மற்றும் ஏழு ஆனைக்கொய்யா சேர்க்கைகள் உள்ளிட்ட பல்வேறு பழப் பயிர்களை மதிப்பீடு செய்வதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *பல்வேறு விவசாய-சூழல் வலயங்களில் இரண்டு மாம்பழ சேர்க்கைகள் மற்றும் ஒரு மாம்பழ வர்க்கம் (மாம்பழ GN 01) என்பன நிறுவப்பட்டன.*
- *அன்னாசி, ரம்புட்டான், துரியன் மற்றும் மங்குஸ்தான் ஆகியவற்றின் வெப்ப சகிப்புத்தன்மை கொண்ட பேதங்களை அடையாளம் காணும் பொருட்டு மதுருகெட்டியவில் களங்களை நிறுவும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.*
- *அதிக அடர்த்தி நிலையில் (இரண்டு இடைவெளி - 5x5 மீ மற்றும் 7x7 மீ) ஆனைக்கொய்யாச் செய்கைக்கான உழவியல் தொகுப்பை உருவாக்க இரண்டு ஆனைக்கொய்யா வர்க்கங்களின் (ஹாஸ் மற்றும் டவர் டூ) எழுபது தாவரங்களுடன் பண்டாரவளை RARDC யில் களம் நிறுவும் பணிகள் நிறைவடைந்துள்ளன.*
- *அறுவடை சுட்டிகளை அடையாளம் காண்பதற்கு மில்லாவ சுவந்தல் வர்க்கம் களத்தில் நிறுவப்பட்டதுடன் அத்தாவரங்கள் காய்க்கும் நிலையில் உள்ளன.*
- *பலாப் பழங்களின் வறட்சி தகவமைப்புத் தன்மையை ஆராய்வதற்காக இரண்டு பலாப்பழ சேர்க்கைகள் (40 தாவரங்கள்) ஹொரண FRDI மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ GLORDC ஆகியவற்றில் உள்ள கண்களில் நிறுவப்பட்டதுடன் அவற்றின் விளைச்சல் மற்றும் தரம் என்பன தொடர்பான தரவு சேகரிப்பு நிறைவடைந்துள்ளது.*

2. *மண் பாதுகாப்பு சட்டம்*

- *மண் பாதுகாப்பு மூலம் பண்ணை நிலங்களின் நிலைபேறான உற்பத்தித்திறனைப் பேணும் பொருட்டு, ஊவா, மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களில் 82 கள செயல்விளக்கங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*
- *மொனராகலை, கேகாலை, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் உள்ள விவசாய ஆலோசகர்களுக்கு மண் பாதுகாப்பு மற்றும் நில மேம்பாடு மற்றும் GPS & GIS தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தரவு கண்காணிப்பு மற்றும் தரவுத்தள முகாமைத்துவம் என்பன குறித்து பயிற்சித் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

விவசாய விரிவாக்கம் மற்றும் பயிற்சி

4. விவசாயப் பாடசாலை அபிவிருத்தி

- *11 விவசாயப் பாடசாலைகளின் (பெல்வெஹெர, குண்டசாலை, வவுனியா, அங்குணகொலபெலஸ்ஸ, கரபிஞ்சா, அனுராதபுரம், பிபில, வாரியபொல, லபுதுவ, பாலமுனை மற்றும் பரந்தன்) கல்வி நடவடிக்கைகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.*
  - *அங்குணகொலபெலஸ்ஸ விவசாயப் பாடசாலையில் விசேடமாக விடுதிகள் புனரமைக்கப்பட்டன, குழாய்க் கிணறு மற்றும் இழைய வளர்ப்பு ஆய்வுகூடம் அமைக்கப்பட்டன மற்றும் கால்நடை வளர்ப்புப் பிரிவு புதுப்பிக்கப்பட்டது..*
  - *அனுராதபுர விவசாயக் கல்லூரியின் விடுதியைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன் பரந்தன் விவசாயக் கல்லூரியின் விடுதி கட்டிடத்தின் முதல் மாடியின் புதுப்பித்தல் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன.*
  - *மேலும், லபுதுவ விவசாயக் கல்லூரியின் புதிய மகளிர் விடுதியின் கீழ்தளம், காளான் உற்பத்தி அலகு மற்றும் பண்ணை அலுவலகம் ஆகியவற்றின் திருத்தியமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.*
  - *வவுனியா விவசாயக் கல்லூரியின் பண்ணை களஞ்சிய திருத்தியமைக்கும் பணிகள் மற்றும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான ஓய்வு அறையின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. வாரியபொலை விவசாயக் கல்லூரியின் அதிபர் அலுவலகம் மற்றும் நிர்வாகப் பிரிவு புதுப்பிக்கப்பட்டு, பாதுகாப்பு வேலி கட்டப்பட்டுள்ளது.*

- குண்டசாலை விவசாயக் கல்லூரியின் அபேவர்த்தன விடுதியில் உள்ள கழிப்பறைத் தொகுதி புதுப்பிக்கப்பட்டுள்ளது. உணவு விஞ்ஞான ஆய்வுகூடத்தின் கூரை மற்றும் ஏனைய பிரதான திருத்தியமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும், பிரதான மண்டபத்தின் கூரை, கூரை விதானம் மற்றும் மின் இணைப்புத் தொகுதி என்பவற்றைத் திருத்தியமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5. விவசாயப் பாடசாலைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்

- டிப்ளோமா மாணவர்களுக்கான நடைமுறை பயிற்சி திறனை மேம்படுத்துவதற்காக 11 விவசாயப் பாடசாலைகளில் (பெல்வெஹெர, குண்டசாலை, வவுனியா, அங்குணகொலபெலஸ்ஸ, கரபிஞ்சா, அனுராதபுரம், பிபில, வாரியபொல, லபுதுவ, பாலமுனை மற்றும் பரந்தன்) கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பண்ணை வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வனைத்து நடவடிக்கைகளும் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த செயற்திட்டத்திற்காக புதிய நிர்மாணம், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு, காணி மற்றும் காணி அபிவிருத்தி ஆகிய செலவினத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

  - வவுனியா விவசாயப் பாடசாலையில் உயிரியல் மற்றும் இரசாயனவியல் ஆய்வகங்களில் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தல், பூந்தோட்டத்தை அலங்கரித்தல், அமரரும் பண்ணைக்குத் தேவையான உரங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.
  - மேலும் லபுதுவ மற்றும் வாரியபொல ஆகிய விவசாயப் பாடசாலையின் விடுதிக்கு கணினிகள், மல்டிமீடியா ப்றொஜெக்டர்கள், பண்ணை உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.
  - அங்குணகொலபெலஸ்ஸ விவசாயக் கல்லூரியின் கல்விப் பணிகளுக்குத் தேவையான அலுவலக தளபாடங்களைக் கொள்வனவு செய்தல், அனுராதபுரம் விவசாயக் கல்லூரியின் கல்விப் பணிகளுக்குத் தேவையான கணினிகள், அலுவலக தளபாடங்கள், ஒரு போட்டோகொப்பி இயந்திரம், ஒரு மல்டிமீடியா ப்றொஜெக்டர் மற்றும் பண்ணைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் மேலும் வாரியபொல விவசாயக் கல்லூரியின் விடுதிக்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் என்பன நிறைவடைந்துள்ளன.

6. விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தக் கருத்தரங்கு (ASDA)

- விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தக் கருத்தரங்கு 2024 செப்டம்பர் மாதம் 13 அன்று வெற்றிகரமாக நடைபெற்றது.

7. ஊடக நிகழ்ச்சிகள்

- 1,554 வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல் (கொழும்பு – 650, ரஜரட்டை – 206, கந்துரட்டை – 284, ருஹுன – 362, யாழ்ப்பாணம் – 52, குறுஞ்செய்திகள் - 988) மற்றும் 147 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல் (கொவிபிமட்ட அருணலு– 50, மிஹிகத்த தினுவோ – 46, உயிரும் உழவும் – 51) ஆகியன நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- 156 க்ருஷி தொலைக்காட்சி தொழில்நுட்ப குறுஞ்செய்திகளையும், 26 வணிக குறுஞ்செய்திகளையும், 1920 இனூடாக கேட்கப்படும் விவசாயி கேள்விகள் சார்ந்த 130 குறுஞ்செய்திகளையும் தயாரித்து வெளியிடப்பட்டது.
- மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை: மிஹிகத்த தினுவோ - 33,629, கொவிபிமட்ட அருணலு - 57,160, உயிரும் உழவும் - 27,858, யூடியூப் - 113,899 மற்றும் பேஸ்புக் - 472,902.
- 32,436 புத்தகங்கள் மற்றும் 128,846 துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. வெளியீடுகளின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் - 2,438,542.00 ரூபாய் ஆகும்.

8. விவசாயத் தொழில்நுட்ப பூங்காக்களின் பராமரிப்பு

- மாதிரி செயல்விளக்கங்களாக சமூகத்திற்கு முறையான விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்காக கன்னோருவ, பட்டஅத்த மற்றும் தியகம ஆகிய இடங்களில் அமைந்துள்ள விவசாயத் தொழில்நுட்ப பூங்காக்களைப் பராமரிக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறன. மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை - கன்னொருவாவிற்கு

60,564 (உள்ளூர் - 59,892, வெளிநாட்டினர் - 672) மற்றும் பட்டஅத்தவிற்கு 58,185 (உள்ளூர் - 57616, வெளிநாட்டினர் - 569).

- கன்னோருவ பூங்காவிலிருந்து 2,682,580.00 ரூபாய் மற்றும் பட்டஅத்த பூங்காவிலிருந்து 6,428,316.99 ரூபாயும் வருமானமாக (டிக்கெட்/ பண்ணை உற்பத்தி/ மீன் சிகிச்சை) ஈட்டப்பட்டது.

9. மண் வளத்தை பரிசோதிக்கும் வசதிகளை மேம்படுத்துதல்

- நெல் நிலங்களுக்கு மண் பரிசோதனை அடிப்படையிலான உர பரிந்துரைகளை அறிமுகப்படுத்துவதற்காக 2,650 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன, மேலும் மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்காக இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

10. சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் தொழில்முனைவோர் விருத்தி என்பன மூலம் நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்திசெய்வதற்கு விவசாயிகளுக்கு உதவுதல்

- சிறந்த விவசாய நடைமுறைகள் GAP 'சஹல் யாய' நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு தொழில்முனைவோர் விருத்தித் திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- 513 சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

11. உணவுப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்

புதிய வர்க்கங்கள், அதிக விளைச்சல் தரும் தொகுப்புகள் மற்றும் ஏனைய புதிய விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நெல், சோளம், மிளகாய், வெங்காயம், பசிப்பயறு, உளுந்து, நிலக்கடலை, சோயா போஞ்சி, கேழ்வரகு, எள், பழம் மற்றும் காய்கறிகளின் தரமான விதை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நெல் - சுய விதை நெல் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு 1,800 ¼ ஏக்கர் செயல்விளக்கங்கள் நடாத்தப்பட்டன. இதன்போது, 4,731 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் மற்றும் 180,000 பாராஷூட் தட்டுகள் வழங்கப்பட்டன.
- சோளம் – உள்நாட்டு கலப்பின சோள வர்க்கங்களை ஊக்குவிக்கும் வகையில், பெற்றோர் விதைகளை வழங்குவதன் மூலம் 100 ஏக்கர் பரப்பளவில் உள்நாட்டு கலப்பின சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன, மேலும் ஒரு அரச - தனியார் கூட்டுத் திட்டமாக 2,830 ஒரு ஏக்கர் செயல்விளக்கங்கள் விவசாயிகள் குழுக்களுடன் நடத்தப்பட்டன.
- பெரிய வெங்காயம் - பெரிய வெங்காயத்தின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு அதிக விளைச்சல் தரக்கூடிய தொழில்நுட்ப தொகுப்பு ஒன்று விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கீழ் 1/4 ஏக்கர் பரப்பளவில் 270 மாதிரி பயிர்கள் நடுகை செய்யப்பட்டு, 82 நீர் வழங்கல் அலகுகள் மற்றும் நாற்றுமேடை அமைப்பதற்கான உதவித் தொகை வழங்கப்பட்டது. 240 புதிய விவசாயிகள் அடையாளம் காணப்பட்டு, தொழில்நுட்ப தொகுப்புடன் பெரிய வெங்காய செய்கையை ஊக்குவிப்பதற்காக மானியமும் உதவித் தொகையும் வழங்கப்பட்டன.
    - 2025 ஆம் ஆண்டு சிறு போகத்திற்குத் தேவையான மெய் விதைகளை உற்பத்தி செய்வதற்கு அவசியமான தாய்க் குமிழ்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு மானியங்களை வழங்குவதன் மூலம் விவசாயிகள் 85,000 கிலோ கிராம் தாய்க் குமிழ்களை களஞ்சியப்படுத்த ஊக்குவிக்கப்பட்டனர்.
    - விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு UV பதப்படுத்தப்பட்ட பொலித்தீன் மற்றும் ஏனைய பொருட்களை வழங்குவதன் மூலம் 6 நிரந்தர மழைக் காப்புக் கூடாரங்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன் 20 நிரந்தர மழை காப்புக் கூடாரங்கள் மறுசீரமைக்கப்பட்டன. மேலும், தற்காலிக மழைக் காப்புக் கூடாரங்களை நிர்மாணிக்க 740 விவசாயிகளுக்கு பொலித்தீன் வழங்கப்பட்டது.

- சிறிய வெங்காயம் -. 514 விவசாயிகள் மற்றும் ஒவ்வொன்றும் 1000 சதுர மீட்டர் செயல் விளக்கக் களங்களைக் கொண்டுள்ள DOA இன் 10 பயிற்சி மையங்களுடன் சிறிய வெங்காய உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கில் மெய் விதை உற்பத்தி மற்றும் விதைக் குமிழ் உற்பத்தித் திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இதன்போது,

நீர் பயன்பாட்டு திறன் மற்றும் சேமிப்பு திறனை மேம்படுத்த முறையே 15 தெளிப்பு நீர்ப்பாசன அலகுகளும், 07 குமிழ் களஞ்சிய கொட்டில்களும் வழங்கப்பட்டன.

- மிளகாய் - இலங்கையின் மிளகாய் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில், வீட்டுத் தோட்ட அளவில் உலர் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 10,000 கிலோ திறந்த மகரந்தச் சேர்க்கை வகைகளின் (OPV) மிளகாய் விதைகள், 2000 கிலோ கலப்பின மிளகாய் விதைகள் மற்றும் 150,000 வளர்ப்பு பைகள் வழங்கப்பட்டன.
- பாசிப்பயறு – 5,885 கிலோ கிராம் விதைகள் மற்றும் பிற உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் 360 ஹெக்டயரில் சுய விதை உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது.
- நிலக்கடலை - விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 52 ஹெக்டயரில் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்காக 3,540 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் வழங்கப்பட்டன மற்றும் கரடியனாறு ஆராய்ச்சி நிலையத்தில் இனப்பெருக்க விதை உற்பத்திக்காக தெளிப்பான் நீர்ப்பாசன அலகுகள் நிறுவப்பட்டன.
- எள் - சான்றளிக்கப்பட்ட மற்றும் சுய விதை உற்பத்திக்காக 1,573.75 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் விநியோகிக்கப்பட்டன
- உளுந்து - விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 220 ஹெக்டயர் பயிரிடப்பட்டது, 45 கையால் இயக்கும் சுழல் விதைப்பான்கள் கொள்வனவு செய்யப்பட்டு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 10 OFC உற்பத்தி செய்யும் விவசாயிகள் அமைப்புகள் உருவாக்கப்பட்டதுடன், 20 தார்பாய்கள், 200 பிளாஸ்டிக் கேன்கள் கொள்வனவு செய்யப்பட்டு விவசாயிகளிடையே விநியோகிக்கப்பட்டன.
- சோயா போஞ்சி - விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 1 ஏக்கர் அளவிலான 440 செயல்விளக்கங்களுக்கு 8796 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் விநியோகிக்கப்பட்டன.
- கேழ்வரகு - 32 ஹெக்டயரில் சுய விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, சான்றளிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட விதை விநியோகம் நடைபெற்று வருகிறது.
- தட்டைப்பயறு - 100 ஹெக்டயரில் விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, 2042 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் வழங்கப்பட்டதுடன் 30 தட்டைப்பயறு பிரித்தெடுப்பான் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டன
- பழங்கள் - புதிதாக வெளியிடப்பட்ட வர்க்கங்களின் நடுகைப் பொருட்களின் உற்பத்தியை வலுப்படுத்துவதற்காக, ஏற்கனவே உள்ள பழத்தோட்டங்களின் 3,500 தாய்த் தாவரங்களைப் பராமரிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றதுடன் செயல்விளக்க பழத் தோட்டங்களாகப் பயன்படுத்த 5 பழத்தோட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- காய்கறி பயிர்கள் - புதிதாக வெளியிடப்பட்ட காய்கறி வகைகளின் விதை உற்பத்தியை விருத்தி செய்யும் பொருட்டு 75 கிலோ கிராம் கெகுலு இனப்பெருக்க விதைகள் மற்றும் 53.5 கிலோ கிராம் HORDI பொக்குரு இனப்பெருக்க விதைகள் என்பன வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டு விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மையத்திற்கு (SPMDC) சமர்ப்பிக்கப்பட்டன.
    - எதிர்கால மேம்பாடுகளுக்காக 100 கிராம் முள்ளங்கி போல விதைகளை சுத்திகரிப்பதை இலக்காகக் கொண்ட முள்ளங்கி விதை உற்பத்தி நடைபெறுகிறது. சீத்தஎலிய ARS இல் விதைகள் நிறுவப்படுகின்றன.
    - 50 கிலோ கிராம் பயற்றங்காய் (A9) இனப்பெருக்க விதைகளை உற்பத்தி செய்யும் இலக்குடன் பயற்றங்காய் விதை உற்பத்தி நடைபெறுகிறது. விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மையத்திற்கு (SPMDC) 5 கிலோ கிராம் A-9 பயற்றங்காய் இனப்பெருக்க விதைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
    - கலப்பின விதை உற்பத்திக்கான பெற்றோர் மூலங்களை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு பெற்றோர் வரியிலிருந்தும் (OK-11, OK-45, மற்றும் OK-12) 20 கிலோ வெண்டி இனப்பெருக்க விதைகளை உற்பத்தி செய்தல்.

விதைச் சான்றுப்படுத்தல் மற்றும் தாவரப்பாதுகாப்பு

12. தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு செய்யும் செயற்திட்டம்

- *விவசாயிகளிடையே தரமான விதைகளின் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும் நோக்கில் ஒப்பந்தத்தில் வளர்க்கப்பட்ட (பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட) 832 மெட்ரிக் தொன் OFC விதைகள், ஒப்பந்தத்தில் வளர்க்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட விதை நெல் 31,712 பூசல் மற்றும் ஒப்பந்தத்தில் வளர்க்கப்பட்ட தரமான காய்கறி விதைகள் 51,415 கிலோ கிராம் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டன.*
- *விதை களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துப் பணிகளுக்காக ஸ்டிக்கர்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் புகையூட்டிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.*

13. துரிதப்படுத்தப்பட்ட விதைப் பண்ணை மேம்பாட்டுத் திட்டம்

- *இங்கினிமிட்டியவில் விவசாயக் கிணறுகள் நிர்மாணித்தல், பட்டஅத்த மற்றும் கரடியனாறுவில் குளங்களைப் புனரமைத்தல், மல்வத்த, பொலன்னறுவை, வல்பிட்ட மற்றும் சீதாஎலியவில் தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை நிறுவுதல், கந்தபொல மற்றும் மல்வத்தவில் அதிக திறன் கொண்ட நீர் பம்புகளைக் கொள்வனவு செய்தல், நீர்ப்பாசனத் தொகுதிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இதர பொருட்களை கொள்வனவு செய்தல் ஆகிய செயற்பாடுகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.*
- *அம்பேபுஸ்ஸ மற்றும் வீரபனை ஆகிய இடங்களில் மழைநீர் சேமிப்புக் கூடங்களை நிர்மாணித்தல், வால்பிட்ட, பஸ்யால மற்றும் அம்பேபுஸ்ஸ ஆகிய இடங்களில் மழைநீர் சேமிப்புக் கூடங்கள் மற்றும் வலை இல்லங்களை புதுப்பிப்பதற்கான பொருட்களை கொள்வனவு செய்தல், மித்தெனியவில் பதனிடும் அலகை புதுப்பித்தல், கஹகொல்லவில் ஒரு அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் மஹஇலுப்பல்லம DDA அலுவலக கட்டிடத்தை புதுப்பித்தல் ஆகியவை நிறைவடைந்துள்ளன.*
- *அம்பேபுஸ்ஸ, அளுத்தாராம, பட்டஅத்த, மித்தெனிய, வீரபனை, பெல்வெஹர ஆகிய இடங்களில் தேவையான நில அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் சீத்தாஎலிய, பட்டஅத்த மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் தேவையான பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.*
- *முருங்கன் மற்றும் வவுனியாவில் சூரிய மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவுதல், பொலன்னறுவை, நிக்கவெரட்டிய, எலுவன்குளம், இங்கினிமிட்டிய, கரடியனாறு, நுவரெலியா பிராந்தியத்தில் சூரியசக்தி மின் தெரு விளக்குகளை நிறுவுதல், பொலன்னறுவை விதை உற்பத்தி பண்ணையில் கூட்டு அறுவடை இயந்திரங்கள் மற்றும் சுழல் கலப்பைகளை கொள்வனவு செய்தல் மற்றும் தேவையான பண்ணை இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்கள், சூரியசக்தி மின் தொகுதிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஏற்கனவே காணப்படும் பண்ணை இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் ஆகிய நடவடிக்கைகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

14. உள்நாட்டு விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவித்தல்

- *சீதாஎலிய பசுமை இல்ல வளாகத்தில் உள்ள பழைய தாவர இல்லங்கள் மற்றும் வலை இல்லங்கள் என்பவற்றை மறுசீரமைத்தல், உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் பழுதுபார்த்தல், நடுகைப் பொருட்கள் உற்பத்திக்கான இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், சீதாஎலிய ஆராய்ச்சி நிலையத்தில் இழைய வளர்ப்பு ஆய்வகம், வலை இல்லங்கள் மற்றும் குளிர் அறையை உருவாக்குதல் மற்றும் பண்டாரவளை ஆராய்ச்சி நிலையத்தில் உருளைக்கிழங்கு RSC தாவர உற்பத்தி அமைப்பு, வலை இல்லங்கள், இரசாயனப் பொருட்கள், உரம் மற்றும் தினசரி பராமரிப்பு ஆய்வகத்தை உருவாக்குதல் ஆகியவை ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

15. விதை சான்றுப்படுத்தல் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்

- *மஹாஇலுப்பல்லமவில் விதை பரிசோதனை ஆய்வக வசதிகளை மேம்படுத்துவதுடன் தொடர்பான 80% வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன.*
- *கன்னொருவவில் உள்ள விதை சுகாதார சோதனை அலகில் தாவர இல்லங்களை நிர்மாணித்தல் மற்றும் பட்ட அத்தவில் உள்ள விதை சோதனை ஆய்வகத்தின் நாற்றுமேடை கொட்டிலை நிர்மாணித்தல் ஆகிய பணிகள் நிறைவடைந்துள்ளன*

16. விதைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விதை மற்றும் நடுகைப் பொருட்களின் தர உறுதி

- *விதைச் சட்டத்தின் கீழ் 2,401 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, (பதிவு செய்யப்பட்ட 1,285 விதை கையாளுபவர்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட 1,116 விதை கையாளுபவர் பதிவுகள்).*
- *மொத்தம் 1,765 விதை லேபிள்கள் அங்கீகரிக்கப்பட்டன, மேலும் 1,181 விதை கையாளுபவர் வளாகங்கள் எழுமாறான முறையில் பரிசோதிக்கப்பட்டன.*
- *விதைச் சான்றுப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு 11,877.17 மெற்றிக் தொன் விதை நெல், 558.15 மெற்றிக் தொன் OFC விதைகள் 64.5 மெற்றிக் தொன் காய்கறி விதைகள் மற்றும் 484.24 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குடன் 2,168,077 சிறு கிழங்கு என்பன 6,539.67 ஹெக்டயர் விதை நெல் வயல்கள், 1,370.85 ஹெக்டயர் OFC களங்கள், 1,64.37 ஹெக்டயர் காய்கறி களங்கள் மற்றும் 80.04 ஹெக்டயர் விதை உருளைக்கிழங்குக் களங்கள் என்பன சான்றளிக்கப்பட்டன.*
- *13,660 ஆய்வுகூடப் பரிசோதனைகள் மற்றும் பகுப்பாய்வுகள் மற்றும் 1,978 கட்டுப்பாட்டுக்குப் பிந்தைய விதைப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.*
- *687 தாய்த் தாவரங்கள், 316 நாற்றுமேடைகள் மற்றும் 827,364 பழக் கன்றுகள் என்பவற்றை பதிவு செய்ததன் மூலம் பழத் தாவரங்களின் சான்றளிப்பு மேற்கொள்ளப்பட்டது.*
- *அனைத்து பங்குதாரர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டன.*

17. மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலில் வேளாண் - ரசாயனங்களின் சாத்தியமான பாதகமான விளைவுகளைக் குறைத்தல்

- *சிறு போகத்தில் யார் நீட்டளவு பயற்றங்காயில் தெரிவு செய்யப்பட்ட பீடைகொல்லிகளின் அதிகபட்ச எச்ச அளவு (MRL) மற்றும் அறுவடைக்கு முந்தைய இடைவெளி (PHI) என்பவற்றை மதிப்பீடு செய்தல் (8 பீடைகொல்லிகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் 26 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன).*
- *பீடைகொல்லி எச்சங்களின் அளவுகளை மதிப்பீடு செய்வதற்கு நீர், பழங்கள் மற்றும் காய்கறிகள் என்பவற்றில் எழுமாறன பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. (195 பழங்கள்/ காய்கறி வகைகள் மற்றும் 88 நீர் மாதிரிகள்) மற்றும் 17 கன உலோகங்கள் மற்றும் 203 பீடைகொல்லிகளில் (139 பழங்கள்/காய்கறி மற்றும் 80 நீர் மாதிரிகள்) கன உலோக கொள்ளடக்கம் பற்றிய மதிப்பீடு.*
- *சேவை ஒப்பந்தம், பயிற்சி மற்றும் உபகரண அளவுத்திருத்தம் உள்ளிட்ட ஆய்வக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ISO17025:2017 அங்கீகாரத்தின் தேவைக்கேற்ப ஆய்வக வசதிகளை வலுப்படுத்துதல். (கணக்காய்வுத் திகதி 2024.04.24/25/26 மற்றும் மொத்த செலவு – 2.23 மில். ரூபாய்)*
- *பறிமுதல் செய்யப்பட்ட 4.06 மெற்றிக் தொன் பீடைகொல்லிகள் எரிக்கப்பட்டன.*
- *மஹாஇலுப்பள்ளமவில் பறிமுதல் செய்யப்பட்ட பீடைகொல்லி கடை சுற்றியுள்ள வேலி முழுமையாக மாற்றப்பட்டு பழுதுபார்க்கப்பட்டது.*
- *நாடு முழுவதும் விவசாய இரசாயன விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான 14 பயிற்சித் திட்டங்கள் நிறைவு செய்யபட்டன..*

18. விநியோகச் சங்கிலி கட்டமைப்பை (JICA) வலுப்படுத்துவதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாய உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

- *சந்தை சார்ந்த உற்பத்திகளின் மூலம் சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாய உற்பத்தியாளர்களின் வருமான மட்டத்தை உயர்த்துவதற்காக, பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (TOT) வழங்கும் திட்டங்கள், விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள், விவசாய ஆலோசகர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான பட்டறைகள், அதிகாரிகள் மட்ட தகவற்பரப்பு நிகழ்ச்சிகள், ஈடுபாட்டு பட்டறைகள், அடிப்படை ஆய்வுகள் மற்றும் பாலின சமூகப் பண்புகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்சிகள் மற்றும் சந்தை ஆய்வுகள் என்பன நடத்தப்பட்டதுடன் 70 கள சுற்றுப்பயணங்களும் நடத்தப்பட்டன.*

19. உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்

- நிதி முன்னேற்றம்

தொ / இல	பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	முன்னேற்றம் (சதவீதத்தில் %)
	செலவினத் தலைப்பு- 118-02-03-020-2202			
1	தேனீ வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 1	5.00	4.28	86
	செலவினத் தலைப்பு- 118-02-03-020-2509			
2	தேனீ வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 2	7.00	6.16	96
3	இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பழப் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை விருத்தி செய்வதற்கு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை செயல் விளக்கமளித்தல் மற்றும் பரப்புதல்	10.00	4.77	48
4	வர்த்தக ரீதியான பழ உற்பத்தி தோட்டங்களை நிறுவுவதற்கு சமீபத்தில் பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்களைப் பயன்படுத்தி விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடம்பழம் ஆகியவற்றின் வெளிப்புற கள மரபணு வங்கிகளை விருத்தி செய்தல் மற்றும் விரிவுபடுத்துதல்.	5.00	4.62	92
5	நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வக வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் குறைந்த செலவிலான போசணை முகாமைத்துவ நடைமுறைகளை உருவாக்குதல் - கட்டம் III	15.00	14.96	100
6	சூழலுக்கு ஏற்ற காலநிலைக்கு சீரமைவான விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புதல்	7.00	5.39	77
7	உணவுப் பயிர்த் துறையில் பீடைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல், ஏனைய களப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் தொழில்நுட்ப பரவலை மேம்படுத்துதல்	10.00	7.19	72
8	விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக கன்னோருவவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல்	9.50	7.80	91
9	விவசாய அறிவு பரவலை ஊக்குவிப்பதற்காக பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல்	9.50	5.10	54
10	விவசாய சுற்றுலா மற்றும் விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக சசூழல் நட்பு விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல்	3.50	1.75	50
11	கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசன , கடற்றொழில் மற்றும் நீர்வள அமைச்சில் நகர்ப்புற விவசாய செயல்விளக்கத்தை நிறுவுதல்	3.50	1.02	29
12	‘நெகத்தட்ட பெலயக்’ தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம்	0.86	0.86	100
13	‘வசத் சிரிய’ தேசிய புத்தாண்டு விழா	0.44	0.44	100
14	‘ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் ஏற்றுமதிக்காக வாழை செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை இலக்காகக் கொண்டு, அம்புல் வர்க்க வாழைபழங்களைப் பொதி செய்வதற்கான ஒரு அலகை நிறுவுதல்	0.19	0.12	61

தொ / இல	பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	முன்னேற்றம் (சதவீதத்தில் %)
15	பல்வேறு பங்குதாரர்களின் ஆதரவுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்றுதல் (நிபுணர்களின் பரிந்துரையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கண்டுபிடிப்புகளை உருவாக்குதல்)	1.91	1.67	87
	உப கூட்டுத்தொகை	88.41	66.09	76
	செலவினத் தலைப்பு- 118-02-03-088-2509			
16	2024 சிறு போகத்தில் பிரதான நீர்ப்பாசனப் பகுதிகளில் நெற் செய்கையில் உற்பத்தித்திறன் மேம்பாடு	13.28	10.15	76
17	2024 சிறு போகத்தில் சோள உற்பத்தி மேற்கொள்வதற்கு நெல் வயல்களைப் பன்முகப்படுத்துதல்	21.60	21.57	100
	உப கூட்டுத்தொகை	34.88	31.71	91
	செலவினத் தலைப்பு- 118-01-02-001-2509			
18	உலக உணவு ஸ்தாபனம் (FAO) ஏற்பாடு செய்த 37வது ஆசிய பசிபிக் மாநாட்டின் உறுப்பினர்களின் களச் சுற்றுப்பயணத்தை எளிதாக்குவதற்காக, பட்டஅத்த விவசாய தொழில்நுட்ப பூங்காவின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயல் விளக்கக் களங்களை விருத்தி செய்தல்	11.49	11.49	100
19	புதிதாக மேம்படுத்திய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்கான நிறுவன மற்றும் ஆராய்ச்சி கள வசதிகளை விருத்தி செய்தல்	2.16	2.16	100
20	உலக உணவு ஸ்தாபனத்தினால் (FAO) நடாத்தப்பட்ட 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டின் பிரதிநிதிகளின் சுற்றுப்பயணத்திற்கு இணையாக முன்மொழியப்பட்ட கள நாள் நிகழ்ச்சி –(22, பெப்ரவரி 2024 அன்று பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவில்)	9.57	9.57	100
21	உலக உணவு ஸ்தாபனத்தினால் (FAO) நடாத்தப்பட்ட 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டிற்கு உணவுப் பயிர்களைக் கொண்டு நில அலங்காரத்தை மேற்கொண்டு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை தயார் செய்தல்.	0.25	0.25	100
	உப கூட்டுத்தொகை	23.47	23.47	100
	மொத்தம்	146.76	121.27	84

- பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டம்	முன்னேற்றம்	நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்	பயனாளர் எண்ணிக்கை
01. தேனீ வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 1	• தரமான தேன் உற்பத்தியை ஊக்குவித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட 12 சாத்தியமான பகுதிகளில் 330 விவசாயிகளுக்கு 50% மானியத்துடன் தேனீ வளர்ப்புப் பெட்டிகள், தேனீக் கூட்டங்கள் மற்றும் பிற உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன. • நான்கு தேன் சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும் அலகுகளை நிறுவுவதற்காக பிந்துனுவெவ பகுதியில் 8 விவசாயிகளுக்கு 50% மானியத்துடன் தொற்று நீக்கித் நீர்த் தொட்டி அமைத்தல், களஞ்சியத் தாங்கிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன. புகைப்பட இலக்கம் 26	கண்டி, நுவரெலியா, மாத்தளை, குருநாகல், கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, களுத்துறை, கம்பஹா, கொழும்பு மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான பகுதிகள்.	338 விவசாயிகள்

செயற்திட்டம்	முன்னேற்றம்	நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்	பயனாளர் எண்ணிக்கை
02. தேனீ வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 2	• பிந்துனுவெவ மற்றும் வாரியப்பொல தேனீ வளர்ப்பு அலகுகளுக்கு உபகரணங்களை வழங்கியதன் மூலம் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்பட்டன. • வாரியபொல தேனீ வளர்ப்பு அலகின் தேனீ வளர்ப்புக் கட்டிடத்தை புனரமைத்தல். • தேனீ வளர்ப்புத் தொழில் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு உலக தேனீ தினத்துடன் தொடர்புடையதாக 22 துணை நிகழ்ச்சிகள், 18 பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் 8 கண்காணிப்பு சுற்றுப்பயணங்கள் நடத்தப்பட்டதுடன் விவசாயிகளிடையே 2000 சிற்றேடுகள் மற்றும் 24000 கையேடுகள் என்பன விநியோகிக்கப்பட்டன. • புகைப்பட எண். தீவு முழுவதும் (மாகாண மற்றும் மாகாணங்களுக்கிடையில்), நீர்ப்பாசனம் மற்றும் பூண்டுன்வெவ தேனீ கட்டுப்பாட்டு அலகுகள் விவசாயிகள், பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், அதிகாரிகள், தொழில்முனைவோர் புகைப்பட இலக்கம் 27 - 28	நாடு முழுவதும் (மாகாண மற்றும் மாகாணங்களுக்கு இடையே), பிந்துனுவெவ மற்றும் வாரியப்பொல தேனீ வளர்ப்பு அலகுகள்	விவசாயிகள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், அதிகாரிகள், தொழில்முனைவோர்
03. இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பழப் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை விருத்தி செய்வதற்கு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை செயல் விளக்கமளித்தல் மற்றும் பரப்புதல்	• 50 பழத்தோட்டங்களை நிறுவுவதற்கான நடுகைப் பொருட்களின் உற்பத்தி நிறைவடைந்துள்ளது. 2 களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 20 களங்கள் தயார்படுத்தப்படுகின்றன. • தாய்தாவர பழப் பயிர் கன்றுகள் பராமரிக்கப்பட்டு, நடுகைப் பொருட்கள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன. • தற்போதுள்ள பழத்தோட்டங்களில் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பது மற்றும் பின்தொடர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 30 சோதனை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. • 550 விவசாய விரிவாக்க அதிகாரிகள் 60 விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. புகைப்பட எண் 29 - 30	ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நுவரெலியா, களுத்துறை, கம்பஹா, மொனராகலை, பதுளை, கேகாலை	
04. வர்த்தக ரீதியான பழ உற்பத்தி தோட்டங்களை நிறுவுவதற்கு சமீபத்தில் பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்களைப் பயன்படுத்தி விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடம்பழம் ஆகியவற்றின் வெளிப்புற கள மரபணு வங்கிகளை விருத்தி செய்தல் மற்றும்	• விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடை வகையின் கள மரபணு வங்கிகளை விஸ்தரிப்பதற்கு 10 ஹெக்டயர் நிலத்தை வெற்றிகரமாக சுத்தம் செய்து அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட 10 ஹெக்டயர் நிலத்தில் ஒட்டுப் பழச்செடிகளை நடுதல். • உள்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் முட்கம்பி வேலிகள் அமைத்தல் மற்றும் நீர் விநியோக முறையை விரிவுபடுத்துதல். • களப் பராமரிப்பு, உழவியல் முறைகள், மற்றும் அவற்றை மதிப்பீடு செய்தல், விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடை வகையினங்களின் கள மரபணு பல்வகைமையை மதிப்பீடு மற்றும்	தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், அங்குனுகொலபெலஸ்ஸ, களப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்	பழ உற்பத்தியாளர்கள், விவசாயிகள்

செயற்திட்டம்	முன்னேற்றம்	நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்	பயனாளர் எண்ணிக்கை
விரிவுபடுத்துதல்	மதிப்பீடு ஆகியவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. • 8000 ஒட்டுக் கன்றுகள் உற்பத்தி செய்யும் பணிகள் நிறைவுற்றுள்ளன. (3000 விளாம்பழம், 2500 மாம்பழ, 2500 தோடை இனப் பயிர்கள்) • வர்த்தக ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்கத்திற்காக 5 ஹெக்டயர் நிலப் பரப்பு அபிவிருத்தி செய்யப்பட்டு களம் நிறுவப்பட்டுள்ளது. • பழைய தண்ணீர் இழுவண்டித் தாங்கி திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் கள மரபணு வங்கிகளுக்கு மேலதிக நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. புகைப்பட இலக்கம் 31-33		
05. நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வக வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் குறைந்த செலவிலான போசணை முகாமைத்துவ நடைமுறைகளை உருவாக்குதல் - கட்டம் III	• மண் இரசாயன ஆய்வகத்தின் மேல் மாடியின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் மற்றும் ஆய்வகத்தில் வேலை செய்வதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல் – பட்டறை, நீர் வழங்கல், குளிரூட்டிகளைத் திருத்துதல் உள்ளிட்ட வசதிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. • மண்ணின் தரம் மற்றும் மாற்று போசணை ஆதாரங்கள், வளர்ப்பு ஊடகங்களின் தரம் பற்றி பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாதுகாப்பான சூழல் நிலைமைகளின் கீழ் பரிசோதனை செய்தல். • மண், சேதன உரங்கள், தாவர பகுப்பாய்வு மற்றும் நுண்ணுயிரியல் மதிப்பீடுகளுக்கு பயன்படுத்தப்படும் ஆய்வக உபகரணங்களை பழுதுபார்த்தல். • உயிரியல் உர வகைகளை விருத்தி செய்யும் பொருட்டு இயற்கையான வாழ்விடங்களிலிருந்து (அடையாளப்பட்ட தாவரங்களின் ரைசோஸ்பியர்களில் இருந்து) N நிலைநாட்டும், P ஐக் கரைக்கக்கூடிய மற்றும் K ஐக் கரைக்கக்கூடிய, நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை தனிமைப்படுத்துதல். • சிறிய வெங்காயம் மற்றும் சோளத்திற்கான இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் சூழல் நட்பு மாற்று ஆதாரங்களைப் பயன்படுத்தி, சூழல் நட்பு போசணை முகாமைதத்துவ தொகுப்புகளை உருவாக்குதல். புகைப்பட இலக்கம் 34 – 36	நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், மாகந்துறை, குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்கள்	05 விவசாயத் துறைகளைச் சேர்ந்த விவசாயிகள் நேரடிப் பலன்களைப் பெறுவதுடன் ஈர மற்றும் இடைநிலை வலயங்களில் உள்ள விவசாயக் களங்களில் உள்ள விவசாயிகள் மறைமுகப் பலன்களைப் பெறுவார்கள்.
06. சூழலுக்கு ஏற்ற காலநிலைக்கு சீரமைவான விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புதல்	• நிலைபேறான வீட்டுத் தோட்டச் செய்கைகளை உருவாக்குதல், சேதன உர உற்பத்தி, கூடுப்பசளை உற்பத்தி மற்றும் காளான் உற்பத்தி ஆகியவை தொடர்பான 86 பயிற்சிகள் நடத்தப்பட்டு 3824 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டனர். • நில மேம்பாடு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் பயிர்களை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. • காளான் ஆராய்ச்சிப் பிரிவின் வளர்ப்பு	நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், மாகந்துரை, மற்றும் அனைத்து மாகாணங்களிலும் உள்ள மாகாண விவசாய திணைக்களங்கள்	3,824

செயற்திட்டம்	முன்னேற்றம்	நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்	பயனாளர் எண்ணிக்கை
	இல்லம் புனரமைக்கப்பட்டுள்ளது • புதிய கூட்டுப்பசளை அலகு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.. • மண்புழு உர உற்பத்தித் தொழிற்சாலை பழுதுபார்க்கப்பட்டுள்ளது. • 5 மாகாணங்களில் தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய மாகாணங்களுக்கான தரவு சேகரிப்பு நடைபெற்று வருகிறது புகைப்பட இலக்கம் 37-39		
07. உணவுப் பயிர்களில் பீடைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல், ஏனைய களப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் உணவுப் பயிர்த் துறையில் தொழில்நுட்ப பரவலை மேம்படுத்துதல்	• களப் பிரச்சினைகள் தொடர்பான 100 உழவர் பயிற்சி மற்றும் 15 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. விழிப்புணர்வை அதிகரிக்க 38,000 துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. • பீடை மற்றும் நோய்க் கட்டுப்பாடு தொடர்பான 400 செயல்விளக்கங்கள் நடத்தப்பட்டன. • 06 மாகாணங்களுக்கு இடையே பகுதிகளில் புதிதாக வெளியிடப்பட்ட வர்க்கங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயல்விளக்கம் நடத்தப்பட்டதுடன் 1650 கலப்பின மரக்கறி விதைப் பொதிகள் மற்றும் 27 பூச்சி விரட்டி மஞ்சள் பல்புகள் விநியோகிக்கப்பட்டன. புகைப்பட இலக்கம் 40	9 மாகாணங்கள் மற்றும் 6 மாகாணங்களுக்கு இடையிலான பிரதேசங்கள், விவசாயத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்	அனைத்து விவசாயிகளுக்கும்
08. விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக கன்னோருவவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல்	• மண் பாதுகாப்பு அலகுக்கு அருகில் கழிப்பறை வளாகம் கட்டும் பணி பகுதியளவில் நிறைவடைந்துள்ளது. • விவசாயப் பூங்காவில் உள்ள தகவல் பலகைகளை பழுதுபார்ப்பதற்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பலகைகள் தயார் செய்யப்பட்டது. • தற்போது காணப்படும் அருங்காட்சியகத்தைப் நவீனமயப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்காக பொருட்கள் (தரை ஓடு பதித்தல், சீலிங் தயாரித்தல், சுவர் பூசுதல் மின்சார வேலைகள்) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. • அருங்காட்சியகத்தில் உள்ள சுவரோவியங்களைப் பாதுகாக்க மரத்தாலான கைப்பிடி அமைத்தல். • அருங்காட்சியக கேட்போர்கூடத்திற்கு மாநாட்டு நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. • அருங்காட்சியக காட்சிப் பொருட்கள் மற்றும் மாதிரிகளுக்கு 05 சுய-கற்றல் ஆதரவு அமைப்புகளை நிறுவுதல். • அருங்காட்சியகத்தின் விவசாய ஆலோசனை அறை புதுப்பிக்கப்பட்டது. புகைப்பட இலக்கம் 41-42	கன்னோருவை	விவசாயப் பூங்கா மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும்
09. விவசாய அறிவு பரவலை ஊக்குவிப்பதற்காக பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப	• விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக 10,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. • தகவல் பலகைகள் மற்றும் காட்சி அலகு என்பன திருத்தியமைக்கப்பட்டுள்ளன.. • சுகாதாரமான குடிநீரைப் பெறுவதற்கு தொழிற்சாலை நீர் வடிகட்டி கொள்வனவு	பட்டஅத்த	விவசாயப் பூங்கா மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளும்

செயற்திட்டம்	முன்னேற்றம்	நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்	பயனாளர் எண்ணிக்கை
பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல்	செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. • இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய உள்ளீடுகளின் கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளன. • நீர் வழங்கல் அமைப்புகளை விருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. • அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பப் பிரிவை அபிவிருத்தி செய்யும் பணிகள் பகுதியளவில் நிறைவடைந்துள்ளன. • நெடுஞ்சாலையின் வெளியேறும் இடத்திற்கு அருகில் விளம்பர பலகைகள் நிறுவப்பட்டன. புகைப்பட எண் 43 - 45		அனைவரும்
10. விவசாய சுற்றுலா மற்றும் விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக சசூழல் நட்பு விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல்	• தியகம பிரதேசத்தில் விவசாய சுற்றுலா வியாபாரம் மற்றும் விவசாய அறிவைப் பரப்புதல் என்பவற்றுக்கு ஒரு பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.	தியகம	விவசாயப் பூங்கா மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும்
11. கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீர்வள அமைச்சில் நகர்ப்புற விவசாய செயல்விளக்கத்தை நிறுவுதல்	• காய்கறிச் செய்கை நிலங்களில் மீள் நடுகை, நில வடிவமைப்பைத் திட்டமிடல், பூங்கா கொட்டகைகளை திருத்தியமைத்தல் மற்றும் நீர் விநியோகத் தொகுதியொன்றை நிறுவுதல் ஆகிய பணிகள் நிறைவுற்றுள்ளன.	கமத்தொழில் அமைச்சு வளாகம்	
12. ‘நெகத்தட்ட பெலயக்’ தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம்	• 200 முள் சீத்தாப் பழ (விதைக் கன்றுகள்), 200 கொய்யா (விதைக் கன்றுகள்) மற்றும் 600 அகத்தி கன்றுகள் என்பவற்றை அம்பத்தன்ன விதைப்பண்ணை மூலம் விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. • தெலிஜ்ஜவில விதைப் பண்ணையிலிருந்து கமநல சேவை நிலையங்கள் (ரத்கம, யக்கலமுல்ல) மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை என்பவற்றுக்கு 3550 கலமென்ஸி வகைத் தோடை மற்றும் 200 பலா (ஒட்டுரக நாற்றுகள்) வழங்கிப்பட்டுள்ளன. • பட்டஅத்த விதைப் பண்ணை மூலம் விவசாய அமைச்சுக்கு 100 உயர்தர ஒட்டுரக செடிகள் வழங்கிப்பட்டுள்ளன. • பல்வெஹெர விதைப்பண்ணை மூலம் 200 அகத்தி செடிகள், 450 நெல்லி (விதைக் கன்றுகள்), 50 பலா (ஒட்டுக் கன்றுகள்), 100 மாதுளை செடிகள் மற்றும் 200 எலுமிச்சைக் கன்றுகள் என்பவற்றை வாரியப்பொல கமத்தொழில் இராஜாங்க அமைச்சுஅலுவலகத்திற்கு வழங்கிப்பட்டுள்ளன. • விவசாய அமைச்சு 792 கலமென்ஸி வகைத் தோடை கன்றுகளை கொழும்பு பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு வழங்கியது.		விவசாய அமைச்சு, கமநல சேவை நிலையங்கள் (ரத்கம, யக்கலமுல்ல), தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, விவசாய இராஜாங்க அமைச்சரின் அலுவலகம், வாரியபொல

செயற்திட்டம்	முன்னேற்றம்	நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்	பயனாளர் எண்ணிக்கை
	• வழங்கப்பட்ட மொத்த பழச்செடிகளின் எண்ணிக்கை 6642.		
13. 'வசத் சிரிய' தேசிய புத்தாண்டு விழாவுக்கு சந்தையை அமைத்தல்	• 2024 கொழும்பு 'வசத் சிரிய' தேசிய புத்தாண்டு விழாவிற்காக பாரம்பரிய சந்தையை நிர்மாணித்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. புகைப்பட இலக்கம் 46	கொழும்பு	
14. 2024 சிறு போகத்தில் . பிரதான நீர்ப்பாசனப் பகுதிகளில் நெற் செய்கையில் உற்பத்தித்திறன் மேம்பாடு	• நிலப் பண்படுத்தல் மற்றும் களங்களை நிறுவுதல்: 525 ஏக்கர் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (பொலன்னறுவை மாகாண இடை வலயம் – 153 ஏக்கர், ஹம்பாந்தோட்டை பகுதி – 72, அம்பாறை மாகாண இடை வலயம் – 300 ஏக்கர்) • பரசூட் தட்டுகள் - 38,000 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (பொலன்னறுவை மாகாண இடை வலயத்திற்கு 14,000, அனுராதபுரத்திற்கு 24,000 வழங்கப்பட்டன.) • எரிக்கப்பட்ட உமி: 137.5 மெற்றிக் தொன் பயன்படுத்தப்பட்டது (பொலன்னறுவை மாகாண இடை வலயத்திற்கு 38.25 மெற்றிக் தொன், ஹம்பாந்தோட்டைக்கு 24.25 மெற்றிக் தொன், அம்பாறை மாகாண இடை வலயத்திற்கு 75 மெற்றிக் தொன்). • விதை நெல்: 6,804 கிலோ கிராம் வழங்கப்பட்டது. • இலை வண்ணக் குறிகாட்டி: 300 விநியோகிக்கப்பட்டது. • விவசாயாக களப் பாடசாலைகள்: 170 நடத்தப்பட்டது. • பயிர் விளைச்சல் ஆய்வுகள்: 225 நடத்தப்பட்டது. புகைப்பட இலக்கம் 47-49	பொலன்னறுவை, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை மாகாண இடை வலயம் மற்றும் மாகாணங்கள்	விவசாய சமூகம்
15. 2024 சிறு போகத்தில் சோள உற்பத்தி மேற்கொள்வதற்கு நெல் வயல்களைப் பன்முகப்படுத்துதல்	உயர் அடர்த்தி மாதிரிகள்: • 100 ஏக்கர் (பெரிய அளவிலான) நிறைவு செய்யப்பட்டுள்ளது. • 879 ஏக்கர் (சிறிய அளவிலான) நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதிக மழை காரணமாக வயல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக உயர் நிலம் பயன்படுத்தப்பட்டது. • அதிக அடர்த்தி கொண்ட சோள உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ½ ஏக்கர் மாதிரி நிறுவப்பட்டது. • உள்கட்டமைப்பு வசதிகள்: சோளத்தை உலர்த்துவதற்கு சீமெந்து கதிரடிக்கும் தளம் தயார் செய்யப்பட்டது. • விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்: 50 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன; 10,000 பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. • பயிர் விளைச்சல் ஆய்வுகள்: 25 நடத்தப்பட்டது. புகைப்பட இலக்கம் 50 -52	அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை	விவசாய சமூகம் (650)
உலக உணவு ஸ்தாபனம் (FAO)ஏற்பாடு செய்த 37வது	• பொது கழிப்பறைத் தொகுதி, கேட்போர்கூடம், பொது வசதிகள்	பட்டஅத்த	தொழில்நுட்ப

செயற்திட்டம்	முன்னேற்றம்	நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்	பயனாளர் எண்ணிக்கை
ஆசிய பசிபிக் மாநாட்டின் உறுப்பினர்களின் களச் சுற்றுப்பயணத்தை எளிதாக்குவதற்காக, பட்டஅத்த விவசாய தொழில்நுட்ப பூங்காவின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயல் விளக்கக் களங்களை விருத்தி செய்தல்	பகுதி, நிரந்தர பயிர் சிகிச்சை கட்டிடம் மற்றும் முன்புற வேலி என்பன பழுதுபார்க்கப்பட்டன. • உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. • விருந்தினர்கள் வரவேற்பு, விருந்தினர்களுக்கான போக்குவரத்து வசதிகள், கலாச்சார அம்சங்கள் மற்றும் விருந்தினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு உணவு வழங்குதல் புகைப்பட இலக்கம் 53 - 54		பூங்காவிற்கு 'Agro tech 2024' கண்காட்சியைபார்வையிட வருகைதந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகள்
புதிதாக மேம்படுத்திய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்கான நிறுவன மற்றும் ஆராய்ச்சி கள வசதிகளை விருத்தி செய்தல்	• ஆராய்ச்சிக் களங்களுக்கான நுழைவுப் பாதைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கள காட்சி பலகைகள் தயாரிக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. • பிரதான கட்டிடத்தின் முன்பகுதியின் தோற்றத்தை மேம்படுத்தி கழிப்பறை வசதிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. • தொழில்நுட்பத் தகவல்களை பரப்புவதற்காக ஒரு அலகு அமைக்கப்பட்டுள்ளதுடன் அலுவலக வளாகமும் அமைக்கப்பட்டுள்ளது.	தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், அங்குனுகொலபெலஸ்ஸ	
உலக உணவு ஸ்தாபனத்தினால் (FAO) நடாத்தப்பட்ட 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டின் பிரதிநிதிகளின் சுற்றுப்பயணத்திற்கு இணையாக முன்மொழியப்பட்ட கள நாள் நிகழ்ச்சி –(22, பெப்ரவரி 2024 அன்று பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவில்)	"Agri tech 2024" கண்காட்சியுடன் இணைந்து பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. • 50 கண்காட்சிச் சாவடிகள் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. • வரவேற்பு நடவடிக்கைகள், பொதுத் அறிவித்தல் தொகுதிகளை வாடகைக்கும் பெறல், கலாச்சார நிகழ்சசிகளை நடத்துதல். • விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கழிவுகளை அகற்றுதல் மற்றும் நடமாடும் கழிப்பறைகள் மற்றும் குடிநீர் தொட்டிகள் நிறுவுதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. புகைப்பட இலக்கம் 55	பட்டஅத்த	Agri-Tech 2024 கண்காட்சி மூலம் அறிவைப் பெற்றுக்கொண்ட அனைவரும்
உலக உணவு ஸ்தாபனத்தினால் (FAO) நடாத்தப்பட்ட 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டிற்கு உணவுப் பயிர்களைக் கொண்டு நில அலங்காரத்தை மேற்கொண்டு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை தயார் செய்தல்.	கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற 37வது ஆசிய பசுபிக் உச்சி மாநாட்டிற்கான கண்கவர் அமைப்பை உருவாக்க பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. • அலங்காரத்திற்காக காய்கறிச் செடிகளை தயார் செய்தல், அசையும் தாவர அடுக்கு அமைத்தல், நாற்று அடுக்கின் பக்க சுவர்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டுதல்	கொழும்பு ஹில்டன் ஹோட்டல்	Agri-Tech 2024 கண்காட்சி மூலம் அறிவைப் பெற்றுக்கொண்ட அனைவரும்

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் அதன் கணக்காய்வு செய்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

02. கமநல அபிவிருத்தித் திணைக்களம்

2.1. திணைக்களம் பற்றிய சிறிய அறிமுகம்

இலங்கையின் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில் 1957 ஒக்டோபர் 01 ஆந் திகதி அப்போது இருந்த உணவுத் திணைக்களத்தைக் கலைத்து, கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வயற் காணிச் சட்டத்தின் மூலம் பலப்படுத்தப்பட்ட இத்திணைக்களம் தற்போது 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

2.2. தொலைநோக்கு

இலங்கையின் விவசாய சமூகத்தினதும் மற்றும் அனைத்து விவசாய நிலங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி.

2.3. செயற்பணி

இலங்கையின் விவசாய சமுதாயத்தின் நிலைபேறான அபிவிருத்தியிலும் அனைத்து விவசாய நிலங்களின் செழுமையான அனுகூலங்கள் மற்றும் உச்ச உற்பத்தித்திறன் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் நிறுவன, ஒத்துழைப்பு, சட்ட மற்றும் முகாமைத்துவ சேவைகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தி, காலத்திற்கு ஏற்றவாறு பேணி வருதல்.

2.4. நோக்கங்கள்

- அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் விவசாயக் காணிகளைப் பயன்படுத்துவதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்தல்.
- விவசாயக் காணி உரிமையாளர்கள், விவசாயக் காணி உரிமையுள்ள விவசாயிகள் மற்றும் ஆட்சியுரிமைகள் கொண்டவர்கள்/ குத்தகை விவசாயிகள் ஆகியோரின் விவசாய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் விவசாய நிலங்களை முகாமைத்துவம் செய்தல்.
- விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாய அமைப்புக்களைப் பதிவு செய்தல் மற்றும் பேணி வருவது தொடர்பான கட்டளைகளை உருவாக்குதல் மற்றும் அந்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல். கமநல அபிவிருத்திச் சபைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்ற நிறுவன அபிவிருத்தி நடவடிக்கைகள்.
- நீர் முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவம்.

2.5. பணிகள்

- நாடு முழுவதும் உள்ள அனைத்து கமநல அபிவிருத்தி சபை அதிகாரப் பிரதேசங்களுடன் தொடர்புடையதாக விவசாயக் காணிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய விவசாயக் காணிப் பெயர்ப் பட்டியல்கள் மற்றும் குத்தகைமுறை விவசாயிகளின் பட்டியல்கள் என்பவற்றைத் தயாரித்து அவற்றை திருத்தங்களைப் பேணி வருதல் மற்றும் அனைத்து விவசாய நிலங்களின் முகாமைத்துவம். தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- கமநல விசாரணை சபைகள் மற்றும் மீளாய்வுக் குழுக்களின் செயற்பாடுகளை வழிநடத்தல், அவற்றின் மூலம் விவசாய நிலங்கள் தொடர்பான குத்தகைமுறை விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் ஏனைய விவசாய சர்ச்சைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- சிறு நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் நீர் ஆதாரங்களின் வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்பான விதிமுறைகளை செயல்படுத்துதல் மற்றும் அனைத்து சிறிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்ககளையும் மறுசீரமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.
- கமநல அபிவிருத்தி சட்டத்தை மீறி செயல்படும் தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அரசின் கொள்கைகள் மற்றும் விவசாயக் கொள்கைகளை செயல்படுத்துதல்.

- நிறுவன அபிவிருத்தியின் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள 25 கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்கள், 566 கமநல சேவை நிலையங்கள் மற்றும் 560 விவசாய வங்கிகளின் செயல்பாடுகள் என்பவற்றைப் பேணிவருவதன் மூலம் விவசாயிகளுக்கு சேவைகளை வினைத்திறனாகவும் முறையாகவும் வழங்குதல்.

2.6. நிறுவனத்தினால் அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

- இலக்கு 2 - பட்டினிக்கு முடிவுகட்டுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.
- இலக்கு 5 - பாலின சமத்துவத்தை அடைவது மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டல்.

2.7. நிதி முன்னேற்றம்

தொ/ இல	விபரம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1	மூலதன செலவுகள்	3,855.36	2,930.04	76%
2	மீண்டுவரும் செலவுகள்	11,116.47	10,864.44	98%

2.8. பௌதீக முன்னேற்றம்

- தலைமைக் காரியாலயம்மற்றும் மாவட்ட அலுவலகங்களைப் புதுப்பித்தல்

தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் சேவை பெறுவோரின் செயல்திறனை உயர்த்தும் நோக்கத்துடன், இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 20 மில். ரூபாய் ஒதுக்கீட்டின் கீழ் 9 மாவட்ட அலுவலகங்களில் 18 செயற்திட்டங்களின் புதுப்பித்தல் பணிகள் நிறைவடைந்துள்ளன. 31.12.2024 திகதி வரை செலவழிக்கப்பட்ட தொகை 19.23 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.

- தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வாகனங்களின் புதுப்பித்தல்

தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள வாகனங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பழுதுபார்க்கும் பொருட்டு இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த தொகை 67 மில். ரூபாய் ஆகும். 31.12.2024 திகதி வரை செலவழிக்கப்பட்ட தொகை 21.60 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 30% ஆகும்.

- தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பணியாற்றும் அதிகாரிகளின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 18 மில். ரூபாய் க்கான ஒதுக்கீட்டின் கீழ் தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 31.12.2024 திகதி வரை செலவழிக்கப்பட்ட தொகை 13.72 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 77% ஆகும்.

- பயிற்சி மற்றும் திறன் விருத்தி

தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பணியாற்றும் அதிகாரிகளின் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் செயற்திறனை மேம்ம்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக, இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 10 மில். ரூபாய்க்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 6 பயிற்சி நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 31.12.2024 திகதி வரை செலவழிக்கப்பட்ட தொகை 2.26 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 40% ஆகும்.

- கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைதிருத்தியமைத்தல்

கமநல சேவை நிலையங்களில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் சேவை பெறுவோரின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடனும் உரக் களஞ்சியங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்குடனும், இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 600 மில். ரூபாய்

ஒதுக்கீட்டுத் தொகையைப் பயன்படுத்தி தலைமைக் காரியாலயம், கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்கள் என்பவற்றில் 203 திருத்தியமைக்கும் பணிகள் செயற்படுத்தப்பட்டு, 195 திட்டங்களில் பணிகள் நிறைவடைந்துள்ளன. 31.12.2024 திகதி வரை செலவழிக்கப்பட்ட தொகை 523.04 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 82% ஆகும்.

- இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் புதுப்பித்தல் மற்றும் கொள்வனவு செய்தல்

பயன்பாட்டிற்கு உகந்த விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் புதிய விவசாய இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் என்பவற்றுக்காக இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 76.50 மில். ரூபாய் பெறுகையைப் பயன்படுத்தி விவசாய இயந்திரங்களைப் திருத்தியமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் புதிதாகக் கொள்வனவு செய்யும் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டவில்லை 31.12.2024 திகதி வரை செலவழிக்கப்பட்ட தொகை 13.57 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 79% ஆகும்.

- நிலையங்களின் புதிய நிர்மாணப் பணிகள்

கமநல சேவை நிலையங்களில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் சேவை பெறுவோரின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில், இந்தச் செலவுத் தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 10 மில். ரூபாய் ஆகும். இதன் கீழ் பொலன்னறுவை மாவட்ட அலுவலகத்தின் புதிய கட்டுமானத்திற்கான மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக்கடவை கமநல சேவை நிலையத்தின் நிர்மாணப் பணி மேற்கொள்ளப்பட்டது. 31.12.2024 திகதி வரை செலவழிக்கப்பட்ட தொகை 4.65 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 90% ஆகும்.

சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைத்தல் மற்றும் தரிசு நிலங்களில் மீண்டும் பயிரிடல் (காணி மற்றும் காணி அபிவிருத்தி)

செயற்பாடு	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம்
குறை பாவனை மற்றும் பயன்படுத்தப்படாத விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்	12.50	10.21	இதன் கீழ் நெல் வயல்களில் மேலதிக உணவுப் பயிர் வகைகளைப் பயிரிடல். இதன் போது, மன்னார்/ திருகோணமலை/ அனுராதபுரம்/ பொலன்னறுவை/ இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 600 ஏக்கர் நெல் வயல்களில் ஏனைய களப் பயிர்களாக பாசிப்பயறு, கௌப்பி, உளுந்து மற்றும் நிலக்கடலை என்பன பயிரிடப்பட்டன.
வீட்டுத் தோட்டச் செய்கை ஊக்குவிப்பு	188.00	118.60	ஒரு இலட்சம் வர்த்தக ரீதியான வீட்டுத் தோட்டங்கள் உருவாக்க திட்டமிடப்பட்டது. தற்போது 77,137 வர்த்தக ரீதியான வீட்டுத் தோட்டங்கள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம்	76.00	57.51	10 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுள்ளன. இதில் 5 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன; மிகுதியாவுள்ள செயற்திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன
செயற்பாட்டில் உள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறிய புனரமைப்பு வேலைகள் (Kick Start)	345.00	335.51	950 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுள்ளன. இதில் 939 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன;

செயற்பாடு	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம்
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைத்தல் மற்றும் விஷேட வெள்ள சேத நிவாரணத் திட்டம்	228.50	217.67	144 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுள்ளன. இதில் 136 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன; மிகுதியாவுள்ள 7 செயற்திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன
சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் அணைகளை மறுசீரமைத்தல்.	915.00	838.28	346 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுள்ளன. இதில் 342 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன; மிகுதியாவுள்ள செயற்திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.
தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய நீர்ப்பாசன குளங்களுக்கான பராமரிப்பு நிதியம் ஒன்றை நிறுவுதல்.	20.00	16.30	தற்போது கிளிநொச்சி / மட்டக்களப்பு / திருகோணமலை / புத்தளம் / வவுனியா / அம்பாந்தோட்டை / குருநாகல் / மொனராகலை / அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 167 குளங்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டு பராமரிப்பு நிதி நிறுவப்பட்டுள்ளது.
விவசாய வீதிகளின் திருத்த வேலை	175.00	162.75	92 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. அனைத்து திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
பயிர்ச் செய்கைக் கிணறுகளின் திருத்தவேலை	15.50	13.54	62 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. இவற்றில் 54 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
சீரமைவான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	335.00	67.05	அனைத்து செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. 31.12.2024 வரை நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்களாக 22.20 மில். ரூபாய் எனவும் பொறுப்புகளாக. 140.86 மில். ரூபாய் என வும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
டிஜிட்டல் விவசாயக் காணிப் பதிவேடுகளைத் தயாரித்தல்	30.00	25.06	அளவீடு செய்யப்பட்ட 130,247 நெல் வயல்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது.
நீர் முகாமைத்துவ செயற்பாடுகள்	87.35	62.28	உலர் வலயத்தில் மாதிரி குளச் செயற்திட்டம், விவசாய -வானிலைத் தரவுகள் மற்றும் மழை வீல்ச்சித் தரவுகள் என்பவற்றைச் சேகரித்தல் மற்றும் வயற் கண்காணிப்பாளர் களுக்கான பயிற்சி வழங்கல் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான பெறுப்புச் செயற்திட்டங்கள்.
பராசூட் செய்கையை ஊக்குவித்தல்	236.00	63.12	மாவட்டங்களுக்கு 3,980,977 பாரஷூட் தட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 31.12.2024 ஆம் திகதி வரை நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்களாக 176.12 மில். ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செயற்பாடு	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம்
நறுமலர் செய்கை செயற்திட்டம் - நுவரெலியா மாவட்டம்	30.00	29.92	40 பசுமை இல்லங்களுக்கான ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன, மேலும் 75% பசுமை இல்ல நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
பருவகால பயிர்ச் செய்கை பாதுகாப்பு வேலிகளை அமைத்தல்	25.00	24.55	வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
2023 ஆண்டிற்கான செலுத்தவேண்டிய விலைப்பட்டியல் களைத் தீர்த்தல்	131.50	125.30	நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்கள் செலுத்தப்பட்டுள்ளன.
2023 ஆண்டிற்கான பொறுப்புச் செயற்திட்டங்கள்	65.00	57.19	9 விவசாய பாதைகள், 6 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் 5 கைவிடப்பட்ட குளங்கள் என்பவற்றின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
செயற்திட்ட உதவி செலவுகள்	56.00	42.22	
மீதமுள்ள பெறுகைகள்	28.65	0.00	
மொத்தம்	3,000.00	2,267.06	31.12.2024 வரை நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்களாக 219.06 மில். ரூபாய் எனவும் 2025 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகளாக 170.53 மில். ரூபாய் உள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2.9. இறுதி இலக்குகளை அடைய முடியாததற்கான காரணங்கள்

2024 ஆம் ஆண்டில் அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக திறைசேரிச் செயலாளரால் வெளியிடப்பட்ட 2024.01.10 தேதியிட்ட, 01/2024 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டமை.

ஆண்டு முழுவதும் நிலவிய சீரற்ற காலநிலை நிலைமைகள் காரணமாக நிர்மாணப் பணிகளில் தாமதங்கள் ஏற்பட்டன.

புகைப்பட எண்கள் 56 - 58

குறிப்பு : இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

03. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

3.1 தொலைநோக்கு

பலசரக்குப் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான உற்பத்திகளில் சிறந்து விளங்குதல்.

3.2 செயற்பணி

அதிகளவில் அந்நியச் செலாவனியை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஏற்றுமதி விவசாயப் பயிர் துறையில் ஈடுபட்டுள்ள சகல பங்குதாரர்களும் நிலையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் முன்னோக்கிச் சென்று, சூழலை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஏற்றுமதி விவசாய உற்பத்திகளின் அளவிலும் தரத்திலும் அபிவிருத்தியை மேற்கொள்வதன் நிமித்தம் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்.

3.3 நோக்கம்

ஏற்றுமதி அளவினை அதிகரித்தல் மற்றும் உற்பத்தியின் தரத்தினை உயர்த்துவதன் ஊடாக உச்ச அளவிலான அந்நியச் செலாவனியை உழைப்பதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் அலகினை அபிவிருத்தி செய்தல்.

3.4 பணிகள்

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் ஒழுங்கமைப்பு, விவசாய மேம்பாடு, மற்றும் செயன்முறை.
- பயிர் மேம்பாடு, பயிர் வளர்ப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடைக்குப் பின்னரான அனுகுமுறை மற்றும் சமூக பொருளாதாரம் என்பவற்றின் மீது பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- தரமான நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் வினியோகித்தல்.
- பயிர் உற்பத்தி, உற்பத்தித் திறன் மேம்பாடு, மற்றும் தர மேம்பாடு என்பவற்றின் மீது ஏற்றுமதி விவசாய பயிர் உதவி திட்டத்தை அமுலாக்கல்.
- பயிர் பாதுகாப்பு ஆலோசனை சேவை வழங்குதல்.
- ஒருங்கிணைந்த பீடை முகாமை மேம்படுத்துதல்.
- ஒருங்கிணைந்த தாவர போசனை முகாமை.
- சேதனப் பயிர்ச் செய்கையை பண்ணைகளை மேம்படுத்துதல்.
- சந்தைப்படுத்தல், தரநிர்ணயம் மற்றும் விலை போன்றவற்றில் தரவுகள் வெளிப்படுத்துதல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்திகள் மற்றும் நடுகைப் பொருட்கள் போன்றவற்றினை இறக்குமதி செய்வதில் நின்றும் கட்டுப்பாடு விதித்தல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர்களில் உற்பத்தி செயன்முறை மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் ஏனைய உற்பத்தியாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- பெருந்தோட்டத் துறைக்கு ஏற்றுமதி விவசாய பயிர்களில் மேம்பாட்டிற்காக ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மத்தியில் உறுதியான இணைப்பை ஏற்படுத்துதல்.
- *1992* ஆம் ஆண்டின் *46* ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் தொடர்பான கொள்கை விடயங்களில் ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஆலோசணைகள் வழங்குதல்.
- தொழில்நுட்ப மாதிரித் தோட்டங்களை பராமரித்தல்

3.5 நிறுவனத்தினால் அடைந்துகொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

- *2.4.1.1.* பயனுறுதிமிக்க மற்றும் நிலைபேறான விவசாயத் துறையின் கீழ் ஏற்றுமதி விவசாய பயிர்களால் மூடப்பட்ட நிலப்பரப்பின் அளவு

- 2.5.1.1. நடுத்தர கால அல்லது நீண்ட கால பாதுகாப்பு வசதிகள் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ள உணவு மற்றும் விவசாயத் துறையுடன் தொடர்பான தாவர மற்றும் விலங்கு மரபணு வளங்களின் எண்ணிக்கை
- 9.5.1.1. ஏற்றுமதி விவசாயத் துறைக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகள் - மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக
- 9.5.2.1. புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முன்னேறும் ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை
- 17.11.1.1. வெளிநாட்டு சந்தைகளுக்கான உள்நாட்டு பங்களிப்பில் விவசாயத் துறையில் ஏற்றுமதி விவசாயப் பிரிவின் பங்கு

3.3. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன் னேற் றம்%
1	மூலதன செலவுகள்	517.00	470.71	91
2	மீண்டுவரும் செலவுகள்	1,036.49	932.61	90
	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்			
1	ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தித் திட்டம்	400.00	369.93	93
2	ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய், பீடைக் கட்டுப்பாட்டு செயற்திட்டம்	18.00	13.173	73
3	ஏனையவை (2001, 2104, 2105, 2506, 2002, 2003, 2102, 2103 மற்றும் 2401 ஆகிய செலவுத் தலைப்புகளுக்கு)	99.00	87.607	89

3.4. பௌதீக முன்னேற்றம்

திணைக்களத்துடன் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டிற்கு 517.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஒதுக்கீட்டில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 470.72 மில். ரூபாய் நிதிச் செலவை திணைக்களம் அடைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் கண்டி, நுவரெலியா, பதுளை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, அம்பாந்தோட்டை, மாத்தளை, மாத்தறை, பொலன்னறுவை, அம்பாறை, அனுராதபுரம், இரத்தினபுரி, மொனராகல, கேகாலை, காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரதேசங்களில் செயல்படுத்தப்பட்டதுடன் மொத்தமாக, இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் 354,709 பயனாளிகள் தொடர்புபட்டுள்ளனர்.

திணைக்களத்துடன் தொடர்புடைய அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தனித்தனியான ஒதுக்கீடு, நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு:

- ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்முன்னேற்றம்

நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்	ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம்
01. ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்			
1.1 ஏற்றுமதி விவசாயப் பயிர் புதிய பயிர்ச் செய்கைஊக்குவிப்பு திட்டம்	104.30	95.64	மிளகு 444.03 ஹெக்டேர், கோகோ 109.93 ஹெக்டேர், கிராம்பு 45.30 ஹெக்டேர், ஜாதிக்காய் 48.12 ஹெக்டேர், சிற்றநெல்லா 2.0 ஹெக்டேர், லெமன்கிராஸ் 0.2 ஹெக்டேர், குடம்புளி 1.40 ஹெக்டேர், அரபிகா கோப்பி 396.35 ஹெக்டேர், ரோபஸ்டா காபி 58.05 ஹெக்டேர், ஏலக்காய் 66.71 ஹெக்டேர், வெணிலா 35.4 ஹெக்டேர், மஞ்சள்

நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்	ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம்
			56.23 ஹெக்டேர் மற்றும் இஞ்சி 57.85 ஹெக்டேர் என்பன செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
			(மொத்தம் 1321.59 ஹெக்டேர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.)
1.1 ஏற்றுமதி விவசாயப் பயிர் புதிய பயிர்ச் செய்கைஊக்குவிப்பு திட்டம்	104.30	95.64	மிளகு 444.03 ஹெக்டேர், கோகோ 109.93 ஹெக்டேர், கிராம்பு 45.30 ஹெக்டேர், சாதிக்காய் 48.12 ஹெக்டேர், சிற்றநெல்லா 2.0 ஹெக்டேர், லெமன்கிராஸ் 0.2 ஹெக்டேர், குடம்புளி 1.40 ஹெக்டேர், அரபிகா கோப்பி 396.35 ஹெக்டேர், ரோபஸ்டா காபி 58.05 ஹெக்டேர், ஏலக்காய் 66.71 ஹெக்டேர், வெணிலா 35.4 ஹெக்டேர், மஞ்சள் 56.23 ஹெக்டேர் மற்றும் இஞ்சி 57.85 ஹெக்டேர் என்பன செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
			(மொத்தம் 899,775 செடிகள் விநியோகம் செய்யப்பட்டன.)
1.3 ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்புத் திட்டம்	4.39		இல்லை
1.4 பாக்கு ஊக்குவிப்புத் திட்டம்	41.60	46.20	1,532,525 பாக்குக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன
02. ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்			
2.1 விதை மற்றும் நடுகைப் பொருட்கள் பெற்றுக் கொள்ளல்	1.00	0.89	136,500 பாக்கு மரக்கன்றுகளும், 12,390 ஜாதிக்காய் மரக்கன்றுகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
			18.75 கிலோ கோப்பி விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
2.2 தாவர உற்பத்திக்கான உள்ளீடுகளை கொள்வனவு செய்தல்.	6.00	5.92	5x8 அங்குல பைகள் 900,000 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 275 (கியூப்) வளர்ப்பு ஊடகம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
2.3 வலை இல்லங்கள், நீர் வழங்கல் மற்றும் இதர வசதிகளை விருத்தி செய்தல்	3.00	1.14	-
			கஸ்னாவ மத்திய நாற்று நிலையத்தில் கிணறு ஒன்றும் மித்தெனிய ஏற்றுமதி விவசாய பயிர் பூங்காவில் நிரப்பு கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.
2.4 பண்ணை நில முகாமைத்துவத்துக்குத் தேவையான உள்ளீடுகளை கொள்வனவு செய்தல்.	2.50	0.22	161 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
03. நில பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்			
3.1 நில பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்	23.72	7.66	மிளகு 467.72 ஹெக்டேர், கொக்கோ 11.6 ஹெக்டேர், கிராம்பு 4.8 ஹெக்டேர், ஜாதிக்காய் 3.4 ஹெக்டேர், அரபிகா கோப்பி 9.10 ஹெக்டேர், ரோபஸ்டா கோப்பி 4.5 ஹெக்டேர், வெணிலா 2.5 ஹெக்டேர் என்பன பயிரிடப்பட்டுள்ளன.
			மிளகு 2636.14 ஹெக்டேர், கோகோ 200.9 ஹெக்டேர், அரபிகா காபி 600.11 ஹெக்டேர், ரோபஸ்டா காபி 60.42 ஹெக்டேர், ஜாதிக்காய் 59.24 ஹெக்டேர், கிராம்பு 43.49 ஹெக்டேர், ஏனையவை 2.00 ஹெக்டேர் பயிற்சித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. (மொத்தம் 4,105.91 ஹெக்டேர் பயிரிடப்பட்டுள்ளது.)
3.2 பீடை மற்றும் பயிர் சேதம் தடுப்பு சாதனங்கள் /தொகுதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம்	3.00	0.58	13 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்	ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம்
3.3 நுண்ணீர்ப் பாசனத் தொகுதிகளை நிறுவுவதற்கான நிகழ்ச்சித் திட்டம்	3.00	1.33	18 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
3.4 தாவரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்	18.00	6.86	பூஞ்சைக் கொல்லிகள் 1650 கிலோ கிராம், பீடைக்கொல்லிகள் லீட்டர், 20 திரவ தெளிப்பான்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
04. சிறந்த விவசாய நடைமுறைகளை செயல்படுத்துதல் / சான்றளித்தல்			
4.1 சேதன மற்றும் விவசாய கைத்தொழில் நடைமுறைகள் (GAP) விவசாய தர சான்றளிக்கப்பட்ட பயிர்ச் செய்கைகளை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்	0.30	0.02	03 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 03 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
4.2 பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி விவசாய பயிர்களின் தரத்தை மேம்படுத்துதல்	20.00	30.30	144 அலகுகள் மற்றும் 02 நிலையங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
4.3 விற்பனை ஊக்குவிப்பு திட்டம்	20.00	11.72	ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது
4.4 சிறந்த விவசாய நடைமுறைகளை செயற்படுத்தல் /சான்றளிப்பு	1.00	0	02 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
4.5 பங்குதாரர்களை பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம்			745 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4.6. தொழில்முனைவு மற்றும் வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2.50	0.11	02 விழிப்புணர்வுப் பட்டறைகள் நடத்தப்பட்டன
05. ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு			
5.0 ஊடகம் மற்றும் கண்காட்சி என்பவற்றுக்கூடக ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு	20.00	20.52	51 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் 111 வானொலி நிகழ்ச்சிகளும் ஒளி/ஒலிபரப்பப்பட்டுள்ளன. ஏனைய 45 நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 08 கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 500 துண்டு பிரசுரங்கள், 197 சுவரொட்டிகள், பேனர்கள் அச்சிடப்பட்டன. 03 விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டுள்ளன.
06. ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் பங்குதாரர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்			
6.1. ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் பங்குதாரர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்	5.00	3.74	2,230 விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 234 கள நாள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. (56,161 பயனாளிகள் பங்கேற்றனர்).
6.2. சே வை பதிப்பு பயிற்சி நிகழ்ச்சிகள்	2.00	1.14	அதிகாரிகளுக்கான 18 பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் 16 ஏனைய பயிற்சிகள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கான 01 பயிற்சி நிகழ்ச்சி, 03 கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.
6.3 டிஜிட்டல் விரிவாக்க நிகழ்ச்சித் திட்டங்களை எளிதாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்	1.00	0	21 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
6.4 கறுவா செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்	63.16	85.27	458.53 ஹெக்டேருக்கான கறுவா நாற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

- ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மற்றும் ஏற்றுமதி விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய்/ பீடைக் கட்டுப்பட்டுத் திட்டத்தின் (2001, 2104, 2105, 2506, 2002, 2003, 2102, 2103 மற்றும் 2401 செலவுத் தலைப்புடன் தொடர்பான) 31.12.2024 திகதிக்கான முன்னேற்றம்

நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்	ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	பௌதீக முன்னேற்றம்
இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல்	4.00	1.21	11 பிரதிபண்ணும் இயந்திரங்கள், 11 கணினிகள் மற்றும் 05 UPS கள், 02 மடிக்கணினிகள், 01 கண்ணாடி வெட்டும் கறுவு, 02 நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.
	1.00	0.82	05 பழுதுபார்க்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
வாகனங்களைப் பழுதுபார்த்தல்	9.00	6.64	57 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளதுடன் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
	3.00	4.72	34 வாகன பழுதுபார்க்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல்	4.00	3.86	01 UPS, 01 சுடுநீர் குழாய்கள், 01 நீர் சுத்திகரிப்பு இயந்திரம், 15 மின்விசிறிகள், 04 தொலைநகல் இயந்திரங்கள், 02 டிஜிட்டல் திரைகள், 04 அச்சிடும் இயந்திரங்கள், 03 பிரதியெடுக்கும் இயந்திரங்கள், 01 ஜெனரேட்டர் பேட்டரிகள், 01 PA தொகுதிகள், 02 திரைகள், 01 தராசு, 01 எரிவாயு அடுப்பு, 02 மடிக்கணினிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
	1.00	0.66	10 கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல்	3.50	3.13	06 UPS, 01 அலுவலக கோப்பு அலமாரி, 02 நிறைவேற்று மேசைகள், 01 நிறைவேற்று நாற்காலிகள் மற்றும் 02 விருந்தினர் நாற்காலிகள், 02 மொனிட்டர்கள், 05 மடிக்கணினிகள், 07 டெஸ்க்டாப் கணினிகள் மற்றும் 01 வன் தட்டுகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
	1.50	1.50	18 கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்	1.00	0.48	669 அதிகாரிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.
ஏற்றுமதி விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய்/ பீடைக் கட்டுப்பட்டுத் செயற்திட்டம்			
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டம்	18.00	13.17	ஆராய்ச்சிகளுக்குத் தேவையான 49 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

- நிர்மாணப் பணிகள் மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்பான 2001, 2104, 2105 மற்றும் 2506 செலவுத் தலைப்பின் கீழ் 70 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதுடன் 100% பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 59 - 60

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

04. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய அமைப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1137/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைய 2000 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 ஆம் திகதிக்குரிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2093/26 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த நிறுவனத்தின் பெயர் தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனமாக (NIPHM) மாற்றப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டளவில் விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை விரைவில் அழுகிப் பழுதடையக்கூடிய பயிர்களில் 5% வரையும் இலகுவில் பழுதடையாத பயிர்களில் 25% வரையும் குறைத்தல் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய தொழிற்துறைகளை உருவாக்குதல்/ அபிவிருத்தி செய்தல் என்பன நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாகக் காணப்படுவதுடன் அவற்றுக்குத் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், தொழில்நுட்ப பரப்பல் நடவடிக்கைகள், தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் மற்றும் ஆய்வக சேவைகளை மேற்கொள்ளல் என்பன இந்நிறுவனத்தின் பிரதான பணிகள் ஆகும்.

4.1. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம்%
1	மூலதன செலவுகள்	35.00	25.30	72
2	மீண்டுவரும் செலவுகள்	171.38	139.95	82
	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	32.70	26.45	81

4.2. பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டம்	நோக்கம்	முன்னேற்றம்				நடைமுறைப்படுத் தப்பட்ட மாவட்டம்
		நிதி இலக்கு	நிதி முன்னேற்றம்	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	
செலவுத் தலைப்பு-118-02-03-083-2506 இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின்முன்னேற்றம்						
1. கிராமப்புறங்களில் வீடுகளில் அரிசி பதப்படுத்தும் தொழிற்துறையை உருவாக்குதல்	விவசாயி தனது நெல் அறுவடையை நேரடியாக விற்பனை செய்யாமல், அதற்கு பெறுமது சேர்க்கும் செயல்முறை மூலம் அரிசியாக மாற்றி சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் தனது பொருளாதாரத்தை வலுப்படுத்துதல்	4.96 மில். ரூபாய்	4.51 மில். ரூபாய்	83 அரிசி பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல்.	83 பயனாளிகளுக்காக அரிசி பதப்படுத்தும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.	அனுராதபுரம், குருநாகல், புத்தளம், அம்பாறை, கண்டி, நுவரெலியா மற்றும் முல்லைத்தீவு
2. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு அரிசி, சோளம் மற்றும் தானிய வர்க்கங்களை களஞ்சியப்படுத்துவதற்கு வீட்டு களஞ்சிய வசதிகளை மேம்படுத்துதல்.	மொத்த தானிய அறுவடைக்குப் பிந்தைய இழப்பு 10-12% வரை இருக்கும், இதில் 6% வரை களஞ்சியப்படுத்தலின் போது ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல்.	5.15 மில். ரூபாய்	4.84 மில். ரூபாய்	105 வீட்டு களஞ்சிய வசதிகளை விருத்தி செய்தல்	105 வீட்டு களஞ்சிய வசதிகள் விருத்தி செய்யப்பட்டன.	அனுராதபுரம், அம்பாறை, முல்லைத்தீவு, கண்டி, குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை
3. கிராமிய மட்டத்தில் வாசனைப் பொருட்களைப் பதப்படுத்தும் நுண் தொழில்முனைவோரை அறிமுகம் செய்தல்.	சிறு/நடுத்தர அளவிலான வாசனைப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்நுட்பங்களைப் பரப்புவதன் மூலம் கிராமிய மடத்திலான வாசனைப் பொருட்களைப் பதப்படுத்தும் சிறு தொழில்முனைவோரை உருவாக்குதல்.	1.74 மில். ரூபாய்	1.33 மில். ரூபாய்	14 வாசனைப் பொருட்களை பதப்படுத்தும் அலகுகள்	14 வாசனைப் பொருட்களை பதப்படுத்தும் அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன.	அனுராதபுரம், குருநாகல், அம்பாறை, கண்டி, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் முல்லைத்தீவு
4. பழ விநியோகச் சங்கிலியில் பங்குதாரர்களைப் வலுவூட்டுவதனை நோக்காகக் கொண்டு பழப் பதப்படுத்தும் மையமொன்றை நிறுவுதல்	ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பழக் கூழ் பதனிடும் நிலையத்தை அமைத்தல் மற்றும் அதன் மூலம் அந்தப் பிரதேசத்தில் பயிர் செய்யப்படும் மா, புளியம் பழம், விளாம்பழம், கொடித்தொடை போன்ற பழவகை பயிர்களின் கூழ்களைத்	18.35 மில். ரூபாய்	13.34 மில். ரூபாய்		இந்த நிலையத்தின் மூலம் ஏற்கனவே பழக் கூழ் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	ஹம்பாந்தோட்டை

செயற்திட்டம்	நோக்கம்	முன்னேற்றம்				நடைமுறைப்படுத் தப்பட்ட மாவட்டம்
		நிதி இலக்கு	நிதி முன்னேற்றம்	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	
	தயாரித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை பிறப்பித்தல்.					
5. விவசாய விநியோக சங்கிலியின் பங்குதாரர்களை வலுப்படுத்தும் நோக்கில் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள சாத்தியப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட, அறுவடை-பிந்தைய பதப்படுத்தும் நிலையங்களை நிறுவுதல்.	ஒவ்வொரு பகுதியிலும் விளையும் பயிர்கள் மற்றும் அந்த பகுதிகளின் சந்தை வாய்ப்புகளை ஆய்வு செய்து புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல்.	2.50	2.23	7 பதனிடும் அலகுகள்	அறுவடைக்குப் பிந்தைய 8 பதப்படுத்தும் அலகுகள் நிறுவப்பட்டன. அதன் பிரகாரம், 3 பழப் பதப்படுத்தும் அலகுகள், 2 பழங்கள் மற்றும் காய்கறிகள் உலர்த்தும் அலகுகள், அரிசியைக்கொண்டு தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் ஒரு அலகு, வாசனைப் பொருட்களைக்கொண்ட தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் 2 அலகுகள் என்பன நாட்டின் 7 மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன.	ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், குருநாகல், மொனராகலை, கண்டி, நுவரெலியா, கம்பஹா, யாழ்ப்பாணம், அம்பாறை, புத்தளம்
மீண்டுவரும் செலவுகள் (செலவுத் தலைப்பு- 118-02-03-073-1509) இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்						
அறுவடை-பிந்தைய தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்துவதற்கான பயிற்சி திட்டங்கள்	முறையானதும் பொருத்தமானதுமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை களத்தில் பிரயோகிப்பதற்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் அதற்காக வழங்கல் மற்றும் பெறுமதி சங்கிலிப் பங்குதாரர்களுக்கு பயிற்சியளித்தல் தொழில்நுட்ப விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளல்			முறையானதும் பொருத்தமானதுமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களின் பயன்பாடு தொடர்பான 100 பயிற்சி நெறிகள் (வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சிகளாக)	160 வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 3470 பேர் (விவசாயிகள், பெண் விவசாயிகள், மற்றும் உழவர் அமைப்புகளின் உறுப்பினர்கள், சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாய பொருட்களை சேகரிப்பவர்கள், போக்குவரத்து துறையில் ஈடுபடுவோர் மற்றும் வியாபாரிகள்,	

செயற்றிட்டம்	நோக்கம்	முன்னேற்றம்				நடைமுறைப்படுத் தப்பட்ட மாவட்டம்
		நிதி இலக்கு	நிதி முன்னேற்றம்	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	
				நடாத்துவதன் மூலம் 2000 பயனாளிகளுக் குப் பயிற்சி அளித்தல் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத் துறைக்கு புதிய தொழில்முனை வோரை அறிமுகம் செய்தல்.	தொழில்முனைவோர், விவசாய தயாரிப்புகளை பதனிடுவோர், அரச, கூட்டுறவு, தனியார் மற்றும் அரசு சாரா நிறுவன விரிவாக்க அலுவலர்கள் எனும் வகையில்) முறையான அறுவடைக்கு பிந்தைய நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டணர். 15 புதிய தொழில்முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளனர்.	

புகைப்பட இலக்கம் 61 - 62

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்டஅதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

05. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI)

5.1. அறிமுகம்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI) 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டம் மூலம் நிறுவப்பட்ட விவசாய அமைச்சுடன் இணைக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும். கமநல நடவடிக்கைகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்பான சமூக பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும், இந்த ஆய்வுகளின் முடிவுகளை கொள்கை ரீதியான முடிவுகளை மேற்கொள்வதற்கு உதவும் வகையில் கொள்கை வகுப்பாளர்களுக்கு வழங்குவதும் இந்த நிறுவனத்தின் முதன்மைப் பணிகளாக அமைகின்றன. சமூகப் பொருளாதாரம் மற்றும் கிராமிய அபிவிருத்தியின் விவசாயம் தொடர்பான கூறுகளை ஆராயும் வகையில் அதிகாரப்பூர்வமாக அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம் இதுவாகும். 52 ஆண்டுகளுக்கும் மேலான தனது சேவை வரலாற்றில், இது அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த, ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உயர்தர தரவு மற்றும் தகவல்களை வழங்கும் முக்கியப் பணியை இது செய்து வந்துள்ளது. பட்டறைகளை ஏற்பாடு செய்வதன் மூலம் அனைத்து பங்குதாரர்களுடனும் ஆராய்ச்சிகளின் முடிவுகளை பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதும் இதன் ஏனைய செயல்பாடுகளில் ஒன்றாகும். விவசாயிகள், அதிகாரிகள் உள்ளிட்டவர்களின் திறமைகள் மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக பயிற்சி திட்டங்களை நடத்துவதும், புதிய கருத்துகள் மற்றும் தொழில்நுட்பங்களை பரப்புவதும் இந்நிறுவனத்தின் முக்கிய பணிகளாக உள்ளன. ஒவ்வொரு துறையுடனும் தொடர்பாக ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி திட்டங்கள் மூலம் மனநிலை மேம்பாடு, விவசாயிகள், அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய பங்குதாரர்களின் திறன்கள் மற்றும் அறிவுணர்வை என்பவற்றை மேம்படுத்துதல் என்பதுவும் இந்த நிறுவனத்தின் மற்றொரு பிரதான பணியாகும்.

5.2 தொலைநோக்கு

நிலைபேறான விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான அறிவை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் முன்னணி நிறுவனமாக திகழ்தல்.

5.3 செயற்பணி

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஊடாக விவசாய மற்றும் கிராமியத் துறைகளைப் பலப்படுத்துதல்.

5.3. நிறுவனத்தினால் அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்திஇலக்குகள்:

பிரதானமாக இலக்கு 02 காணப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக 01, 03, 05 மற்றும் 13 ஆம் இலக்குகளும் காணப்படுகின்றன.

5.4. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் %
1	மீண்டுவரும் செலவுகள்	251.70	223.70	89
2	மூலதன செலவுகள்	30.00	24.47	82
	வெளிப்புற நிதியுதவி பெறும் செயற்திட்டங்கள்			
1	விவசாயிகள் மற்றும் சேகரிப்பாளர்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் கீழ் மாம்பழ அறுவடை இழப்புகளை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வு (UoP)	1.00	0.72	72
2	இரட்டை இணையதளங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் (Govimina Agri Hub.lk & Govimina Agri Hub.Com (DevPro Guaranty Ltd)	1.09	0.70	64

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் %
3	தரமான விதை மற்றும் நடுகைப் பொருட்கள் உற்பத்திம், தர உத்தரவாதம் மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்பை வலிவூட்டல் தொடர்பான செயற்திட்டம் (FAO)	7.52	2.01	29
4	FRESH நோக்கங்கள் (International Food Policy Research Institute)	3.67	2.51	68
5	இலங்கையில் விவசாயப் உற்பத்திகளின் செலவுகள் மற்றும் பங்கிலாபம் (unique land use GmbH)	2.20	2.20	100

ஆராய்ச்சி கற்கைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளின் பட்டியல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் 5.5 மற்றும் 5.6 ஆகிய அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

5.5. ஆராய்ச்சிக் கற்கைகள்

தொ/ இல	செயற்திட்டம்	நிதி (மில். ரூபாய்)		பௌதீக (%)	
		இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்
1	இலங்கையில் நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்த விவசாய சுற்றுலாத் துறையைப் பயன்படுத்துதல்	1.20	1.29	100	75
2	புதிய விவசாய வணிகத்தை மேம்படுத்துதல்: நிலையான தொழில்முனைவுக்கான பயனுள்ள தலையீடுகளை வடிவமைத்தல்	1.68	1.75	100	75
3	இலங்கையின் நகர்ப்புற பாடசாலை மாணவர்களின் உணவு நுகர்வு முறைகள்: ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களுக்குக் காணப்படும் தடைகள், தாக்கங்கள் மற்றும் சாத்தியப்பாடுகள் பற்றிய ஆய்வு	1.10	1.15	100	75
4	மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழத்தின் பெறுமதிச் சங்கிலிகளில் விவசாயிகளுக்கும் சேகரிப்பாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் பற்றிய ஆய்வு	1.50	1.10	100	75
5	இலங்கையில் உள்ள விஷேட பொருளாதார மையங்களின் செயல்திறன் மற்றும் நிலைத்தன்மை பற்றிய ஆய்வு	2.09	1.50	55	50
6	உரங்களுக்கு அப்பால்: நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நிலையான போசணை முகாமைத்துவம் பற்றிய ஆய்வுகள்	1.52	1.31	100	75
7	இலங்கையில் நெல் விவசாயம் குறித்த காலநிலை மீள்திறன் கணிப்புகளுக்கு விவசாயிகளின் தழுவல் பற்றிய ஆய்வு	1.20	1.10	100	75
8	போசாக்குமிக்க உணவுப் பட்டியல்களுக்கான செலவுகள் மற்றும் தாங்கத்தகுதிறன்: போசணைத் தரப் பகுப்பாய்வு நிலை பகுப்பாய்வு மற்றும் பன்முக கொள்கை மற்றும்	-	-	100	75

தொ/ இல	செயற்திட்டம்	நிதி (மில். ரூபாய்)		பௌதீக (%)	
		இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்
	அமைப்பு மாற்றங்களை நோக்கிய படிகள் மூலம் முடிவெடுப்பதை வலுப்படுத்துதல் – விமர்சன ரீதியான அணுகல்				
9	தாழ்நாட்டு ஈர வலயத்தில் அரிசியை அடிப்படையாகக்கொண்ட சூழல் தொகுதியின் பங்கேற்பு பாதுகாப்பு மற்றும் உற்பத்தி என்பவற்றை வலுப்படுத்துதல் -	0.50	0.33	100	70
10	விவசாயத்தில் மண்புழு உரம் மற்றும் சேதன திரவ உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல்	0.80	0.74	100	100
11	பழம் மற்றும் காய்கறி விநியோகச் சங்கிலிகளில் பிளாஸ்டிக் பெட்டிகளின் பயன்பாடு: அதன் செயல்திறனை மதிப்பீடு செய்தல்	0.93	0.85	100	60
12	டிஜிட்டல் ஆற்றலைத் திறத்தல்: இலங்கையின் விவசாயத் துறையில் டிஜிட்டல் விவசாய விரிவாக்கத்தை மேம்படுத்துவதற்கான சவால்கள் மற்றும் உத்திகள்.	0.80	4.90	70	60

5. 6. 2024 ஆம் ஆண்டின் பயிற்சி நிகழ்ச்சிகள்

	பயிற்சி நிகழ்ச்சிகள்	நிதி (மில். ரூபாய்)		பௌதீக (%)	
		இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்
1	விவசாய தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சி (முதல் கட்டம்)	1.4	1.17	100	100
	விவசாய தொழில்முனைவோரை உருவாக்க இளைஞர் சமுதாயத்தை வலுவூட்டுவதற்கான மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சி				
2	வீட்டு அலகுகளில் உணவுப் பாதுகாப்பைப் பேணுதல்	1.4	1.59	100	100
3	விவசாய அமைப்புகளை வலுப்படுத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி	2.2	1.71	100	100

5.7. பௌதீக முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டில், விவசாயத் துறையின் பல்வேறு துறைகளை இலக்காகக் கொண்டு வரவுசெலவு ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 11 ஆராய்ச்சிக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஆய்வுகள் கிராமப்புற மேம்பாடு மற்றும் நிலையான விவசாயம் என்பவற்றில் விசேடம் கவனம் செலுத்தி பல தலைப்புகளின் கீழ் செயல்படுத்தப்பட்டன.

கிராமியத் துறை அபிவிருத்தி : கிராமப்புறப் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் துறைகளை ஆராய இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன – அவை, விவசாய சுற்றுலா மற்றும் புதிய விவசாய வணிகங்களின் முன்னேற்றம்; நிலையான தொழில்முனைவுக்கான பயனுள்ள தலையீடுகளை திட்டமிடல் என்பனவாகும். 2024 டிசம்பர் இறுதியளவில், ஆய்வுகள் 75% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு: இலங்கை உட்பட பல நாடுகள் எதிர்கொள்ளும் சவாலான உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை உறுதி செய்வது பொருளாதார

திட்டமிடலின் முதன்மை நோக்கமாகும். இந்தத் துறையை இலக்காகக் கொண்டு கொள்கைப் பரிந்துரைகளை வழங்க, 2024 இல் இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது நகர்ப்புற இளைஞர்களிடையே உணவு நுகர்வு முறைகள் மற்றும் நடத்தைகளை ஆராய்கிறது, இது எதிர்கால உணவு தேவையை வடிவமைப்பதில் முக்கியமான மக்கள்தொகை கணக்கெடுப்பாகக் கருத முடியும். இரண்டாவது ஆய்வு, இது நிலையான உணவுக் கொள்கைகளை உருவாக்குவதற்கு அவசியமான காரணிகளான அத்தியாவசிய போசனைமிக்க உணவுகளின் விலை மற்றும் தாங்கத்தகுதிறன் என்பவை தொடர்பாக மதிப்பிடுவதில் கவனம் செலுத்துகிறது, இந்த ஆய்வுகளின் பாதக முன்னேற்றம் 75% ஆகும்.

காலநிலைக்கு சீரமைவான விவசாயம்: காலநிலைக்கு சீரமைவான விவசாயத் தீர்வுகளை செயல்படுத்தும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டில் நான்கு ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் காலநிலை மாற்றம், நிலைபேறான போசணை முகாமைத்துவம் மற்றும் சூழல் நட்புத்தன்மை ஆகியவை தொடர்பாக ஆய்வு செய்வதில் கவனம் செலுத்தின.

1. இலங்கையில் நெற் செய்கையில் காலநிலை நிலைத்தன்மைகளை எதிர்கொள்ளும் ஆற்றலுக்காக மேற்கொள்ளும் முன்னறிவிப்புகளுக்கு விவசாயிகளின் தழுவல் பற்றிய ஆய்வு – விவசாயிகள் எவ்வாறு காலநிலை தொடர்பான மாற்றங்களை முன்கூட்டியே வானிலை முன்னறிவிப்புகளைப் பயன்படுத்தி மாற்றியமைக்கிறார்கள் என்பதை ஆராயும் இந்த ஆய்வு 75% நிறைவடைந்துள்ளது.

2. நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நிலையான போசணை முகாமைத்துவம் பற்றியஆய்வு – போசணை முகாமைத்துவத்துக்கான ஒரு விரிவான அணுகுமுறையான இந்த ஆய்வு சூழல் சமநிலையை ஊக்குவிக்கும் அதே வேளையில் அரிசி உற்பத்தித்திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அதன் பௌதீக முன்னேற்ற இலக்கில் 75% எட்டியுள்ளது.

3. தாழ்நாட்டு ஈர வலயத்தில் அரிசியைஅடிப்படையாகக்கொண்ட சூழல் தொகுதியின் பங்கேற்பு பாதுகாப்பு மற்றும் உற்பத்தி என்பவற்றை வலுப்படுத்துதல்- இந்த ஆய்வு நெல் சூழல் தொகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றில் கவனம் செலுத்தும் இந்த ஆய்வு 70% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

4. மண்புழு உரம் மற்றும் சேதன திரவ உரங்களின் உற்பத்தி மற்றும் விவசாயத்தில் அவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்தல்- இந்த ஆய்வு சேதன உரத்தின் பயன்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த ஆய்வு சூழலுக்கு உகந்த விவசாய நடைமுறைகளுக்கு மாறுவதற்கு உதவுகின்றது. 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதியில், அதன் பௌதீக இலக்குகளில் 100% ஐப் பூர்த்தி செய்துள்ளது.

பெறுமதிச் சங்கிலிகள் தொடர்பான ஆய்வுகள் மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழத்தின் பெறுமதிச் சங்கிலிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் ஒப்பந்த ஏற்பாடுகளை ஆராய்வதற்காகவும், இலங்கையில் உள்ள விஷேட பொருளாதார மையங்களின் செயல்திறன் மற்றும் நிலைபேறானதன்மையை ஆராய்வதற்காகவும் இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஆய்வுகள் முறையே 75% மற்றும் 50% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

சந்தை தகவல் சேகரிப்பு மற்றும் பரப்புதல் தொடர்பான செயற்திட்டம் - விவசாய சந்தை தகவல்களை சேகரித்தல், குறிப்பாக உணவு பொருட்களின் விலைகளை சேகரித்தல், வழங்குதல், மற்றும் பரப்புதல் இதன் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஆகும். இது இந்த காலப்பிரிவில் 100% பௌதீக முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது. வாராந்த உணவுப் பொருட்கள் தொடர்பான பிரசுரங்கள் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) மற்றும் மாதாந்த தகவல் பிரசுரங்கள் (ஆங்கிலம்) ஆகியன வெளியிடப்பட்டன.

பயிற்சி நிகழ்ச்சிகள்- 2024

2024 ஆம் ஆண்டில் நான்கு பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு, இதுவரை 43 அமர்வுகள் நிறைவடைந்துள்ளன. இதில் மன்னார், வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு தொடர்பான 19 ஒரு நாள் பயிற்சித் நிகழ்ச்சிகள் உள்ளடங்கியதுடன், 753 பயிற்சியாளர்கள் பங்குபற்றியுள்ளனர். விவசாய அமைப்புகளை வலுப்படுத்துவதை மையமாகக் கொண்ட 20 ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஹம்பாந்தோட்டை மற்றும் குருநாகலில் நடைபெற்றதுடன் இதில் 927 விவசாயிகள் கலந்து கொண்டனர். பொலன்னறுவை மாவட்டத்தில் தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வில் தொழில்களை ஆரம்பித்த 105 பயிற்சியாளர்கள் பங்குபற்றினர். மேலும், கம்பஹா, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய இடங்களில் விவசாய தொழில்முனைவோரை உருவாக்குவதற்கு இளைஞர் சமூகம் வலுவூட்டும் வகையில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் 73 இளைஞர் சமூகங்கள் இவற்றில் கலந்து கொண்டன.

2024 ஆம் ஆண்டுக்கான வெளியீடுகள்: இதுவரை நிறுவனம் இந்த ஆண்டில், மூன்று ஆராய்ச்சி அறிக்கைகளையும் ஒன்பது கொள்கை விளக்கங்களையும் வெளியிட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, *Sri Lanka Journal of Agrarian Studies* எனும் சஞ்சிகை (தொகுதி 20, இலக்கம் 1 மற்றும் 2) மற்றும் விவசாய நடவடிக்கைகள் கற்கைகள் (தொகுதி 14, இலக்கம் 1) ஆகியவை வெளியிடப்பட்டன. "கொவி ஜனதா" என்ற சிங்கள சஞ்சிகையின் இரண்டு இதழ்கள் (தொகுதி 26, எண். 1-2 மற்றும் 3), தேசிய புத்தரிசி திருவிழா - 2024க்கான சிறப்பு வெளியீடும் வெளியிடப்பட்டது. மனித-வனவிலங்கு மோதல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த சிங்கள சிறு நூல்கள் என்பன இந்த ஆண்டில் வெளியிடப்பட்டன. மேலும், நிறுவனம் 39 சிறு ஆவணப்படங்களை (சிங்களத்தில் 33 மற்றும் தமிழில் 6 உட்பட) தயாரித்து தனது அறிவுப் பரப்பல் முயற்சிகளை விரிவுபடுத்தியது. இலங்கையர்களுக்கு சமீபத்திய செய்திகள் மற்றும் விவசாய தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் வகையில் "Govmina" எனும் இணையத்தளம் தொடங்கப்பட்டது.

புகைப்பட இலக்கம் 63 - 65

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

06. நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB)

6.1. நியதிச்சட்டங்களுக்கு அமைவாக நிறுவனத்தின் பணிகள்

நெல் விவசாயிகளுக்கு விற்பனை விலையை உறுதி செய்வதற்காக உத்தரவாத விலையில் நெல்லைக் கொள்வனவு செய்தல், நெல் மற்றும் அரிசியின் சந்தை விலையை நிலையாக வைத்திருத்தல், இலங்கையர்களுக்கு உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் நெல் மற்றும் அரிசி இருப்புகளை பராமரித்தல்

6.2. நோக்கங்கள்:

நெல்லுக்கு சந்தையில் நிலையான உயர் விலையைப் பெற்றுக் கொடுத்தல், நியாயமான விலையில் அரிசி வழங்குதல், அரிசி இடித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை முறைப்படுத்துதல், களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை அதிகரித்தல், பயன்படுத்தப்படாத களஞ்சியங்களை புனர்நிர்மாணம் செய்தல், விஞ்ஞான ரீதியாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய களஞ்சியங்களை அமைத்தல், தாங்கிருப்புத் தொகுதிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பொருத்தமான களஞ்சியசாலைகளை உருவாக்குதல்.

6.3. தொலைநோக்கு:

நெல் மற்றும் அரிசியை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கான பிரதான அரச மத்தியஸ்தராக செயற்படுதல்.

6.4 செயற்பணி:

உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு சாராரும் திருப்திப்படும் விதத்தில் நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தும் செயற்பாடுகளை அறிவும், திறமையும் உள்ள பதவியணி ஒன்றினூடாக சிறப்பாக மேற்கொள்ளுதல்.

6.5 நோக்கங்கள்:

i.) சந்தையில் அரிசிக்கு நிலையான உயர் விலையைப் பெற்றுக் கொடுத்தல்
ii.) நியாயமான விலையில் அரிசி வழங்குதல்
iii.) அரிசி இடித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை முறைப்படுத்துதல்
iv.) களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை அதிகரித்தல்
v.) பயன்படுத்தப்படாத களஞ்சியங்களை புனர்நிர்மாணம் செய்தல்
vi.) அறிவியல் ரீதியாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய களஞ்சியங்களை அமைத்தல்
vii.) தாங்கிருப்புத் தொகுதிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பொருத்தமான களஞ்சியசாலைகளை உருவாக்குதல்.

6.6 பணிகள்

i.) நெல் விவசாயிகளுக்கு விற்பனை விலையை உறுதி செய்வதற்காக உத்தரவாத விலையில் நெல்லைக் கொள்வனவு செய்தல்
ii.) நெல் மற்றும் அரிசியின் சந்தை விலையை நிலையாக வைத்திருத்தல்
iii.) இலங்கையர்களுக்கு உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல்
iv.) நெல் மற்றும் அரிசி இருப்புகளை பராமரித்தல்

6.8. நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

- நிதி முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%)
மூலதனம் செலவுகள்	3.90	2.65	68
மீண்டுவரும் செலவுகள்	184.60	172.98	94
உரிமை பங்களிப்பு	2813.67	2813.67	100

- பௌதீக முன்னேற்றம்

44 களஞ்சியங்கள் திருத்தியமைக்கப்பட்டு உள்ளன.

2,655,000.00 ரூபாய் செலவிட்டு சிறிய அளவிலான திருத்தியமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

07. விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (AAIB)

7.1. நியதிச்சட்டங்களுக்கு அமைவாக நிறுவனம்

இலங்கையில், அவசர அனர்த்த நிலைமைகளில் உள்நாட்டு விவசாயத் துறை மற்றும் விவசாய சமூகம் ஆகியவற்றைப் பாதுகாத்தல் எனும் அரசின் மீதுள்ள கடமையை நிறைவேற்றும் நோக்கில் 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் கமத்தொழில் காப்புறுதிக்காகக் காணப்பட்ட ஒரே அரச காப்புறுதி நிறுவனமாக கமத்தொழில் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினால் கமத்தொழில் காப்புறுதிச் சபை, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை எனும் பெயரில் மீள நிறுவப்பட்டது.

7.2 பணிகள்

7.2.1 விவசாய இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்தல்

இடர்நேர்வுக முகாமைத்துவ வழிமுறையாக இலங்கையின் விவசாயத் துறைக்கு பயிர், கால்நடை மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய துறைகளின் கீழ் விவசாயக் காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல், அவசர அனர்த்தங்களின் போது விவசாயிகளின் பொருளாதாரத்தில் ஏற்படும் வீழ்ச்சிகளைக் குறைக்க உதவுதல் மற்றும் விவசாயக் கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் நிதிசார் ஸ்திரத்தன்மையை அதிகரித்தலுக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் (நெல் மற்றும் ஏனைய பயிர்கள்), கால்நடை வளக் காப்புறுதித் திட்டங்கள், ஆயுள் காப்புறுதித் திட்டங்கள், விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம், களஞ்சியக் காப்புறுதித் திட்டம் மற்றும் துவிச்சக்கர, நான்கு சக்கர டிராக்டர்கள் மற்றும் ஏனைய மூன்றாம் தரப்பு காப்புறுதித் திட்டங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

7.2.2 சமூக நலனோம்பல்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கையின் விவசாயத் துறையுடன் தொடர்புபட்டுள்ள விவசாயிகளின் ஓய்வுநிலை காலத்தில் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் மருத்துவ உதவித் திட்டங்களின் மூலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை, விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம், மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம், சுவசெத்த சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் என்பன இதன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

7.3. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1	மூலதன செலவு			
	கட்டாயப் காப்புறுதி (118-02-03-43-2202)	1,000.00	1,000.00	100
2	மீண்டுவரும் செலவுகள்			
	விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியங்களை வழங்குவதற்கு (118-02-03-049-1509)	5,386.00	5,011.63	93

7.4. பௌதீக முன்னேற்றம்

i.) விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

சமூக மற்றும் பொருளாதார ரீதியாக திருப்தியடைந்த விவசாயிகள் மற்றும் மீனவ சமூகங்களைக் கட்டியெழுப்பும் நோக்கில் விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்கமைவாக, 2024 டிசம்பர் 31 ஆம் திகதியளவில், விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 185,438 ஆகக் காணப்பட்டதுடன் 5,011.63 மில். ரூபாய் ஓய்வூதியக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

புகைப்பட இலக்கம் 66

ii.) விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்6 பயிர் வகைகளுக்கான கட்டாய பயிர் காப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தல்

இலங்கைக்கு மிகவும் பொருத்தமான விவசாய இடர்நேர்வு முகாமைத்துவ முறையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரச பங்களிப்பின் கீழ் விவசாயிகளுக்கு பிரதான 6 பயிர் வகைகளுக்கு (நெல், சோளம், பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் சோயா போஞ்சி) கட்டாய பயிர் காப்பீட்டு முறை செயற்படுத்தப்படுகிறது. அதற்கமைவாக, 2024 ஆம் ஆண்டில், நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில், 2023/24 பெரும் போகம் மற்றும் 2024 சிறு போகம் ஆகியவற்றின் போதான பயிர் இழப்புகளுக்கு 78,887 விவசாயிகளின் 133,852 ஏக்கர் நிலப் பரப்புக்கு 1,790.00 மில். ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதுடன் இதற்கான அரசு ஒதுக்கீடு 1000.00 மில். ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 66-67

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

08. இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை (SLCARP)

8.1. அறிமுகம்

1987 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகள் சபை சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் அடிப்படையில், 1987 டிசம்பர் 22 ஆம் திகதியன்று விவசாய அமைச்சின் கீழ் "இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகள் சபை" நிறுவப்பட்டது. தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையினுள் சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலம் விவசாயத் துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை வகுப்பதே இந்த சபையின் முதன்மைப் பணியாகும். இச்சபையின் பிரதான செயற்பாடுகளாக ஆராய்ச்சிக்கான முன்னுரிமைத் துறைகளை அடையாளம் காணுதல், உரிய துறைகள் குறித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் இடைத்தொடர்புக்கு உதவியளித்தல், ஆராய்ச்சி மேற்கொள்ளும் போது எழும் தடைகளை அகற்றுதல் மற்றும் உரிய குழுக்களின் செயற்பாடுகளை மேம்படுத்துதல் போன்றவை அடங்கும்.

8.2. நிதி முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)
மூலதன செலவுகள்	30.00	16.32
ஆராய்ச்சிகளுக்கு	15.88	13.48
மீண்டுவரும் செலவுகள்	103.38	59.32

8.3. பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள்	இலக்கு	பௌதீக முன்னேற்றம்
2025 ஆம் ஆண்டிற்கான தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்கு (NARS) நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயல் திட்டங்களை சேகரித்தல் மற்றும் குறுகிய மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகளின் அடிப்படையில் செயல் திட்டங்களை பகுப்பாய்வு செய்தல்.	25 நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயல் திட்டங்களை சேகரித்தல்	தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்பின் (NARS) 24 நிறுவனங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.
தேசிய விவசாய ஆராய்ச்சித் செயற்திட்டம் (NARP) / நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டம் (IIMDRGS) என்பவற்றுக்கான எண்ணக்கரு ஆவணங்களை மதிப்பீடு செய்தல்.	மீளாய்வு செய்யப்பட வேண்டிய திட்டங்களின் எண்ணிக்கை - 50	2024 ஆம் ஆண்டிற்காக, 80 புதிய ஆராய்ச்சிக் எண்ணக்கரு ஆவணங்கள் பெறப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.
தேசிய விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை தயாரித்தல்	உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள், மலர் வளர்ப்பு, காடு வளர்ப்பு, மீன்வளம் மற்றும் நீர்வாழ் வளங்கள், கால்நடை வளங்கல் ஆகிய பிரிவுகளை உள்ளடக்குதல்.	மலர் வளர்ப்பு, காடு வளர்ப்பு, மீன்வளம் மற்றும் நீர்வாழ் வளங்கள் மற்றும் கால்நடை வளங்கள் ஆகிய துறைகளுக்கான 04 ஆராய்ச்சி முன்னுரிமைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள் என்பவற்றுக்கு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
தேசிய விவசாய ஆராய்ச்சித் செயற்திட்டம் (NARP) / நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டங்களுக்கான (IIMDRGS) முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்	2024 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சி முன்மொழிவுகளின் எண்ணிக்கை – 50	2024 ஆம் ஆண்டுக்கான 34 புதிய ஆராய்ச்சிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.
ஆராய்ச்சி இடைவெளி பகுப்பாய்வு/ ஆராய்ச்சி வெளியீடு கணக்கெடுப்பு (பட்டறைகள்/ கணக்கெடுப்பு)	புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்வதற்கான பட்டறைகளை நடாத்துதல்	விவசாய ஆராய்ச்சி ஊழியர்களின் முதுகலைப் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களால் புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்த 04 பட்டறைகள் நடத்தப்பட்டன.
விவசாய ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல் தரவுத்தளத்தை (INFORM) முகாமைத்துவம் செய்தல்	தகவல் வழங்க வேண்டிய தேசிய விவசாய ஆராய்ச்சி தொகுதி (NARS) நிறுவனங்களின் எண்ணிக்கை 30 ஆகும்	2020, 2021 ஆம் ஆண்டுகளுக்கு தரவுத் தளம் மற்றும் வெளியீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு 29 நிறுவனங்கள் தரவுகளைத் தந்துள்ளன.
நிறுவனங்களின் வெளிப்புற மீளாய்வு	02 நிறுவனங்களைத் தெரிவு செய்தல்.	தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் வெளிப்புற மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன.
தேசிய விருது வழங்கும் விழா	2021 ஆம் ஆண்டின் தேசிய விருது வழங்கும் விழாவை நடாத்த திட்டமிடப்பட்டது.	2021 ஆம் ஆண்டின் தேசிய விருது வழங்கும் விழா 2024 ஆண்டில் 09-12-2024 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
வருடாந்த உரையாடல் செயலமர்வு	வருடாந்த கலந்துரையாடல் செயலமர்வை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது	2024 ஆம் ஆண்டின் வருடாந்த கலந்துரையாடல் செயலமர்வு 24-12-2024 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

செயற்பாடுகள்	இலக்கு	பௌதீக முன்னேற்றம்
நிறுவனங்களுக்கு இடையேயான பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டம் (IIMDRGS) - நிதி	நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டத்தினால் ஆராய்ச்சிகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.	05 நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டதுடன் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிகள் செயற்திட்டங்களின் முன்னேற்றம் பெறப்பட்டது.
இலங்கை உணவு மற்றும் விவசாய சஞ்சிகை *(Sri Lanka Journal of Food and Agriculture)*	புதிய ஆய்வுச் சுருக்கங்களை கோரல்.	தொகுதி 8 மற்றும் 9 என்பவற்றுக்கு புதிய ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.
இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் சபையின் செய்திமடல் *(News Letter)*	2023 இதழை வெளியிடல்.	2023 செய்திமடல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
தேசிய மற்றும் சர்வதேச அளவில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையேயான உறவுகளை விருத்தி செய்தல். ஆசியா பசிபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்.	04 அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்கல்.	மலேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுதல்.. 20 அதிகாரிகள் KOICA நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டனர். ஆசிய பசுபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் சங்கம் 03 பயிற்சி வாய்ப்புகளை வழங்கியது.
விவசாய ஆராய்ச்சிகள் தொடர்பான சர்வதேச, தேசிய மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான பிரச்சினைகள் குறித்த மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.	தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இடையேயான மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தல்.	தாவரவியல் பூங்கா திணைக்களத்துடன் இணைந்து 20240-12-06 அன்று அலங்கார மலர்ச் செய்கை ஆராய்ச்சிகள் தொடர்பான மாநாடு ஒன்று நடாத்தப்பட்டது.
விவசாய ஆராய்ச்சி ஊழியர்களுக்கு முதுகலை பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுடன் விஞ்ஞானிகளை பரிமாறிக்கொள்வதற்கான ஏற்பாடுகள்.	விவசாய ஆராய்ச்சி பதவி அணியினரின் பட்டப்பின் படிப்பு பயிற்சிகளுக்கு 05 அதிகாரிகளை தெரிவு செய்தல்.	விவசாய ஆராய்ச்சி பணியாளர்கள் முதுகலை பயிற்சிக்கு 17 புதிய அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.
விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் துறைகளின் செயல்திறனை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல்.	62 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்ளல்.	2023 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட 62 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. 15 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இடஞ்சார் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது.

புகைப்பட இலக்கம் 68 – 71

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

09. விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்(FTF)

9.1. ஆரம்பம்

விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 1994 மார்ச் மாதம் 09 ஆந் திகதி அரசின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் நிதியத்தின் சார்பில் அப்போதைய விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர், அவ் அமைச்சின் இராஜாங்க செயலாளர், விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான அமைச்சின் செயலாளர், கமநல சேவை ஆணையாளர் மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய சபையொன்று கைச்சாத்திட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியொன்றின் மூலம் தாபிக்கப்பட்டது.

9.2. செயற்பணி

சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்குத் தேவையான பின்னணியை உருவாக்கி சிறு விவசாயிகளின் செயலூக்கமிக்க பங்களிப்புடன் விவசாய ரீதியில் தன்னிறைவடைந்த இலங்கையை உருவாக்குதல்.

9.3 நோக்கங்கள்

1994 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நம்பிக்கை உறுதியில் குறிப்பிட்டுள்ள விதத்திலும் 2002 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் மூலம் குறிக்கோள்களை விரிவுபடுத்தியன் மூலம் விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பின்வரும் குறிக்கோள்களுடன் இயங்கி வருகின்றது.

- இலங்கையில் விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் நலனோம்பலை மேம்படுத்துதல்.
- சிறு விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல்.
- சிறு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல்.
- சிறு விவசாயிகளின் நிதிக் கஷ்டங்களைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு சிறு விவசாயிகளுக்கு சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல்.
- சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பயிர் மற்றும் விலங்கு உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் உற்பத்தித் தயாரிப்பு என்பவற்றுக்கு சிறு விவசாயிகளுக்குத் தேவையான ஏனைய உதவிகளை வழங்குதல்.
- விவசாய அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நோக்கில் விசேட விவசாய நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.

9.4. நிதியத்தின் பிரதான வருமான மூலம்

நிதியாத்தின் பிரதான வருமான மூலங்கள் கொவிசெத்த லொத்தர் சீட்டு விற்பனையின் மூலம் பெறப்படும் தொகையின் குறிப்பிட்டதொரு வீதம் (10%) மற்றும் இந்நிதியத்தின் மேலதிக நிதியை முதலீடு செய்வதன் மூலம் பெறப்படும் வட்டி என்பனவாகும்.

9.5. மானியம், முற்பணம் மற்றும் கடன் எனும் முறைகளில் இந்த நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுகின்றன.

9.5.1. மானியங்களின் கீழ் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

தொ / இல	செயற்திட்டம்	நோக்கம்	மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	உண்மையான தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம்
i.	நடுத்தர அளவிலான கோழி வளர்ப்பு அலகுகளை நிறுவும் செயற்திட்டம். (தேசிய கால்நடை அபிவிருத்தி சபை)	முட்டை பிரச்சனைக்கு தீர்வாகவும், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்கி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்.	32.80	17.24	53
	கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் குடும்பங்களுக்கு ஒரு மாத குஞ்சுகளை வழங்குதல். (ஹதபிம அதிகார சபை)		10.00	4.36	44
ii.	சிறு போகத்தில் நெல் நிலங்களில் உளுந்துச் செய்கையை ஊக்குவித்தல். (மாவட்டச் செயலகம் - வவுனியா)	882 ஏக்கர் நெற் செய்கை நிலங்களின் விவசாயிகளுக்கு 8580 கிலோ கிராம் உளுந்து விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.	13.35	10.64	80
iii.	பெண் விவசாயிகள் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பெண் விவசாயிகள் அமைப்புகளின் தலைவர்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான பாடநெறிக் கட்டணம் செலுத்துதல்.	குறித்த துறையில் திறமையானவர்களின் குழுவொன்றை நாடளாவிய ரீதியில் உருவாக்குதல்	10.00	3.23	32
iv.	திடீர் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு நிவாரணம் வழங்குதல்.	சேதமடைந்தவற்றை திருத்தியமைத்தல்	20.00	2.21	11
v.	தேசிய புத்தரிசித் திருவிழா - 2023	ஒரு கலாச்சார நிகழ்வு	3.00		

9.5.3. விவசாய கடன் திட்டங்களை செயல்படுத்துதல்

தொ / இல	செயற்திட்டம்	மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	உண்மையான தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம்
i.	2023/24 பெரும் போகம் நெல் கொள்வனவு செய்வதற்கு கடன் வழங்குதல். (நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு)	100.00	100.00	100	881,930 கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்தல்
ii.	‘க்ருஷி சக்தி’ கடனுதவித் திட்டம். (பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து)	200.00	125.10	62	256 விவசாயிகளுக்கு கடன் வழங்குதல்
iii.	சிறிய அளவிலான விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல். (கமநல அபிவிருத்தித் திணைக்களம்)	235.00	175.00	74	

10. தேசிய உரச் செயலகம்

10.1. அறிமுகம்

1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரங்களை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ளல்.

10.2. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

இலங்கையில் பயிர் செய்யப்படும் அனைத்து பயிர் வகைகளினதும் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கு உரிய தர நிர்ணயத்துடன் கூடிய அசேதன மற்றும் சேதன உரங்களை வழங்குதல் மற்றும் அவற்றின் முறையான பாவனையை உறுதிப்படுத்தல் நிறுவனத்தின் தொலைநோக்காகும். மேலும் உரத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் வழிமுறைகளுக்கு அமைவாக உரிய அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து விஞ்ஞான ரீதியான சிபாரிசுகளின் அடிப்படையில் உரத் தேவையை மதிப்பீடு செய்தல், உர இறக்குமதி மற்றும் இருப்புகளை நிர்வகித்தல், உரிய தரத்தைக் கொண்ட உரத்தை விநியோகம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை உறுதி செய்தல், சேதன மற்றும் அசேதன உரப் பாவனையின் போது சூழல் நட்புடன் கூடிய முறையிலான உரப் பாவனையை ஊக்குவித்தல், விவசாய சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கைக் கொண்ட உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் உரப் பாவனைத் துறையில் காணப்படும் முறைகேடுகளை தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல் என்பது இதன் செயற்பணியாகும். 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரச் சட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதே நிறுவனத்தின் பிரதான பணியாகும்.

10.3. நிறுவனத்தினால் அடைந்துகொள்ள வேண்டிய நிலைபேறானஅபிவிருத்தி இலக்குகள்

- *இலக்கு 2 - பட்டினிக்கு முடிவுகட்டுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.*
- *இலக்கு 12 – நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.*

10.4. தேசிய உரச் செயலகத்தின் உள்ளகப் பிரிவுகளின்முன்னேற்றம்- 2024.01.01 - 31.12.2024 வரை

உரிமம் வழங்கும் பிரிவு					
தொ/ இல	பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	நிதி இலக்கு (ரூபா.)	நிதி முன்னேற்றம் (ரூபாய்)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
1	சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதிய)	0.20	0.26	10	27
2	சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)	1.20	0.24	80	27
3	உர வகைகளை இறக்குமதி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதிய)	3.00	4.90	20	76
4	உர வகைகளை இறக்குமதி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)	20.00	5.62	200	101
5	சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல். (புதிய)	0.75	0.53	5	6
	சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)	0. 50		5	-
7	உரக் கலவைகளைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குதல் (புதிய)	0.75	2.25	5	30
8	உரக் கலவைகளைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)	3.00	1.30	30	29
மொத்தம்		29.40	15.09	355.00	296

வகை

தொழில்நுட்பப் பிரிவு					
தொ/ இல	பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	நிதி இலக்கு (ரூபா.)	நிதி முன்னேற்றம் (ரூபாய்)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
1	இறக்குமதி செய்யப்படும் உர களின் தரத்தை பரீட்சிக்கும் பொருட்டு உர வகைகளின் உர மாதிரிகளைப் பெறல்	நிதி ஒதுக்கீடு தேவையில்லை		1,000	1,099
2	உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சூழல் நட்பு உர வகைகளின் உர மாதிரிகளைப் பெறல்			80	109
3	உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கலப்பு உர வகைகளின் உர மாதிரிகளைப் பெறல்			600	374
4	மாவட்ட ரீதியாக உர மாதிரிகளைப் பெறல்	3.75	0.30	250	147
மொத்தம்		-	-	1,930.00	1,729

உர இறக்குமதிப் பிரிவு					
தொ/ இல	பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	நிதி இலக்கு (ரூபா.)	நிதி முன்னேற்றம் (ரூபாய்)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
1	இரசாயன உர வகைகளின் இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பரிசோதிப்பதற்காக கோப்புகளைத் தயாரித்தல் (கொள்வனவுக் கட்டளை க்கான அங்கீகாரம் - *Order Approval)*	நிதி ஒதுக்கீடு தேவையில்லை		*850*	*943*
2	இறக்குமதிக்குப் பின் சுங்க அனுமதிக்கான பரிந்துரைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் – (அனுமதி *Clearance)*			*1,000*	*1151*
3	ஆய்வுகூட அறிக்கைகளை பரீட்சித்தல் மற்றும் உர வகைகள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்காக சிபாரிசுகளை முன்வைத்தல்.			*1,000*	*930*
4	உர ஆலோசனைக் குழுக்களை நடத்துதல். *(FAC)*			*4*	*1*
	மொத்தம்	-	-	*2,854*	*3,025*

விசாரணைப் பிரிவு					
தொ/ இல	பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	நிதி இலக்கு (ரூபா.)	நிதி முன்னேற்றம் (ரூபாய்)	பௌதீக இலக்கு (அலகுகள்)	பௌதீக முன்னேற்றம் (அலகுகள்)
1	தரமற்ற சேதன உரங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளல்	நிதி ஒதுக்கீடு தேவையில்லை			*37*
2	சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த உர இருப்புகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளல்				*0*
3	உரங்களின் சட்டவிரோத விற்பனை/ விநியோகம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்				*13*
4	உர மானியப் பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்				*4*
5	உர உற்பத்தி செயற்திட்டங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்				*5*
6	பயிர்ச் செய்கைகளுக்கு உரங்கள் கிடைக்காமை குறித்து விசாரணைகளை மேற்கொள்ளல்				*0*
7	உர இருப்புகளைக் கைபற்றுவதுடன் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்				*0*
8	பொதுவான உரப் பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்				*11*
9	உரங்கள் தொடர்பான நிறுவனத்தின் அதிகாரிகளின் பிரச்சனைகளை விசாரணை செய்தல்				*0*
10	கள ரீதியான உர மாதிரிகளைப் பெறல்				*73*
11	உர விற்பனை நிலையங்களில் இருந்து உர மாதிரிகளைப் பெறல்				*31*
	மொத்தம்	-	-	-	*174*

உற்பத்தி ஊக்குவிப்புப் பிரிவு					
தொ/இல	பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	நிதி இலக்கு (ரூபா.)	நிதி முன்னேற்றம் (ரூபாய்)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
1	உற்பத்தியாளர்களுக்கு SLS தரப்படுத்தல் சான்றிதழ்களை வழங்குதல். i. உயிரியல் உர உற்பத்தியாளர்கள்	நிதி ஒதுக்கீடு தேவையில்லை		20	8
	ii. திரவ உர உற்பத்தியாளர்கள்			0	3
	iii. திண்ம உர உற்பத்தியாளர்கள்			0	12
	iv. விஷேட சிறப்பு உர உற்பத்தியாளர்கள்			50	2
2	உற்பத்தி செய்வதற்கு "Control Union Certificate " வழங்குதல் :-கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் மற்றும் விண்ணப்பபடிவங்களை வழங்குதல்			0	8
3	ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியில் (EDB) உற்பத்தியாளர்களைப் பதிவு செய்தல் :- உற்பத்தியாளர்களுக்கான விண்ணப்பப் படிவன்களை வழங்கல் மற்றும் பதிவு செய்தல்.			15	5
4	பயிற்சி நிகழ்ச்சிகள் – உயர் தரத்தைக்கொண்ட உயிரியல் உர உற்பத்திகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள்			15	8
5	SSP உர உற்பத்தியாளர்களின் உற்பத்தி செயற்திட்ட அறிக்கைகளைப் பெறல்				7
மொத்தம்		-	-	100	46

தாபனப் பிரிவு					
தொ/இல	பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்திட்டங்கள்	முன்னேற்றம்			
		நிதி (ரூபாய்)			பௌதீக முன்னேற்றம்
		செலுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள்	கையிலுள்ள விலைப்பட்டியல்கள்	பொறுப்புகள்	சொற்களில்
1	அலுவலக தொலைபேசி கட்டணம்	0.32			
2	மின் கட்டணங்கள்	2.43			
3	அலுவலக வாடகை செலவுகள்	17.73	1.61		
	துப்புரவு சேவைகள்	0.29			
மொத்தம்		20.77	1.61	-	-

தேசிய உரத் தகவல் முகாமைத்துவ அமைப்புக்கான கட்டணங்கள்					
1	Phase I and II	7.06			கட்டம் I மற்றும் II
2	Phase III	7.94			கட்டம் III
மொத்தம்		15.00	-	-	-

நிறுவனத்தின் திட்டமிடல் பிரிவு, தரவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகியவற்றின் அனைத்து செயற்பாடுகளும் உரிய இலக்குகளுக்கு ஏற்ப இந்த ஆண்டுக்குள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

10.5. தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் ற்றும் பௌதீக முன்னேற்றம்

தொ / இல	நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்	நிதி			பௌதீக			பயனாளிகள்	விவசாயத் துறையில் ஏற்பட்ட பயனுள்ள பங்களிப்பு	இடம்
		ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் சதவீத்தில் (%)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றத்தின் சதவீதம் (%)			
1	(i). சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதிய)	3.07	2.33	76	10	27	270	இலங்கையில் நெல் மற்றும் ஏனைய பயிர் வகைகளைப் பயிரிடும் விவசாயிகள்	இலங்கையில் நெல் மற்றும் ஏனைய பயிர் வகைகளைப் பயிரிடும் விவசாயிகளுக்கு தரமான உரங்களை வழங்குதல்	நாடு முழுவதும்
	(ii). சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)				80	27	34			
	(iii). உர வகைகளை இறக்குமதி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதிய)				20	76	380			
	(iv). உர வகைகளை இறக்குமதி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)				200	101	51			
	(v). சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல். (புதிய)				5	6	120			
	(vi). சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)				5	0	0			
	(vii). உரக் கலவைகளைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குதல் (புதிய)				5	30	600			
	(viii). உரக் கலவைகளைத் தயாரிப்பதற்கு உரிமம் வழங்குதல் (புதுப்பித்தல்)				30	29	97			
	(iii) இருப்பை சரிபார்த்தல் மற்றும் களஞ்சியப் பரிசோதனைகள்									
	a. கமநல அபிவிருத்தி நிலையங்கள்				593	883	149			

தொ / இல	நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்	நிதி			பௌதீக			பயனாளிகள்	விவசாயத் துறையில் ஏற்பட்ட பயனுள்ள பங்களிப்பு	இடம்
		ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றத்தின் சதவீதம் (%)			
	b. பிராந்திய களஞ்சியங்கள்				*121*	*70*	*58*			
	c. தனியார் களஞ்சியங்கள் மற்றும் சேதன உர உற்பத்தித் தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்				*485*	*1947*	*401*			
2	2. பயிற்சி நிகழ்ச்சிகள்				*91*	*120*	*132*			
3	*3.* கள ரீதியான உரங்களின் தரத்தை பரிசோதித்தல் மற்றும் உறுதி செய்தல்									
	a. கமநல அபிவிருத்தி நிலையங்கள்				*398*	*187*	*47*			
	b. பிராந்திய களஞ்சியங்கள்				*102*	*24*	*24*			
	c. தனியார் களஞ்சியங்கள் மற்றும் சேதன உர உற்பத்தி நிலையங்களை பரிசோதித்தல்				*800*	*1233*	*154*			
4	*4.* முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள், உரக் குழுக் கூட்டங்கள் மற்றும் உபசரிப்பு செலவுகள்				*116*	*106*	*91*			

11. ஸ்டேட் பேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட்

11.1. அறிமுகம்

'லக்பொஹர' மற்றும் "கொமர்ஷல் பொஹர" ஆகிய வர்த்தகநாமங்களிற்கு இலங்கையின் விவசாயிகளிடையே நற்பெயர் காணப்படுவதன் காரணமாக, சேதன மற்றும் இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்கும் இலாபகரமான வர்த்தக அலகுகளாகப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு, 21/0118/323/005 ஆம் இலக்க மற்றும் 2021.02.01 ஆம் திகதிக்குறியதும் CP/22/0706/514/001 ஆம் இலக்க மற்றும் 2022/05/30 ஆம் திகதிக்குறியதுமான அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைவாக, இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி என்பன இணைக்கப்பட்டு 2024.07.11 ஆம் திகதி State Fertilizer Co.Ltd எனும் நிறுவனம் உருவாக்கப்பட்டது.

11.2. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1	மூலதன செலவுகள்	214.38	*4.80	2
2	மீண்டுவரும் செலவுகள்	399.13	201.73	51
	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்			
1	இலங்கை தேயிலை சபையுடன் கூட்டாக செயற்படுத்தப்படும் தேயிலை உர விநியோக செயற்திட்டம்	2,178.00	2,178.00	100
2	54930.68 மெற்றிக் தொன் MOP உர இருப்பை 18 நாட்களுக்குள் விநியோக *** நடவடிக்கைகளை நிறைவு செய்தல்.	1,614.00	750.00	

இந்த நிறுவனத்தின் நிதியாண்டு 2024.04.01 முதல் 2025.03.31 வரை என்பதால், 2024.04.01 முதல் 31.12.2024 வரையிலான காலகட்டத்திற்கான செலவினங்கள் மட்டுமே இதில் குறிப்பிடப்பட்டு உள்ளன.

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

12. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபை (தேசிய உணவு ஊக்குவிப்பு சபை)

12.1. அறிமுகம்

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை எனும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ளது.

16.2 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

விவசாயிகள் மற்றும் வசதி குறைந்த மக்கள் ஆகியோரின் கௌரவத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பொருளாதார சுதந்திரத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தல் இதன் தொலைநோக்கு ஆகும். பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் தங்கி வாழும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் விருத்திக்கான ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் இதன் செயற்பணி ஆகும்.

12.3. நோக்கங்கள்

i.) அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கிணங்க சமூக, பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டு, அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்

ii.) பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்

iii.) விவசாய, கைத்தொழில் அபிவிருத்தியின்பால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் அச்செயற்திட்டங்களை மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.

iv.) விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மையை ஊக்குவித்தல்

v.) சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதனையொத்த வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்

12.4. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1	மூலதன செலவுகள்	-	-	-
2	மீண்டுவரும் செலவுகள்	40.00	63.75 (இந்தத் தொகையில் 23.75 மில். ரூபாய் நிறுவனத்தின் சுய நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது)	100
	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்			
1	நராஹேன்பிட்டி நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம்	14.13	11.70	83
2	தெஹிவளை அக்ரோ ப்ரெஷ் சுப்பர் விற்பனை நிலையம்	52.00	51.72	99
3	தெஹிவளை நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம்	10.07	9.52	95

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்)	செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
4	அரச-தனியார் கூட்டுறவின் கீழ், சன்ஃப்ரோஸ்ட் தனியார் நிறுவனத்துடன் இணைந்து பெறுமதி சேர்க்கப்பட்ட அரிசி மாவுடன் கலந்த இடியாப்ப மாவு உற்பத்தி வியாபாரம்.	3.963	2.10	53
5	தனமல்வில விவசாயப் பண்ணை செயற்திட்டம்	2.46	1.58	64
6	விலங்குகளின் உணவுக்காக 25,000 மெட்ரிக் தொன் சோளம் இறக்குமதி செய்தல்	1.15	0.02	2
7	அரிசி போசனையூட்டும் செயற்திட்டம்	140.75	107.15	76
8	உள்நாட்டில் சோளம் கொள்வனவு செய்தல்	8.40	1.49	18
9	புத்தளப் பண்ணை மற்றும் சேதன உரத் தயாரிப்புச் செயற்திட்டம்	13.56	1.669	12

12.5. பௌதீக முன்னேற்றம்

பௌதீக முன்னேற்றம்

1. நாற்று விற்பனை நிலையம் மற்றும் வீட்டுத் தோட்டம் நாரஹேன்பிட்ட

கிராமப்புற மக்களைப் போன்றே நகர்ப்புற மக்களும் தங்களுக்குத் தேவையானதைத் தங்கள் தோட்டங்களில் இயலுமான வழிகளில் பயிரிட்டு உண்ணுவதற்குத் தலைப்பட்டுள்ளதன் காரணமாக, 'நச்சுப் பொருட்கள் அற்ற' உணவு வகைளை ஊக்குவிப்பதை நோக்காகக்கொண்ட இந்த நிறுவனம், நகர்ப்புற மக்களுக்கு வீட்டுத் தோட்டச் செய்கை மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து வகையான காய்கறிச் செடிகள் உள்ளிட்டவற்றை மலிவு விலையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமாக நாரஹேன்பிட்டி தாவர நாற்றுமேடை அறிமுகப்படுத்தப்படலாம். மருத்துவ தாவரங்கள், மலர் செடிகள் மற்றும் பழச்செடிகள் (குறிப்பாக குறைபாவனையுள்ள பழங்கள்) மற்றும் பழங்கள் மற்றும் காய்கறி விதைகள், காய்கறி மற்றும் பூ உரங்கள், இயற்கை உரங்கள், பூச்சி விரட்டிகள், விவசாய உபகரணங்கள் போன்றவற்றை இந்த இடத்திலிருந்து கொள்வனவு செய்யக்கூடிய அதேவேளை பயிர் செய்கை குறித்த ஆலோசனைகளையும் இந்த இடத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவு 14.13 மில்லியன் ரூபாவாகும். மேலும் வருடத்திற்கான நிகர லாபம் 3.30 மில்லியன் ரூபாய் ஆகும். மேலே உள்ள எண் தரவுகளின்படி, இந்த செயற்திட்டம் முந்தைய ஆண்டை விட முன்னேற்றம் அடைந்துள்ளது.

புகைப்பட இலக்கம் 72

2. நாற்று விற்பனை நிலையம்– தெஹிவளை

நாரஹேன்பிட்டி விற்பனை நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து விற்பனை செயற்பாடுகளும் தெஹிவளை நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் செயற்பாட்டு வருமானமாக 1.61 மில். ரூபாய் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு செயற்பாட்டு செலவு 10.07 மில். ரூபாய் ஆகும்.

புகைப்பட எண் – 73

3. விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் உணவுக் விற்பனை நிலையம் தெஹிவளை

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள், உள்ளூர் தொழில்முனைவோரின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், அத்துடன் இந்நிறுவனம் தயாரிக்கும் பாரம்பரிய அரிசி வகைகள் (சுவந்தால், களுஹீனட்டி, பச்சைப்பெருமாள் போன்ற அரிசி வகைகள்), மவ்போஷா, சுவபோஷா (போசாக்கு உணவு), தோசை மாவுக் கலவை, விஷேட அரிசி மாவுக் கலவை போன்ற நச்சுத்தன்மை அற்ற உணவு வகைகளை பிரபலப்படுத்தும் நோக்கில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இதன் கீழ் இயங்கும் சிற்றுண்டிச்சாலை மூலம் போசணைமிக்கதும் தரமானதுமான உணவு வகைகளை காலை மற்றும் மதியம் வேளைகளுக்கு பொதுமக்களுக்கு சலுகை விலையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு செயற்திட்டத்தின் செயல்பாட்டு செலவு 52.00 மில். ரூபாய் ஆகும். இதன் இயக்க வருமானம் 44.303 மில். ரூபாய் ஆகும்.

புகைப்பட எண் - 74

4. புத்தல பண்ணை அபிவிருத்தி– சேதன உரங்கள் உற்பத்தி

புத்தல மற்றும் தனமல்வில பிரதேசத்தில் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டம் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரை நடைபெற்று வருகின்றது. 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமான சேதன உர உற்பத்தித் செயற்திட்டம் தற்போது வரை தொடர்ச்சியாக செயற்பாட்டு வருகிறது. இங்கு கூட்டுப்பசளை, தென்னை நார்த் தூள், மற்றும் நடுகை ஊடகக் கலவைகள் ஆகிய உர வகைகள் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்படுகின்ற. மேலும் இரசாயன உரங்களின் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த செயற்திட்டத்தின் தயாரிப்புகளுக்கு மிக அதிக கேள்வி உருவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டில், கூட்டுப்பசளை செயற்திட்டத்தின் செயல்பாட்டு வருமானம் 0.39 மில். ரூபாய் ஆகும். மேலும் இதன் இயக்க செலவு 13.56 மில். ரூபாய் ஆகும்.

5. பண்ணை அபிவிருத்தி- தனமல்வில

தனமல்வில பண்ணையானது தனமல்வில பிரதேசத்தில் உள்ள பட்டினியில் வாடும் குடும்பங்களின் பங்களிப்புடன் தனமல்வில பண்ணையானது ஒரு மாதிரிப் பண்ணையாக செயற்பட்டு வருகின்றது.

தனமல்வில பண்ணையின் பொதுவான செயற்பாட்டு செலவு 2.46 மில். ரூபாய் ஆகும்.

6. பெறுமதி சேர்க்கப்பட்ட இடியாப்ப மாக் கலவையை உற்பத்தி செய்யும் செயற்திட்டம்

நச்சுத்தன்மையற்ற உள்நாட்டு உணவு வகைகளை சந்தைக்கு அறிமுகம் செய்தல் மற்றும் அந்தப் பொருட்களை பிரபலப்படுத்தி ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குவதே இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். இது ஹேலிஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான சன்ஃப்ராஸ்ட் தனியார் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளும் ஒரு அரச-தனியார் கூட்டுச் செயற்திட்டமாகும். இந்த செயற்திட்டத்தின் கீழ், பெறுமதி சேர்க்கப்பட்ட இடியாப்ப மாக் கலவைகள் தயாரிக்கப்படும். இவற்றுக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் சங்குப்பூ மற்றும் முருங்கை தூள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இவை சிறந்த எதிர்ஒட்சியேற்ற பண்புகளைக் கொண்டுள்ளன. கன்னோருவை உணவு ஆராய்ச்சிப் பிரிவில் இயங்கும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் தொழிற்சாலையில் இந்த உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகிறன.

2024 இல் இந்த செயற்திட்டத்தின் செயல்பாட்டு வருமானம் 4.623 மில்லியன் ரூபாய் ஆகும். மேலும் இதன் இயக்க செலவு 3.69 மில். ரூபாய் ஆகும்.

புகைப்பட எண் 75

7. சோள இறக்குமதி

கோழி வளர்ப்பில் கோழித் தீவனத்தின் பிரதான மூலப்பொருளாக சோளம் பயன்படுகிறது. இதன் காரணமாக இலங்கையில் கோழி மற்றும் முட்டை உற்பத்தியாளர்களிடமிருந்து இதற்கு அதிக கேள்வி காணப்படுகிறது. எனினும், இலங்கையில் 200,000 மெற்றிக் தொன் சோளமே உற்பத்தி செய்யப்படுகிறது, ஆனால் இது வருடாந்தத் தேவையின் 50% ஐ மட்டுமே பூர்த்தி செய்யப் போதுமானது.

தற்போது, தனியார் நிறுவனங்கள் சோளம் இறக்குமதி செய்யப்படுவதுடன் அவற்றால் சோளத்தில் ஒரு ஏகபோக உரிமை பேணப்படுகிறது. இதன் காரணமாக, கோழி தீவனத்தின் விலை அதிகரிப்பதுடன், கோழிப் பண்ணை விவசாயிகள் கடும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். அதன்படி, தனியார் துறையின் உதவியுடன் 25,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்யப்பட்டதுடன் அவதன் மூலம் 84.40 மில் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

8. அரிசி போசனையூட்டல் செயற்திட்டம்

ஆரம்பநிலைப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு 500,000 பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு போசனையூட்டப்பட்ட அரிசி தயாரிக்கும் பணி களங்குட்டி தொழிற்சாலையில் இடம்பெற்று வருவதுடன் உலக உணவுத்திட்டம் இதற்கு பங்களிப்பு செலுத்தியுள்ளது. இந்தத் செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவு 140.75 மில். ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 76

குறிப்பு: இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

13. இலங்கை ஹதபிம அதிகாரசபை (தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை)

13.1 தொலைநோக்கு

நிலைபேறான காணிகள் மற்றும் இயற்கை வள முகமையின் பொருட்டு சேவை பல்வகைப்படுத்தலின் ஊடாக பசுமை நிறைந்த சூழல் – வளம் நிறைந்த நாடு

13.2. செயற்பணி

பயனுறுதிமிக்க காணி முகமைத்துவம் மற்றும் முறையான நீர் பாதுகாப்பு மற்றும் உச்ச அளவில் மனிதவளத்தை பயன்படுத்துவதன் ஊடாக சூழலியல் சமூக கலாசார மற்றும் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்குத் தேவையான பங்களிப்பை நல்குதல்.

13.3. நோக்கம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாய விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2026/45 ஆம் இழக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் பினருமாறு;

i.) விவசாய பல்வகைப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட ஈரநில முகாமைத்துவத்திற்கு திட்டங்களை தயாரித்தல் மற்றும் கூட்டுத்தாபனம் அல்லது அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்களால் குறித்த திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

ii.) விவசாய உற்பத்திகளை தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல்.

iii.) வணிக ரீதியான விவசாயச் செய்கை அல்லது வேறு ஏதேனும் விவசாய முயற்சிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவசாய முதலீடுகளை மேற்கொள்ள தூண்டுதல், ஊக்குவித்தல் மற்றும் உதவி வழங்கல்.

13.4. நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் சதவீத்தில் (%)
01	மூலதன செலவுகள்	220.00	210.80	96
02	மீண்டுவரும் செலவுகள்	139.00	133.39	96
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்				
01	இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராம நிகழ்ச்சித் திட்டம்	2.79	2.79	100

13.7. பௌதீக முன்னேற்றம்

நோக்கெல்லை 01 : உச்ச அளவு நிலப் பயனுறுதித் தன்மையை அடைதல்

1.1. மண் அரிப்பு மற்றும் மண் அழிவு என்பவற்றை குறைப்பதற்கு சரிவான விவசாய நிலங்களைப் பாதுகாத்தல்

மண் அரிப்பு மற்றும் மண் அழிவு என்பன காரணமாக மத்திய மலைநாட்டைச் சேர்ந்த பெரும்பாலான விவசாய நிலங்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளன. நில பயன்பாட்டு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், காடழிப்பு மற்றும் நகரமயமாக்கல் ஆகியன காரணமாக மண் அரிப்பு மற்றும் மண் வளம் என்பவற்றில் ஏற்படும் வீழ்ச்சியை குறைக்கும் நோக்கில் இந்த அபிவிருத்திச் செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம், உயிரியல் மற்றும் உழவியல் முறைகள் மூலம் நிலத்தின் உற்பத்தித்திறனை உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு விவசாயிகளுடன் இணைந்து, கண்டி, மாத்தளை, கேகாலை, கொழும்பு, கம்பஹா, பதுளை, குருநாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதற்கு அமைவாக, 2024 ஆம் ஆண்டில் 600 ஹெக்டேர் விவசாய நிலத்துக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் 15.00 மில். ரூபாய் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக வழங்கவும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 30.12.2024 ஆம் திகதியளவில், 600 ஹெக்டேர் நிலப்பரப்பின் பாதுகாப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதுடன் அதற்காக 15.00 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 77

1.2 சேதன உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல்

மண் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை மேலும் அதிகரிப்பதன் மூலம் வளமான மண்ணை உருவாக்கும் நோக்கத்துடன் இதந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சேதன உர உற்பத்திக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதலை விவசாயிகளுக்கு வழங்குதல், இந்த சேதன உரத்தின் 01 மெற்றிக் தொன் அளவை வெற்றிகரமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களின் தொகுப்புகளை வழங்குதல் மற்றும் அதன் தரத்தை மேம்படுத்த ரொக் பொஸ்பேட் உரத்தை வழங்குதல் என்பவற்றுக்கு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, வவுனியா, முல்லைத்தீவு, ஹம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், 2024ம் ஆண்டில், 3,200 மெற்றிக் தொன் சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு, 3,200 தொகுப்பு விவசாய உபகரணங்களை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் இதற்காக 24.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும்

அந்த உர உற்பத்தியின் தரத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் வழங்கப்படும் 160,000 கிலோ கிராம் எப்பாவல ரொக் பொஸ்பேட் உரத்தை வழங்க 4.00 மில். ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதன்படி, 31.12.2024 ஆமா திகதியளவில், சேதன உர அலகுகள் உற்பத்திக்காக வழங்கப்படும் 3,200 தொகுதி கருவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன 160,000 கிலோ கிராம் ரொக் பொஸ்பேட் உரமும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்போது, விவசாயக் உபகரணத் தொகுதிகளுக்கு 21.84 மில். ரூபாய் மற்றும் ரொக் பொஸ்பேட் உரத்திற்கு 3.47 மில். ரூபாய் நிதியும் செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 78

நோக்கெல்லை 02 : பாதுகாக்கப்பட்ட நீர் வளங்கல்

2.1 நீர் ஆதாரங்களைப்பாதுகாத்தல்

நீர் ஆதாரங்கள் மற்றும் சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல், குறித்த பிரதேச மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரை வழங்குதல் போன்ற நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கண்டி, மாத்தளை, கேகாலை, ஹம்பாந்தோட்டை, மன்னார் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் 25 நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்கு 25.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி 31.12.2024 அன்று 24 நீர் ஆதாரங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன. அதற்கு 23.95 மில். ரூபாய் செலவிடப்பட்டது.

புகைப்பட இலக்கம் 79

2.2. நீர் பிடிப்பு பிரதேசங்களைப் பாதுகாத்தல்

நீர் பிடிப்பு பிரதேசங்களைநிலைபேறான முறையில் பயன்படுத்துவதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும், நீர்வாழ் தாவரங்களை நடுகை செய்வதற்கு 20,000 நீர்வாழ் தாவரங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதற்கு 2.00 மில். ரூபாய் ஒதுக்கீடு தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கமைவாக, 31.12.2024 திகதி வரை, 1.322 மில். ரூபாய் பெறுமதியுள்ள 10,460 நீர்வாழ் தாவரங்கள் நீர் பிடிப்பு பகுதிகளில் நடுகை செய்யப்பட்டுள்ளன.

நீர் பிடிப்புப் பகுதிகளைச் சுற்றிப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் நீர் பிடிப்புப் பகுதிகளின் நிலையான பயன்பாட்டிற்காக இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்காக, நீர்வாழ் தாவரங்களை நடுவதற்கு 20,000 நீர்வாழ் தாவரங்கள் வழங்க திட்டமிடப்பட்டதுடன் அதற்கு 2.00 மில். ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 31.12.2024 ஆம் திகதியளவில் 1.322 மில். ரூபாய் செலவிடப்பட்டு 10,460 நீர்வாழ் தாவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.3. சமூக பங்கேற்பு நிகழ்ச்சிகளை நடத்துதல்

நீர் ஆதாரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளை பாதுகாப்பதன் மூலம் குடிநீர்த் தேவைக்கான சுத்தமான நீரை பெறுதல், பல்வேறு மனித நடவடிக்கைகளால் பாழடைந்த நீர் ஆதாரங்களைச் சுற்றியுள்ள சூழலைச் சுத்தப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு சமூகப் பங்கேற்புத் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதன் முதன்மை நோக்கம் ஆகும். அதன்படி 2024 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 50 திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டதுடன் அதற்கு 1.00 மில். ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக, 31.12.2024 திகதியளவில், 15 சுத்திகரிப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதுடன் அதற்காக 547,795.00 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.
புகைப்பட இலக்கம் 80

நோக்கெல்லை 03: உணவு இருப்பு மற்றும் பாதுகாப்பு என்பவை உறுதி செய்யப்பட்ட ஆரோக்கியமான மற்றும் வளமான சமூகம்

3.1 வீட்டுத்தோட்டச் செய்கை ஊக்குவிப்பு

நோக்கில் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குவதன் மூலம் உணவுப் பாதுகாப்பை அதிகரிக்க விவசாயிகளால் தயாரிக்கப்பட்ட விதைப் பொதிகள், விவசாய கருவிகள், திரவ உரங்கள் என்பவற்றை வழங்கல் மற்றும் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கல் என்பன இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. கண்டி, மாத்தளை, கேகாலை, கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம், பதுளை, ஹம்பாந்தோட்டை, வவ்னியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வீட்டுத்தோட்டச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், *30,000* நாற்றுகளை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மேலும், வீட்டுத்தோட்டச் செய்கைக்கான *6,000* தொகுப்பு விவசாய உபகரணங்கள், தலா ஒரு லீட்டர் வீதம் *6000* லிட்டர் சேதன திரவ உரம் என்பவற்றை வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் *30.00* மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, *31/12/2024* வரை தயாரிக்கப்பட்ட *6000* நிலைபேறான வீட்டுத்தோட்டங்களுக்கான விவசாய உபகரண தொகுப்புகள், நாற்றுகளின் தொகுப்புகள், மற்றும் சேதன திரவ உரங்கள் என்பன வழங்கும் நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளதுடன் இதற்காக *29.09* மில். ரூபா செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் *81*

3.2 வணிக ரீதியான வீட்டுத்தோட்டத்தை ஊக்குவித்தல்

வணிக அளவில் வீட்டுத்தோட்டச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்டச் செய்கைக்குத் தேவையான மண்வெட்டி, *50* மீட்டர் தண்ணீர் குழாய், மண்வெட்டி முனை, சட்டி, தெளிப்பான் இயந்திரம் போன்ற விவசாய இடுபொருள் கருவிகலும் வணிக வீட்டுத்தோட்டச் செய்கைத் திட்டத்தின் *20* நாற்றுச் சாடிகள் கீழ் *500* வணிக அளவிலான விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டதுடன் *31/12/2024* ஆம் திகதியளவில், *500* விவசாயிகளுக்கும் மேற்படி உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக *6.98* மில். ரூபாய் செலவிடப்பட்டது.

3.3 பொருளாதார பயிர்களின் செய்கை ஊக்குவித்தல்

முருங்கை, பாக்கு, தென்னை, செவ்விளநீர், மிளகு, வெணிலா, கறுவா, கோப்பி மற்றும் எலுமிச்சை போன்ற பொருளாதாரப் பயிர்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரப் பயிர்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, *20,000* பொருளாதார பயிர்க் கன்றுகளை வழங்க திட்டமிடப்பட்டதுடன் அதற்கு *5.00* மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. *31/12/2024* ஆம் திகதியளவில், *28,845* கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக *5.00* மில். ரூபாய் செலவிடப்பட்டது

3.4 மேலதிக உணவுப் பயிர்களின் செய்கையை ஊக்குவித்தல்

உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் விவசாயிகளுக்கு மேலதிக வருமானத்தை ஈட்டல் என்பவற்றை நோக்காகக்கொண்டு மேலதிக உணவுப் பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் *2024*ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. அதன் மூலம், *100* ஹெக்டயர் மேலதிக உணவுப் பயிர்களின் பயிர்ச் செய்கைக்கு விவசாயிகளுக்கு கௌப்பி, பாசிப்பயறு, நிலக்கடலை, குரக்கன், மிளகாய் மற்றும் உளுந்து ஆகிய பயிர்களின் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதற்கு *5.00* மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் கண்டி, மாத்தளை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், பதுளை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு *3,716* கிலோ கிராம் விதைகள் விநியோகம் செய்யப்பட்டதுடன் *31/12/2024* ஆம் திகதி வரை *127* ஹெக்டயரில் அந்த விதைகள் பயிரிடப்பட்டுள்ளன. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து *4.98* மில். ரூபாய் செலவிடப்பட்டது.

3.5 காட்டு விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை குறைத்தல்

இலங்கையில் வன விலங்குகளால் ஏற்படும் வருடாந்த பயிர் சேதம் 40% என ஆய்வு அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன. அதனால் ஏற்படும் விலங்கு சேதங்களைத் தடுப்பதற்காக, விவசாயிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் முதன்மை நோக்கத்துடன் விவசாயிகளின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான சேவைகளை வழங்குதல் எனும் இலங்கை ஹதபிம அதிகாரசபையின் நோக்கத்துக்கு அமைவாக, 2023 ஆம் ஆண்டு ஒரு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டது. இதற்குக் காணப்படும் அதிக கேள்வியின் காரணமாக 2024 ஆம் ஆண்டும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி பயனாளிகளிடம் இருந்து 50% பங்களிப்பை பெற்று மின்சார வேலி மற்றும் வாயுத் துப்பாக்கிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 700 வாயுத் துப்பாக்கிகள் மற்றும் 75 மின்சார வேலி அலகுகளை வழங்கும் 20.00 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் 701 வாயுத் துப்பாக்கிகள் மற்றும் 75 மின் வேலி அலகுகள் பயனாளிகளுக்கு 31.12.2024 ஆம் அதிகதி வரை வழங்கப்பட்டுள்ளன. அதற்கு 19.97 மில். ரூபாய் தொகை செலவிடப்பட்டுள்ளது.
கண்டி, மாத்தளை, கேகாலை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, காலி, வவுனியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் பிரதேச செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட தேவையுள்ள விவசாயிகளுக்காக இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

புகைப்பட எண் 82

நோக்கெல்லை 04 : உகந்த உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அறிவு மற்றும் தொழில்நுட்பத்துடன் வலுவூட்டப்பட்ட புதிய விவசாயத் தொழில்முனைவோர்

4.1 வரத்தக ரீதியான தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல்

வரத்தக ரீதியான தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாய சமூகத்தை மேலும் வலுவூட்டுவதற்கான வசதிகளை வழங்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, பயனாளிகளின் செயற்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், அதிக சாத்தியத்தன்மைகளைக்கொண்ட நிலைபேறான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டன. இதற்கு 01.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், யட்டியநந்தோட்டை, வரக்காபொல, அரநாயக்க, வெலிமடை, அபன்பொல, வாரியபொல, ரிதீமாலியத்த, இமதுவ மற்றும் உடுதும்பறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 13 பயனாளிகள் 50% சமூக பங்களிப்பின் கீழ் பயனடைந்துள்ளனர். இதற்கு செலவிடப்பட தொகை 954,300 மில். ரூபாய் ஆகும்.

4.2 காளான் தயாரிப்பு தொழில்முனைவோரை உருவாக்குல்

வரத்தக ரீதியான காளான் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரை கண்டறிந்து அவர்களை மேலும் வலுப்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்திற்கு அமைவாக, 50% சமூக பங்களிப்பின் கீழ் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க திட்டமிடப்பட்டது. அதன்படி, இந்த செயற்திட்டத்திற்கு 1.25 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் இது மீரிகம, வலஸ்முல்ல, வீரகட்டிய, யட்டிநுவர, ரிதிமாலியத்த, வெலிமடை, மாவத்தகம மற்றும் ரம்புக்கனை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 15 பயனாளிகளின் செயற்திட்ட முன்மொழிவுகளை பரிசீலித்ததன் பின்னர் அவர்களுக்கு செயற்திட்டம் மூலம் உதவிகள் செய்யப்பட்டன. அதற்கு 1.25 மில். ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.

4.3 விவசாய பெறுமதி சேர்த்தல் துறையில் தொழில்முனைவோரை உருவாக்குதல்

விவசாய பெறுமதி சேர்த்தல் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு 50% சமூக பங்களிப்பின் கீழ் வசதிகளை வழங்குவதே இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கு 1.25 மில். ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இது கண்டி, குருநாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து கோரப்பட்ட செயற்திட்ட அறிக்கைகளை பரிசீலித்தன் பின்னர் 22 பயனாளிகளுக்கு உலர்த்தும் இயந்திரங்கள், வாசனை பொருட்கள் அறைக்கும் இயந்திரங்கள், தெளிப்பான் நீர்த் தொகுதிகள், முட்டை அடைகாக்கும் இயந்திரங்கள், நீராவி அவிகலங்கள் மற்றும் நெல் உலர்த்தும் பாய்கள் (கார்பெட்) ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு 1.23 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

4.4 வரத்தக ரீதியான பழக் கிராமங்களை மேம்படுத்துதல்

ஏற்றுமதி சந்தையை வென்றெடுக்கும் வகையில், மாதிரி பழக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் இதன் கீழ் முன்னெடுக்கப்பட்டது. அதன்படி, 17 பழக் கிராமங்களுக்கு 30.00 மில். ரூபாய் மதிப்பிடப்பட்டதுடன் அந்த தொகையில், 29.66 மில். ரூபாய் நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. யட்டியந்தோட்டை, அம்பன்பொல, அரநாயக்க, ரம்புக்கன, கல்நேவ, முல்லைத்தீவு, வவுனியா, மீரிகம, மஹர, திவுலப்பிட்டிய, இமதுவ, கரந்தெனிய, வலஸ்முல்லை, அம்பலாந்தோட்டை, தங்கல்ல, அங்குனுகொலபலஸ்ஸ, தெஹியத்தகண்டிய மற்றும் ரிதீமாலியத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இக்கிராமங்கள் அமைந்துள்ளன.

நோக்கெல்லை05 : பாதுகாக்கப்பட்ட சூழல்

5.1 பாடசாலை சார்ந்த சூழல் நிகழ்ச்சித் திட்டங்கள்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து பிரதேச செயலகங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சீரமைவான வீட்டுத் தோட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி, 60 நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் 1.20 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 31.12.2024 ஆம் திகதி வரை 15 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு 0.87 மில். ரூபாய் தொகை செலவிடப்பட்டுள்ளது. கண்டி, மாத்தளை, கேகாலை, கம்பஹா, கொழும்பு, பதுளை, அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

5.2 சமூகம் சார்ந்த சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து பிரதேச செயலகங்களிலும் உள்ள சமூகத்திற்கான சுற்றாடல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் ஆகும். அதன்படி இதற்கு 0.60 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 20 நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. 31.12.2024 ஆம் திகதி வரை வலஸ்முல்ல, யட்டிநுவர, கண்டி, தங்காலை, கட்டுவன, அம்பலாந்தோட்டை, அம்பகமுவ, மீரிகம, மஹர, களனி, உடுநுவர ஆகிய பிரதேசங்களில் 0.57 ரூபா செலவில் 15 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

நோக்கெல்லை 06 : ஆரோக்கியமான சமூகம்

6.1 கிராமிய மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்ய முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளை வலுவூட்டல்.

புரத ஊட்டச்சத்து குறைபாடு இன்று கிராமப்புற மக்களிடையே ஒரு கடுமையான பிரச்சனையாக மாறியுள்ளது. எனவே, கிராமிய சமூகத்தினரின் தினசரி விலங்குப் புரத நுகர்வை அதிகரித்தல், உள்நாட்டு சந்தையில் முட்டை விலை ஏற்ற இறக்கத்தை குறைத்தல் மற்றும் கிராமிய மக்களுக்கு மேலதிக வருமான வழியை உருவாக்குதல் உள்ளிட்ட நோக்கங்களுடன் அரை இல்ல கோழி வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கண்டி, மாத்தளை, கேகாலை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம், பதுளை, காலி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதற்காக 2024 ஆம் ஆண்டில் 45,000 கோழிக் குஞ்சுகளை வழங்க 31.50 மில். ரூபாய் ஒதுக்கப்பட்டதுடன் 31.12.2024 ஆம் திகதி வரையில் பயனாளி குடும்பங்களுக்கு 31.43 மில். ரூபாய் செலவில் 45,000 குஞ்சுகள் வழங்கப்பட்டன.

6.2 சிறிய அளவிலான தொழில்முனைவோருக்கு ஒரு நாள்/ 03 மாத கோழிக் குஞ்சுகளை வழங்குதல்.

கிராமப்புற மக்களிடையே புரதச் சத்து குறைபாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 50% சமூக பங்களிப்பின் கீழ் இறைச்சி உற்பத்திக்காக ஒரு நாள் மற்றும் மூன்று மாத ஆண் கோழிக் குஞ்சுகளை வழங்க திட்டமிடப்பட்டது. அதற்கு 0.80 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் வருட இறுதிக்குள் 5000 குஞ்சுகளை வழங்க

உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், 31/12/2024 ஆம் திகதி வரையில், 500 குஞ்சுகள் மட்டுமே கேகாலை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 36,750.00 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

நோக்கெல்லை 07 : விவசாய- தொழில்நுட்ப அறிவுடன் விவசாயிகளை மேம்படுத்துதல்

7.1 சமூக உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சிகளுக்கு ஊடாக பங்கேற்பு அபிவிருத்தி கிராம அணுகல் திட்டத்தின் மூலம் விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்

இதன் கீழ், சமூக உயிர்ப்பூட்டல் திட்டங்களை செயல்படுத்தி வலுவூட்டுவதற்கும், விவசாயத்தை நோக்கி கவனம் செலுத்தச் செய்வதற்கும், சமூக உயிர்ப்பூட்டல் மூலம் பங்கேற்பு அபிவிருத்தி கிராம அணுகல் நிகழ்ச்சித் திட்டத்தின் (PRA) ஊடாக விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெறுவதற்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள என எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கு 60 நிகழ்ச்சிகளை நடாத்த 1.50 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன் 31/12/2024 திகதி வரையிலான 60 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதுடன் 1.37 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

7.2 விவசாய சமூகத்திற்கான தொழில்நுட்பப் பயிற்சித் நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் விவசாயிகளை வலுவூட்டுதல்

இதன் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணையாக விவசாய சமூகத்தினருக்கான தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்படுகின்றன. அதற்கு 1.20 மில். ரூபாய் என மதிப்பிடப்பட்டதுடன் விவசாயிகளுக்கான 120 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. 31.12.2024 ஆம் திகதி வரையில், விவசாயிகளுக்கான 120 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் அதற்காக 0.82 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

நோக்கெல்லை: ஊழியர்களுக்கான ஊக்கமளிப்பு நிகழ்ச்சிகள் மூலம் சேவை பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல்

இந்த நோக்கெல்லையின் கீழ் பௌதீக வளங்களின் அபிவிருத்தி எனும் பகுதியின் கீழ் பௌதீக வளங்களைப் பெறுவதற்காக 4.20 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் 31.12.2024 ஆம் திகதிக்கு, 4.19 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம், களப் பணியாளர்கள் மற்றும் நிறுவனத்தின் அலுவலர்கள் தலைமையில் மாதந்தோறும் மதிப்பாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டதுடன், 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டது. 31/12/2024 ஆம் திகதிக்கு 8 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான 1.00 மில். ரூபாய் நிதியில் 0.46 மில். ரூபாய் செலவிடப்பட்டது.

அவ்வாறே, நிறுவனத்தின் பணியாளர்களது கருத்தியல், தொழில்நுட்ப மற்றும் மனித வளத் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் அறிவை புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான மனித வள அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு 2.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அந்த தொகையில் இருந்து 1.66 மில். ரூபாய் செலவு செய்யப்பட்டு 19 அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கால்நடை வளங்கள்
பிரிவு

செலவுத் தலைப்பு இலக்கம்118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின்நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

1. கால்நடை இனப்பெருக்கப் பண்ணைகளை நிறுவுதல்
செலவுத் தலைப்பு இலக்கம்118-2-03-078-2507

2024 ஆம் ஆண்டில் கால்நடை வளப் பிரிவின் செயல் திட்டத்திற்கு அமைவாக, கால்நடை இனப்பெருக்க மற்றும் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 50.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலிருந்து 4.65 மில்லியன் ரூபாய் 2023 ஆம் ஆண்டின் செலுத்த வேண்டிய பொறுப்புகளுக்கு செலுத்தப்பட்டதுடன் 45.35 மில்லியன் ரூபாய் நிதி வடமத்திய, வடமேற்கு, தென் மற்றும் மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங்களின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, வடமத்திய மாகாணத்தில் சஹிவால் இனவிருத்தி அலகு அமைப்பதற்காக 10.00 மில். ரூபாயும், செயற்கை கருவூட்டலை வலுப்படுத்தும் பொருட்டு செயற்கை சினைப்படுத்தல் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு 3.37 மில். ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் கொட்டதெனியாவ கால்நடை வளர்ப்பு பயிற்சிப் பாடசாலையின் இனவிருத்திப் பிரிவின் கூரையை பழுதுபார்க்கும் வேலைகளுக்கு 6.43 மில். ரூபாய் செலவிடப்பட்டதுடன், அந்தத் தொகை 2025 ஆம் ஆண்டிற்கான நிதிப் பொறுப்பாக மாறியுள்ளது. வடமேல் மாகாணத்தில் ஆட்டு இனப்பெருக்க பண்ணை ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் வீட்டுத் திட்டம் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் என்பன காரணமாக அந்த செயற்திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் மாகாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டமான கெக்குனுதுறை பண்ணையில் ஆட்டு இனப்பெருக்க அலகை ஸ்தாபிக்கும் பணி மாகாண ஒதுக்கீட்டின் கீழ் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலானகால்நடை வள அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்)
செலவுத் தலைப்பு118-2-03-079-2506

2.1 இடைக்கால கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

கால்நடை வளத் துறையை விருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு வட மாகாணத்தில் காணப்படும் முக்கியமான சாத்தியப்பாடுகளை கருத்தில் கொண்டு கால்நடை வைத்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதன் மூலம் கால்நடை வளத் துறையில் சேவை வழங்கலை விருத்தி செய்யும் நோக்கில் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த செயற்திட்டத்தின் கீழ் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை கால்நடை வைத்திய காரியாலயத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்வதற்காக 2024 ஆம் ஆண்டுக்கு 60.00 மில். ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அந்த ஒதுக்கீட்டிலிருந்து 10.74 மில். ரூபாய் ஆரம்ப முற்பணமாக ஒப்பந்ததாரருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2.2. பன்றி வளர்ப்புப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்
களத்தில் உள்ள பன்றி வளர்ப்பாளர்களுக்கு உயர்தர பன்றிக் குட்டிகளை வழங்கும் நோக்கில் வடமத்திய மாகாணத்தில் உள்ள திரப்பனை அரச பண்ணையில் பன்றி வளர்ப்பு அலகு ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2024 ஆம் ஆண்டில் 5.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.
மீளாய்வு காலஎல்லையின் இறுதியில், கழிவுப் பொருட்களை பொருத்தமான முறையில் முகாமைத்துவம் செய்யும் முறையொன்றை நிறுவுதல், பன்றி வளர்ப்பு இல்லமொன்றை நிறுவுதல், பன்றிக் குட்டிகளை கொள்வனவு செய்தல், மிருகங்களுக்கான உபகரணங்கள் மற்றும்

மருந்துகளை கொள்வனவு செய்தல் ஆகிய செயற்பாடுகள் உள்ளிட்ட பன்றி இனப்பெருக்க அலகின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 2025 ஆண்டிற்கான நிதிப் பொறுப்பு 4.90 மில்லியன் ரூபாய் ஆகும். அந்த வகையில், இந்த 4.90 மில்லியன் ரூபாய் 2025 ஆண்டில் நிதிப் பொறுப்பின் கீழ் செலுத்தப்பட்டது.

2.3. கோழிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

குறைந்த செலவில் பண்ணை நடவடிக்கைகளை பராமரிக்கும் நோக்கில் வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுவெளி அரச பண்ணையில் சூரிய மின்தகடுகளை நிறுவுவதற்கு 5.15 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் இந்த செயற்திட்டம் வடமாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பெறுகை நடவடிக்கையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளது.

2.4. கறவை மாடு (பாற் பசு) வளர்ப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை அறிமுகப்படுத்தி பால் உற்பத்திச் செலவைக் குறைப்பதும், முறையான இனப்பெருக்கம் மற்றும் ஊட்டச்சத்து முகாமைத்துவம் மூலம் பண்ணை உற்பத்தியை மேம்படுத்துவதும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். மதிப்பாய்வில் உள்ள ஆண்டிற்கான இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 77.79 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

மாகாணம்	செயற்திட்டம்	ஒதுக்கீடு (மில். ரூபாய்)	31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)
வட மாகாணம்	கிளிநொச்சி பிராந்திய பயிற்சி பாடசாலையில் சூரிய மின்தகடுகளை நிறுவுதல்	5.00	4.26
ஊவா மாகாணம்	பதுளை பொரலந்த பண்ணையில் சூரிய மின்தகடுகளை நிறுவுதல்	9.00	-
மேல் மாகாணம்	கொட்டதெனியாவ கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையத்தில் கால்நடை தீவன உற்பத்தியை விருத்தி செய்தல்	5.00	4.74
வட மத்திய மாகாணம்	திறப்பனை விலங்குப் பண்ணை மற்றும் பயிற்சி நிலையத்தில் விவசாயக் கிணறு ஒன்றை நிர்மாணித்தல்	5.00	4.19
வட மேல் மாகாணம்	வன்னிகம பண்ணையில் குஞ்சுகளுக்கான கூட்டு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் போசணை முகாமைத்துவம்	3.00	3.00

இதற்கமைய, மேற்படி செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன், ஊவா மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய நான்கு மாகாணங்களது கொடுப்பனவுகளும் 2024 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டன. ஊவா மாகாணத்திற்கான 9.00 மில். ரூபாய் பெறுமதியான நிதிப் பொறுப்பு செலுத்தப்பட்டது.

புகைப்பட இலக்கம் 01 - 02

மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, இந்த செயற்திட்டத்தின் மூலம் கால்நடை வளத் துறையுடன் தொடர்புடைய தரவு சேகரிப்பதற்கான தகவல் தொகுதியொன்றை அறிமுகம் செய்தல் மற்றும் கறவை மாட்டு அபிவிருத்தி அலகுகளை நிறுவுதல் ஆகிய நடவடிக்கைகளுக்காக 48.52 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. எனினும், தற்போது வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டமொன்றின் ஊடாக, ஒட்டுமொத்த விவசாயத் துறையுடனும் தொடர்புடைய தரவுகளை சேகரிக்கும் தொகுதியொன்றை நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்று கண்டறியப்பட்டது.

2.5. திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

2024 ஆம் ஆண்டில் இந்தச் செயற்திட்டத்திற்கு 2.06 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் இளம் தொழில்முனைவோரின் திறன் விருத்தி மற்றும் கால்நடை வளத் துறையுடன் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவை இதன் பிரதான நோக்கங்களாகும்.

இச்செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- பெரிய அளவிலான பண்ணைகளை அமைப்பதற்கான சூழல் வழிகாட்டுதல்களைத் தயாரிக்கும் நோக்கில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகளைக் கொண்ட துணைக் குழுவினால் களக் கண்காணிப்பு விஜயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- கடந்த வருடத்தில் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- பால் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், தேர்ந்தெடுக்கப்பட்ட 05 மாகாணங்களில் தயிர் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி பட்டறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதற்காக, ஒரு மாகாணத்திற்கு தலா 200,000.00 ரூபாய் வீதம், மொத்தமாக 01 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், வடமேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் மாத்திரமே இந்தப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- கால்நடை வளத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு துறைகளில் கொள்கை ரீதியான மாற்றங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக, இந்த ஆண்டில் 527,867.00 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

3. சிறு மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (அபிவிருத்தி உதவி செலவுத் தலைப்பு118-2-03-079-2202

3.1 கறவை/எருமை மாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

இந்த செயற்திட்டத்திற்கு 31.26 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் கீழ் இரண்டு பிரதான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

3.1.1. பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்

எருமை மாடு வளர்ப்பு, இலங்கையில் உள்ள கிராமப்புற விவசாயிகளின் பாரம்பரிய வாழ்வாதாரமாகும். மேலும், பெரும்பாலான விவசாயிகள் தங்களது வருமானத்தை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாக பாலைத் திரளச் செய்வதன் மூலம் பல்வேறு பால் உற்பத்தித் தயாரிப்புகளை மேற்கொள்கின்றனர். இலங்கை தரநிர்ணய நிறுவனம் பாலுக்கான குறிப்பான தரநிலைகளை உருவாக்கியுள்ள போதிலும், பல சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்கள் இதற்கான போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் பொருத்தமற்ற உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, பாலின் சுகாதார நிலையை மேம்படுத்துவதோடும், பால் உற்பத்திப் பொருட்களை பழுதடையாமல் பாதுகாக்கும் தன்மையை அதிகரிப்பதோடும் இணைந்து, பாலின் தரத்தையும் மேம்படுத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இலங்கையர்கள் மத்தியில் ஆரோக்கியமான மற்றும் போசணைமிகு பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களுக்கான அதிகப்படியான கேள்வி காணப்படுவதன் காரணமாக, நிலைபேறான வியாபாரமாக பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் போசணைத் தரம் மற்றும் தரப்பண்புகளை மேம்படுத்துவது இன்றியமையாத ஒன்றாகும். அதற்கமைய, தேர்ந்தெடுக்கப்பட்ட பண்ணைகளில் பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றுக்குத் தேவையான ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பவற்றுக்காக 15.35 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன் பிரகாரம், 25 பண்ணை அலகுகளுக்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், பண்ணை மற்றும் அதனுடன் தொடர்புடையவற்றை அபிவிருத்தி செய்தல்

என்பவற்றுக்கு முதலீடு செய்த தொகை 7.33 மில். ரூபாய் ஆகும். மேலும், 2025 ஆம் ஆண்டிற்கான நிதிப் பொறுப்புகள் 2.49 மில். ரூபாய் ஆகும்

புகைப்பட இலக்கம் 03

3.1.2 சிறந்த கால்நடை வளர்ப்பு நடைமுறைகள் மற்றும் மாதிரிப் பண்ணைகளை நிறுவுதல்

சிறந்த கால்நடை வளர்ப்பு நடைமுறைகளின் பயன்பாட்டைப் பிரபல்யப்படுத்தல், ஆரோக்கியமான கால்நடைகளைத் தேர்ந்தெடுத்து கொள்வனவு செய்து வளர்த்தல் மற்றும் அவற்றின் விலங்குகளின் நலவாழ்வு முதல் உகந்த பால் உற்பத்தியைப் பெறுவது வரை பண்ணையில் பின்பற்றப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மேம்படுத்துதல் மூலம் பண்ணையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது. சிறந்த கால்நடை வளர்ப்பு நடைமுறைகளின் பயன்பாட்டின் கீழ் வளர்ப்பு இல்லங்களை விருத்தி செய்தல், பாலின் தரம் மற்றும் உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் பால் பண்ணையை இலாபகரமாக்கும் நிலைக்கு உயர்த்துவதற்கு பண்ணையை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்காக அரச உதவியாக ஒரு பண்ணைக்கு 0.5 மில்லியன் ரூபாய் வீதம் நிதி வழங்கப்பட்டு, பயனாளிகளின் பங்களிப்பு மொத்த செயற்திட்ட மதிப்பீட்டில் 50% ஆக நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, 2024ஆம் ஆண்டு 30 பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக 15.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024 டிசம்பர் மாத இறுதியில், 29 மாதிரி பண்ணைகளின் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக முதலீடு செய்யப்பட்ட மொத்த தொகை 14.62 மில்லியன் ரூபாய் ஆகும். மேலும், 2023ஆம் ஆண்டின் பொறுப்புகளைத் தீர்ப்பதற்காக செலுத்த வேண்டிய 6.15 மில்லியன் ரூபாயும் இவ்வாண்டில் செலுத்தப்பட்டுள்ளது.

புகைப்பட எண் 04

3.2 சிறிய மற்றும் நடுத்தர கோழிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் செயல்திட்டத்தின் மூலம், கோழிப் பண்ணைகள் தொடர்பான உற்பத்திகளில் நாட்டைத் தன்னிறைவு அடையச் செய்து, கோழி உற்பத்திப் பொருட்களின் நுகர்வை ஊக்குவிக்கவும், கோழிப் பண்ணைகளை நிறுவுவதன் வாயிலாக புதிய தொழில் முயற்சியாளர்களை கோழிப் பண்ணை முகாமைத்துவத் துறைக்கு அறிமுகப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 35.00 மில்லியன் ரூபாயாகும். இதன் கீழ், இரண்டு முக்கிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன:

- ஒரு பயனாளிக்கு 10 ஒரு மாத வயதுடைய பெட்டைக் கோழிகள் அல்லது 15 பாலினம் தீர்மானிக்கப்படாத நாட்டுக் கோழிகள் வழங்குதல்.

இந்தச் செயல்பாட்டில், ஒவ்வொரு மாகாணத்தின் தேவைக்கேற்ப பெட்டைக் கோழிகள் அல்லது பாலினம் தீர்மானிக்கப்படாத நாட்டுக் கோழிகள் வழங்கப்பட்டதோடு, இதற்காக 27.73 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு, 2,687 பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. பயனாளிகளால் கோழி வளர்ப்பு இல்லங்கள் தயாரித்தல் மற்றும் கோழி உணவு வழங்குதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில், மதிய உணவு வழங்கும் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பொருளாதார சிரம நிலை அதிகம் காணப்படும் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு, அவர்களின் ஊட்டச்சத்து தேவையை மேம்படுத்தும் நோக்குடன், மதிய உணவுடன் முட்டையையும் வழங்கும் வகையில் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் கீழ், குறித்த பாடசாலைகளில் கல்வி பயிலும் 166 மாணவர்களின் பெற்றோருக்கு, ஒருவருக்கு தலா 10 கோழிக் குஞ்சுகள் (ஒரு மாத வயது) வழங்கப்பட்டது. இதற்காக மொத்தமாக 1.99 மில். ரூபாய் தொகை செலவிடப்பட்டது.

புகைப்பட இலக்கம் 05

3.3 பன்றி வளர்ப்புத் தொழிற்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சுற்றுச்சூழல் பிரச்சினைகளை குறைத்து, பன்றி வளர்ப்புத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கும் நோக்கில், 2024 ஆம் ஆண்டில் இந்த

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. இதற்காக 10.30 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஒரு முறையான கழிவு முகாமைத்துவ அமைப்பை உருவாக்குதல், பன்றி வளர்ப்பு இல்லங்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயிர்வாயு அலகுகளை நிறுவுதல் ஆகிய செயற்பாடுகள் மூலம், சூழலுக்கு உகந்த முறையில் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த செயற்திட்டம் வழிவகுக்கும். 2024 டிசம்பர் மாத இறுதியில், மேற்கு, வடமேற்கு, வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கான 64 பன்றி வளர்ப்புப் பண்ணைகளின் செயற்திட்ட அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டன. அதன்படி, அந்த மாகாணங்களில் 55 சூழல் நட்பு பன்றி வளர்ப்புப் பண்ணைகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 8.98 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பன்றி வளர்ப்புத் தொழிற்துறை செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டியிருந்த 1.84 மில்லியன் ரூபாய் தொகை, இந்த ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 06

3.4 ஆடு வளர்ப்புத் தொழிற்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

2024 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தின்படி, கால்நடை அபிவிருத்திப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்திற்காக, கிழக்கு, தெற்கு மற்றும் வட மாகாணங்களில் ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராமங்களை நிறுவுவதற்காக 15.45 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றில், கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் தலா 2 ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராமங்களும், தென் மாகாணத்தில் ஒரு ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராமமும் உருவாக்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் ஆடு வளர்ப்புக்கு அதிக சாத்தியக்கூறுகள் கொண்ட, மிருக வைத்தியப் பிரிவுகள் வளர்ப்புக் கொத்தணிக் கிராமங்களை உருவாக்கத் தேர்ந்தெடுக்கப்படுவதுடன், அந்தக் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த செயற்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டன. உயர்தர ஆடுகளை கொள்வனவு செய்வதற்கு அல்லது ஆட்டுக் கொட்டில்களை நிர்மாணிப்பதற்கு பயனாளியின் 50% பங்களிப்பின் கீழ் ஒரு பயனாளிக்கு 200,000 ரூபாய் பெறுமதியான உதவி வழங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில், ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராம செயற்திட்டத்திற்கு பின்வரும் விதத்தில் நிதி ஒதுக்கப்பட்டது.

மாகாணம்	மாவட்டம்	மிருக வைத்தியப் பிரிவு	ஒதுக்கப்பட்டது செய்த தொகை (மில். ரூபா)
கிழக்கு	திருகோணமலை	குச்சவெளி	6.12
	மட்டக்களப்பு	வவுணதீவு	
வடக்கு	மன்னார்	முருங்கன்	6.12
	வவுனியா	வவுனியா	
தெற்கு	மாத்தறை	வெலிகம	3.06
மொத்தம்			15.30

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் வெலிகம கால்நடை வைத்திய பிரிவைச் சேர்ந்த 15 பயனாளிகளுக்கு 3.06 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் 9 பயனாளிகள் மட்டுமே இந்த செயற்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்திருந்ததோடு, மீளாய்வுக் காலம் முடிவடைவதற்குள் அனைத்து மாகாணங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விடுவிக்கப்பட்டு செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 2024ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு 14.08 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 07

2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம்

01. சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

இலங்கையில் பால் உற்பத்தித் தொழிற்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கம், அந்தந்த பிரதேசங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து, பால் உற்பத்திப் பொருட்களின் நுகர்வை பிரபல்யப்படுத்துவதன் மூலம் சமூகத்தின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதாகும். இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் 06 சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் நிலையங்களை நிறுவி அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான முதலீடு செய்த தொகை 13.90 மில்லியன் யூரோ ஆகும். இந்த செயற்திட்டம் 01.01.2020 முதல் 31.12.2024 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

தொ/இல	பால் பதப்படுத்தும் நிலையம்	பௌதீக முன்னேற்றம் (%)	உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்த காலம்
01.	சிறிய அளவிலான பால் பண்ணை அபிவிருத்தி சங்கம், வாரியபொல	100	2023.07.04
02.	சக்சீட் இண்டர்நஷனல் (தனி) நிறுவனம், வென்னப்புவ	100	2024.01.19
03.	வரையறுக்கப்பட்ட பொலன்னறுவை மாவட்ட பால் வழங்குநர்களின் கூட்டுறவுச் சங்கம்	100	2024.04.05
04.	வரையறுக்கப்பட்ட நாவலப்பிட்டி பல்நோக்கு கூட்டுறவு சங்கம், நாவலப்பிட்டி	100	2024.01.04
05.	ஹெரிடேஜ் ஹெல விவசாய அபிவிருத்தி சங்கம், கெப்பிட்டிப்பொல	100	2025 ஆம் ஆண்டில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
06.	அத்தனகல்ல பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம்	100	2024.09.25

இந்த செயற்திட்டத்துடன் தொடர்பான வழங்கல் ஒப்பந்த உடன்படிக்கையானது 2019.02.27 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட 03 பயனாளிப் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 03 தனியார் பால் உற்பத்தி விவசாயச் சங்கங்கள் என்பவற்றுக்கு நாளாந்த 5000 லீட்டர் பால் உற்பத்திக் கொள்ளளவைக் கொண்ட சிறிய அளவிலான 06 பால் பதப்படுத்தும் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது இத்தொழிற்சாலைகளின் முழுமையான பரிசோதனை பணிகள் (commissioning) அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

செயற்திட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக, அரசுத் தரப்பின் தலையீட்டின் கீழ் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகள் அனைத்தும் 31.12.2023க்குள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டில் இதற்கான பின்தொடர் மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இரு முன்னேற்ற மதிப்பீட்டு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. பண்டாரகம ஹெரிடேஜ் ஹெல விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக பயனாளி தரப்பினரால் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. இந்த செயற்திட்டத்துடன் தொடர்பான இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு 12.56 மில்லியன் யூரோ நிதி செலவிடப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 08-09

கால்நடை வளங்கள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தும் பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

01. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

1.1 தொலைநோக்கு

இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்காக கால்நடைத் துறையை வழிநடத்தும் முன்னணி நிறுவனமாக இருத்தல்.

1.2. செயற்பணி

ஆரோக்கியமான விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் உயர் உற்பத்தித்திறனுடன் கூடியதாக உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பு செலுத்துவதன் மூலமும் உணவுகளின் சுகாதாரத் தன்மையை உறுதி செய்வதன் மூலமும் கால்நடை வளத் துறையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கு தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குதல்.

1.3 நோக்கம்

- கால்நடை நோய்களைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் வினைத்திறனான கால்நடை சுகாதார சேவையை உறுதிப்படுத்தல்.
- கால்நடை மரபணு வளங்ளை உச்ச நிலையில் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- தரமான விலங்கு உணவு மற்றும் உணவு வளங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- விலங்கு உணவு உற்பத்தித் தொழிற்துறையின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
- நிலைபேறான கால்நடை வள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கால்நடை தடுப்பூசிகள் மற்றும் ஏனைய கால்நடை உயிரியல் பொருட்களை உற்பத்தி செய்தல்.
- கால்நடை வளத் துறையுடன் தொடர்பான ஆய்வகச் சேவைகளைச் தரநிலைப்படுத்தப்பட்ட ஆய்வகங்களில் மேற்கொள்ளல்.
- கால்நடை வளத் துறை தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை தேவைப்படும் போது மறுபரிசீலனை செய்தல், அவற்றுக்கான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் கண்காணித்தல்.
- தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்.
- தகவல்களை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் பரப்புதல் மற்றும் தொழில்நுட்ப சேவைகளின் வழங்கலை உறுதி செய்தல்.
- கால்நடை உற்பத்திகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல், செயற்படுத்தல், மதிப்பீடு செய்தல்.
- முறையான கால்நடை வளர்ப்பு முறைகளை ஊக்குவித்தல் மற்றும் அதனுடன் தொடர்பானவற்றுக்கு உதவி வழங்குதல்.
- கால்நடைகளின் நலன் மற்றும் நலனோம்பலை உறுதிப்படுத்துதல்.
- திணைக்களச் செயற்பாடுகளின் வினைத்திறனான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துதல்.

1.4. பிரதான செயற்பாடுகள்

- உயர்ந்த உற்பத்தி திறன் கொண்ட உயர்ரக மாடு மற்றும் ஆட்டு விந்து உற்பத்தி செய்வது உட்பட தேசிய செயற்கைமுறை சினைப்படுத்தல் சேவையினை ஒருங்கிணைனத்தல்
- ஆடுகளின் வர்க்க மேம்பாட்டை உறுதி செய்தல்

- போசணைப் புல் மற்றும் சைலேஜ் உற்பத்தி மற்றும் புல் சந்தைப்படுத்தல் என்பவற்றை
- பிரபல்யப்படுத்துதல்.
- நோய்த் தடுப்புக்கான தடுப்பூசி வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- உள்நாட்டு தடுப்பூசி (கால் வாய் நோய், கருங்காலி நோய், தொண்டையடைப்பான், ரெனிகட்) மற்றும் ஏனைய உயிரியல் பொட்களை உற்பத்தி செய்தல்
- மடியழற்சியைத் தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் சுரப்புகளை உற்பத்தி செய்தல்
- சால்மனெல்லோசிஸ் மற்றும் ரனிகெட் நோய் கட்டுப்பாடு
- அதிக நோய்த் தாக்கம்கொண்ட பறவைக் காய்ச்சல் நோய்க்கு எதிராக வினைத்தினான முன் எச்சரிக்கை அமைப்பை நிறுவுதல்
- கால்நடை நோய்களைக் கண்டறியும் திறனை அதிகரிப்பதற்கு கால்நடை ஆய்வு மையங்களை வலுப்படுத்துதல்
- பால் பண்ணைகளின் சுகாதார தரத்தை விருத்தி செய்தல்.
- ஆய்வுகூட வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்தல்
- பால் உற்பத்தி தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை விருத்தி செய்தல்.
- கால்நடை வளத் துறைக்கான பகுப்பாய்வு மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- கள மட்டத்தில் விலங்குகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உள்நாட்டு சந்தையில் உயர்தர கால்நடைத் தீவனங்கள் கிடைப்பதை உறுதி செய்தல்
- கால்நடைப் உற்பத்திகள் மற்றும் உயிர் மூலப்பொருட்களின் ஒழுங்குறுத்துகை
- கோழி வளர்ப்பு தொடர்பான ஒழுங்குறுத்துகை விவகாரங்கள்
- விலங்கு தனிமைப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான ஒழுங்குறுத்துகை விவகாரங்கள்
- சர்வதேச வர்த்தகத்துக்கு உதவி வழங்குதல்.
- தனிமைப்படுத்தல் பிரிவுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் ஆய்வக வசதிகளை விருத்தி செய்தல்
- கால்நடை வள ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்
- கால்நடை வள டிப்ளோமாதாரர்களை உருவாக்குவதற்காக கால்நடை பராமரிப்புக் கல்லூரிகளை (கரந்தகொல்ல/ சீப்புக்குளம்) நடத்துதல்.
- விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தொடர் கல்வி நிறுவனத்தில் பயிற்சி மற்றும் கல்வித் திட்டங்களை நடத்துதல்
- இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மற்றும் கண்காட்சிகள் மூலம் தகவல்களைப் பரப்புதல்
- மாதிரி பண்ணை அலகு கண்காட்சிகள்
- விலங்கு தொழில்நுட்ப பூங்காவில் பல்வேறு பண்ணை அலகுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்.
- கால்நடை வளத் துறையின் சமூகப் பொருளாதார தாக்கம் பற்றிய ஆய்வுகளை நடத்துதல்
- கால்நடை வளங்கள் தொடர்பான புள்ளிவிவர வெளியீடுகளைத் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்
- சூழல் நட்பு கால்நடைப் பண்ணைகளுக்கு உதவி வழங்கல்
- விரிவாக்க சேவைகளை வழங்கல்

1.5 நிறுவனத்தின் ஊடாக அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

- இலக்கு 01: அனைத்து நிலைகளிலும் காணப்படும் வறுமையை நிறைவு செய்தல்.
- இலக்கு 02: பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசணை நிலையை அடைந்து நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்
- இலக்கு 08 : பொருளாதார அபிவிருத்தி வேகத்தை அதிகரித்தல்

1.6. 31.12.2024 திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்

தொ/இல	நிகழ்ச்சித் திட்டங்கள்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
1	மூலதன செலவுகள்	73.00	36.29	50
2	மீண்டுவரும் செலவுகள்	870.43	824.76	95
	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்			
1	கால்நடை சுகாதாரம் மற்றும் கால்நடை ஆராய்ச்சி	233.20	196.80	84
2	கால்நடைவள அபிவிருத்தி மற்றும் பயிற்சி	358.80	233.51	65
	விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் மற்றும் அமைச்சின் ஒதுக்கீடு			
1	உள்நாட்டு பால் உற்பத்தியை திறனாக மேம்படுத்துவதன் ஊடாக பாற் பண்ணையாளர்களின் வருமானத்தை உயர்த்துதல் மற்றும் பாற் பண்ணையாளர்களின் முயற்சியான்மை அபிவிருத்தி வேலைத்திட்டம்.	35.00	26.32	75
	வெளிநாட்டு செயற்திட்டம்			
1	FAO/TCP/SRI/3903 - தரமான புல் மற்றும் அவரையினங்களை இனங்காணல் மற்றும் அவற்றின் போசனை தரத்தை முகாமை செய்வதன் ஊடாக சிறிய அளவிலான பாற்பண்ணையாளர்களை மேம்படுத்தும் செயற்திட்டம்.	16.00	8.1	51
2	ஆய்வுகூட வலையமைப்பை வலுவூட்டுதல்	1.44	0.43	30

1.7. 31.12.2024 ஆம் திகதியளவில் அபிவிருத்திநிகழ்ச்சித் திட்டங்களின்பௌதீக முன்னேற்றம்

1. விலங்கு இனப்பெருக்கப் பிரிவு

1.1. விலங்கு இனப்பெருக்க செயற்திட்டம்

1.1.1. செயற்கை விந்தூட்டல் செயற்பாட்டு வேலைத்திட்டம்

செயற்கை விந்தூட்டல் செயற்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ், 31.12.2024 வரை 202,082 செயற்கை விந்தூட்டல்கள், 67,111 கர்ப்பப் பரிசோதனைகள், மற்றும் 61,189 கன்று பிறப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குண்டசாலை செயற்கை விந்தூட்டல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடை விந்து சொட்டுகளின் எண்ணிக்கை 216,292 ஆகும். செயற்கை விந்தூட்டல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், 180 செயற்கை விந்தூட்டல் தொழில்நுட்ப நிபுணர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

1.1.2. விலங்கு உணவு வளங்களை ஊக்குவித்தல்

இதன் கீழ், 36 புல் தொழில்முனைவோர் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு தொடர்புடைய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இனப்பெருக்க மையங்களில் புல் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ், குண்டசாலை செயற்கை விந்தூட்டல் மையத்தில் மேம்படுத்தப்பட்ட புல் பயிரிடுதலுக்குத் தேவையான நீர் வழங்கல் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்களில் புல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான இரு ஹே பெய்லர் இயந்திரங்கள் (Hay Bailer) கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான மாதிரி செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. புல் நடுகைப் பொருட்களைப் பெறுவதற்காக இதுவரை கோரப்பட்ட அனைத்து தேவைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

1.1.3. ஆட்டு வர்க்கங்களை விருத்தி செய்தல்

ஆட்டு மந்தையை விருத்தி செய்யும் பொருட்டு, இனப்பெருக்கத்திற்கு ஏற்ற ஆடுகளை விநியோகிக்கும் நோக்கில் 35 ஆடுகள் (ஆண் - 06, பெண் - 29) களத்திற்கு வெளியிடப்பட்டுள்ளன. இம்புலன்தண்ட ஆட்டு இனப்பெருக்க நிலையத்தின் Caprine Arthritis Encephalitis (CAE) நோய்

பரவியதன் காரணமாக, 2024 ஏப்ரல் மாதம் முதல் தற்காலிகமாக விலங்குகளை வழங்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

1.2. குண்டசாலை செயற்கை கருவூட்டல் மையத்தை மேம்படுத்துவதன் மூலம் உயர் தரமான கால்நடை விந்தணுச் சொட்டுகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் செயற்திட்டம்.

விபரம்	முன்னேற்றம்
கன்று மாடுகளை இறக்குமதி செய்தல் பிரேசிலியன் மில்கிங் கிர் - 03 ஜெர்சி - 02 ஃப்ரீசியன் - 02 சாஹிவால் – 05	பெறுகை செயல்முறை பின்பற்றப்பட்டு கன்று மாடுகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை என்பதன் காரணமாக தற்போது அரசுகளுக்கு இடையிலான (Government to Government) முறையின் கீழ் கன்று மாடுகளை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
உயிரியல் பாதுகாப்பு வேலி நிர்மாணம்	கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.
உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் செயற்கை கருவூட்டலுக்குத் தேவையான கால்நடை விந்தணு உற்பத்தியை வினைத்திறன் மிக்கதாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.3 தரமான புல் வகைகள் மற்றும் அவரையினத் தாவரங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவற்றின் போசணை நிலையை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சிறிய அளவிலான பால் உற்பத்தி விவசாயிகளை மேம்படுத்துவதற்கான வெளிநாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட இரு புல் மற்றும் அவரை இனத் தாவரங்கள் - *Stylosanthus guanensis var. guanensis* மற்றும் Napier hybrid CO-6) என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுடன் தொடர்புடைய 03 தாய் புல் நாற்றுமேடைகள் (பொலன்னறுவை செயற்கை கருவூட்டல் மையம்/ தெலஹார ஆட்டு இனப்பெருக்க நிலையம்/ கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் பண்ணை) நிறுவப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. மாகாண ரீதியாக 42 மாதிரி புல் நாற்றுமேடைகள் வடக்கு, ஊவா, தெற்கு, மத்திய, வடமத்திய, வடமேற்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் நிறுவப்பட்டுள்ளதுடன் இவற்றுக்கு 49 நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த செயற்திட்டத்தின் பயிற்சி நிகழ்ச்சிகளின் கீழ் 07 மாகாணங்களில் அதிகாரிகள், பயனாளி விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் 371 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

புகைப்பட இலக்கம் 10 – 12

2. கால்நடை ஒழுங்குமுறைகள் மற்றும் சட்டப் பிரிவு

2.1. விலங்குகளை அடையாளம் காணும் திட்டம்

இந்த செயற்திட்டத்தின் கீழ் கள விரிவாக்க அதிகாரிகளால் பதிவு செய்யப்பட்ட பண்ணைகள் கண்காணிக்கப்படுவதுடன் அங்குள்ள விலங்குகளின் காதுகளில் குறிகள் இடப்படுகின்றன. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது 81,720 விலங்குகளுக்கு காதுக் குறிகள் (ear tags) பொருத்தப்பட்டுள்ளதுடன் அச்சிடப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட காதுக் குறிகளின் எண்ணிக்கை 93,012 ஆகும். இது விலங்குகளின் எண்ணிக்கை குறித்த துல்லியமான தரவுகளை பராமரிப்பதற்கும், சட்டவிரோத விலங்குப் போக்குவரத்து மற்றும் அறுப்புகளை தடுப்பதற்கும், எதிர்கால பால் உற்பத்தியை முன்னறிவிப்பதற்கும், உற்பத்திப்பெருக்கம் அற்ற விலங்குகளை அகற்றுவதற்கும் உதவுகிறது.

2.2. விலங்கு தனிமைப்படுத்தல் அலகினை விஸ்தரித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல்.

இந்த செயற்திட்டத்திற்காக 292-02-03-06-2507 செலவுத் தலைப்பின் கீழ் 2024 ஆம் ஆண்டில் 4.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டு இந்த செலவு தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இரு பிரதான செயற்பாடுகளான கொழும்பு விலங்கு தனிமைப்படுத்தல் பணிமனையின் கூரை மற்றும் நுழைவாயிலை திருத்தம் செய்தல் மற்றும் கட்டுநாயக்க விலங்கு

தனிமைப்படுத்தல் பணிமனைக்கு 03 மடிக்கணனிகளைக் கொள்வனவு செய்தல் ஆகியவற்றுக்கு 3.03 மில்லியன் ரூபாய் நிதி செலுத்தப்பட்டது.

எனவே, 2024 ஆம் ஆண்டு மீதி 962,000 ரூபாய் நிதி 2024.10.29 ஆம் திகதி திருத்தம் செய்வதற்கு உட்படுத்தப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டமிடலுக்கு அமைய அதன் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு மூன்றாம் காலாண்டில் 04 அச்சு இயந்திரங்கள் (0.3 மில்லியன் ரூபாய்), ஒரு ஒளிப்படப்பிரதி இயந்திரம் (0.36 மில்லியன் ரூபாய்) மற்றும் 04 Micro Chip Readerகள் (0.31 மில்லியன் ரூபாய்) என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததோடு அதில் 04 Micro Chip Reader தவிர்ந்த ஏனைய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. எதிர்பார்த்த விலை மனுவிற்கு அமைய ஒப்பீட்டளவில் சந்தையில் விலை உயர்ந்ததன் காரணமாக 04 Micro Chip Readerகளைக் கொள்வனவு செய்ய முடியாமல் போனது.

2.3. தரப் பாதுகாப்பு வேலைத்திட்டம்

“தர பாதுகாப்பு மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை” வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுள் 2024 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட இலக்குகளாக கால்நடை தீவனம் தொடர்பான நடவடிக்கைகள், கால்நடை மருந்தக அதிகார சபையின் நடவடிக்கைகள், கால்நடை மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதிக்கு முன்அனுமதி வழங்குதல் மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் மீளாய்வுக் காலத்தினுள் 76% ஒட்டுமொத்த முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

03. கால்நடை சுகாதார அலகு

3.1. கால்நடைகளில் தொற்று நோய்களை தடுக்கும் வேலைத்திட்டம்

இந்த வேலைத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உள்ள கால்நடை நோய்களை கட்டுப்படுத்தும் நோக்குடன், கால்நடை நோய் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் கால்நடை விசாரணை மையங்களில் நோய் பரிசோதனைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், தொற்றுநோய்களுக்கு எதிரான தடுப்பூசி செலுத்தல் உள்ளிட்ட கால்நடை நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முழுமையாக இத்திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன. இதற்கிணங்க, 281,340 கால் வாய்நோய் தடுப்பூசி சொட்டுக்கள், 60,598 கருங்காலி நோய் தடுப்பூசி சொட்டுக்கள் மற்றும் 148,620 தொண்டையடைப்பான் நோய் தடுப்பூசி சொட்டுக்கள் களத்திற்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுவரை, 254,174 கால் வாய்நோய் தடுப்பூசிகள், 72,324 கருங்காலி நோய் தடுப்பூசிகள் மற்றும் 92,650 தொண்டையடைப்பான் நோய் தடுப்பூசிகள் களத்தில் ஏற்றப்பட்டுள்ளன.

3.2. கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும முட்டை ஏற்றுமதிக்கான வசதிகள் செய்து கொடுத்தல்

கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதியை மேம்படுத்துவது இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். அதன் பொருட்டு பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சல்மனெல்லா, ரெனிகட் மற்றும் பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சல்மனெல்லா நோய் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் கீழ் 89 கோழி இனவிருத்தி பண்ணைகள் மற்றும் 104 அடைகாப்பு நிலையங்கள் என்பவற்றை கண்கானிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரெனிகேட் நோய் கட்டுப்பாட்டின் கீழ் 5,280,600 தடுப்பூசிகள் வினியோகிக்கப்பட்டன. பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் 3,207 இரத்த மாதிரிகள் மற்றும் 19,146 எச்ச மாதிரிகள் மற்றும் Cloacal swabs என்பன பறவைக் காய்ச்சல் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ன.

3.3. கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களை இனங்காணல் மற்றும் தடுப்பு வசதிகளை மேம்படுத்துதல்

இந்த செயற்திட்டத்தின் கீழ், குறிப்பாக ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட அலங்கார மீன் பண்ணைகளில் விரைவாகவும், நியாயமானதும் மிகவும் இலாபகரமானதுமான முறையின் கீழ்

மூலக்கூற்று விஞ்ஞான பரிசோதனை மூலமாக நோய்களைக் கண்டுபிடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் ஊடாக குறித்த நோய்களை கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பண்ணை உரிமையாளருக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றன. இதற்கு மேலாக 2023 ஆம் ஆண்டு இறுதி காலாண்டு முதல் இந்த செயற்திட்டத்தின் மூலமாக ஏற்றுமதியை அடிப்படையாகக கொண்ட அலங்கார மீன் பண்ணைகளில் உயிரியல் பாதுகாப்பு பரீசோதனை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள்ளன.

திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட இரு தொழில்நுட்பக் குழுக்களில் ஏதாவது ஒரு குழுவினால் அந்த மீன் பண்ணைகளுக்குச் சென்று அங்கு உயிரியல் பாதுகாப்பிற்கு உரிய சிபாரிசுகள் வழங்கப்படுகின்றன. அதற்கு இணையாக கால்நடை பலனாய்வு உத்தியோகத்தரினால் அப்பண்ணைகளில் இருந்து வருடத்திற்கு இரண்டு முறை மாதிரிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதோடு தேவைப்படுமிடத்து அவை மத்திய கால்நடை பலனாய்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. மூலக்கூற்று உயிரியல் விஞ்ஞான பரிசோதனைகளுக்குத் தேவையான ஆய்வுகூட பொருட்கள் உட்பட பரிசோதனை தொகுதிகள் இந்த செயற்திட்டத்தின் ஊடாக மத்திய கால்நடை புலனாய்வு நிலையத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதானமாக அதிக ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட அலங்கார மீன் பண்ணைகள் பலவற்றினைக் கொண்ட மேல் மாகான மற்றும் வடமேல் மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு நாடு முழுவதும் இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

3.4 வனவிலங்கு நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம்

இந்த வேலைத்திட்டம் அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம், நுவரெலியா, குண்டசாலை, தம்புல்லை, ஹோமாகம, பெலன்னறுவை மற்றும் இரத்தினபுரி கால்நடை புலனாய்வு நிலையங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டது. அதன் ஊடாக வனவிலங்குகளில் நிலவுகின்ற கால்நடை நோய்கள் வீடுகளில் வளர்க்கும் மிருகங்கள் மற்றும் விவசாய விலங்குகளுக்கு பரவுவதை கட்டுப்படுத்தும் பொருட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைக்கு வனவிலங்கு வலயம் சார்ந்த மாவட்ட கால்நடை புலனாய்வு நிலையங்களின் ஊடாக வனவிலங்கு வலயத்தை உள்ளடக்கும் வகையில், நோய்களினால் இறந்து போன விலங்குகளது மரண பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய மாதிரிகள் ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, மாவட்ட கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் வனவிலங்கு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டு அறிவூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வேலைத்திட்டத்தின் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதன் முன்னேற்றம் 90% ஆகும்.

04. மனித வள அபிவிருத்தி அலகு

4.1 விலங்கு பரிபாலன டிப்ளோமாதாரர்களை உருவாக்கும்திறன் வலுப்படுத்தல்

31/12/2024 ஆம் திகதியளவில், கரந்தகொல்லை விலங்கு வளர்ப்புப் பாடசாலையில் 50 மாணவர்கள் NVQ 5/6 தர இரு வருட விலங்கு வளர்ப்பு டிப்ளோமா (2024/26 குழு) கற்கைநெறியில் கல்வி பயின்று வருகின்றனர். இதன் பிரகாரம், 15.10.2024 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சீப்புக்குளம் விலங்கு வளர்ப்புப் பாடசாலையின் NVQ 4 தர 6 மாத விலங்கு வளர்ப்பு டிப்ளோமா பாடநெறியும், 24 மாணவர்களுடன் தற்போது வரை வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

4.2. கால்நடை வளத் துறையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

ஏற்கனவே கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியான்மையாளர்கள் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விருப்பம் உள்ள மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு புதிய தொழில்நுட்பம் தொடர்பான அறிவு மற்றும் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 31/12/2024 திகதியளவில் 03 கண்காட்சிகளுக்கு அனுசரணை வழங்குவதற்கும் 18 தொலைக்காட்சி மற்றும் வீடியோ நிகழ்ச்சிகள் மற்றும் 51 வானொலி விளம்பர நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற்கும் முடியுமாக இருந்தது.

4.3. பயிற்சிக் கொள்ளளவை விருத்தி செய்தல்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மனித வள அபிவிருத்தி அலகின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற மிருக வைத்திய பட்டதாரிகளுக்கான உள்ளக பயிற்சிகளைப் பெற்றுக்

கொடுக்கும் திட்டத்தின் கீழ் புதிய மிருக வைத்திய பட்டதாரிகள் 78 பேருக்கு உள்ளக பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பதவியணியினருக்கு பயிற்சி தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் 35 பயிற்சி நிகழ்ச்சிகள் மீளாய்வு கால எல்லை முடிவுறுகின்ற போது நடாத்தப்பட்டு இருந்தன. அவ்வாறே தேவைக்கு ஏற்ப பண்ணையாளர்கள் மற்றும் ஏனைய முயற்சியாண்மையாளர்களுக்கு 05 பயிற்சி நிகழ்ச்சிகள் சீப்புக்குள விலங்கு வளர்ப்புப் பாடசாலையின் ஊடாக நடாத்தப்பட்டன.

4.4. உள்நாட்டு பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் ஊடாக பாற் பண்ணையாளர்களது வருமானத்தை உயர்த்தும் பாற்பண்ணை முயற்சியான்மை அபிவிருத்திசெயற்திட்டம்.

இந்த செயற்திட்டம் இலங்கையில் ஆறு மாகாணங்களில் 22 மிருக வைத்திய பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் செயற்படுத்தப்படுவதுடன், தற்போது தங்கி வாழ் நிலையில் காணப்படும் ஆயினும் உயர் உற்பத்தி திறனுள்ள பண்ணைகளுக்கு தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து கொடுப்பதன் மூலம் சிறிய அளவிலான பால் உற்பத்தி முயற்சியான்மையாளர்களாக மாற்றுவதை நோக்காக் கொண்டு மாகாண ரீதியாக 157 பாற் பண்ணையாளர்கள் (மத்திய - 20, வடமேல் - 63, ஊவா – 27, வடக்கு - 21, மேல் - 12, தெற்கு - 14) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளுக்கு பாற் பண்ணை பொருளாதார மொடியூல் (Economic model) மற்றும் 12 சிறந்த பண்ணை நிர்வாக நடைமுறைகள் (Best Practices) என்பவற்றை செயற்படுத்தும் பொருட்டு 18 பிரதான பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பண்ணையாளர்கள் மற்றும் உரிய உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டனர். இந்த முயற்சியான்மையாளர்களுக்கு பாற் பண்ணை முயற்சியான்மையாளர் கையேடுகள் மற்றும் குறிப்பு புத்தகங்கள் தயாரித்து அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. பயிற்சி நிகழ்ச்சிகள் நிறைவுற்றதும் சகல பண்ணையாளர்களுக்கும் வெவ்வேறாக 157 பண்ணை செயற்பாட்டு திட்டமிடல்கள் தயாரிக்கப்பட்டன.

புகைப்பட இலக்கம் 13-15

தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோருக்கு 150 தொழிலாளர் உடைகள் (overalls) மற்றும் 150 சோடி பூட்ஸ் காலணிகள், பால் கறக்கும் மாடுகளுக்கு 2,000 மடியழற்சி தடுப்பு மருந்துகள் (Mastitis dry cow infusions) மற்றும் வேரூன்றிய CO5 புல் துண்டங்கள் (10×300) என்பன வழங்கப்பட்டுள்ளன. பண்ணை செயல்பாட்டு திட்டமிடலின் மூலம் கண்டறியப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைய சிறந்த பண்ணை முகாமைத்துவ முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் இனங் கணப்பட்டுள்ளன. அவற்றுக்காக நிதி உதவி கோரிய அனைத்து மாகாணங்களுக்கும் தற்போது பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன் இந்த ஒதுக்கீடுகள் மூலம், மாகாணங்களுக்கூடாக விவசாயிகளுக்கு பால் கறக்கும் இயந்திரங்கள், புல் வெட்டும் இயந்திரங்கள், சைலேஜ் பீப்பாய்கள், கம்பளங்கள் மற்றும் புல் செய்கைக்குத் தேவையான நீர்ப்பாசன உபகரணங்கள் போன்ற அத்தியாவசிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக, மாட்டுத் தொழுவங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 6 மாகாணங்களில் நடமாடும் சிகிச்சை நிலையங்கள் நடத்தப்பட்டதுடன் இதனுடன் இணைந்ததாக பண்ணை விலங்குகளுக்கு தேவையான 750 பாக்கெட்டு கனிம கலவைகள், புழுமருந்துகள், உண்ணிகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தும் 450 மருந்து போத்தல்கள், 5 கிலோகிராம் Bypass Fat இன் 350 பாக்கெட்டுகள், மற்றும் கன்றுகளுக்கான 150 பால் ஊட்டும் பாட்டில்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

05. கால்நடை வள திட்டமிடல் மற்றும் பொருளாதார அலகு

5.1 சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்.

இதன் கீழ் கால்நடை வளத் துறையில் உற்பத்தி தரவுகள், கால்நடை எண்ணிக்கை, பண்ணை எண்ணிக்கை மற்றும் மிருக வைத்திய பணிமனைகளில் உள்ள மனித மற்றும் பௌதீக வள தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. அந்த தகவல்களுக்கு அமைய Livestock Statistical Bulletin, Livestock Outlook போன்ற வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன. கால்நடை வளத் துறையில் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு Poultry forecast, Poultry bulletin, Dairy bulletin என்பன வெளியிடப்படுகின்றன.

2024 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தின் ஊடாக கறவை மாடுகள், கோழி மற்றும் ஆடு வளர்ப்பு துறைகளின் கீழ் 04 சமூக பொருளாதார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பண்ணை பதிவுகளை இற்றைப்படுத்தும் தரவுத் தளம் நிறுவப்பட்டுள்ளதோடு அதனை வினைதிறனாகவும் முறையாகவும் நடாத்திச் செல்லும் நோக்கில் சகல மாகாணங்களிலும் உள்ள மிருக வைத்தியர்கள் மற்றும் ஏனைய பதவியணியினருக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. மீளாய்வு கால முடிவின் போது பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த பண்ணைகளின் எண்ணிக்கை 83,262 ஆகும்.

5.2. மிருக வைத்திய பணிமனைகளில் சேவை வழங்கும் வலையமைப்பை விருத்தி செய்தல் (விலங்கு தனிமைப்படுத்தல் நிலையங்களுடன் தொடர்புடைய ஏற்றுமதி – இறக்குமதித் தொகுதியின் வலையமைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்)

இந்த செயற்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கு கால்நடை ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டப் பிரிவின் ஊடாக கால்நடை தனிமைப்படுத்தல் நிலையங்களை தொடர்புபடுத்தி டிஜிட்டல் வலையமைப்பு ஒன்றினை உருவாக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை அதன் மென்பொருட்கள் தொடர்பான உரிய பெறுகை நடவடிக்கைகள் நிறைவடைந்து உள்ளதுடன் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் இது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கால்நடை ஆராய்ச்சி நிறுவனம், கால்நடை ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டப் பிரிவு மற்றும் விலங்கு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குக் கணினிகளை கொள்வனவு செய்வதுடன் தொடர்பான பெறுகை அறிக்கைக்கு ஒப்புதல் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இது 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், இந்த செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திணைக்களத்தின் புதிய இணையத்தளம் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முழுமையாக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

6. மிருக ஆராய்ச்சி நிறுவனம்

6.1 உயர் தரத்தினாலான கால்நடை தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்

2018 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த செயற்திட்டத்தின் மூலம் உயர் தரத்தினாலான கால்நடை தடுப்பூசிகள் உள்நாட்டில் உற்பத்தி செய்வது மேலும் விரிவாக்கப்பட்டது. தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற தடுப்பூசி வகைகளின் தரத்தை மேலும் மேம்படுத்தல், புதிய தடுப்பூசிகள் வகைகளைப் புதிதாக உற்பத்தி செய்தல் என்பன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. அதற்கு அமைய இந்த செயற்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு தொண்டையடைப்பான், கருங்காலி மற்றும் ரெனிகட் ஆகிய நோய்களுக்கான தடுப்பூசி வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி வகை	வருடாந்த இலக்கு	31.12.2024 அளவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளின் அளவு
தொண்டையடைப்பான் (Alum)	40,000	40,020
தொண்டையடைப்பான் (Oil adjuent)	150,000	150,000
கருங்காலி	130,000	65,868
ரெனிகட்	4,571,400	4,891,800
தனியார் நிறுவனங்களுக்கு கேள்விக்கு ஏற்றவாறு தடுப்பூசி உற்பத்தி செய்து வினியோகிக்கப்படும்.		
கோழி காலரா	கேள்விக்கு ஏற்றவாறு	235,080
பன்றி தொண்டையடைப்பான்		3,060
ரெனிகட்		1,900,600

6.2. உணவு பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கு விலங்கு உணவு மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் தரத்தை சான்றுறுதிப்படுத்துதல்

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்தின் மூலம், விலங்கு உணவு மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதியை எளிதாக்குவதுடன் உணவு பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகிறது. இந்த செயற்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் விலங்கு உணவு மற்றும் விலங்கு உற்பத்திப் பொருட்களின் 6,654 மாதிரிகளின் தரம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

6.3. கால்நடை வள ஆராய்ச்சி வேலைத்திட்டம்

இந்த செயற்திட்டத்தின் கீழ் தற்போது 27 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கோரிக்கையின் பேரில் மாதிரி பரிசோதனைகள் மற்றும் உயிரியல் உற்பத்திப் பொருட்களைத் தயாரித்தல் ஆகிய செயற்பாடுகள் இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

செயற்பாடு	வருடாந்த இலக்கு	31.12.2024 அளவில் முன்னேற்றம்
உயிரியல் உற்பத்திப் பொருட்கள்	கேள்விக்கு ஏற்றவாறு	
மடி வீக்கத்தை கண்டறிவதற்கான CMT பிரதிபொருள்		164 லீட்டர்
புல்லோரம் (Pullorum) பிறபொருளெதிரியாக்கி மருந்து		69,500
MRT பிறபொருளெதிரியாக்கி மருந்து		10,000
காம்பு நனைப்பு கரைசல் (Teat Dip Solution)		188 லீட்டர்

6.4. கால் மற்றும் வாய் நோய் தடுப்பு மருந்து உள்நாட்டு உற்பத்தி

இந்த செயற்திட்டத்தின் கீழ் உள்நாட்டில் கால் மற்றும் வாய் நோய் தடுப்பு மருந்துகள் (Foot and Mouth Disease Vaccine) தயாரிக்கப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில் 300,000 தடுப்பு மருந்து சொட்டுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த நிலையில், 31.12.2024 வரை 295,380 தடுப்பு மருந்து சொட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

6.5. மடியழற்சி நோய்க் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம்

இந்த திட்டத்தின் கீழ், 30,000 மடியழற்சி நோய்க் கட்டுப்பாட்டு மருந்துகளைத் உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில், 21,588 மடியழற்சி கட்டுப்பாட்டு மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

02. மில்கோ (தனியார்) லிமிடெட்

2.1. தொலைநோக்கு

இலங்கையின் சிறந்த போசணைமிக்க உணவு வகைகளை வழங்கும் நிறுவனமாக மாறல்.

2.2 பணிக்கூற்று

உள்நாட்டுப் பால் பண்ணையாளர்களை வலுப்படுத்துவதன் மூலம் பசுமையான பால் உற்பத்தியில் இலக்காகக் கொள்ளப்பட்ட வளர்ச்சியை அடைவதில் முனைப்பான பங்குதாரராக இருத்தல் மற்றும் நுகர்வோருக்கு மலிவு விலையில் போசணைமிகு உணவு வகைகளை வழங்கும வண்ணம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொடர்ச்சியான முன்னேற்ற அணுகுமுறைகளை பின்பற்றுதல்.

2.3 நோக்கங்கள்

i.) உயர் தரத்தையுடைய பால் மற்றும் அதனைக் கொண்டு தயாரிக்கும் உணவுப் பொருட்களை வழங்குதல்.

ii.) புதிய பால் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைய வழிவகுக்கும் வகையில் பங்களிப்புச் செலுத்துதல்.

iii.) புதிய பாலில் நாடு தன்னிறைவு அடைவதற்குப் பங்களிப்பு செலுத்துதல்.

iv.) உள்நாட்டு பால் பண்ணையாளர்களை வலுப்படுத்துதல்.

v.) உள்நாட்டு பால் தொழிற்துறை மற்றும் நிறுவனத்தின் இருப்பு மற்றும் அபிவிருத்தியை உறுதி செய்தல்.

vi.) செயற்பணிக்கு பங்களிப்பு செலுத்தும் தரப்பினரின் திருப்தியை உறுதி செய்தல்.

2.4. பணிகள்

மில்கோ நிறுவனம் 03 பிரதான துறைகளின் ஊடாக தனது செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

i.) உள்நாட்டு பால் பண்ணையாளர்களின் பால் விளைச்சலை சேகரித்தல்

ii.) பால் தொடர்பான உற்பத்திளை மேற்கொள்ளல்

iii.) குறித்த உற்பத்திகளை "ஹைலண்ட்" வியாபார பெயரில் நாடு முழுவதும் விநியோகித்தல்

2.5 நிறுவனம் அடைய வேண்டிய நிலையான வளர்ச்சி இலக்குகள்

இலக்கு 1: அனைத்து இடங்களிலும் உள்ள அனைத்து வகையான வறுமையையும் ஒழித்தல்.

இலக்கு 2: பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாடு என்பவற்றை அடைதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.

இலக்கு 8: அனைவருக்கும் முழுமையான மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தி, முழுமையான மற்றும் பயனுறுதிமிக்க தொழில்கள் மற்றும் கௌரவமான வேலை வாய்ப்புகள் என்பவற்றை ஊக்குவித்தல்.

2.6. நிதி முன்னேற்றம்- 31.12.2024 திகதி வரை

நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31.12.2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற்றம் (%)
மூலதன செலவுகள்	687.00	65.00	9
மீண்டுவரும் செலவுகள்	17,993.00	15,613.00	87

2.7. பௌதீக முன்னேற்றம்- 31.12.2024 திகதி வரை

1. தினசரி 100 லிட்டர் வீதம் பால் உற்பத்தி செய்யும் பண்ணைகளைவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் முன்முயற்சியின் கீழ், நாளொன்றுக்கு 100 லீற்றர் வரை பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பால் பண்ணைகளை நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி செய்யும் ஒரு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, உற்பத்தித் திறனினை அடிப்படையாகக்கொண்டு, ஒரு நாளைக்கு 65,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் இதற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்ட 650 பால் பண்ணைகளைத் மில்கோ நிறுவனம் தேர்ந்தெடுத்தது.

இந்த பால் பண்ணையாளர்களுக்கு தேவையான தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவை வழங்குவது மில்கோ கள அலுவலர்கள் மற்றும் 'சந்தை சார்ந்த பால் பண்ணை விவசாயிகள் அபிவிருத்தித் திட்டத்தின் (MOD)' அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2023 ஆம் ஆண்டில், பயிற்சித் திட்டங்கள் மூலம் அறிவை வழங்குதல், 10 பிரதான செயல்திறன் குறிகாட்டிகளின் கீழ் ஒவ்வொரு பண்ணைக்கும் தனித்தனியாக பிரத்தியேக பண்ணை திட்டம் தயாரிக்கும் பணிகள் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில், 624 பண்ணை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் 517 பண்ணை திட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31/12/2024 ஆம் திகதியளவில் அதன் ஒவ்வொரு பிரதான செயல்திறன் குறிகாட்டிகளிலும் காணப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு.

தொ/இல	செயல்திறன் குறிகாட்டி	முன்னேற்றம் (%)
01	தொடர்ச்சியாக குடிநீர் வழங்கல்	89
02	ஆண்டு முழுவதும் தரத்தில் சிறந்த புற்களை வழங்குதல்	80
03	கறவை மாடு வளர்ப்பு	78
04	கன்றீனா இளம்பசு வளர்ப்பு	57
05	பசுக் கன்று வளர்ப்பு	59
06	சைலேஜ்/பேழைப்பதனம் தயாரித்தல் மற்றும் போசணை	49
07	முழுமையான கலப்பு தீவன பங்கீடு (TMR) உருவாக்குதல் மற்றும் போசணை	59
08	பிறந்து 6 மணி நேரம் கழித்து தாயிடமிருந்து கன்றுகளைப் பிரித்தல்.	58

தொ/இல	செயல்திறன் குறிகாட்டி	முன்னேற்றம் (%)
09	கால்நடைக் கலவை முகாமைத்துவம்	45
10	கழிவு முகாமைத்துவம்	68

புகைப்பட இலக்கம் 16 -17

2. பசும் புல் வளர்ப்புச் செயற்திட்டம்

இந்த செயற்திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டில், நாடளாவிய ரீதியில் 2,000 ஏக்கர் நிலப் பரப்பில் பசும் புல் வளர்ப்புச் செய்வதற்கும் 100,000 விலங்குணவு மரங்களைப் (fodder trees) பயிரிட்டு நிர்வகிக்கவும் திட்டமிடப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டு இறுதியளவில், மில்கோ கள அலுவலர்களின் வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றின் கீழ், 575 ஏக்கருக்கும் அதிகமான நிலப் பரப்பில் தீவனப் புல் வகைகள் நடப்பட்டதுடன், 60,533 விலங்குணவு மரங்கள் நடப்பட்டுள்ளன. இதற்கான செலவுள் சம்பந்தப்பட்ட விவசாயிகளால் பொறுப்பேற்கப்பட்டன.

புகைப்பட இலக்கம் – 18

3. சிறிய அளவிலான விவசாய வணிக பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டம்(SAPP)

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் (IFAD) இலங்கையில் அமுல்படுத்தப்படும் சிறிய அளவிலான விவசாயப் பங்கேற்புத் திட்டம் (SAPP) மில்கோ நிறுவனத்துடன் இணைந்து 3,000 பால் பண்ணையாளர்களை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு ஊவா, மத்திய, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் கீழ், 2024ம் ஆண்டின் இறுதியில், 1,822 கால்நடைக் கொட்டகைகள், 51 விவசாயக் கிணறுகள், 568 அசொல்லா குளங்கள் மற்றும் 3 உயிர் வாயு அலகுகள் என்பவற்றை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன், 20 புல் துண்டாக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 285 பால் பண்ணையாளர்களுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 19 - 20

4. கால்நடை இனப்பெருக்கத்தை செயற்திறன்மிக்கதாக மாற்றுதல்

பண்ணைகளில் உள்ள கறவை மாடுகளின் நோய்களை பண்ணைகளிலே கண்டறிந்து சிகிச்சை அளித்தல், நோய் தடுப்பு ஆலோசனைகள் வழங்கல் மற்றும் உடல்நலப் பிரச்சினைகளை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நடமாடும் கால்நடை முகாம்களை நடாத்தல் மற்றும் செயற்கை கருவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றை மில்கோ நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் 1,140 நடமாடும் கால்நடை மருத்துவ முகாம்களை நடத்தவும், 5,000 செயற்கை கருவூட்டல்களை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக,, 2024 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும், 662 கால்நடை மருத்துவ முகாம்கள் மற்றும் 5,961 செயற்கை கருவூட்டல் நடவடிக்கைகள் என்பன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக மில்கோ நிறுவனம் சுமார் 4.00 மில்லியன் ரூபாய் நிதி செலவிட்டுள்ளது.

5. அதிக பால் உற்பத்திக்காக மாடுகளுக்கு குடிநீரைத் தொடர்ச்சியாக வழங்குதல்

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கறவை மாடுகளுக்குத் தொடர்ச்சியாகக் குடிநீரைப் பெற்றுக் கொடுப்பது மிகவும் அவசியமாகும். இந்த நடைமுறையை விவசாயிகள் பின்பற்ற ஊக்குவிக்கும் வகையில், 2024 ஆம் ஆண்டில் 500 நீர்த் கொள்கலன்களை விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், மொத்தச் செலவில் பாதித் தொகையை விவசாயிகளிடமிருந்து பெறுவதன் மூலம் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மத்திய, வடமேற்கு, மேற்கு, வடமத்திய, ஊவா மற்றும்

சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள விவசாயிகளுக்கு 229 குடிநீர் கொள்கலன்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

புகைப்பட இலக்கம் - 21

6. பால் பண்ணையாளர்களுக்கு பயிற்சிச் செயலமர்வுகளை நடத்துதல்

வினைத்திறன் மிக்க, பயனுறுதிமிக்க மற்றும் தொடர்ச்சியான பால் உற்பத்தியை நிலைநிறுத்தும் நோக்குடன், மில்கோ நிறுவனத்தின் கள ஊழியர்கள் நடைமுறை ரீதியான அனுபவ அறிவையும் தத்துவார்த்த அறிவையும் பால் பண்ணையாளர்களுக்கு வழங்கி வருகின்றனர். மேலும், அவர்களின் திறன்களை மேம்படுத்தி, உற்பத்தி வரம்புகளை அதிகரிக்க ஊக்கமளிக்கும் வகையில், தொடர்ச்சியான பயிற்சி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய, 2024ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 5,425 பால் பண்ணையாளர்களுக்குப் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டு, 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் 5,150 பால் பண்ணையாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்காக மில்கோ நிறுவனத்தினால் செலவிட்ட தொகை சுமார் 3.00 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 22

03. தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

3.1. தொலைநோக்கு:

நிலையான பண்ணை விலங்கு உற்பத்தியின் முன்னோடியாக இருக்க வேண்டும்.

3.2. செயற்பணி:

விலங்கு பொருட்களில் தன்னிறைவுக்கான தேசிய தேவைக்கு பங்களிப்பு செய்தல்.

3.3. நோக்கங்கள்

- உள்நாட்டு விவசாயிகளுக்கு இன விருத்திக்குத் தேவையான விலங்குகளை வழங்குதல்.
- கால்நடை வள மற்றும் விவசாயப் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தல்
- கால்நடை வளத் துறையில் உள்ள விவசாயிகள், மாணவர்கள், டிப்ளோமாதாரிகள், கால்நடை வளத் துறையில் வேலை வாய்ப்புகளை எதிர்பார்த்து நிற்போர் மற்றும் முதலீட்டாளர்களுக்கு கால்நடை வளம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- விற்பனை வலையமைப்பை நெறிப்படுத்துதல்
- சபைக்குச் சொந்தமான நிலங்களில் பழங்கள் மற்றும் ஏனைய பொருளாதார பயிர்களை பயிரிடுவதன் மூலம் வருமானத்தை அதிகரித்தல்

3.4. பணிகள்

- கால்நடை வள இனவிருத்தி மற்றும் மேம்பாடு
- விவசாயிகளுக்கு நியாயமான விலையில் இனவிருத்திக்குப் பொருத்தமான, உயர்தர விலங்குகளை வழங்குதல்
- மக்களுக்குத் தேவையான, தரத்தில் சிறந்த பால், இறைச்சி, முட்டை, தேங்காய், காய்கறி வகைகளை உற்பத்தி செய்தல் மற்றும் நியாயமான விலைக்கு விற்பனை செய்தல்.
- நிலைபேறானதன்மை மற்றும் உகந்த நிலப் பயன்பாட்டிற்காக பண்ணைகளில் கால்நடை வளங்கள் மற்றும் பயிர் வகைகளை ஒருங்கிணைந்த விவசாய முறையில் பேணுதல்.
- தென்னஞ் செய்கையின் மூலம் கிடைக்கப் பெறும் மேலதிக வருமானத்தைப் பயன்படுத்தி நிலைபேறானதன்மையை அடைய பண்ணை நடவடிக்கைகளை உகந்த அளவில் மேற்கொள்ளல்.
- புதிய தொழில்நுட்பம், நிபுணத்துவம் மற்றும் மூலதனம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம், செலவுகளைக் குறைக்கவும், தயாரிப்பு போட்டித்தன்மையை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- இலாபகரமான வணிகத்திற்கான சிறந்த சந்தைப்படுத்தல் உத்திகளுடன் புதிய சந்தை வாய்ப்புகளை ஆராய்தல்

3.5. நிறுவனம் அடைய வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

- இலக்கு 1 – அனைத்து இடங்களிலும் நிலவும் அனைத்து விதமான வறுமையை நிறைவுக்குக் கொண்டுவரல்
- இலக்கு 2 – பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.
- இலக்கு 15: நிலத்தி மீது வாழ்க்கை

3.6. 31.12.2024 திகதி வரையிலானநிறுவனத்தின்நிகழ்ச்சித் திட்டங்களின்நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31/12/2024 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)	நிதி முன்னேற் றம் (%)
1	மூலதன செலவுகள்	576.00	223.83	39
2	மீண்டுவரும் செலவுகள்	6,826.00	4,525.42	66
	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்			
1.	மூடிய கோழி வளர்ப்பு இல்லங்களை அமைத்தல்	60.00	53.63	89
2.	மாட்டுக் கொட்டகை அமைத்தல்	5.00	4.80	96
3.	100 ஏக்கர் தென்னை ஊடுபயிர்ச் செய்கை	2.20	3.93	179

3.7. 31.12.2024 ஆம் திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

- மூடிய கோழி வளர்ப்பு இல்லங்களைஅமைத்தல்

இலங்கையில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் சந்தித்து வரும் ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளின் கிடைப்புப் பற்றாக்குறையை நீக்கி, அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன், ஒரே நேரத்தில் சுமார் 5,000 கோழிகளை பராமரிக்கக்கூடிய நவீன வசதிகளுடன் கூடிய மூடிய கோழி வளர்ப்பு நிலையம் ஒன்றை நிறுவ தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டத்திற்காக 48.4 மில்லியன் ரூபாய் (வரி விலக்குடன்) முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புகைப்பட எண் 23

- போசணைப் புல் வகைகளை வளர்த்தல்

நிலைபேறான கால்நடை வள அபிவிருத்திக்கு உதவுதல் மற்றும் உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரித்தல் என்பவற்றுக்கு பால் உற்பத்தியாளர்களுக்கு சலுகை விலையில் போசணைமிகு புல் வகைகளை வழங்கும் ஒரு தேசிய வேலைத்திட்டத்தை தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை ஆரம்பித்துள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ்,, சபைக்கு சொந்தமான பண்ணைகளில் சோளம், சோள சிறுதானியம் போன்ற தானிய வகைகள் பயிர் செய்யப்பட்டதுடன் பால் பண்ணையாளர்களின் தேவைக்கேற்ப போசணைப் புல் வகைகள் வழங்கப்பட்டன.

புகைப்பட எண் 24

மேலும், மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்கு இணையாக, பண்ணைகளில் சைலேஜ் (Silage) உற்பத்தி நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த சைலேஜ், தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் விற்பனை நிலையங்கள் வழியாக விவசாயிகளுக்கு சலுகை விலையில் கிடைக்கும் வகையில் விற்பனை செய்யப்படுகிறது. இதன் கீழ், விவசாயிகளுக்கு உயர்தர கால்நடை தீவனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி, நாட்டின் பால் உற்பத்தி அளவை அதிகரிக்கும் நோக்குடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

புகைப்பட எண் 25

- மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் புதியNLDB விற்பனை நிலையத்தை திறத்தல்

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் விற்பனை வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் புதிய விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த மூலோபாய முன்முயற்சியானது தரமான மற்றும் போசணைமிகு NLDB தயாரிப்புகளுக்கான அணுகலை சுகாதாரத் துறைசார் சமூகங்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவதில் ஒரு முக்கியமான அத்தியாயத்தை திறந்துள்ளது.

புகைப்பட இலக்கம் 26

04. வ/ப மகாவலி கால்நடை வியாபார நிறுவனம்

4.1. தொலைநோக்கு

ஒரு நாள் வயதுடைய உயர் தரத்திலான புரொய்லர் கோழிக் குஞ்சுகள் மற்றும் புரொய்லர் கோழி இறைச்சியை உள்நாட்டு சந்தையில் நியாயமான விலையில் வழங்கும் முன்னணி உற்பத்தியாளராகுதல்.

4.2. செயற்பணி

சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவாக நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு நாள் வயதுடைய புரொய்லர் கோழிக் குஞ்சுகள் மற்றும் புரொய்லர் கோழி இறைச்சி என்பவற்றின் தரத்தை மேம்படுத்துதல்.

4.3. நோக்கங்கள்

சந்தை விலைச் சமநிலையை பேணும் நோக்கத்துடன் மனித நுகர்வுக்குத் தேவையான கோழி இறைச்சி மற்றும் முட்டை எனபவற்றை உற்பத்தி செய்தல் மற்றும் ஒரு நாள் வயதுடைய புரொய்லர் கோழிக் குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்தல்

மஹாவலி "எச்" வலய விவசாயிகளை விவசாயக் கைத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரித்தல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் நலன்புரி வசதிகளை ஏற்படுத்துதல்.

4.4 பிரதான துறைகள்

உயர்தர ஒரு நாள் வயதுடைய புரொய்லர் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்தல் மற்றும் பிராய்லர் கோழி இறைச்சி உற்பத்தி

4.5. பணிகள்

i. இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விலங்குகளைக் கொண்ட தாய்க் கோழித் தொகுதியொன்றை பராமரித்தல்.
ii. அரை தானியங்கி குஞ்சு பொரிப்பகம் ஒன்றை செயற்படுத்துதல்
iii. வணிக ரீதியான ஒரு பிராய்லர் அலகை இயக்குதல்
iv. சுகாதாரமான முறையிலும் தர நிர்ணயங்களுக்கு அமைவாகவும் கோழி இறைச்சியை உற்பத்தி செய்வதற்கு அரை தானியங்கி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நடத்துதல்.
v. பன்றி வளர்ப்பு அலகொன்றை செயற்படுத்துதல்.
vi. நிறுவனத்தின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான ஒரு விற்பனை நிலையத்தை நடாத்துதல்

4.6. 31.12.2024 திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்

தொ/ இல	நிகழ்ச்சித் திட்டம்	2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)	31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)
1	மூலதன செலவுகள்	18.40	23.10
2	மீண்டுவரும் செலவுகள்	196.28	255.60

அத்தியாயம் 03

டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1. நிதிச் செயலாற்றுகை அறிக்கை

ஏசீஏ- எப்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 ரூ		குறிப்பு	உண்மை நிலை 2024 ரூ	உண்மை நிலை 2023 ரூ	
-	**வருமானப் பெறுகைகள்**				
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீஏ-1
390,000,000	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	86,430,015	961,121,370	
390,000,000	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		86,430,015	961,121,370	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		22,762,348,930	41,230,730,448	ஏசீஏ-3
-	வைப்புகள்		96,911,906	350,558,583	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		108,271,180	62,787,232	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**22,967,532,016**	41,644,076,263	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**23,053,962,031**	42,605,197,633	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		159,254,397	558,315,650	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		22,894,707,634	42,046,881,983	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**				
2,475,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	2,540,698,945	1,816,187,749	ஏசீஏ-2(ii)
906,950,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	656,110,596	364,109,812	ஏசீஏ-2(ii)
45,006,350,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	48,459,517,438	59,295,959,744	ஏசீஏ-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீஏ-2(ii)
1,000,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	183,374	505,589	ஏசீஏ-2(ii)
48,389,800,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**51,656,510,353**	61,476,762,894	
	மூலதனம் செலவினம்				
130,500,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	56,441,952	31,933,835	ஏசீஏ-2(ii)
8,168,670,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	4,112,529,144	449,440	ஏசீஏ-2(ii)
13,833,000,000	மூலதன மாற்றல்கள்	12	8,811,486,846	4,751,043,175	ஏசீஏ-2(ii)
2,000,000,000	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	1,947,579,800	4,216,929,000	ஏசீஏ-2(ii)
13,000,000	திறன் விருத்தி	14	5,034,812	4,204,589	ஏசீஏ-2(ii)
13,567,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	10,212,201,739	15,095,832,979	ஏசீஏ-2(ii)
37,712,670,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**25,145,274,293**	24,100,393,018	
	வைப்புக் கொடுப்பனவுகள்		89,778,157	368,430,926	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		219,295,950	91,400,534	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		309,074,108	459,831,460	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		77,110,858,754	86,036,987,372	
-	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		(54,216,151,120)	(43,990,105,388)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(54,218,905,365)	(43,990,105,388)	ඒසීඒ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		2,754,245		ඒසීඒ-3
			-	-	

3.2. நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

ஏசீஏ -பீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2024 ரூபா	2023 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண	ஏசீஏ-6	4,111,761,351	2,972,936,441
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	337,466,402	226,441,631
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	2,754,245	-
மொத்த சொத்துக்கள்		**4,451,981,998**	**3,199,378,072**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		206,093,422	110,185,725
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		4,111,761,351	2,972,936,441
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	63,000,000	63,000,000
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	68,372,979	53,255,906
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	2,754,245	-
மொத்தப் பொறுப்புக்கள்		**4,451,981,998**	**3,199,378,072**

பக்க இலக்கம் 07 முதல் 77 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 78 முதல் 152 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கள பணிப்பாளர்(நிதி)/ ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர் :
பதவி :	பதவி :	திகதி : 2025/02/27
திகதி : D.P. Wickramasinghe, Secretary, Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation, 80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road, Battaramulla.	திகதி : D.P. Wickramasinghe, Secretary, Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation, 80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road, Battaramulla.	L.P.S. Kumara, Chief Finance Officer, Ministry of Agriculture and Plantation Industries, No. 80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Avenue, Battaramulla.

3.3. காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை

ஏசீஏ- சீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2024 ரூபா	2023 ரூபா
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
மொத்த வரிப் பெறுகைகள்		
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்		
இலாபம்		
வருமானம் அல்லாத பெறுகைகள்		
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	192,983,847	200,548,923
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	22,762,348,930	41,230,730,448
முற்பணங்களை அறவிடல்	88,551,601	48,849,720
வைப்புக்களின் பெறுகை	96,911,906	350,558,583
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	23,140,796,285	41,830,687,675
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	2,553,780,522	1,603,807,811
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	15,176,218,129	146,970,620
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	58,871,340	13,682,988
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	159,254,397	558,315,650
முற்பணக் கொடுப்பனவு	146,641,299	89,138,065
வைப்புக் கொடுப்பனவு	89,778,157	368,430,926
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	18,184,543,845	2,780,346,060
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ) =(அ)-(ஆ)	4,956,252,440	39,050,341,615
<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	4,953,498,195	39,050,341,615
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	4,953,498,195	39,050,341,615
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) =(ஈ)-(உ)	(4,953,498,195)	(39,050,341,615)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	2,754,245	-
<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	A -
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
<u>*கழி - பகிர்ந்ததளிக்கப்பட்ட காசு:*</u>		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ) =(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ) =(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.4. நிதி அறிக்கை குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1.) *தயாரிப்பின் நோக்கம்*
இந்த நிதிநிலை அறிக்கைகள் அரசு நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 மற்றும் 16.12.2024 தேதியிட்ட பொதுக் கணக்கு வழிகாட்டுதல்கள் எண். 06.'.2024 ஆகியவற்றின் விதிகளின்படி தயாரிக்கப்பட்டுள்ளன.

2.) அறிக்கையிடல் காலப்பகுதி
இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2024 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3.) அளவீட்டுக்கான அடிப்படை
நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4.) வருமானத்தை அடையாளங்காணுதல்
நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5.) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு
சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6.) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7.) காசு மற்றும் காசுக்கு சமமானவை
காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் “அறிக்கையிடலின் அடிப்படை” என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.
* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே ”அறிக்கையிடலின் அடிப்படை” இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ஏசீஏ - 1

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்: கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செலவின தலைப்பு இல: 118

ரூபா

அரசிறை குறியீடு	வருமானத் தலைப்பு	குறிப்பு	வருமான மதிப்பீடு (1)		வருமானத்தைத் திரட்டுதல் (2)			(3)	ருமானத்திலிருந்து மீளச்செலுத்துத (4)			(5)
			மூல மதிப்பீடு 1(i)	திருத்திய மதிப்பீடு 1(ii)	தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால் திரட்டப்பட்டது 2(i)	ஏனைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது (Table 66/SA-21) 2(ii)	மொத்தம் 2(iii)=2(i)+2(ii)	நிலுவை வருமானங்களை திரட்டுதல் (3)	காசாக 4(i)	தவறுகளைத் திருத்துதல் 4(ii)	மொத்தம் 4(iii)=4(i)+4(ii)	2024 இற்குரிய தேறிய வருமானம் 5=2(iii)+(3)-4(iii)
	[illegible] வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4										
2003.07.00	அரசு நெல் கொள்முதல் திட்டம்		390,000,000	390,000,000		86,430,015	86,430,015					86,430,015
	மொத்த முழு வருமானம் (குறிப்பு 4)		390,000,000	390,000,000		86,430,015	86,430,015					86,430,015

2025/02/27

திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின்/ நிதிப் பிரிவுத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பமும் பெயரும் பதவியும்

தொடர்புடைய வருவாய் குறியீடுகளை மாத்திரம் உள்ளடக்கி இந்த மாதிரிப்படிவம் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

L.P.S. Kumara
Chief Financial Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

ஏசீஏ - 1(i)

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமான நிலுவைக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்: கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு   செலவின தலைப்பு இல: 118

முந்திய மூன்று நிதியாண்டிற்கான தேறிய அரசிறை சேகரிப்பு			
	ஆண்டு 1	(2021)	ரூபா. 426,611,318
	ஆண்டு 2	(2022)	ரூபா. 437,085,714
	ஆண்டு 3	(2023)	ரூபா. 961,121,370

ரூபா

காலம்	அரசிறை குறியீடு	வருமான விபரம்	வருட ஆரம்பத்தில் மீதி (1)	அறிக்கையிடும் ஆண்டின் தொடர்பில் நிலுவைகள் (2)	அறவீடுகள் (3)	வெட்டிநீக்கப்பட்ட நிலுவை வருமானம் (4)	வருட இறுதியில் மீதி 5=(1)+(2)-[(3)+(4)]
(1) அறிக்கையிடும் ஆண்டின் தொடர்பில் நிலுவைகள்	2003.07.00						
உப மொத்தம்			-	-	-	-	-
(2) முந்திய ஆண்டின் தொடர்பில் நிலுவைகள்	2003.07.00						
உப மொத்தம்			-	-	-	-	-
(3) முந்திய ஆண்டிற்கு முற்பட்ட ஆண்டுவரையுள்ள நிலுவைகள்	2003.07.00		376,678,134		13,738,768		362,939,366
உப மொத்தம்			376,678,134	-	13,738,768	-	362,939,366
மொத்தம்			376,678,134	-	13,738,768	-	362,939,366

2025/02/27

திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின்/

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம்

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road

ஏசீஏ - 1(iii)

திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுக்கும் உண்மை வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான விளக்கம்

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர் : கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர்

செலவின தலைப்பு இல:118

ரூபா

அரசிறை குறியீடு	விபரம்	திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு	உண்மை வருமானம்	திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுக்கும் உண்மை வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடு	திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் % சதவீதமாக வேறுபாடு	வேறுபாட்டுக்கான காரணம்
2003.07.00	அரசு நெல் கொள்முதல் திட்டம்	390,000,000	86,430,015	303,569,985	78%	2024 ஆம் ஆண்டில், வருவாய் மதிப்பீடுகள் ரூ.100 மில்லியன் என தகவல் அமைச்சின் மூலம் தெரிவிக்கப்பட்டது, ஆனால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் இந்த எண்ணிக்கை உள்ளடங்கியிருந்ததால் எதிர்பார்த்த நெல் கொள்முதல் நடைபெறவில்லை.

27/02/2025

திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின்/ நிதிப் பிரிவுத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம்
வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பெயர்

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதவி

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

3.6. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை

ஏசீஏ - 2

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

செலவின தலைப்பு இல: 118

அமைச்சின் பெயர் : கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ரூபா

வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல.	செலவினத் தலைப்பு	வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	மொத்தச் செலவினம் (5)	தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (6)=(4)-(5)
நிகழ்ச்சித் திட்டம் (1)	(1) மீண்டுவரும்	3,504,400,000	351,105,000	(34,756,609)	3,820,748,391	3,294,474,808	526,273,583
	(2) மூலதனம்	478,000,000	-	-	478,000,000	193,282,376	284,717,624
	உப மொத்தம்	3,982,400,000	351,105,000	(34,756,609)	4,298,748,391	3,487,757,184	810,991,207
நிகழ்ச்சித் திட்டம் (2)	(1) மீண்டுவரும்	44,885,400,000	4,187,341,281	17,188,409	49,089,929,690	48,362,035,545	727,894,145
	(2) மூலதனம்	37,234,670,000	183,986,375	17,568,200	37,436,224,575	24,951,991,917	12,484,232,658
	உப மொத்தம்	82,120,070,000	4,371,327,656	34,756,609	86,526,154,265	73,314,027,462	13,212,126,803
	முழு மொத்தம்	86,102,470,000	4,722,432,656	-	90,824,902,656	76,801,784,646	14,023,118,010

....

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 07/02/2025

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

3.7. நி.பி 208 இற்கு அமைய ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் பிரதிநிதி எனும் வகையில் இந்தத் திணைக்களத்துக்குமாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

ஏசீஏ - 2(i)

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல: 118 அமைச்சின் பெயர் : கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ரூபா

செலவினக் குறியீடு	கருத்திட்டம் (1)					கருத்திட்டம் (2)					மொத்தச் செலவினம்
	ஏற்பாடுகள்				செலவினம்	ஏற்பாடுகள்				செலவினம்	
	செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு		வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு		
	(1)	(2)	(3)	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)	(8)	(9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
மீண்டுவரும் செலவினம்											
<u>ஆளுக்குரிய வேதனங்கள்</u>											
1001 - சம்பளமும் கூலியும்	1,701,000,000	-	(16,868,200)	1,684,131,800	1,508,677,059						1,508,677,059
1002 - மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	54,500,000	-	(3,000,000)	51,500,000	25,838,847						25,838,847
1003 - ஏனைய கொடுப்பனவுகள்	720,000,000	346,105,000	-	1,066,105,000	1,006,183,039						1,006,183,039
				-							-
<u>பிரயாணச் செலவினம்</u>				-							-
1101 - உள்ளூர்	24,000,000	-	-	24,000,000	14,764,365						14,764,365
1102 - வெளிநாடு	19,500,000	-	-	19,500,000	3,976,806						3,976,806
<u>வழங்கல்கள்</u>											
1201 - எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்	41,000,000	-	-	41,000,000	34,308,742						34,308,742
1202 - எரிபொருள்	191,300,000	-	(12,888,409)	178,411,591	128,324,083						128,324,083
1203 - உணவும் சீருடைகளும்	1,550,000	-	-	1,550,000	499,118						499,118
1205 - ஏனையவை	2,500,000	-	-	2,500,000	291,180						291,180
<u>பராமரிப்புச் செலவினங்கள்</u>											
1301 - வாகனங்கள்	122,000,000	5,000,000	-	127,000,000	78,825,235						78,825,235

ஏசீஏ - 2(i)

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல: 118 அமைச்சின் பெயர் : கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ரூபா

செலவினக் குறியீடு	கருத்திட்டம் (1)					கருத்திட்டம் (2)					மொத்தச் செலவினம்
	ஏற்பாடுகள்					ஏற்பாடுகள்					
	செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு	செலவினம்	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு	செலவினம்	
	(1)	(2)	(3)	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)	(8)	(9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
1302 - பொறி, இயந்திரம், உபகரணம்	8,250,000	-	-	8,250,000	6,968,596						6,968,596
1303 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	5,300,000	-	-	5,300,000	1,315,668						1,315,668
1304 மென்பொருள் அபிவிருத்தி சேவைகள்	7,300,000	-	-	7,300,000	5,085,028						5,085,028
1401 [illegible]	40,600,000	-	-	40,600,000	28,458,512						28,458,512
1402 - தபால், தொலைத்தொடர்பு	38,500,000	-	(2,066,876)	36,433,124	28,236,424						28,236,424
1403 - மின்சாரமும் நீரும்	56,000,000	-	5,000,000	61,000,000	57,068,814						57,068,814
1404 - வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்	253,000,000	-	-	253,000,000	205,430,259						205,430,259
1405 சுகாதார சேவைகள்	26,250,000	-	-	26,250,000	18,723,140						18,723,140
1407 பாதுகாப்பு சேவை	17,100,000	-	-	17,100,000	13,807,250						13,807,250
1409 ஏனையவை	52,800,000	-	-	52,800,000	30,027,375						30,027,375
மாற்றங்கள்											
1502 - ஓய்வூதிய பணிக்கொடைகள்	250,000	-	-	250,000	237,256						237,256
1503 அரச நிறுவனங்கள்				-		2,862,400,000	153,744,000	3,000,000	3,019,144,000	2,990,060,306	2,990,060,306
1504 - அபிவிருத்தி மானியங்கள்						36,063,000,000	4,033,597,281	7,188,409	40,103,785,690	39,873,299,995	39,873,299,995
1505 - சந்தா மற்றும் பங்களிப்புக் கட்டணங்கள்	106,700,000	-	(5,000,000)	101,700,000	89,416,792						89,416,792
1506 - அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி	14,000,000	-	(98,253)	13,901,747	7,827,844						7,827,844

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல: 118 அமைச்சின் பெயர் : கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ரூபா

செலவினக் குறியீடு	கருத்திட்டம் (1)					கருத்திட்டம் (2)					மொத்தச் செலவினம்
	ஏற்பாடுகள்				செலவினம்	ஏற்பாடுகள்				செலவினம்	
	செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஓ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு		வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஓ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு		
	(1)	(2)	(3)	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)	(8)	(9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
1509 அரசு நிறுவனங்கள் (பிற செயல்பாட்டு செலவுகள்)				-		5,960,000,000	-	7,000,000	5,967,000,000	5,498,675,244	5,498,675,244
ஏனைய மீண்டுவரும் செலவினம்											
1701 - நட்டங்களும் பதிவழிப்பும் நிகழ்த்தக்க சேவைகள்			165,129	165,129	165,129						165,129
1703 அலுவலக மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்	1,000,000	-	-	1,000,000	18,245						18,245
முழு மொத்தம்	3,504,400,000	351,105,000	(34,756,609)	3,820,748,391	3,294,474,807	44,885,400,000	4,187,341,281	17,188,409	49,089,929,690	48,362,035,545	51,656,510,352
மூலதனம் செலவினம்											
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்											
2001 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	50,500,000	-	-	50,500,000	20,858,336						20,858,336
2002 - பொறி, இயந்திரம், உபகரணம்	12,000,000	-	-	12,000,000	1,945,797						1,945,797
2003 - வாகனங்கள்	68,000,000	-	-	68,000,000	33,637,819						33,637,819 -
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு											-

ஏசீஏ - 2(i)

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல: 118 அமைச்சின் பெயர் : கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ரூபா

செலவினக் குறியீடு	கருத்திட்டம் (1)					கருத்திட்டம் (2)					
	ஏற்பாடுகள்					ஏற்பாடுகள்					
	செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஓ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு	செலவினம்	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஓ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஒதுக்கீடு	செலவினம்	மொத்தச் செலவினம்
	(1)	(2)	(3)	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)	(8)	(9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
2102 - தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்	18,000,000	-	-	18,000,000	8,688,909						8,688,909
2103 - பொறி, இயந்திரம், உபகரணம்	5,000,000	-	-	5,000,000		14,170,000	31,601,419	-	45,771,419	39,536,078	39,536,078
2104 - கட்டிடங்களும், கட்டமைப்புக்களும்						50,000,000	-	-	50,000,000	7,048,686	7,048,686
2105 - காணியும், காணி மேம்படுத்தலும்						8,080,000,000	-	(574,901,800)	7,505,098,200	4,057,255,471	4,057,255,471
2106 மென்பொருள் அபிவிருத்தி	1,500,000	-	-	1,500,000	-						
<u>மூலதன மாற்றங்கள்</u>											
2201 - பொது நிறுவனங்கள்						625,000,000	-	-	625,000,000	549,913,577	549,913,577
2202 - அபிவிருத்தி உதவிகள்						13,208,000,000	-	40,000,000	13,248,000,000	8,261,573,269	8,261,573,269
<u>நிதிச் சொத்துக்களின் கொள்வனவு</u> 2302 - மீள் கடன்கள்						2,000,000,000	-	(40,000,000)	1,960,000,000	1,947,579,800	1,947,579,800

ஏசீஏ - 2(i)

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல: 118 அமைச்சின் பெயர் : கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ரூபா

செலவினக் குறியீடு	கருத்திட்டம் (1)					கருத்திட்டம் (2)					மொத்தச் செலவினம்
	ஏற்பாடுகள்					ஏற்பாடுகள்					
	செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	செலவினம் (5)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (6)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (7)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (8)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (9)=(6)+(7)+(8)	செலவினம் (10)	(11)=(5)+(10)
திறன்விருத்தி											
2401 பணியாளர் பயிற்சி	13,000,000	-	-	13,000,000	5,034,812						5,034,812
ஏனைய மூலதனச் செலவினங்கள்											
2506 உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி						160,000,000	-	-	160,000,000	28,052,878	28,052,878
2507 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி						10,350,000,000	8,790,380	574,901,800	10,933,692,180	9,069,817,497	9,069,817,497
2509 ஏனையவை	310,000,000			310,000,000	123,116,703	2,747,500,000	143,594,576	17,568,200	2,908,662,776	991,214,662	1,114,331,365
முழு மொத்தம்	478,000,000	-	-	478,000,000	193,282,376	37,234,670,000	183,986,375	17,568,200	37,436,224,575	24,951,991,917	25,145,274,293
மொத்த மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம்	3,982,400,000	351,105,000	(34,756,609)	4,298,748,391	3,487,757,184	82,120,070,000	4,371,327,656	34,756,609	86,526,154,265	73,314,027,462	76,801,784,646

தேவையான செலவு விடய குறியீடுகளை மாத்திரம் உள்ளடக்கி இந்த மாதிரிப்படிவங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்

....

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 27/02/2023

L.P.S. Kumara
Chief Finance Officer
Ministry of Agriculture and Plantation Industries
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Avenue,
Battaramulla.

මූල්‍ය නොවන වත්කම් පිළිබඳ ප්‍රකාශනය - 2024

Cumulative Non Financial Asset Accounts Report- Central Govt-2024

Land-9153:	405,408,000.00	**Table:**	SA 82
Building- 9151:	1,011,525,000.00	**Year:**	2024
Machinary-9152:	2,694,645,640.69	**Rpt Date**	22/02/2025 14:43
WIP-9160:	0	**Head**	118
Intangible-9154	**182,710.40**		
Lease-9180:	**0**		

Ledger	category	Item	Code	Opn_Bal	Opn_Bal_Add	Transfer In	Purchase	Disposal	Balance
9151	1.2-Non Residential Building		61112	1,011,525,000.00	0	0	0	0	1,011,525,000.00
		Office Building	****6111201	1,011,525,000.00	0	0	0	0	1,011,525,000.00
9152	2.1-Transport Equipment		61121	1,977,486,568.33	621,401,000.00	0	0	397,247,058.33	2,201,640,510.00
		Passenger vehicle	****6112101	1,975,572,348.33	621,089,000.00	0	0	397,247,058.33	2,199,414,290.00
		Motor cycle	****6112109	1,914,220.00	312,000.00	0	0	0	2,226,220.00
9152	2.2-Other Machinary & Equipment		61122	484,807,787.13	3,127,430.45	0	20,519,785.85	15,449,872.74	493,005,130.69
		Office Equipment	****6112201	34,032,155.91	0	0	8,181,357.50	8,402,623.74	33,810,889.67
		Computer Equipment	****6112202	163,053,768.39	2,884,810.00	0	2,089,635.80	9,800.00	168,018,414.19
		Electrical Equipment	****6112203	28,380,171.11	0	0	342,922.75	0	28,723,093.86
		Communication Equipment	****6112204	51,940,474.21	71,834.20	0	311,520.00	13,800.00	52,310,028.41
		Furniture	****6112205	205,182,662.32	170,786.25	0	2,570,700.80	0	207,924,149.37
		Sports equipment	****6112208	12,000.00	0	0	0	0	12,000.00
		Paintings Sculptures & other Antiques	****6112209	137,100.00	0	0	0	0	137,100.00
		Construction Eqipment	****6112213	15,629.99	0	0	0	0	15,629.99
		Broadcasting Equipment	****6112214	2,053,825.20	0	0	0	0	2,053,825.20
		Agricultural & Dairy Farm Equipment	****6112216	0	0	0	7,023,649.00	7,023,649.00	0
9154	5.3 Other Non Finacial- Intangible		61133	1,167,670.40	0	0	0	984,960.00	182,710.40
		Computer Software	****6113301	182,710.40	0	0	0	0	182,710.40
		Service Contracts	****6113306	984,960.00	0	0	0	984,960.00	0
9153	4.1-Land		61410	405,408,000.00	0	0	0	0	405,408,000.00
		Land	****614100	405,408,000.00	0	0	0	0	405,408,000.00

3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ஏஆர்ஜ/ஏ/எம்ஓஏ/02/2024/01 2025 மே 30 ஆந் திகதி

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

தலைப்பு 118 – விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 118 – விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு

காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 வருமானம்

2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏசீஏ – 1 (i) படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் 2022 ஆம் ஆண்டில் சரியான தேறிய வருமானப் பெறுமதியான ரூபா 219,195,182 தொகை ரூபா 437,085,714 ஆக குறிப்பிடப்பட்டமையால் ஏற்பட்ட தவறு 2024 ஆம் ஆண்டின் போதும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.2 மீண்டெழும் செலவினம்

அரச கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கக் கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் 7.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் (ஏசீஏ-எப்) திருத்தப்பட்ட பாதீட்டு நிதியேற்பாட்டு நிரலில் வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடுகளுக்கு நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பு நிதியேற்பாடுகளில் சீராக்கப்பட்ட பின்னர் பெறுமதி பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் திருத்தப்பட்ட பாதீட்டு நிதியேற்பாடாக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பு நிதியேற்பாடு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் வருடாந்தப் பாதீட்டு நிதியேற்பாட்டின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது.

1.6.3 மூலதன செலவினம்

(அ) அமைச்சிற்குரிய உரிமைத் தன்மையுடன் காணப்படுகின்ற அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 59,820,513 பெறுமதியான 09 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 08 வாகனங்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரி பிரதி செயலாளரின் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்து சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கு வாகனங்களைக் கையளிக்கும் போது கையளிப்பவர் அமைச்சின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இல்லாமல் விவசாய அமைச்சின் கீழ் பதிவு ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 59,450,000 பெறுமதியான 15 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 07 வாகனங்கள் இந்த அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள், பதிவு உரித்துள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு

செய்வதற்கோ அல்லது பதிவு உரித்தை நிறுவனத்திற்கு முறையான பிரகாரம் கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கையளிப்பதற்கோ அல்லது மீண்டும் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் ஏனைய நிறுவனங்களில் சட்ட ரீதியான உரிமைத் தன்மையின் கீழ் விவசாய அமைச்சில் பயன்படுத்தப்பட்ட ரூபா 276,450,000 பெறுமதியான 29 வாகனங்கள் CIGAS கணனி முறைமையிலும் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் ஆக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அமைச்சில் பயன்படுத்தப்படுகின்ற 80 வாகனங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுப் பெறுமதியாக கணக்காய்விற்கு சமர்க்கப்பட்ட பெறுமதி மற்றும் CIGAS கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதிகளில் ரூபா 23,459,410 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) முன்னாள் விவாசய இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உர பிரிவிற்குரிய ரூபா 18,000,000 பெறுமதியான இலக்கம் KW-8202 என்ற வாகனம் 2021 மார்ச் 21 ஆந் திகதி ஏற்பட்ட விபத்திற்காக ரூபா 7,500,000 காப்புறுதி இழப்பீடு செலுத்துவதற்கு காப்புறுதி செய்யப்பட்ட நிறுவனத்துடன் இணங்கி அதன் பிரகாரம் வாகனத்தைப் பழுது பார்ப்பதற்கு 2022 திசெம்பர் 12 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 23 ஆந் திகதி ரூபா 5,625,000 தொகை வாகன பழுதுபார்த்தல் நிறுவனத்திற்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 21 ஆந் திகதி மற்றும் 2024 செப்தெம்பர் 27 ஆந் திகதி கணக்காய்வினால் பௌதீக ரீதியில் அவதானிக்கும் போது மற்றும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் 02 வருடங்கள் கடந்திருந்த போதும் உரிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னாள் பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டுத்தோட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டு இதுவரையில் கிராமிய பொருளாதாரப் பிரிவிற்குரிய பெறுமதி ரூபா 43,000,000 ஆன CAV-5064 என்ற றேஞ்ச் றோவர் வண்டி 2020.10.06 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டு எந்த ஒரு பரிசோதனையும் மேற்கொள்ளப்படாது இருக்கும் போது 2021 யூன் 21 ஆந் திகதி இந்த வாகனம் இயந்திரம் அதிக ரீதியில் சூடாகிதன் காரணமாக ஏற்பட்ட குறைபாட்டிற்காக பழுது பார்ப்பதற்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்த பழுதுபார்த்தல் தொடர்பாக சாரதியின் கூற்று மற்றும் வாகனத்தின் பிரதி முகவர்கள் சமர்ப்பித்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட் விடயங்கள் ஒன்றுக்கு ஒன்று வேறுபாடாக இருந்தது. அவ்வாறே இந்த வாகனம் ஒரு மாதத்திற்கு முன்னரும் இந்த முகவர் நிறுவனத்தை வரவழைத்து குளிரூட்டி முறைமையில் ஏற்பட்ட குறைபாடுகள் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பாக சுயாதீன அரச நிறுவனம் ஒன்றை ஈடுபடுத்தி வழுக்கள் மற்றும் அதற்கான காரண விடயங்கள் தொடர்பாக அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளாமல் உரிய முகவர் நிறுவனத்திலேயே அந்த வழுக்கள் தொடர்பான அறிக்கை பெறப்பட்டிருந்தது. மேலதிக செயலாளரின்

2023.08.15 மற்றும் RE/Ad/06/045 என்ற கடிதம் மூலம் CAV-5064 என்ற வாகனம் தொழில்நுட்பக் கோளாறு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் கீழ் பரிசோதனைகள் நடாத்தி இறுதி அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு குழு ஒன்று வாகனத்தின் விபத்து ஏற்பட்டு 02 வருடங்களை கடந்த பின்னரே நியமிக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை அல்லது ஆரம்ப அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பழுதுபார்ப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டைப் பெற்று 02 வருடங்களும் 05 மாதங்களும் கடந்திருந்த பின்னர் இந்த வாகனத்தை பரீட்சிப்பதற்காக மீண்டும் எக்சஸ் மோட்டர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023.11.15 ஆம் திகதி அந்த நிறுவனத்தால் ரூபா 9,041,001 புதிய திருத்தப்பட்ட மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2023.12.13 ஆந் திகதி இந்த வாகனத்தின் மேற்கூறப்பட்ட மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்வதற்கு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவின் பெறுகைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுடன் அதன் பிரகாரம் 2021.06.23 ஆந் திகதி ரூபா 3,076,877 தொகையில் நிறைவேற்றுவதற்கு முடியுமக இருந்த பழுது பார்த்தல் நடவடிக்கைகள் அந்த பெறுமதியைப் போன்று மூன்று மடங்குக்கு அண்ணளவான பெறுமதியில் இயந்திரக் கோளாறை பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது. பழுது பார்த்தல் பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது 2023.12.30 அந் திகதி ரூபா 9,041,001 காசோலை எழுதி காசேட்டில் உரிய பதிவுகளை மேற்கொண்டு உரிய காலத்தின் போதும் வாகனம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யாமையின் காரணமாக 2024.07.31 ஆந் திகதி மீண்டும் அந்தக் காசோலையின் பெறுமதி அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்தக் காசோலை 2024.07.01 ஆந் திகதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முன்னர் 2024 இன் நிதிக் கூற்றுக்களில் அந்த பணிகளுக்காக மீண்டும் 2024.07.15 ஆந் திகதிய கொடுப்பனவு உறுதிச்சீட்டு செலுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் 2024.07.22 ஆந் திகதி வரையில் இந்த மோட்டார் வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்டு வாகனத்தை மீண்டும் கையேற்பதற்கும் மற்றும் அதன் ஓட்ட பரிசோதனையினை மேற்கொள்வதற்கும் கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் அதனைப் பழுதுபார்ப்பதற்காக உரித்தான செல்லுபடிக்காலம் 2024.07.22 ஆந் திகதி முதல் ஒரு வருட காலமாக இருந்தமையால் கணக்காய்வுத் திகதி வரையில் அந்த செல்லுபடிக் காலத்தில் 09 மாதங்கள் கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த உத்தியோகபூர்வ வாகனத்தை கடமைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த மற்றும் வாகனத்தின் வழுக்களுக்கு உட்பட்டிருந்த சந்தர்ப்பத்தின் போது வாகனத்தை ஓடிய சாரதி கிராமியப் பொருளாதாரப் பிரிவின் அல்லது அரசாங்கத்தின் நிரந்தர உத்தியோகத்தர் அல்லாது இருந்ததுடன் அவர் தற்போது சேவையில் இருந்து விலகிச் சென்ற விடயங்களும் அவதானிக்கப்பட்டது.

1.6.4 ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்குகளின் கொடுப்பனவுகள்

மீளாய்வாண்டின் அமைச்சின் பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவின் மீண்டெழும் செலவினத்தில் பதிவதற்கு பயன்படுத்தப்படுகின்ற 118–1–28(B) செலவினப் பேரேடு பேணிச் செல்லப்படும் போது வீரமண் நடைமுறையில் குறைத்தல் சேர்ப்பதற்குரிய செலவின விடயங்களில் குறிப்பிடப்படாமை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் கிடைத்த தொகை உரிய செலவின விடயத்தின் கீழ் குறிப்பிடப்படாமை பிரதான குறைபாடாக அவதானிக்கப்பட்டது.

1.6.5 நிதிச் சொத்துக்கள்

1.6.5.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் பீ கணக்கின் அறவிடப்படாத மீதி

(அ) அமைச்சின் விவசாயப் பிரிவில் சேவையாற்றி சேவையில் இருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்கள் மூன்று பேர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 511,340 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 336,740 தொகை 1-3 வருடங்களுக்கு இடையிலான காலத்திற்கு உரியதாகும்.

(ஆ) அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவில் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 175,174 கடன் மீதி 1-3 வருட கால எல்லைக்கு உரியதாக இருந்துடன் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 249,535 கடன் மீதி 3-5 வருடங்களுக்கு இடையிலான வீச்சுக்கு உரியதாகும்.

(இ) அமைச்சில் கால்நடைப் பிரிவில் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 227,248 தொகை 1-3 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சுக்கு உரியதாக இருந்ததுடன் சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 1-3 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சுக்கு உரிய கடன் மீதி ரூபா 353,408 ஆக இருந்துடன் 5-10 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சுக்கு உரிய கடன் மீதி ரூபா 62,519 ஆகும்.

(ஈ) அமைச்சின் பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவில் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ஒரு வருடத்திற்கு குறைந்த கடன் மீதி ரூபா 234,500 உம் வேலை நீக்கம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 1-20 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சுக்கு உரிய கடன் மீதி ரூபா 367,751 உம் மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 1-3 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சுக்கு உரிய கடன் மீதி ரூபா 61,307 ஆகும்.

1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தங்கள் பேணிச் செல்லப்படாமை

நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விவசாயப் பிரிவினால் இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு முறையாக நாளது வரையாக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்குரிய முகாமைத்துவ அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு	**அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள்**	**இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு**
3.3 (ஆ)(i)	ரூபா 63 மில்லியன் வைப்புத் தொகை அறவிடல் வேண்டும்.	4.6(அ)
2.7(ஈ)	நட்டத்தின் பெறுமதி நட்டம் மற்றும் கைவிடல் பதிவேட்டிலும், நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	4.4(ஈ)
1.2.1(ஊ)(i)	வாகனத்தை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் வேண்டும்.	1.6.2(ஊ)

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

முன்னர் காணப்பட்ட அரசாங்கத்தின் உரக் கம்பனியான வ/ப லங்கா உர கம்பனி மற்றும் வ/ப கொழும்பு வர்த்தக உரக் கம்பனியால் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட உரத்திற்கான நாணயக் கடிதம் காலவதியாகின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய வழங்குனருக்கு செலுத்துவதற்குத் தேவையான பணம் அந்த சந்தர்ப்பத்தின் போது திறைசேரியில் இருந்து கிடைக்காமையின் அடிப்படையில் குறுங்காலக் கடன் மூலம் தீர்க்கப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 43,742,559,911 தொகை 05 கட்டங்களின் கீழ் ஆக கூட்டுப்பெறுமதி ரூபா 47,465,632,771 கால கடனாக்கப்பட்டமை வங்கியினால் மாற்றப்பட்டு அந்தக் கடன் தொகையைத் தீர்ப்பதற்கு 2024 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 3,401,114,581 வட்டி செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது.

3.2 வருமான முகாமைத்துவம்

(அ) வருமானக் குறியீட்டு இலக்கம் 2003.07.00 இன் கீழ் வருகின்ற அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய 2024 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீடு ரூபா 390,000,000 ஆக இருந்த போதிலும் ஏசீஏ-1 படிவத்தின் பிரகாரம் ஆண்டின் வருமான சேகரித்தல் ரூபா 86,430,015 ஆகும். அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமான சேகரித்தலின் செயல் முன்னேற்றம் 22 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2024 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 86,430,015 பெறுமதியில் ரூபா 13,738,768 தொகை 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் காணப்பட்ட நிலுவை வருமானம் ஆன ரூபா 376,678,134 மீதியில் உள்ளடக்கப்பட்ட 2018/2019 பெரும்போகம், 2020/2021 பெரும்போகம் மற்றும் 2021 சிறு போகத்திற்குரிய நிலுவை மீதிகளுக்காக கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரியதாகக் காணப்படுகின்ற நிலுவை வருமானத்தை சேகரிக்கும் செயல் முன்னேற்றம் 3.5 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 127(1)(ஆ), நிதிப்பிரமாணம் 127(6), நிதிப்பிரமாணம் 128(1)(ஏ) மற்றும் நிதிப்பிரமாணம் 128(2) தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்கு பிரிவின் தகவல்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரியதாக கிடைக்கப்பெற்ற ரூபா 86,430,015 பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 73,330,179 தொகை 2022/2023 பெரும்போகத்திற்கு உரிய 04 மாவட்டங்களில் இருந்து அதாவது அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை என்ற மாவட்டங்களில் இருந்து கிடைக்கப் பெற்றமை விடயங்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஏசீஏ-1(i) - நிலுவை வருமானம் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் பின்னர் நிலுவை வருமான மீதியை வெளிப்படுத்தாமையினால் கணக்காய்வில் அந்தப் பெறுமதி தொடர்பாக உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஈ) அமைச்சின் விவசாயப் பிரிவின் மூலம் நிதிப் பிரமாணம் 128(2)(ஈ) நிதிப்பிரமாணம் 176(1) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய இலக்கம் 01/2015 அரச நிதி கொள்கை சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் இலக்கம் 2003-07-00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்குரிய அரை ஆண்டு நிலுவை வருமான அறிக்கையின் பிரதி எதுவும் அந்த கால எல்லை முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 செலவின முகாமைத்துவம்

(அ) செலவினத் தலைப்பு 240 மூலம் 05 சந்தர்ப்பங்களின் போது ஒதுக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 44 சதவீதம் வரையிலான வீச்சு வரை சேமிக்கப்பட்டமை, தேவையினை விஞ்சி நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சினால் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஆரம்ப வருடாந்த மதிப்பீடு நிதியேற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றுதல் 11 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த மாற்றல்களில் பின்னரும் உரிய செலவின விடயங்களின் நிதியேற்பாடு 11 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சு வரை நிதியேற்பாடு சேமிக்கப்பட்டமை தேவையினை விஞ்சி நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) அமைச்சினால் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் 12 சந்தர்ப்பங்களின் போது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட நிதியேற்பாடுகளில் 03 சதவீதம் முதல் 44 சதவீதம் வரை நிதியேற்பாடு சேமிக்கப்பட்டமை தேவையினை விஞ்சிய நிதியேற்பாடு மாற்றப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதிப்பிரமாணம் 50(ii) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 50(iii) பிரிவின் பிரகாரம் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் தொடர்பாக உரிய கவனத்துடன் மதிப்பீடு வழங்கல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நிதியேற்பாடு ஒதுக்கப்படாத 05 செலவின விடயங்களுக்காக மதிப்பீட்டின் மூலம் ரூபா 683,986,275 மற்றும் 02 செலவின விடங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் மூலம் ரூபா 19,056,609 நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) அமைச்சின் பெருந்தோட்டக் கைத்தொழில் பிரிவினால் மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு முழுமையாகவம் சரியாகவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவிற்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும், நிதிப்பிரமாணம் 66 இன் மூலமும் அந்த நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 180,000,000 இற்கு மேலதிகமாக ரூபா 77,865,000 மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அது 43 சதவீதமாக இருந்தது.

(ii) வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்படாத 03 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 40,391,799 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ஒரு செலவின விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் கீழும் ரூபா 11,868,200 நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,100,000 கூட்டுத்தொகையான தேறிய ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டதுடன் மேலும் மீண்டெழும் செலவின விடயங்கள் 10 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 107,400,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 58,017,085 அதாவது 48 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் 05 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டதுடன் மேலும் 04 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 13,500,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 10,172,258 அதாவது 40 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான அளவு சேமிக்கப்பட்டது.

3.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

(அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி மற்றும் பொதுத் திறைசேரியின் அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதிகளுக்கு இடையே முறையே ரூபா 4,618,804 மற்றும் ரூபா 1,697,296 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் விவசாயப் பிரிவினால் ரூபா 2,302,666.56 தொகையும், கால்நடை பிரிவினால் ரூபா 20,637 மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவில் ரூபா 45,074 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும், கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
2024 திசெம்பர் 18 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2024 மற்றும் கொம்ட்ரோலர் ஜனராலின் 2024 மே 20 ஆந் திகதிய இலக்கம் CGO/NFAMS/01/03 என்ற கடிதம்	இலக்கம் KS-6781, KM-5207, KW-8202, 57-8986, KY-5535, CAV-5064, CAB-3288, PC-4812, KO-0024 என்ற 09 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.7 வங்கிக் கணக்கு ஏற்பாடுகள்

(அ) திறைசேரி செயலாளரின் 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய BDKBP/01/01/03-2023 என்ற பாதீட்சு சுற்றறிக்கையின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் கலைக்கப்பட்டுள்ள செலவின விடயங்களுக்கு உரிய செயலிழந்த உத்தியோக பூர்வ வங்கிக் கணக்குகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதிக் கணக்குகளை மூடும் பணிகளின் பொறுப்புக்கள் கலைக்கப்பட்ட அமைச்சுக்களில் சேவையாற்றிய பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் போது கலைக்கப்பட்ட இராஜாங்க அமைச்சுக்குரிய இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 7040184 என்ற ரூபா 5,620,828 மீதி ஒன்று உள்ளடக்கப்பட்ட வங்கிக் கணக்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன், கலைக்கப்பட்ட இராஜாங்க அமைச்சின் செயலாளரின் பெயரில் தொடர்ந்தும் பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயலாளர் விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால் நடை வள அமைச்சின் பெயரில் இலங்கை வங்கியின் காணப்படுகின்ற இலக்கம் 7040507 என்ற செயல் இழந்த வங்கிக் கணக்குத் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாது இருந்ததுடன் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த வங்கிக் கணக்கை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

(அ) அமைச்சின் கால் நடை வளர்ப்புப் பிரிவின் மூலம் சிறிய அளவிலான பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2024 சனவரி 19 ஆம் திகதி வென்னபுவவில் அமைந்துள்ள Succeed International (pvt) Ltd நிறுவனத்திற்குரிய பால் தயாரிக்கும் நிலையத்தை திறந்து வைக்கும் உத்தியோகபூர்வ விழாவிற்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 166,260 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 67,500 தொகை உத்தியோகபூர்வ விழாவின் உபசரிப்புச் செலவினத்திற்காக செலவிட்டு அந்த செலவினம் மீளளிப்புச் செய்யப்பட்டதுடன் அந்தத் தொகையில் ரூபா 98,760 வைக்காலையில் அமைந்துள்ள Club Hotel Dolphin ஹோட்டலில் 2024 நவம்பர் 18 ஆந் திகதி அதாவது பால் தயாரிக்கும் நிலையத்தை திறக்கும் உத்தியோகபூர்வ விழாவிற்கு முன்னைய தினம் அமைச்சரின் இரவு தங்குமிடத்திற்காக செலவிடப்பட்ட பயனற்ற செலவினமாகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

4.1.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

(அ) அமைச்சின் கால்நடை வள பிரிவின் மூலம் அநுராதபுர மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி பயிலுகின்ற 20 பாடசாலைகள் தெரிவு செய்து பின்னைகளின் போசனை மட்டத்தைக்

கட்டியெழும்பம் நோக்கில் ஒரு பாடசாலையில் 10 பெற்றோர்களுக்காக ஒரு மாத வயதுள்ள 10 கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 2 மில்லியன் ஒதுக்கி அதன் மூலம் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட கோழிக் கூடுகளின் எண்ணிக்கை 200 ஆகும். மீளாய்வாண்டில் இறுதியில் பௌதீக செயல் முன்னேற்றம் 100 வீதம் காண்பிக்கப்பட்ட போதிலும் நலனாளிகளின் 166 பேர்களுக்காக மாத்திரம் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் செயற்திட்ட செயற்பாடுகள் மற்றும் பராமரித்தல் ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்கின்ற விதம் தொடர்பான தகவல்கள் செயற்திட்ட முன்மொழிவில் உள்ளெடுக்கப்படாது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சின் கால்நடைவளப் பிரிவின் மூலம் இனப்பெருக்க பண்ணைகளை நிர்மானிக்கும் செயற்திட்டத்தின் கீழ் திறப்பணையில் கால்நடைப் பண்ணையில் ஆடுகள் இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல், சஹிவால் இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல் மற்றும் வடமத்திய மாகாணத்தில் விவசாய சேவையினை வலுப்படுத்துவதற்காக ரூபா 23 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. திறப்பணையில் கால்நடைப் பண்ணையில் ஆடு இனப்பெருக்க அலகை ஸ்தாபிப்பதற்காக ரூபா 03 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கால்நடைகளைக் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மாடு உற்பத்தி அலகை ஸ்தாபிப்பதற்காக ரூபா 10 மில்லியன் மொத்த நிதியேற்பாடு அளவு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 50 சாவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியன் மொத்த நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 40 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும் இனப்பெருக்க பண்ணைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தில் நிக்கவெரட்டி பிரதேசத்தில் வன்னிகம பண்ணையில் ஆடு இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல் மற்றும் இனப்பெருக்கத்திற்காக கால்நடைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 7.5 மில்லியன் நிதியேற்பாடு மற்றும் தென்மாகாணத்தில் மாத்தறை கெக்குனதுர பண்ணையில் ஆடு இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல் இனப்பெருக்க ஆடுகளைக் கொள்வனவு செய்தல், கால்நடை உணவுக்காக புல் மரங்களை வளர்த்தல் மற்றும் உபகரங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5.25 மில்லியனும் நிதியேற்பாடு வழங்கி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பண்ணைகள் இரண்டிலும் செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தவறியிருந்தது. அதன் பிரகாரம் இனப்பெருக்க பண்ணைகளை நிர்மானிக்கும் செயற்திட்டத்தின் கீழ் உள்ள மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் ஒட்டுமொத்தமாக 24 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

4.1.3 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

(அ) அமைச்சின் கால்நடை வள பிரிவின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி)

செயற்திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளின் கீழ் ஆகக் குறைந்த கிரயத்தில் உயர் தரத்தில் உள்ள கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை கட்டியொழுப்புதல் மற்றும் சூரியகல வலு சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம் எரிபொருளுக்காக செலவாகின்ற கிரயத்தை குறைக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படுகின்ற யாழ்ப்பாணம் அச்சுவேலி பாற்பண்ணையில் சூரிய கலங்களை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை திட்டமிடல் நலிவான மட்டத்தில் காணப்பட்டமையும் செயற்திட்டத்தின் செயற்திறன் மற்றும் வினைத்திறனாக அமுல்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சின் கால்நடை வளப் பிரிவின் மூலம் 2024 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பால் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சகல மாகாணங்களையும் மேவுகை செய்யும் வகையில் கால்நடை வளத்துறை தொடர்பாக தரவுகளை சேகரிக்கும் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்கும், பால் உற்பத்தி அலகை ஸ்தாபிப்பதற்கும் ரூபா 48.52 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

(இ) அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவின் மூலம் தோட்டத்தில் ஆடுகளை வளர்க்கும் செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 150 மில்லியனும், 2024 ஆம் ஆண்டில் ரூபா 200 மில்லியனுமாக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதுடன் அதில் ரூபா 33 மில்லியன் நிதியேற்பாடு அதாவது 16 சதவீதமான அளவு அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற 21 மாவட்டங்களுக்கு இடையே ஒரு மாவட்டத்திற்காக உரித்தாகின்ற ஆகக் கூடிய நிதி ஏற்பாடு அந்த மாவட்டத்திற்கு உரிதாகியிருந்த போதிலும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரால் அனுப்பப்பட்ட 2024.10.30 ஆந் திகதிய இலக்கம் DSH/DAD/06/27-1 ஆம் இலக்க கடிதம் மூலம் கூறுவிலை கோரும் போது நோயற்ற தரமான ஆடுகளைக் கொள்வனவு செய்வதற்கு தகைமை பெற்ற வழங்குனர் அண்மைய பிரதேசங்களில் கண்டறிவதற்கு முடியாமை, 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆடுகள் தொடர்பான பிரச்சனைகள் எழுந்தமை, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மரணமடைந்தமை மற்றும் நோய்க்கு உட்பட்டு சிகிச்சை அளிப்பதற்கு மற்றும் மரணமடையும் போது மரணப் பரிசோதனைகளை நடாத்துவதற்கும் நலனாளிகளுக்கு அதிக செலவினத்தை செய்ய வேண்டியிருந்ததன் காரணமாக பிரதேச செயலக மட்டத்தில் செயற்திட்டம் அமுல்படுத்த முடியாதிருந்ததாக அறிவித்து அந்த ரூபா 33 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் ரூபா 29,911,500 நிதி ஏற்பாடு மீண்டும் விவசாய அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் ஆகக் கூடிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட மாவட்டத்தில் செயற்திட்டம் அமுல்படுத்தாமையின் காரணமாக மாவட்டங்களுக்கு இடையே நிதியேற்பாடு ஒதுக்குகின்ற முறை மற்றும் புதிய பிரதேசங்களைத் தெரிவு செய்கின்ற முறை தொடர்பாக முறையான திட்டம் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) அம்பாந்தோட்டை மேலதிக மாவட்ட செயலாளரின் 2024.12.26 ஆந் திகதிய DSH/DAD/06/27-1 என்ற இலக்க கடிதம் மூலம் வெலிஅத்த, அம்பலாந்தோட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆட்டுக் கொட்டகைகளை தயாரித்து நலனாளிகளுக்காக ஆடுகளை பகிர்ந்தளிப்பதற்கு நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 2,815,200 நிதி ஏற்பாடு தகைமையான ஆடுகளைக் கண்டறிவதற்கான காலம் போதியளவில் இல்லாமையினால் மீண்டும் திருப்பி அனுப்ப வேண்டி இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதுவரையில் மேற்குறிப்பிட்ட பிரதேச செயலகங்களின் நலனாளிகள் தமது தனிப்பட்ட செலவில் ரூபா 30,000 அளவில் செலவிட்டு ஆட்டுக் கூடுகள் அமைத்திருந்தமையும் அந்தக் கடிதம் மூலம் மேலும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த நலனாளிகளுக்கு மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை உரித்தாகுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நலன்கள் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் விவசாய அமைச்சின் செயலாளரின் RDAH & EC/AC-Pay/06/001/2024/04 என்ற கடிதம் மூலம் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக நிதியேற்பாடு விடுவித்தல் 2024.03.12 ஆந் திகதி வரையளவில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2024 மார்ச் மாதம் முதல் 2024 திசெம்பர் வரையான காலத்தில் பொருத்தமான ஆடுகளைக் கண்டறிவதற்கான போதியளவில் இல்லாதிருததாக அறிவித்தமை கணக்காய்வில் பிரச்சினைக்கு உரியதாக இருந்தது.

4.1.4 கால தாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

அமைச்சின் கால்நடைப் பிரிவு மத்திய கால கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கால்நடை மருத்து அலுவலக கட்டிடத்தை நிர்மானிக்கும் நடவடிக்கைகளுக்காக 2022 நிதி ஆண்டின் போது ஆரம்ப முற்பணம் மற்றும் முதலாவது பட்டியலுக்குரிய ரூபா 6.82 மில்லியன் செலுத்தப்பட்டிருக்கும் போது கட்டிடம் மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வடைந்து சென்றதன் காரணமாக ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் அடிப்படையில் முறையற்ற வகையில் நிர்மாண ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அந்த கட்டித்தை நிர்மானிக்கும் இரண்டாவது கட்டமாக 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அதற்காக ரூபா 58.25 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட நிதிசார் செயல் முன்னேற்றம் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் 100 சதவீதமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 10.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டதுடன் பௌதீக செயல் முன்னேற்றம் 03 சதவீதம் ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

4.1.5 செயலாற்றல் குறிகாட்டிகள் குறித்துரைத்த ரீதியில் இனங்காண முடியாத செயற்திட்டங்கள்

(அ) அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரதான செயலாளர், மத்திய மாகாணத்திற்கு முகவரியிட்ட விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2024.02.28 ஆந் திகதிய MOA & PI/RED/DP/06/GOAT/02(2024) ஆம் இலக்க கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டி எழுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்ட வீட்டுத் தோட்ட ஆடுகளை வளர்க்கும் செயற்திட்டத்திற்கான ஆலோசனை – 2024 சமர்ப்பித்துள்ள ஆலோசனைக்

கோவையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது பின்பற்றப்பட வேண்டிய குறிகாட்டிகளின் பிரகாரம் ஆடுகளை வழங்குவதற்கு முன் நலனாயிகளால் தமது தனிப்பட்ட செலவில் ஆட்டுக் கொட்டகைகள் அமைக்கப்படல் வேண்டும். எனினும் அந்த ஆட்டுக் கொட்டகைகளை நிர்மாணிக்கும் போது கவனத்தில் கொள்ளக்கூடிய மாதிரி மற்றும் நியமங்கள் என்ன என்பது உரிய ஆலோசனைக் கோவையில் உள்ளக்கப்படவில்லை. மேலும் மாத்தளை மாவட்டத்திற்குரிய கலேவெல, நாவுல, வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் நுவரெலிய மாவட்டத்தில் நுவரெலிய பிரதேச செயலகப் பிரிவில் ஆட்டுக் கொட்டகைகளை உரிய பிரகாரம் நிர்மாணிக்காமையின் காரணமாக விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்பட்டதுடன் அந்த ஆட்டுக்கூடுகளை நிர்மானித்தல் தொடர்பான மாதிரிகள் சமர்ப்பிக்கப்படாமையின் அவ்வாறு நிராகரிப்பதற்கு தாக்கமளித்த காரணம் என்ன என்பது தொடர்பாக கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது.

(ஆ) அமைச்சின் கால்நடைப் பிரிவின் இயலளவைக் கட்டியெழுப்பும் செயற்திட்டம் (Capacity Building) இன் கீழ் உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் தொழில் முயற்சிகள் மற்றும் விவசாயிகளுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் கால்நடைக் கொள்கையினைத் தயாரித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 2.06 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டதுடன் செயற்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறானது மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் அளவு தொடர்பாக வருடாந்த திட்டத்தில் குறிப்பிடப்படாமல் மீளாய்வாண்டில் இறுதி வரையில் செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 26 சதவீதமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அளவில் குறிப்பிடப்படாமல் பௌதீக செயல் முன்னேற்றத்தைக் கணிப்பிடல் தொடர்பாக கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

4.1.6 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளாமை

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது வேலை ஆரம்பிக்கப்பட்டு 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறையே ரூபா 279.8 மில்லியன், ரூபா 304 மில்லியன் மற்றும் ரூபா 191 மில்லியன் செலவிட்டு மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் விசேட பொருளாதார நிலையங்களை நிர்மானித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை திகதி வரையிலும் அந்த பொருளாதார நிலையங்களைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 உள்நாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

4.2.1 நிறுத்தி வைக்கப்பட்ட செயற்திட்ட நிதி

2024 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சிறய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலவினத் தலைப்பு இலக்கம் 118-2-03-079-2202 இன் மூலம் அமுல்படுத்தப்பட்ட உப செயல் திட்டங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) Good Animal Husbandry Practice and Establishment of Modern Farm செயற்திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 05 நலனாளிகள் தொடர்பாக 2024.12.11 மற்றும் 2024.12.17 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அந்த நலனாளிகளுக்கு நிதி உதவி பெற்றுக் கொள்ளும் நிதி செயல் முன்னேற்றம் பூச்சியமாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் பின்னர் அவர்களிடம் விசாரணை செய்த போது 2025 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட போதும் அதற்குரிய நிதி உதவி அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. ஒரு நலனாளிக்காக ரூபா 500,000 காசோலை ஒன்று மேல்மாகாணத்தின் பிரதம செயலாளரின் பெயருக்கு 2024.11.29 ஆந் திகதி விநியோகித்து அந்த மாகாண சபையில் அப் பெறுமதிக்காக மீண்டும் மேல் மாகாணப் பணிப்பாளரின் பெயருக்கு 2024.12.24 ஆந் திகதி காசோலை விநியோகித்து மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் 2024.12.27 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் நலனாளிக்கு பணம் கிடைத்திருக்கவில்லை. மேல் மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாட்டின் பெறுமதி ரூபா 2.5 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் சேமிப்பாக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 2 மில்லியன் மற்றும் செயற்திட்டத்தின் மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக ரூபா 75,000 தொகையை உள்ளடக்கி ரூபா 2.075 மில்லியன் தொகை 2024.12.05 ஆந் திகதி மேல் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. விநியோகிக்கப்பட்ட காசோலை மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் 2024.12.27 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்டதுடன் நலனாளிகளுக்கு உரித்தாக வேண்டிய பணத்திற்காக நலனாளிகளின் பெயருக்கு காசோலை விநியோகிக்காமல் மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) Quality Improvement of Milk and Milk Products செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 09 நலனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 2,888,036 ஆகும். களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் அந்த நலனாளிகளுக்கு நிதி உதவி பெற்றுக் கொள்ளும் நிதிசார் செயல் முன்னேற்றம் பூச்சியமாக இருந்தது. பின்னர் 2025 பெப்ரவரி 05 ஆந் திகதி அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளின் போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த திகதி வரையிலும் 08 நலனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை. 04 நலனாளிகளுக்கு ரூபா 1,209,190 பெறுமதியான காசோலை அமைச்சினால் மேல் மாகாண சபையின் பிரதம செயலாளரின் பெயருக்கு விநியோகித்து அப் பெறுமதிக்கு உரிய மேல் மாகாணப் பணிப்பாளரின் பெயரில் 2025.12.31 ஆந் திகதிக்கு முன் விநியோகிக்கப்பட்ட காசோலை மூலம் உரிய பணம் மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு 2025 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் உரிய நலனாளிகளுக்கு செலுத்தப்படாமல் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் மேல் மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தொழில் நுட்ப உத்தியோகத்தரால் 2024.12.04 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 500,000 செலவினத்தை உள்ளடக்கிய உறுதிச்சீட்டு

அமைச்சுக்கு 2025.01.01 ஆந் திகதி கிடைத்து 2024 ஆம் ஆண்டில் கடப்பாடு ஒன்றாகக் காண்பித்து அப் பெறுமதிக்கு உரிய 2025.01.27 ஆந் திகதி மேல் மாகாண சபையின் பிரதம செயலாளரின் பெயருக்கு காசோலை விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் முறையே ரூபா 253,846 மற்றும் ரூபா 100,000 ஒதுக்கப்பட்டிருந்த நலனாளிகள் இருவருக்காக உரிய பணம் விடுவிக்கப்படாது இருந்ததுடன் அதற்கு காரணமாக குறித்துரைத்த விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் உப செயற்திட்டங்களில் கொழும்பு, கம்பஹா மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட செயல்திட்டத்தின் நிதிசார் செயல் முன்னேற்றம் 11.25 சதவீதம் ஆன ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) செயற்திட்டங்களுக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை மற்றும் உரிய ஏனைய ஆவணங்கள் சமர்ப்பித்தலின் தாமதத்தினால் நலனாளிகளால் உரிய பிரதேச கால்நடை மருத்து அலுவலகத்திற்கு உறுதிச் சீட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட செலவின கோரிக்கைகளுக்குரிய உறுதிச்சீட்டுக்கள் அமைச்சின் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவிற்கு கிடைத்தலின் தாமதம் பொதுவாக காணக்கூடியதாக இருந்த நலிவாகும். அமைச்சினால் செயற்திட்ட காசோலைகள் நலனாளிகளின் பெயரில் எழுதப்பட்ட காசோலை மூலம் பணம் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி இருந்தது. எனினும் அமைச்சினால் செயற்திட்ட செலவினத்தின் பெறுமதிக்கு உரிய காசோலை பிரதம செயலாளர், மாகாண சபைக்கு விநியோகித்தலின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்திற்குரிய நிதிசார் செயலாற்றல் 100 சதவீதமாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் உரிய பணம் நலனாளிகளுக்கு கிடைக்காமையின் காரணமாக அந்த செயலாற்றல் தகவல்களை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) அமைச்சின் பாவனையில் காணப்படாதிருந்த போதும் CIGAS கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 116,711,920 ஆன 12 வாகனங்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 02/2017 என்ற திறைசேரி பிரதி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்து சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் விவசாய, கிராமிய பொருளாதார, கால்நடை வள மற்றும் உரப் பிரிவிற்குரிய பெறுமதி ரூபா 80,000,000 ஆன 06 வாகனங்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஓட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது.

4.4 நட்டம் மற்றும் கைவிடல்கள்

(அ) 09 வாகனங்களுக்குரிய பெறுமதி ரூபா 5,946,308 ஆன சம்பவங்களின் நட்டம் மற்றும் கைவிடல்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் நட்டத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டமை அல்லது அறவிடுவதற்கு தவறிமையின் அடிப்படையில் 38 சம்பவங்களுக்குரிய

முன்கொண்டு செல்லப்படுகின்ற ரூபா 21,049,464.76 நட்டத்திற்காக நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 மார்ச் 21 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டு 03 வருடங்களும் 09 மாதங்களும் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓட்டத்திற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரப்படாது இருந்த KW-8202 வாகனத்தின் நட்டம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2021 யூன் 21 ஆந் திகதி தொழில்நுட்பக் கோளாறுக்கு உட்பட்டு 03 வருடங்களும் 06 மாதங்களையும் விஞ்சியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓட்டத்திற்குப் பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரப்படாத கிராமிய பொருளாதார பிரிவிற்குரிய CAV-5064 என்ற வாகனத்தின் நட்டம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட இரண்டு விபத்துக்களுக்கு உரிய மற்றும் பொருட்களுக்கான ஒரு விபத்துக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 377,911 ஆன நட்டத்தை அறவிடுவதற்கு தவறியமையால் மீளாய்வாண்டின் போது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

4.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு குறித்துரைத்த காலத்தின் பின்னர் பரீட்சிக்கப்பட்டுள் கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சுக்கு விநியோகிககப்பட்ட 13 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

2016 ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை அதாவது 05 வருட கால எல்லைக்காக விவசாய அமைச்சிற்காக வாடகை அடிப்படையில் வ/ப டீ.பீ ஜயசிங்க டுவர்ஸ் என்ட் டிரான்ஸ்போட் தனியார் கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்ட இலக்கம் 2178 என்ற வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டை, இலக்கம் 288 இல் அமைந்துள்ள DPJ TOWER என்ற பெயருடைய கட்டிடத்தின் பகுதியை வாடகையாளருக்கு மீண்டும் 2020 சனவரி 31 ஆந் திகதி கையளிக்கப்பட்ட போதும் அமைச்சினால் அந்த வாடகையாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 63 மில்லியன் மீள செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் உடன்படிக்கை முடிவடைந்து வாடகை ஆதனங்கள் கையேற்றல் ஒரு மாத காலத்திற்குள் வாடகையாளரிடம் இருந்து செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பை வாடகைக்கு வழங்கியவருக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பிரகாரம் வாடகையாளர் தரப்பினரால் சட்ட விரோதமாக இந்த பாதுகாப்பு வைப்பை நிறுத்தி வைத்தல் இதுவரையில் விஞ்சியிருந்த காலம் 04 வருடங்கள் ஆகும்.

5. மனிதவள முகாமைத்துவம்

5.1 நியமிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பெருந்தோட்டக் கைத்தொழில் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 833 ஆக இருந்ததுடன் அதில் 62 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் விவசாயப் பிரிவில் 143 பதவிகள், கால் நடை வளப் பிரிவில் 26 பதவிகள் என்பவற்றில் வெற்றிடங்கள் காணப்பட்டது. காணப்படுகின்ற வெற்றிடங்களை மீண்டும் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் பொருத்தமான பிரகாரம் பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் பிரதான பதவியான சிரேஸ்ட உதவிச் செயலாளர், பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர, உள்ளகக் கணக்காய்வாளர், உதவிச் செயலாளர், கணக்காளர் போன்ற பதவிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பீ.கே.எம்.பீ. நோனிஸ்
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்த்த பெறுபேறு உண்மையான பெறுபேற்றின் சதவீதத்தில் (%)		
	100% - 90%	89% - 75%	74% - 50%
விவசாயப் பிரிவு			
நெற் பயிரின் உற்பத்தித் திறன் மற்றும் உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல்	√		
ஏனைய பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.	√		
விதை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் தரத்தில் சிறந்த விதை வழங்கலை உறுதி செய்தல்.	√		
தாவர பாதுகாப்பு நடைமுறைகளை விருத்தி செய்தல்.	√		
உயர்தர நடைமுறைகளைக் கொண்ட விவசாய பயிற்சி மற்றும் விரிவாக்க சேவைகளை விருத்தி செய்தல்.	√		
விவசாயத் துறையில் உயர் தொழில்நுட்பப் பாவனையை ஊக்குவித்தல்	√		
விவசாயத் துறையில் இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல்.	√		
விவசாய வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை ஊக்குவித்தல்	√		
உள்நாட்டு பால் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் அளவு (மில்லியன் லிட்டர்/ஆண்டு)	√		
வருடாந்த தனிநபர் முட்டை நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பின் அளவு	√		
வருடாந்த தனிநபர் கோழி இறைச்சி நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பின் அளவு (கிலோ கிராம்/ ஆண்டு)	√		
அறுவடைக்குப் பிந்தைய துறையில் உள்ள சிக்கல்களுக்கு தொழில்நுட்ப தீர்வுகளைக் கண்டறிவதற்கு ஆய்வுகளை நடாத்தல்.		√	
உள்நாட்டு /வெளிநாட்டு சஞ்சிகைகளில் 10 ஆராய்ச்சி வெளியீடுகளைப் பிரசுரித்தல்.	√		
தெரிவு செய்யப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்களின் விநியோகச் சங்கிலிகளில் பொருத்தமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்/பிரயோகித்தல்.	√		
காய்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கு பாதுகாப்பான பொதி செய்யும் மற்றும் போக்குவரத்து முறைகளை அறிமுகப்படுத்துதல்	√		
அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்கு 100 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் 2000 பயனர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய துறைக்கு புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல்.		√	
முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை களத்தில் பயன்படுத்துவது தொடர்பாக ஆலோசனை சேவைகள், பொறியியல் சேவைகள் மற்றும் ஆய்வுகூட சேவைகளை வழங்குதல்	√		
நிறுவனத்தின் மனித வளத்தை விவசாயத் துறைக்கு ஏற்ற விதத்தில் விருத்தி செய்தல்.	√		
நெற் செய்கையில் உரப் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு முன்பணச் சீட்டுகளை வழங்குதல்.	√		
கொள்கை உருவாக்கம் மற்றும் செயற்திறன் மேம்பாடு — மூலதன நிதிகளை 100% பயன்பாட்டுக் கொண்டுவரல்.	√		
கிராமியப் பிரதேசங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புதல். — 1. ஆடு வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் செயலாற்றுகை குறிகாட்டிகள் - • பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை • விநியோகிக்கப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை	√		

விஷேட குறிகாட்டிகள்		எதிர்பார்த்த பெறுபேறு உண்மையான பெறுபேற்றின் சதவீதத்தில் (%)		
	2. பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் • செயலாற்றுகை குறிகாட்டிகள் - • பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை • விநியோகிக்கப்பட்ட விதைகளின் அளவு (கிலோ கிராம்) • பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பு (ஏக்கர்) • எதிர்பார்த்த விளைச்சல்	√		
விவசாய உற்பத்தியாளருக்கு அதிக விலையிலும் நுகர்வோருக்கு நியாயமான விலையிலும் தரமான மற்றும் புதிய உணவு வகைளை நுகர்வதற்கு உதவும் வகையிலான நுகர்வுப் போக்கை உருவாக்குதல்	• விஷேட பொருளாதார மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். செயலாற்றுகை குறிகாட்டிகள் - • செயல்பாட்டில் உள்ள பொருளாதார மையங்களின் எண்ணிக்கை • பொருளாதார மையங்களுக்குச் சொந்தமான வணிக வளாகங்களின் (கடை அலகுகளின்) எண்ணிக்கை • பொருளாதார மையங்களில் செயல்படும் வணிக வளாகங்களின் (கடை அலகுகளின்) எண்ணிக்கை • வரவுசெலவு ஒதுக்கீடுகளின் ஊடாக பொருளாதார மையங்களில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் செயற்திட்டங்களின் எண்ணிக்கை • அறக்கட்டளை நிதிகள் மூலம் பொருளாதார மையங்களில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் செயற்திட்டங்களின் எண்ணிக்கை • பொருளாதார மையங்களுக்குக் கிடைக்கும் விவசாய உற்பத்திப் பொருட்களின் அளவு	√		
கால்நடை வளப் பிரிவு				
உள்ளூர் பால் உற்பத்தி (ஆண்டுக்கு மில்லியன் லீட்டர்)		√		
ஆண்டு முட்டை உற்பத்தி (ஆண்டுக்கு மில்லியன் முட்டைகள்)		√		
ஆண்டு கோழி இறைச்சி உற்பத்தி (மெ.டொன்/ ஆண்டுக்கு)		√		

அத்தியாயம்05 - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்(SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை

இலக்குகள்/ குறிக்கோள்கள்	இலக்குகள்	அடைவு குறிகாட்டி	வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம்		
			0%- 49%	50%- 74%	75%- 100%
நோக்கம் 02 பட்டினியை ஒழித்து உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசணை நிலையை அடைவதற்கு நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்	2.1. 2030 ஆம் ஆண்டளவில் பட்டினியை ஒழித்து, அனைத்து மக்களுக்கும், குறிப்பாக ஏழைகள் மற்றும் குழந்தைகள் உட்பட அபாய நேர்வுக்கு முகங் கொடுக்கும் சூழ்நிலைகளில் உள்ள மக்களுக்கு ஆண்டு முழுவதும் பாதுகாப்பானதும், போஷாக்குமிக்கதுமான உணவு வகைள் போதுமானதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்தல்.	நெற் செய்கையில் உற்பத்தித்திறனை 4 Mt/ha வரை அதிகரித்தல்.			√
		சோளப் பயிர் உற்பத்தியை 3 மெ. தொன் இலிருந்து 4 மெ. தொன் வரை அதிகரித்தல்			√
		விதை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் தரத்தில் சிறந்த விதைகளின் விநியோகத்தை உறுதி செய்தல்.			√
		தாவரப் பாதுகாப்பு நடைமுறைகளை விருத்தி செய்தல்.			√
		உயர்தர நடைமுறைகள் தொடர்பான விவசாய பயிற்சி மற்றும் விரிவாக்க சேவைகளை விருத்தி செய்தல்.			√
		நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்			
	2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு பால் உற்பத்தி 379.35 மில்லியன் லீட்டர்கள்.	உள்ளூர் பால் உற்பத்தி (ஆண்டுக்கு மில்லியன் லீட்டர்)			√
	2024 ஆம் ஆண்டில் 2,960.59 மில்லியன் முட்டைகள் உற்பத்தி.	ஆண்டு முட்டை உற்பத்தி (ஆண்டுக்கு மில்லியன் முட்டைகள்)			√
	2024 ஆம் ஆண்டில் கோழி இறைச்சி உற்பத்தி 254,660 மெ.டொன்	ஆண்டு கோழி இறைச்சி உற்பத்தி (மெ.டொன்/ ஆண்டுக்கு)			√
	2.3 2030 ஆம் ஆண்டளவில் சிறு அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் விவசாய உற்பத்தித்திறன் மற்றும் வருமானம், சந்தை வாய்ப்பு என்பவற்றை பெறுமதி சேர்த்தலின் மூலம் இரட்டிப்பாக்குதல்.	<u>தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள்</u> • பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை • புதிய மேம்பட்ட பயிர்ச் செய்கை முறைகளை அறிமுகப்படுத்துதல் • அரச அங்கீகாரம் பெற்ற உயர் தர விதைகளைப் பெறுக்கொள்ள விவசாயிகளை நெறிப்படுத்தல் • சேதன உர உற்பத்தியை ஊக்குவித்தல்			√
		விவசாயம்/கால்நடை வளர்ப்பு/காடு தொடர்பான தொழிற்துறைகளின் வகுப்புகளின் அளவின் அடிப்படையில் தொழிலாளர் உற்பத்தித்திறன்.		√	

இலக்குகள்/ குறிக்கோள்கள்	இலக்குகள்	அடைவு குறிகாட்டி	வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
		பாலினத் தன்மை மற்றும் பூர்வீக ரீதியாக சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம்.		√	
	2.4 2030 ஆம் ஆண்டளவில், உணவு உற்பத்தித் தொகுதிகளின் இருப்பை உறுதி செய்தல் மற்றும் உயிர்த் தொகுதிகளின் இருப்பை உறுதி செய்தல் மற்றும் உயிர்த் தொகுதிகளை பேணுவதற்கு உதவியாகக் காணப்படும் காலநிலை மாற்ற இசைவடைதலுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்தும் பாதகமான வானிலை நிகழ்வுகள், வறட்சி, வெள்ளப் பேருக்கு மற்றும் ஏனைய பேரிடர்கள் மற்றும் நிலம் மற்றும் மண்ணின் தரப் பண்புகளை விருத்தி செய்யும் ஈடுகொடுக்கக் கூடிய விவசாய பிரயோகங்களை நடைமுறைக்கு கொண்டு வருதல்.	2.4.1 ஆக்கவளமுடையதும் நிலைபேறானதுமான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விவசாய நிலத்தின் அளவு.		√	
நோக்கம் 12. நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திப் போக்குகளை உறுதி செய்தல்.	மரக்கறி மற்றும் பழப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலிகளை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.	தெரிவு செய்யப்பட்ட 15 பழ வகைகள் மற்றும் 10 காய்கறி வகைகள் மற்றும் நெல் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட இலகுவில் பழுதடையாத 9 பயிர் வகைகளின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைக்க விருத்தி செய்யப்பட்ட புதிய தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, களத்திற்கு அறிமுகம் செய்த தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் குறைவடைந்துள்ள அளவு.	√	-	-
	2030ஆம் ஆண்டடளவில் தனிநபர் உணவுக் வீண் விரயமாதலை சில்லறை மற்றும் நுகர்வு மட்டங்களில் குறைத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் உட்பட உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலிகளில்	காய்கறி மற்றும் பழப் பயிர்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை 25% ஆகவும், நெல் மற்றும் ஏனைய பழுதடையாத பயிர்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை 5% ஆகவும் குறைத்தல்.	√	-	-

இலக்குகள்/ குறிக்கோள்கள்	இலக்குகள்	அடைவு குறிகாட்டி	வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
	உள்ள இழப்புகளை குறைத்தல்				
5. பாலின சமத்துவத்தை அடைவதன் மூலம் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டல்.	5.a பெண்களுக்கு பொருளாதார உரிமைகளை வழங்குவதற்கான திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் உள்நாட்டு சட்டங்களுக்கு அமைவாக நிலம் மற்றும் ஏனைய சொத்துக்கள், நிதிச் சேவைகள், பாரம்பரியம் மற்றும் இயற்கை வளங்களின் உரிமையைப் பெற்றுக்கொள்ளவும் நிருவகிக்கவும் வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.	5.a.1 உரிமைகோரல் முறையின் பிரகாரம் (a) பாலினத்தின் அடிப்படையில் (b) விவசாய நிலங்கள் தொடர்பாக த்தின் மீது உரிமையாளர்கள் மற்றும் உரிமைகளை வைத்திருப்பவர்களிடையே பெண்களின் விகிதம்		√	

5.2. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான அடைவுகள் மற்றும் சவால்கள்

அடைவுகள்

i.) தேசிய விவசாயக் கொள்கையை அறிமுகப்படுத்தல்.

ii.) உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உற்பத்தித் பயனுறுதித்தன்மையை அதிகரித்தல், விவசாய நடவடிக்கைகளில் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், விவசாயக் கைத்தொழில்கள் மற்றும் தொழில்முனைவு நடவடிக்கைகளை விருத்தி செய்தல், நீர் முகாமைத்துவம், குறை பயன்பாட்டைக் கொண்ட நிலங்களை அபிவிருத்தி செய்தல், காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்குப் பொருத்தமான பயிர் பாதுகாப்புத் வேலைத்திட்டங்கள், விவசாயம் செயற்திட்ட நடவடிக்கைகள், ஏற்றுமதி சார்ந்த பழ உற்பத்திக் கிராமங்களை நிறுவுதல், விவசாய கண்டுபிடிப்புகள், விவசாயக் கொள்கைகள் ஆகிய துறைகளை உள்ளடக்கும் வகையில் செயற்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தல்.

iii.) சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சிறந்த விலங்கு வளர்ப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை வெற்றிகரமாக செயல்படுத்தல்.

iv.) தரத்தில் சிறந்த உரப் பாவனையை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

v.) மரக்கறி மற்றும் பழங்களின் கொண்டு செல்லலுக்கு பாதுகாப்பான பொதிகளை வழங்கல், தானிய களஞ்சியப்படுத்தல் வசதிகளை விருத்தி செய்தல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேற்கொள்ள பங்குதாரர்களை வழிநடத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை கணிசமான அளவு குறைத்தல்.

vi.) உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு ஆராய்ச்சிகளின் ஊடாக புதிய விதை வகைகள் மற்றும் பயிர் வகைகளை அறிமுகப்படுத்துதல்.

vii.) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பயிர் நிலங்களில் மற்றும் கால்நடை உற்பத்திகளின் பயனுறுதித்தன்மையை அதிகரித்தல்.

சவால்கள்

i.) தீவிர காலநிலைத் தன்மைகள்

ii.) காலநிலை மாற்றங்களுக்கு சிறந்த முறையில் ஈடுகொடுக்கும் தன்மை கொண்ட விதைகளின் தாராளமாகக் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டு விதைகளைப் பாதுகாத்தல்.

iii.) துறையுடன் தொடர்பான. சட்ட ரீதியான ஏற்பாடுகள் இற்றைப்படுத்தப்படாமை..

iv.) விவசாயத் துறை தொடர்பான துல்லியமான தரவுகளைத் தொகுத்தல் மற்றும் சேகரித்தல் என்பன தொடர்பான நடைமுறைச் சவால்கள்.

v.) விவசாய விரிவாக்க சேவைகள் தொடர்பான தேவை மற்றும் தற்போதைய நிலைக்கும் இடையே உள்ள இடைவெளி

அத்தியாயம் 06 - மனிதவள விபரம்

6.1 ஆளணி எண்ணிக்கை முகாமைத்துவம்

- விவசாயப் பிரிவு

பிரிவு	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேஷ்ட	63	41	22
மூன்றாம் நிலை	04	03	01
இரண்டாம் நிலை	1,105	998	107
ஆரம்ப நிலை	114	101	13





- கால்நடை வளப் பிரிவு

பிரிவு	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேஷ்ட நிலை	19	17	02
மூன்றாம் நிலை	3	3	-
இரண்டாம் நிலை	508	497	11
ஆரம்ப நிலை	35	22	13

6.2 ** மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையான நிலை நிறுவனத்தின் செயல்திறனை எவ்வாறு பாதித்தது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடவும்.

- விவசாயப் பிரிவு

i.) விவசாயப் பிரிவுக்கு 31.12.2024 திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1,286 ஆகும். இவற்றில் 143 ஆளணிக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்கள் அலுவலக நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் விரைவாகவும் முன்னெடுத்துச் செல்லும் முயற்சிக்கு குறிப்பிடத்தக்க தடையாக இருந்து வருகின்றன.

ii.) இந்தப் பிரிவுக்கு சிரேஷ்ட ஊழியர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 63 ஆகும். இதில் உண்மையாகக் காணப்படும் பணியாளர் எண்ணிக்கை 41 ஆகும். வெற்றிடமாகக் காணப்படும் 22 ஆளணியில், 11 பதவிகளுக்கான பணிகள் தற்காலிக பதில் கடமைபுரியும் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு இந்தப் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக முக்கிய பணிகளை நிறைவேற்றுவதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

iii.) இந்தத் பிரிவுக்கு மூன்றாம் நிலை ஊழியர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 04 ஆகும். இதில் 03 முழுநேர அதிகாரிகள் பணியில் உள்ளனர். மேலும், தற்காலிக அடிப்படையில் பதில் கடமை புரியும் அடிப்படையில் ஒரு மொழிபெயர்ப்பாளர் சேவையின் அதிகாரி கடமை புரிகின்றார். இந்த அமைச்சினால் தொடர்ந்து அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பபடுவதுடன் அத்தகைய அவசர ஆவணங்களை ஆங்கிலத்தில் விரைவாக மொழிபெயர்க்க வேண்டியுள்ளதால் மொழிபெயர்ப்பாளர் பதவியில் நிலவும் வெற்றிடம் காரணமாக அலுவலக வினைத்திறனாக செயல்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

iv.) மேலும், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பதவிகளில் உள்ள வெற்றிடங்கள், நிர்வாகப் பணிகளை வினைத்திறனாகவும் விரைவாகவும் முன்னெடுத்துச் செல்லும் முயற்சிக்கு கடுமையான இடையூறாகின்றன

- கால்நடை வளப் பிரிவு

அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் காணப்படும் வெற்றிடங்கள்

<u>சிரேஷ்ட நிலை</u>

பணிப்பாளர் (கால்நடை வளத் திட்டமிடல்) – இ.கா.உ.சு.சே - 01

உதவிச் செயலாளர் – இ. நி. சே 01

<u>இரண்டாம் நிலை</u>

முகாமைத்துவ சேவை அதிகாரி - 11

<u>ஆரம்ப நிலை</u>

சாரதி - 12

அலுவலக உதவியாளர் – 01

6.3. மனித வள அபிவிருத்தி

- உள்நாட்டுப் பயிற்சிகள்

i.) விவசாயப் பிரிவு

தொ/ இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சிநெறியின் கால எல்லை	மொத்த முதலீடு உள்நாட்டு (ரூபா)	நிகழ்ச்சியின் தன்மை	பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
1	அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பற்றிய முதுகலை (MDS)	1	ஒரு வருடம்	200,000.00	உள்நாட்டு	திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அறிவு
2	அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பற்றிய முதுகலை (MDS)	1	ஒரு வருடம்	200,000.00	உள்நாட்டு	அபிவிருத்தி தொடர்பான அறிவு
3	தபால் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி	28	ஒரு நாள்		உள்நாட்டு	அஞ்சல் தொடர்பான அறிவு
4	அரசாங்க ஊதிய பட்டியல் முறைமை (Government Payroll System)	1	2 நாட்கள்	18,000.00	உள்நாட்டு	அரசாங்க ஊதிய பட்டியல் முறைமை (Government Payroll System) தொடர்பான அறிவு
5	கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்குதல்	1	ஒரு நாள்	13,500.00	உள்நாட்டு	கணக்காய்வுக் கேள்விகளுக்குப் பதில் வழங்குவது தொடர்பான அறிவு
6	வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை– தாபனக் கோவை	75	4 நாட்கள்	6,000.00	உள்நாட்டு	தாபனக் கோவை மற்றும் அலுவலக நடைமுறைகள் தொடர்பான அறிவு
7	வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை– நிதி முறைமை, நிதிப் பிரமாணம் மற்றும் பெறுகை	125	3 நாட்கள்	35,100.00	உள்நாட்டு	நிதி முறைமை, நிதிப் பிரமாணம் மற்றும் பெறுகை தொடர்பான அறிவு
8	200 மணிநேர தமிழ் மொழி பாடநெறி	1	34 நாட்கள்	5,000.00	உள்நாட்டு	தமிழ் மொழி தொடர்பான அறிவு
9	200 மணிநேர தமிழ் மொழி பாடநெறி	1	34 நாட்கள்	5,000.00	உள்நாட்டு	தமிழ் மொழி தொடர்பான அறிவு
10	150 மணிநேர தமிழ் மொழி பாடநெறி	8	25 நாட்கள்	18,367.00	உள்நாட்டு	தமிழ் மொழி தொடர்பான அறிவு
11	150 மணிநேர தமிழ் மொழி பாடநெறி	75	25 நாட்கள்	40,500.00	உள்நாட்டு	தமிழ் மொழி தொடர்பான அறிவு
12	நி.பி பரிசோதனைகளை நடத்துதல் தொடர்பான பயிற்சி	65	ஒரு நாள்	16,440.00	உள்நாட்டு	நி. பி பரிசோதனைகளை நடத்தல் தொடர்பான அறிவு
13	இலஞ்சம் அல்லது ஊழல் குறித்த விழிப்புணர்வு திட்டம்	100	ஒரு நாள்	19,900.00	உள்நாட்டு	இலஞ்சம் மற்றும் ஊழலிலிருந்து தவிர்ந்து இருப்பது தொடர்பான அறிவு

தொ/ இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சிநெறியின் கால எல்லை	மொத்த முதலீடு உள்நாட்டு (ரூபா)	நிகழ்ச்சியின் தன்மை	பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
14	தகவல் அறியும் சட்டம் தொடர்பான பயிற்சி	75	ஒரு நாள்	14,670.00	உள்நாட்டு	தகவல் அறியும் சட்டம் தொடர்பான அறிவு
15	அலுவலகத் திறன்ககளை விருத்தி செய்வது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி	45	ஒரு நாள்	90,640.00 5,000.00	உள்நாட்டு	அலுவலகத் திறன்ககளை விருத்தி செய்வது தொடர்பான அறிவு
16	ஆரம்ப நிலை அதிகாரிகளுக்கான பயிற்சிப் பட்டறை	60	2 நாட்கள்	285,150.00 6,795.00 3,000.00	உள்நாட்டு	தாபனக் கோவை, அலுவலக நடைமுறைகள், மனோநிலை விருத்தி என்பன தொடர்பான அறிவு
17	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ முதுகலைக் கற்கைநெறி (MPAM) *Master of Pulic Adminstrative & Management (MPAM)*	1	2 ஆண்டுகள்	125,000.00	உள்நாட்டு	குறித்த விடயம் தொடர்பான அறிவு
18	150 மணிநேர தமிழ் மொழி பாடநெறி	75	2 நாட்கள்	40,500.00	உள்நாட்டு	தமிழ் மொழி தொடர்பான அறிவு
19	ஊதிய மாற்றம் தொடர்பான பயிற்சி	65	2 நாட்கள்	28,745.00	உள்நாட்டு	ஊதிய மாற்றம் தொடர்பான அறிவு
20	அலுவலக நடைமுறைகள் மற்றும் உத்தியோகபூர்வ கடிதங்கள் எழுதுவது தொடர்பான பயிற்சி	75	2 நாட்கள்	35,995.00	உள்நாட்டு	அலுவலக நடைமுறைகள் மற்றும் உத்தியோகபூர்வ கடிதங்கள் எழுதுவது தொடர்பான அறிவு
21	தனிப்பட்ட கோப்புகளை பேணுதல் தொடர்பான பயிற்சி	50	ஒரு நாள்	12,270.00	உள்நாட்டு	தனிப்பட்ட கோப்புகளை பேணுதல் தொடர்பான அறிவு
22	அரச பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பான உயர்தர டிப்ளமோ	1	ஒரு வருடம் இரு மாதங்கள்	138,000.00	உள்நாட்டு	பெறுகை தொடர்பான அறிவு
23	கணக்காய்வுக் கேள்விகளுக்கு பதிலளித்தல்	50	ஒரு நாள்	12,570.00	உள்நாட்டு	கணக்காய்வுக் கேள்விகளுக்கு பதிலளித்தல் தொடர்பான அறிவு
24	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	29	ஒரு நாள்	34,000.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
25	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	44	ஒரு நாள்	44,000.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
26	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	46	ஒரு நாள்	51,000.00	உள்நாட்டு	விவசாய தகவல் முறைமைகளுக்கான தரவுகளை உள்ளீடு செய்தல் மற்றும் பயன்பாடு என்பன தொடர்பான அறிவு

தொ/ இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சிநெறியின் கால எல்லை	மொத்த முதலீடு உள்நாட்டு (ரூபா)	நிகழ்ச்சியின் தன்மை	பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
27	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	85	ஒரு நாள்	89,800.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
28	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	77	ஒரு நாள்	80,139.00	உள்நாட்டு	முழு தானியங்கி தொழில்நுட்பத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட இல்லங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பான அறிவு
29	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	62	ஒரு நாள்	67,000.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
30	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	82	ஒரு நாள்	109,000.00	உள்நாட்டு	விவசாய நவீனமயமாக்கல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு
31	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	37	ஒரு நாள்	38,540.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு தொடர்பான அறிவு
32	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	14	ஒரு நாள்	29,500.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
33	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	63	ஒரு நாள்	67,934.00	உள்நாட்டு	பயிர்ச் செய்கையில் இரசாயன உர வகைகளைப் பயன்படுத்துவது தொடர்பான அறிவு
34	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	74	ஒரு நாள்	78,832.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
35	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	153	ஒரு நாள்	157,836.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
36	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	42	ஒரு நாள்	47,000.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
37	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	43	ஒரு நாள்	48,675.00	உள்நாட்டு	காளான் வளர்ப்பு, நோய் மற்றும் பீடைக் கட்டுப்பாடு தொடர்பான அறிவு
38	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	46	ஒரு நாள்	47,015.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
39	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	56	ஒரு நாள்	54,980.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
40	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	14	ஒரு நாள்	19,000.00	உள்நாட்டு	காளான் வளர்ப்பு தொடர்பான அறிவு
41	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	32	ஒரு நாள்	36,999.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
42	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	67	ஒரு நாள்	72,000.00	உள்நாட்டு	நேர முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடல் முகாமைத்துவம் என்பன தொடர்பான அறிவு
43	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	73	ஒரு நாள்	80,800.00	உள்நாட்டு	விடுமுறை மற்றும் புதிய தொழில்நுட்பம் என்பன தொடர்பான அறிவு

தொ/ இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சிநெறியின் கால எல்லை	மொத்த முதலீடு உள்நாட்டு (ரூபா)	நிகழ்ச்சியின் தன்மை	பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
44	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	68	ஒரு நாள்	73,000.00	உள்நாட்டு	விவசாய செயற்திட்டங்கள் தொடர்பான அறிவு
45	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	11	ஒரு நாள்	16,000.00	உள்நாட்டு	தொடர்பாடல் மற்றும் முகாமைத்த்துவம் தொடர்பான அறிவு
46	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	16	ஒரு நாள்	21,000.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
47	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	15	ஒரு நாள்	20,000.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
48	மாவட்ட அளவில் நடத்தப்படும் பயிற்சிச் செயலமர்வு	12	ஒரு நாள்	15,000.00	உள்நாட்டு	செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான அறிவு
மொத்த கூட்டுத்தொகை				2,775,192.00		

ii.) கால்நடை வளப் பிரிவு

தொ / இ ல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சிநெறியின் கால எல்லை	மொத்த முதலீடு (000 ரூபாய்)	நிகழ்ச்சியின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு)	பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
				உள்நாட்டு		
1	மன அழுத்த முகாமைத்துவம்	50	2024.01.04	இல்லை	வெளிநாட்டு	தொழிலாளர்களின் குறைபாடுகளைக் குறைத்தல் மற்றும் வினைத்தினான அரச சேவையை உருவாக்குதல்
2	வாகன வாயு வெளியேற்ற பரிசோதனை செயல்முறை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி	5	2024.03.19	இல்லை	வெளிநாட்டு	வாகனங்களின் முறையான பராமரிப்பு
3	அரச ஊதிய முறைமை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி	1	2024.04.26, 29 மற்றும் 30	18000.00	வெளிநாட்டு	GPS தொடர்பான மோசடிகள் மற்றும் ஊழல் செயல்களைத் தடுக்க உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை எளிதாக்குதல்
4	அரச அதிகாரிகளுக்கான கோப்பு நடைமுறை	49	2024.08.01	3900.00	வெளிநாட்டு	கோப்புகளை பேணுவது குறித்த சரியான புரிதலைப் பெறுதல்
5	அரச அதிகாரிகளுக்கான இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி	63	2024.08.07	9210.00	வெளிநாட்டு	இலஞ்சம் மற்றும் ஊழலை விட்டும் விலகிய அரச அதிகாரிகளை உருவாக்குதல்
6	கோப்பு முறைமை பற்றிய பயிற்சி நிகழ்ச்சி	44	2024.08.21	6260.00	வெளிநாட்டு	சரியான முறையில் கடிதங்களைத் தயாரிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

தொ / இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சி நெறியின் கால எல்லை	மொத்த முதலீடு (000 ரூபாய்)	நிகழ்ச்சியின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு)	பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
				உள்நாட்டு		
7	ஆங்கில மொழி பயிற்சி நிகழச்சி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி	43	2024.10.10	2720.00	வெளிநாட்டு	அலுவலக பணிகளில் ஏற்படும் மொழி ரீதியான சிக்கல்களைக் குறைத்தல் மற்றும் தகவல்களை சரியாகத் தொடர்புகொள்ளும் திறனை வளர்த்தல்
8	சாரதிகளுக்கான வாகனப் பயன்பாடு தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய ஒரு நாள் நிகழ்ச்சி	20	2024.10.15	54460.00	வெளிநாட்டு	வாகன ஓட்டுதல் மற்றும் பாதை விதிகள் குறித்த சரியான அறிவைப் பெறுதல்
9	தனிப்பட்ட கோப்புகளைப் பேணல்	35	2024.10.24, 25	11325.00	வெளிநாட்டு	தனிப்பட்ட கோப்புகளை முறையாகப் பேணுதல்
10	தனிப்பட்ட கோப்புகளைப் பேணல்	15	2024.11.12	7500.00	வெளிநாட்டு	தனிப்பட்ட கோப்புகளை முறையாகப் பேணுதல்
11	சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கான ஒழுக்கம் மற்றும் மனப்பாங்கு விருத்தி பற்றிய ஒரு நாள் நிகழ்ச்சி	30	2024.10.30	73320.00	வெளிநாட்டு	அரச அதிகாரிகளின் ஒழுக்கம் மற்றும் மனப்பாங்கு விருத்தி
12	இலத்திரனியல் பெறுகை (e -Procument) தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி	2	2024.12.06	15500.00	வெளிநாட்டு	புதிய அறிவு மூலம் அதிகாரிகளைப் இற்றைப்படுத்தல்
13	MS Excel பயன்படுத்தி Excel ஆவணங்களைத் தயாரிப்பது குறித்த கருத்தரங்கு	6	2024.12.20	46500.00	வெளிநாட்டு	அலுவலக பணிகளை விரைவாக நிறைவேற்றுதல்
14	தனிப்பட்ட கோப்புகளைப் பேணல் மற்றும் ஊதிய மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்	20	2024.12.27	5045.00	வெளிநாட்டு	தனிப்பட்ட கோப்புகள் தொடர்பாக பணியாற்றும் போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் பொருத்தமான வழிமுறைகளைப் பின்பற்றி சிக்கல்களைக் குறைத்தல்

- வெளிநாட்டுப் பயிற்சிகள்- 2023.01.01 வரை 2023.12.31

தொ/ இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சி நெறியின் கால எல்லை	மொத்த முதலீடு			பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
				அமையக் கொடுப்பனவு	குளிர் ஆடைகள்	ஏனையவை	
1	விவசாய பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்தும் விவசாயத் தொழில்நுட்ப தொடக்கங்கள் (Agri Tech Startups for Enhancing the Agri Value Chain)	1	17.01.2024 - 30.01.2024	USD 375	–	–	விவசாய தொழில்நுட்ப தொடக்க சூழல்தொகுதிகள், நிதியளிப்பு வாய்ப்புகள் மற்றும் விவசாயத்தில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகள் பற்றிய ஆழமான அறிவு கிடைத்தது. விவசாய தொழில்முனைவு மற்றும் பெறுமதிச் சங்கிலி மேம்பாடுகள் என்பவற்றுக்கு உதவி வழங்கும் அரச முன்னெடுப்புகள் பற்றிய தெளிவு கிடைத்தது.
2	ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் விவசாய உணவு முறைமைகளுக்கு காலநிலை நிதியை பயனுள்ளதாக்கும் பிராந்திய பட்டறை, கம்போடியா (The regional workshop "Making Climate Finance work for agrifood systems in Asia and the Pacific, Camboia)	1	25.03.2024 - 27.03.2024	–	–	–	காலநிலை நிதியளிப்பு பொறிமுறைகள் மற்றும் நிலைபேறான விவசாய உணவு அமைப்புகளுக்கான முதலீட்டு வாய்ப்புகள் என்பன பற்றிய அறிவு கிடைத்தது. விவசாயத்தில் காலநிலை மீள்திறனுக்கான நிதித் தீர்வுகளை ஒருங்கிணைப்பதற்கான நுட்பங்கள் தொடர்பாக அவர்கள் ஆராய்ந்தனர்.
3	அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பசுமைப் பொருளாதாரம் மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு, சீனா (Seminar on Green Economy and Environmental Protection for Developing Countries,China)	1	29.03.2024 - 11.04.2024	USD 375 -RMB 2100	75GBP	–	பசுமை பொருளாதாரக் கொள்கைகள், நிலையான வள முகாமைத்துவம் மற்றும் குறைந்த காபன் உருவாக்க உத்திகள் பற்றிய அறிவு
4	அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான விவசாய உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு, சீனா (Seminar on Management of Agro - Products Qualty and Safely for Developing Countries,China)	1	17.04.2024 - 30.04.2024	USD 375 -RMB 2100	75GBP	–	உலகளாவிய உணவு பாதுகாப்பு தரங்கள், சான்றிதழ் முறைகள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய கையாளுதல் என்பன பற்றிய அறிவு இந்தக் கருத்தரங்கின் மூலம் கிடைத்தது

தொ/இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சிநெறியின் கால எல்லை	மொத்த முதலீடு			பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
				அமையக் கொடுப்பனவு	குளிர் ஆடைகள்	ஏனையவை	
5	உலகளாவிய அபிவிருத்தி முன்னெடுப்பின் கீழ் பெல்ட் அண்ட் ரோட் நாடுகளுக்கான உணவு பாதுகாப்பு மற்றும் அறுவடைக்குப் பின்னான இழப்புகளைக் குறைப்பது தொடர்பான கருத்தரங்கு *(Seminar on Food Security and Reduction of Post-Production Loss for Belt and Road Countries under the Global Development Initiative)*	*1*	*17.04.2024 - 30.04.2024*	*USD 375 -RMB 2100*	*75GBP*	–	மேம்பட்ட களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் விநியோக நுட்பங்கள் பயிர் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் உத்திகள் பற்றி ஆராயப்பட்டது.
6	வளர்முக நாடுகளுக்கான விவசாய உற்பத்தி திறன் தொடர்பான கருத்தரங்கு *(Seminar on Production Capacity of Agriculture for Developing Countries)*	*1*	*10.05.2024 - 23.05.2024*	*USD 375 -RMB 2100*	*75GBP*	–	நவீன விவசாய உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் விளைச்சல் திறனை அதிகரிக்கும் உத்திகள் பற்றி அறிந்து கொள்ளப்பட்டது.
7	வளர்முக நாடுகளுக்கான சிறு உற்பத்திச் பொருட்களுக்கான சந்தைகள் உருவாக்கம் மற்றும் வறுமை குறைப்பு மற்றும் ஒழிப்பு தொடர்பான கருத்தரங்கு *(Seminar on the Construction of Small Commodity Markets and Poverty Reduction and Alleviation for Developing Countries)*	*1*	*11.05.2024 - 24.05.2024*	*USD 375 -RMB 2100*	*75GBP*	–	கிராமிய அபிவிருத்தியை இலக்காக்கொண்டு எவ்வாறு சிறு பொருள் சந்தைகளை நிறுவுவது மற்றும் நிர்வகிப்பது என்பது பற்றி பங்கேற்பாளர்கள் புரிந்து கொண்டனர்.
8	உலக சுகாதார அமைப்பின் தெற்காசியா பிராந்திய போசணை மற்றும் காலநிலை மாற்றம் குறித்த கூட்டம் *(WHO South - East Asia Regional meeting on nutrition and climate change)*	*1*	*14.05.2024 - 16.05.2024*	*USD 125*	–	–	பங்கேற்பாளர்கள் காலநிலை மாற்றத்தின் போசணை மற்றும் உணவு பாதுகாப்பு மீதான தாக்கம் குறித்த தெளிவைப் பெற்றனர். காலநிலை தொடர்பான நடவடிக்கைகளை போசணைத் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதற்கான கொள்கைப் பரிந்துரைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தொ/இல	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	பயிற்சி நெறியின் கால எல்லை	மொத்த முதலீடு			பெறுபேறுகள்/ பெற்றுக்கொண்ட அறிவு
				அமையக் கொடுப்பனவு	குளிர் ஆடைகள்	ஏனையவை	
